உ

சிவமயம்.

இரத்தினகிரிசார்ந்துள்ள

இரத்தினகிரி என்னும்

# திருவாட்போக்கிப்புராணம்

(முதல் 416 பாட்டு)

கமலைநாகர் வைத்தியநாததேசிகராலியற்றப்பட்டது
[illegible] 287
[illegible] 112

திரு- அ-சிவானந்தசாகர

யோகீசுவரரவர்களால் [illegible]

பரிசோதிக்கப்பட்டு

சிவிர்பமலை ஸ்தானீகம் மு. வீரப்பிள்ளை அவர்கள்

கேட்டுக்கொண்டபடி

திருச்சி கோட்டை மளிகை கந்தசாமி பிள்ளை

பௌத்திரரும் சௌந்திரபாண்டியம்பிள்ளை

குமாரருமாகிய நாகரத்தினம் பிள்ளையால்

சென்னை

திருவல்லிக்கேணி

"வாணீபூஷணம்" பிரஸ்ஸில்

பதிப்பிக்கப்பட்டது.

விரோதிகிருது வரு சித்திரை மீ


April 1911

விலை ரூபாய் 1] [தபால் செலவு வேறு

Copy Right Registered

MAHAMAHO
U.V. SW

வாட்போக்கி என்னும் இரத்னகிரி.



சிவாயமலை. ஐயர்மலை. மாணிக்கமலை என்றும் கூறப்படுவன.

# முகவுரை

சீரும் செல்வமும்வாய்ந்த தேசமாகிய இப்பாரதகண்டத்திலே பரமபதியாகிய சிவபெருமான் திருக்கோலங் கொண்டு வீற்றிருந்தருளும் தலங்கள் ஆயிரத்தெட்டு என்று பெரியோர்கள் கூறுவர்.

அவைகளில் இப்போது தேவாரப் பதிகங்களை உடையனவாயிருக்கும் தலங்கள் இருநூற்றெழுபத்து நான்கு. இத்தலங்களில் சோழநாட்டில் நூற்றுத்தொண்ணூறும் ஈழநாட்டில் இரண்டும் பாண்டிநாட்டில் பதினான்கும் சேரநாடாகிய மலைநாட்டில் ஒன்றும் கொங்குநாட்டில் ஏழும், மகதநாடாகிய நடுநாட்டில் இருபத்திரண்டும், தொண்டைநாட்டில் முப்பத்திரண்டும் துளுவநாட்டில் ஒன்றும், வடநாட்டில் ஐந்தும் உள்ளன. சோழநாட்டுத் தலங்களில் ஒன்றான திருவாட்போக்கி ஸ்தலம் புண்ணியநதியாகிய காவிரிநதியின் தென்கரையிலுள்ளது. இரத்னகிரி, மாணிக்கமலை, ஐபர்மலை, சிவாயமலை என்று வழங்கப்படும் திருவாட்போக்கி ஸ்தலபுராணமானது ஆதியில் சூதமுனிவரால் ஸம்ஸ்கிருதபாஷையில் இயற்றப்பட்டது. பிறகு இதனைச் செந்தமிழ் நூலாகத் திரு-வைத்தியநாததேசிகர் செய்தனர். அப்பழைய ஏட்டுப் பிரதிகளிலிருந்து எடுத்து எழுதி இந்தச் சிவாயமலை தேவஸ்தான ஸ்தானீகரான கீனம் முத்துச்சாமிபிள்ளை குமாரர் வீரப்பிள்ளை அவர்களும் ஸ்தல அன்பரான கன்னடம் குருவஞ்செட்டியார் குமாரர் தம்மன்னஞ் செட்டியாரும் சுருக்கமாக விருந்த இந்நூலை நூலாசியர் வரலாற்றில் சொல்லியவர்களைக் கொண்டு விரிவாவாகச் செய்து வைத்திருந்தனர். இப்படி இருக்கத் திரிசிரபுரம் கோட்டை ஸ்தலவாசியாய் இருந்த எங்கள் குடும்பத்திற்கு சில சண்டாளர்களால் ஏவல் என்று சொல்லப்பட்ட பில்லிசூனியம் ஏற்பட்டு, இரத்தினகிரீசுவரர் கனவில் தோன்றி உத்தரவு அளித்தபடி சுமார் ஆறுவருஷகாலமாய், “ஈட்டும் பொருளில் ஈராறிலொன்று எமக்கீந்து வருவீர்” என எம்மிறைவர் ஒருக்கால் ஆக்ஞாபித்தபடி, எவ்வித ஜன்மாந்தரப் புண்ணியப் பேற்றாலோ அருளப்பெற்றப் பன்னிரண்டாஞ்செட்டிமார் அவர்கள் ஜாகையில் ஆதரிக்கப்

பெற்று சுரும்பார்குழலம்மையார் சமேதரான இரத்தினகிரீசுவரர் கடாக்ஷத்தினாலே நாளுக்கு நாள் சௌக்கியத்தை யடைந்துவருகி றோம். முன்கூறியஇருவரும் இப்புராணத்தை எல்லோரும் வாசித்து உணர்ந்து உய்யும்படி அச்சிட்டு வெளிப்படுத்த விரும்பி அவர் களிடமிருந்த அவ்வேட்டுப் பிரதியைக் கொடுத்தார்கள். இவ்வளவு அவாவுடனிருந்த இருவரும் புராணத்தை அச்சிட்டுப் பார்ப்பத ற்கு முன்னமே தேகவியோகமடைந்து விட்டதைப்பற்றி விசனிக்கி றோம். இப்புராணம் ஏட்டுப் பிரதியாய் இருந்து அழிந்துபோய் விடாமல் எப்படியாவது அச்சாகி வெளி வரவேண்டுமென்று கவலை யுற்றிருந்த இம்மலை ஸ்தானீகம் மு. வீரப்பிள்ளை அவர்களுக்கும் ஸ்தல அன்பரான கு. தம்பண்ணஞ் செட்டியாருக்கும் செட்டி யார் கள் சந்ததியார்க்கும் என் வந்தன மளிக்கின்றேன். தவிர சென் னப்பட்டணத்திலிருந்து, இத்தல புராணம் அச்சிடும் விஷயத்தி லும் வசனச் சுருக்கம் எழுதுவதிலும் விரோதிகிருதுவரு சித்திரைமீ ரதோற்சவத்திற்குள்ளாக புராணம் அச்சாகி வெளி வரும் பொருட்டும் முயற்சி எடுத்துக்கொண்டு உழைத்த அலகரை திரு-அ- சுப்பிரமணிய பாரதியாரவர்களுக்கும் என் மனப்பூர்வமான சாஷ்டாங்க நமஸ்காரம் அளிக்கின்றேன்.

இப்புராணம் அச்சிற்குக் கொடுத்து சிறிது காலம் ஆனபடியா லும் அவசரமாக அச்சிடவேண்டிவந்ததாலும் சிலபிழைகள் இருக்க லாம். அவைகளைக் காண்போர் தயை கூர்ந்து எனக்குத் தெரிவித் தால் மறுபதிப்பில் அவைகளைக்களைந்துவிடலாகும். இப்புத்தகத்தில் என்ன குற்றங்கள் இருந்தாலும் அவைகளையெல்லாம் பாராட்டாது பொருளையே கொள்ளும்படி கற்றறிந்த பெரியோர்களை வணக்கமா ய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்புராணத்தை வாசிக்கத் தொட ங்கு முன்னமே சிவாயமலையாகிய இரத்தினகிரியைத் தரிசித்துக் கொள்ளும் பொருட்டு இத்துடன் அம்மலைப்படம் ஒன்று சேர்க் கப்பட்டிருக்கிறது.

இங்ஙனம்

சிவாயமலை
விரோதிகிருதுவரு
சித்திரைமீ௳ } ச. நாகரத்தினம் பிள்ளை.

# நூலாசிரியர்வரலாறு.

இப்பரதகண்டத்தில் காவிரிநதிக்குத் தென்புறமாயுள்ள இரத்தினகிரிமலையின் இரத்தின கிரீசுவரரின் திருவாட்போக்கிப் புராணமானது, ஆதியில் ஸம்ஸ்கிருத பாஷையில் எழுதப்பட்டுள்ளது. இத் தலத்திலுள்ள ஆதிசைவர் ஸ்தானீகர் அன்பர்கள் வேண்டுகோளின்படி திருவாரூர் வைத்தியநாததேசிகர் இத்தலத்தின் மகிமை முதலிய பிரபாவங்களை எளிதில் அறியும் பொருட்டுச் செந்தமிழ்ப் பாடலாகச் செய்தனர். யாது காரணத்தினாலோ பாயிரத்தில் வயிரப்பெருமாள் ஆரியராசன் சிற்றுயனார் இவர்களைக் கூறப்பட்டிருந்தும் திருவாட்போக்கிச் சருக்கத்துடன் புராணத்தை முடித்து வாழியும் சொல்லப்பட்டிருக்கிறது. இத்தலத்திலுள்ள சில கற்றோர்கள் கேட்டுக்கொண்டபடி விரிவாக ஆரியராசன்சிற்றுயனார்சருக்கம் கடம்பர்கோவில் திருவாடுதுறை ராமலிங்கத்தம்பிரான் அவர்களாலும்வயிரப்பெருமாள்சருக்கம் சைவ சிரோமணியாகியமுத்துச்சாமி சுவாமி, யென்னும் திருப்புகழ் குகனடிமையாலும் ஆண்டவன் அனுக்கிரகத்தால் செய்யப்பட்டன, பென்னிடுபாறைச் சருக்கம் திரிசிரபுரம் பிரம்மஸ்ரீ திரு- அ- சிவானந்த சாகர யோகீசுவரரவர்களால் செய்யப்பட்டது. புராணகதைகளை எளிதில் தெரிந்துகொள்ளும் பொருட்டு அலகரை வரகவி திரு- அ- சுப்பிரமணிய பாரதியாரால் வசனரூபமாக எழுதப்பட்ட வசனச் சருக்கங்களும் இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

கணபதி துணை,

திருச்சிற்றம்பலம்.

# வாட்போக்கித் தேவாரம்.

## திருநாவுக்கரசுநாயனாரருளிச்செய்தது.

### திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

காலபாசம்பிடித்தெழுதூதுவர்
பாலகர்விருத்தர்பழையாரென
ராலநீழலமர்ந்தவாட்போக்கியார்
சீலமார்ந்தவர்செம்மையுணிற்பரே. க

விடுத்ததூதுவர்வந்துவினைக்குழிப்
படுத்தபோதுபயனிலைபாவிகா
ளடுத்தகின்னரங்கேட்கும்வாட்போக்கியை
யெடுத்துமேத்தியுமின்புறுமின்களே. உ

வந்திவ்வாறுவளைத்தெழுதூதுவ
ருந்தியோடிநரகத்திடாமுன
மந்தியின்னொளிதாங்கும்வாட்போக்கியார்
சிந்தியாவெழுவார்வினைதீர்ப்பரே. ௩

கூற்றம்வந்துகுமைத்திடும்போதினாற்
றேற்றம்வந்துதெளிவுறலாகுமே
யாற்றவும்மருள்செய்யும்வாட்போக்கியா
மேலற்றுமின்விளக்கையிருணீங்கவே. ௪

மாறுகொண்டுவளைத்தெழுதூதுவர்
வேறுவேறுபடுப்பதன்முன்னமே
யாறுசெஞ்சடைவைத்தவாட்போக்கியார்க்
கூறியூறியுருகுமென்னுள்ளமே. ௫

தானமோடிக்கடித்தெழுந்தூதுவர்
தானமோடுதலைபிடியாமுன்ன
மானஞ்சாடியுகந்தவாட்போக்கியா
ருனமில்லவர்க்குண்மையினிற்பரே. ௬

பார்த்துப்பாசம்பிடித்தெழுந்தூதுவர்
கூர்த்தவேலாற்குமைப்பதன்முன்னமே
யார்த்தகங்கையடக்கும்வாட்போக்கியார்
கீர்த்திமைகள்கிளர்ந்துரைமின்களே. ௭

நாடிவந்துநமன்றமர் வில்லிருட்
கூடிவந்துகுமைப்பதன்முன்னமே
யாடல்பாடலுகந்தவாட்போக்கியை
வாடியேத்தநம்வாட்டந்தவிருமே. ௮

கட்டறுத்துக்கடிதெழுந்தூதுவர்
பொட்டநூக்கிப்புறப்படாமுன்னமே
யட்டமாமலர்சூடும்வாட்போக்கியார்க்
கிட்டமாகியிணையடியேத்துமே. ௯

இரக்கமுன்னறியாதெழுந்தூதுவர்
பரக்கழித்தவர்பற்றுதன்முன்னமே
யரக்கனுக்கருள்செய்தவாட்போக்கியார்
கரப்பதுங்கரப்பாரவர்தங்கட்கே. ௰

திருச்சிற்றம்பலம்.

---

சுவாமிதிருநாமம் - இரத்தினகிரிநாதர்.

தேவிதிருநாமம் - சுரும்பார்குழலி.

# இரத்னகிரி.

## திருப்புகழ்.

கயலைச் சருவிப் பிணையொத் தலர்பொற்
கமலத்தியல்லைக்—கணிநீலே
கடிமொய்ப் புயலைக் கருதிக் கறுவிக்
கதிர்விட் டெழுமைக்—குழலாலே
நயபொற் கலசத் தினைவெற் பிணைமிக்
குளநற் பெருசெப்—பிணையாலே
நலமற் றறிவற் றுணர்வற் றனனற்
கதியெய்ப்படிபெற்—றிடுவேனோ
புயலுற் றியல்மைக் கடலிற் புகுகொக்
கறமுற் சரமுய்த்—தமிழ்வோடும்
பொருதிட் டமரர்க் குறுதுக் கமும்விட்
டொழியப் புகழ்பெற்—றிடுவோனே
செயசித் திரமுத் தமிழுற் பவநற்
செபமுற் பொருளுற்—றருள்வாழ்வே
சிவதைப் பதிரத் [illegible]வெற் பதனிற்
றிகழ்மெய்க் குமரப்—பெருமாளே க

பத்தியால் யானுனைப்—பல காலும்
பற்றியே மாதிருப்—புகழ்பாடி
முத்தனாமாறெனைப்—பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற்—கருள்வாயே
உத்தமாதானசற்—குணர்நேயா
ஒப்பிலாமாமணிக்—கிரிவாசா
வித்தகா ஞானசத்—திநிபாதா
வெற்றிவேலாயுதப்—பெருமானே உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# வாட்போக்கிப்புராண வசனச்சுருக்கம்.

——:(o):——

## நைமிசச் சருக்கம்.

பூலோகத்திலுள்ள எல்லாவிடங்களிலும் மிகச் சிறந்ததுந் தவம் புரிவதற்குரியதுமான நைமிசவனத்தில் அறிவிலும் ஒழுக்கத்திலும் கல்வியிலும் தவத்திலும் சிறந்தவர்களான பலமுனிவர்கள் ஒருங்குசேர்ந்து முன்னொருகாலத்தில் தவம் புரிந்துகொண்டிருந்தார்கள். அப்பொழுது அந்தப் புண்ணியவனத்திற்குத் தபோதனராகிய சூதமாமுனிவர் எழுந்தருளினர். முனிபுங்கவராகிய அவரைக் கண்டதும் அவர்களெல்லோரும் எதிர்கொண்டழைத்து வணங்கி அர்க்கிய பாத்தியாசமனமுதலி ஆசனமிட்டு அதில் வீற்றிருக்கச் செய்தனர். சூதமுனிவர் ஆசனத்தமர்ந்ததும், அவரை நோக்கி, "வாதராயண மகாமுனிவருடைய பரிபூர்ண கிருபையைப் பெற்ற சூதமுனிவரே! பரமகருணாநிதியாகிய மங்கை பங்கரின் இனிதமர்ந் தருள்புரியும் வாட்போக்கி மான்மியத்தையும் அப்பதியில் சிவபிரானை வழிபட்டுப் பேறு பெற்றவர்களையும் அங்குள்ள தீர்த்த மகிமையையும் கிருபைகூர்ந்து திருவாய்மலர்ந்தருளவேண்டுமென சௌனகர் முதலிய முனிவர்களனைவரும் வேண்டிக்கொண்டனர்.

அதைச் செவியுற்ற சூதமுனிவர், பிரம்ம முதலாகிய பதினெட்டுப் புராணங்களுள் சைவமென்ற புராணத்தில் கூறப்பட்டுள்ள இந்தத் தலமகிமையைச் சொல்வான் கருதி, தமது திருக்கரங்களைச் சிரமேற்குவித்து அகிலலோக சரண்யனாகிய முக்கட்பெருமானைத் திருவுளத்தில் தியானித்து முனிவர்களைப்பார்த்து, "முனிவர்களே! இதுவரையில் யாங்கூறிய புராணங்களிலும் இப்பொழுது இந்தப் புராணத்தைக் கூற நேர்ந்தது எனது பூர்வபுண்ணியமேயாம். அந்தப் புண்ணிய க்ஷேத்திரத்தின் பெருமை என

ளால் சொல்லிமுடிவதன்று. ஆயினும் அறிந்த வளவிற் சொல்லு கிறேன்.

இந்தத் தலமான்மியம் மிகவும் விசேடமானது. முன்னம் ஜகதீசன் மூவுலகத்தையுமீன்ற உமாதேவியாரோடு வெள்ளியங்கிரியில் வீற்றிருந்தார். அவரிருவருக்கும் நடுவில் ஆறுமுகக் கடவுள் வீற்றிருந்தார். அப்பொழுது வேலாயுதக்கடவுள் தனது தாதையின் திருமுகநோக்கி ஆர்கலி சூழ்ந்த இந்தப் புவியில் நீ விரும்பி வாசஞ்செய்யும் தலங்களுள் சிரேஷ்டமானதெதுவென்று வினவ, உமாபதியானவர் குமாரனுடைய மழலைமொழி கேட்டு மனமிக மகிழ்ந்து "அப்பா! இது பரம இரகசியம். ஆயினும் கூறுகிறேன்; காவிரிநதியின் தென்கரையில் மாணிக்கமலை யென்றொன்றிருக்கிறது. அந்த மலையில் தான் நாம் அகமகிழ்ச்சியுடன் வசிப்ப,"தென்று கூறி, அதன் பெருமையையுங் கூறினார். குமரவேள் அதனைக்கேட்டு மிகமகிழ்ச்சியடைந்து தாம் கேட்டவாறே நந்திதேவருக்கு நவின்றார். நந்தியப்பெருமான் சனற்குமாரருக்குச் சொன்னார். சனற்குமாரர் வியாத முனிவருக்குரைத்தார். அவரிடம் நான் கேட்டுணர்ந்தேன். அதன்படியே இப்பொழுதுங்களுக்குக் கூறுகிறேன். இதைக் கேட்பவரும் எழுதுவோரும்எழுதுவிப்போரும் பிறருக்குரைப்போரும் அந்தப் பரம்பொருளினது அருளினால் மூவுலகத்தையும் ஆண்டு சுகபோகங்களை யனுபவித்துப் பிறகு இந்திரபதவியையும் பெறுவார்கள் என்று கூறுவாராயினர்.

## மாணிக்கமலைச் சருக்கம்.

உ

முன்னம் பிரமகற்பத்தில் வாயுதேவனுக்கும் ஆதிசேடனுக்கும் பெரியயுத்தம் உண்டாயிற்று. அப்பொழுது வாயுதேவனால் மேருமலையினின்றும் ஐந்து சிகரங்கள் பெயர்த்தெறியப்பட்டு அவ்வைந்தும் ஐந்து சிவஸ்தலங்களாயின. பாண்டிவள நாட்டில் நீலாசலமென்று ஒன்றிருக்கிறது. அத்தலத்தில் ஓர் வில்வமரமொன்றுண்டு. அதன் கீழெழுந்தருளிய பரமசிவனுக்கு ஈசானதிசையில் ஓர் மலையிருக்கிறது. அது மூன்று யோசனை உயரமுள்ளது. காவேரிநதியின் மேல் கரையில் சுவேதாசலமென்று ஒன்றிருக்கிறது. இது பூமியினுள்ளே அமிழ்ந்திருக்கிறது. அப்படியும் அதன் மகிமையாவருக்கும் அதிசயிக்கத்தக்கது. இங்கு தேவதீர்த்தமும் வன்னி விருக்ஷமுமிருக்கின்றன. இந்தச் சுவேதமலைக்கு மூன்றுயோசனை தூரத்திற்கப்பால் காவேரி நதியின் தென்கரையில் அரையோசனை தூரத்தில் மாணிக்கமலையிருக்கிறது. இதை இரத்தினகிரியென்று சொல்வார்கள். இந்த திவ்யதலத்தில் ஓர் வேப்பமரமிருக்கிறது. இதன் பெருமை அளவுகடந்தது. இந்திரனுக்கு நேர்ந்த சாபம் அதனாலேயே நீங்கிற்று. காவேரிக்கு வடகரையில் மரகதாசலமென்றொன்றிருக்கிறது. கந்த நதிக்கரையில் குண்டலாசலத்தொடரில் வன்னிகர்ப்பமென்றொன்றிருக்கிறது. இதை நினைத்தளவில் சகலபாபமும் ஒழியும். இவ்வைந்தனுள் மாணிக்கமலையென்பதே மேலானது. இந்த மாணிக்கமலையிலுள்ள வேம்பின் கீழிருந்து பஞ்சாக்கரமோதிப் பரம்பொருளைத் தியானிப்பின் பேரின்ப வீடடைவார்களென்பதில் ஐயமில்லை.

## மாணிக்கமலைச் சிறப்புரைத்த சருக்கம்.

நைமிசாரண்ய வாசிகளின் வேண்டுகோளின்படி சூதமுனிவர் கூறுகிறார். மாணிக்கமலை பதினாறு யோசனை உயரமும் மூன்று யோசனை அகலமும் உள்ளது. இது விழுந்த வேகத்தில் பூமியில் அழுந்தியிருக்கின்றது. அங்கெழுந்தருளி யிராநின்ற பெருமானுக்கு இரத்தினலிங்கமெனப்பெயர். இந்த மலையைக் கண்ணிற்கண்டாலும் கேட்டாலும் பார்த்துச்சிரங்குவித்து வணங்கினும் பரகதியையளிக்கும். இதைச் சுற்றிலும் எட்டுத் திசைகளிலும் எட்டுத் தீர்த்தங்களிருக்கின்றன. இவைகளன்றி அக்கினிதிக்கில் பஞ்சாக்கர தீர்த்தமிருக்கிறது. தெய்வதீர்த்தமென்று மொன்றிருக்கிறது. இம்மலையில், இந்திரிய நிக்ரகம்செய்து ஆகாராதிகளையொழித்து வாயுபக்ஷணம் செய்யும் முனிவர்கள் பலரிருந்து தவம்புரிந்து கொண்டிருக்கிறார்கள். இதன் சிகரங்களில் இரத்தினங்கள் பிரகாசிக்கின்றன. பஞ்சாக்கரமே அம்மலையின் வடிவமாகும். அருமறையின் பொருளாகிய பரமசிவனே கருணையுடன் இலிங்க வடிவமாய் இம்மலையிலெழுந்தருளியிருக்கிறார். பலகோடி பிறவிகளிலும் புண்ணியஞ் செய்தவர்க்கேயன்றி மற்றவர்களுக்கு இம்மலையின் காட்சி கிடைப்பதரிது. இத்தலத்திற் கெழுந்தருளி கரும்பார்குழலம்மையையும் இரத்தினகிரீசரையும் வணங்கி இங்குள்ள வெம்மை வலம்வந்தவர்க்குச் சகல பாபங்களும் ஒழிந்து நித்தியானந்த வாழ்வுண்டாகும். இங்கு பஞ்சாக்கர ஜபம் செய்பவர் ஒன்றுக்குக்கோடி மடங்கதிகமான பலனைப் பெறுவார்கள்.

இங்கு குளம், வாவி இவைகளை வெட்டுவித்தவர்கள் இந்த உலகத்தைப் பலகாலமும் புரந்து கடைசியில் ஈசனை யடைவார்கள். இங்கு நந்தவனம் உண்டாக்கி, பார்ப்பனர்க்கு மனை பல வகுத்த பேர்கள் சொர்க்க லோகத்தையுமாள்வார்கள் இந்தத் தலத்திலிருந்து தானம் செய்தபேர்கள் மார்க்கண்டனைப்போல் நீடூழி வாழ்

வார்கள். ராஜ துரோகம் குருதுரோகம், பிராமண துரோகம் முதலியவைகளைச் செய்தவர், சொர்ணத்தைக்களவாடியவர் கருவினைச் சிதைத்தோர், அறிவில்லாதவர், கட்குடிப்பவர், முதலியவர்களும் முன்னவனுடைய நூலை நிந்தனை செய்தவர், அன்னம், தாரம், மகவு, அறம், தீம்புனல் இவைகளை விற்றிடுமீனர், கோட் சொல்பவர், பொய் கூறுகிறவர், பிறர்மனை விழைவோர், பிறர் பொருள் கவர்பவர், செய்ந்நன்றி கொன்றவர்கள், கணவனுக்குத் தீங்கிழைத்த மாதர்கள், பதிவிருதைகளை யிகழ்ந்ததீயோர், கடல் கடந்து சென்று வாணிபம் செய்யும் அந்தணர், கொலைபுரிவோர், குருவின் பத்தினியை விரும்பிய தீயோர், தாய் தந்தையரை இகழ்ந்தவர், யாசகர்க்குப் பொருளீயாதவர், தெய்வ நிந்தனை செய்வோர், முதலியவர்களும் இந்தச் சைலத்தைக் கண்ணால் கண்டால் அவர்கள் செய்த பாவத்தினின்றும் விடுபட்டு நற்கதி பெறுவார்கள். இம்மலையை வலஞ் செய்தவர், காவேரிநதி நீரால் பரமசிவனுக் கபிடேகம் செய்தவர், திருவிழா நடத்தியவர், வாகனம், தேர்கள், விமானங்கள் இவைகளைப் புனைவித்தவர், குடை, மணி ஆலவட்டம், தோரணம், கொடி முதலியன செய்வித்தவர், களவினை மேற் கொண்டாயினும் கணிகையர் நிமித்தமாயினும் பொருள் பெறும் பொருட்டேனும் ஒரு பகல் இத்தலத்திலிருந்தவர் இவர்கள் யாவரும் நற்கதியடைந்து சுகம்பெறுவார்கள். இந்தச் சருக்கத்தைப் படித்தவர், படித்துப் பிறர் கேட்கும்படி செய்வோர் முதல் யாவரும் மேலான வாழ்வை யடைவார்கள்.

## வாயுபூசித்த சருக்கம்.

முன்னம் வாயுதேவன் ஆதிசேடனுடன் அமர்புரிந்து மேருமலைச் சிகரத்தைப் பெயர்த்த குற்றத்தை ஒழித்துக்

கொள்ளும்பொருட்டு உமாபதியாகிய பரமசிவனைச் சரண மடைந்து அவரது கட்டளைப்படி வாட்போக்கியை யடைந்து, அதன் கீழ்பால் ஓர் தீர்த்தமுண்டாக்கி; அந்தப் புனலால் கங்கைசூடிய ஈசனுக் கபிடேகம்செய்து, அந்த மாணிக்கமலையை வலம்வந்து எமதிறைவனை அன்பொடு வணங்கிப் பலவிதமாகவும் துதித்தான். பிறகு இமயவல்லிதன் திருவடி மலரைப் பணிந்து விநாயகர், குமாரக்கடவுள் இவர்களையுந் தரிசித்து, அந்த மலையிலே பலநாள் வசித்து அருந்தவம் புரிந்து வந்தான். இப்படித் தவம்புரியும் வாயுதேவனுக்கு முன் எமதிறைவன் காளகண்ட திரிநேத்திரதாரியாக ரிஷபவாகனத்தின் மேல் தோன்றினர். அவரைக் கண்டதும் வாயுதேவன் தன் இருகரங்களையும் சிரமற்கொண்டு கண்களினின்று ஆநந்த பாஷ்பம் சொரியநின்று, கங்கதரனே சரணம், கருணாநிதியே சரணம் எனத்துதித்து, "என் ஐயனே! உமது திருவடியை ஒருபோதும் மறவேன், என் குற்றத்தைப் பொறுத்து எனக்கு நற்கதி யளிக்கவேண்டும்" என்று தோத்திரம் செய்தான். ஈசன் மனமிரங்கி, "உனக்கு வேண்டும் வரத்தைக் கேள்" என்றனர். வாயுதேவன் "ஈசா! நான் மேருமலையைப் பெயர்த்த குற்றத்தைப் பொறுத்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தான். ஈசன், அவன் கேட்டபடி அவ்வரத்தைத்தந்து, "எமது ஆணையால், உலகெங்கும் வியாபித்து ஒவ்வோர் சரீரத்திலும் சென்று பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்செயனென்னும் பத்துப் பெயரோடு அவ்வச் சரீரங்கட்டு உபகாரங்களைச் செய்துவரக் கடவாய்" என்று கட்டளையிட்டருளினர் அவ்விதமே வாயுதேவன் பத்துருவமடைந்து மேதினியைப் புரந்து வாழ்கின்றான்.

இச்சரித்திரத்தைப் படிப்போர் எவ்வகைப்பட்ட குற்றங்கள் செய்திருப்பினும் சிவபிரான் அவற்றைப் பொறுக்கருள்

வார். வாயுதேவன். பூசித்தது ஐப்பசி பூரணை யாகையால் அன்றையதினம் வாயு தீர்த்தத்தில் நீராடுபவர் மகா பாபத்தினின்றும் விடுபட்டு நற்கதி பெறுவார்கள்.

## ஆதிசேடன் பூசித்த சருக்கம்.

வாயுதேவன் வாட்போக்கித்தலத்தி லெழுந்தருளியிரா நின்ற ஈசனைத் தரிசித்து சிவத் துரோக பாவத்தை நீக்கிக் கொண்டதை நாரதமாகா முனிவர் ஆதி சேடனுக்குச் சொன்னார். ஆதி சேடன் அதை யறிந்ததும் உடனே நாக லோகத்திலிருந்து பூலோகத்தை யடைந்து கோகர்ணம், சங்குகர்ணம், பிரபாசம், மந்தராசலம், பிரமபுரி, அனந்தசயிலம், சோமேசுவரம், காலேசுவரம், சுசூந்திரம் முதலிய பல தலங்களுக்கும் சென்று பரமசிவனைத் தரிசித்துக்கடைசியில்வாட்போக்கிக்கு வந்து அங்கு தவஞ் செய்து கொண்டிருந்த அத்திரி, பாரத்துவாசர் முதலிய ரிஷிகளைத் தரிசித்து அவர்களை வணங்கி, பிராமண வேடந்தாங்கி ஓர் தீர்த்த முண்டாக்கி அதில் ஸ்நானஞ் செய்து நந்தவனத்திலிருந்து புஷ்ப மெடுத்துக்கொண்டு ஆலயத்துட் புகுந்து துவார பாலகர்களை நமஸ்கரித்து விக்கினேசுவரர்முதல் எல்லோரையும் விதிப்படி பூசித்து, அங்கு தென்மேற்கு மூலையில் தாபிக்கப்பட்டுள்ள தீர்த்தத்தில் நூற்றெட்டுக்குட மெடுத்துச் சிவலிங்கப் பெருமானுக்கபிடேகம் செய்து அர்ச்சனை நிவேதனம் முதலியனவும் அன்போடு புரிந்து மும்முறை வலம்வந்து வணங்கி யெழுந்து கைகளைச் சிரமேற் கூப்பி "அடியார்க்கடியனே! அற்புதாநந்த ஜோதியே!

கரியுரிவைப் போர்வையாகக் கொண்ட கடவுளே! காளகண்டனே! சரணம் சரணம்" என்று பன்முறை துதிசெய்து "பரம்பொருளே! மேருமலைச் சிகரங்கள் பல என்னால் அசைக்கப்பட்டன. அக் குற்றத்தைப் பொறுத்து என்னை ரக்ஷிக்க வேண்டுமென்று பிரார்த்தித்து வணங்கி நின்றான். கருணைக்கடலாகிய ஈசன் அவனுக் கிரங்கி அவன் முன் தோன்றி "உனது குற்றத்தை நீக்கி யருளினோம். நீ பரிசுத்தனாய் விட்டாய்; உன்னிருப்பிடம் சென்று சுகமாயிரு" என்று திருவாய் மலர்ந்தருளி லிங்கத்துள் மறைந்தனர்.

பிறகு ஆதிசேடன் ஈசனது கருணையை நினைந்து ஆநந்த பரவசனாகிச் சுரும்பார் குழலம்மையையும் இரத்தினகிரீசரையும் வணங்கி அத்திருப்பதியின் மகிமையை யாவரும் அறியும்படி கானம் செய்துகொண்டு தன்னிருப்பிடமாகிய நாகலோகம் சென்றான்.

## இந்திரன் சாபவிமோசனச் சருக்கம்.

தேவேந்திரன் கௌதமருடைய பத்தினியைப் புணர்ந்து அவரால் சபிக்கப்பட்டான். அந்தச் சாப நிவர்த்தியின் பொருட்டுத் தன்னுடைய குருவின் கட்டளைப்படி பூலோகத்தை யடைந்து அநேக சிவக்ஷேத்திரங்களைத் தரிசித்துக் கொண்டுவந்து கடைசியாக மாணிக்கமலையைக் கண்டான். கண்ட வளவில் இருகரங்களையும் சிரமேற்கூப்பி வணங்கி, பிறகு

காவேரி நதிக்குச் சென்று அதில் ஸ்நானஞ் செய்து பக்தியுடன்மாணிக்க மலைக்கேகி, அதனை மூன்றுமுறை வலம் வந்து அதன் மேலேறி, ஈசன் சந்நிதியில நின்று வணங்கி, அம்மலையிலேயே தன் வச்சிராயுதத்தால் ஒரு தீர்த்த முண்டாக்கி அதிலிருந்து தீர்த்த மெடுத்து ஈசனுக் கபிடேகம் செய்து பூசித்து வந்தான்.

இம்மாதிரி ஒரு பருவம் வரையில் இந்திரன் அத்தலத்திலிருந்து இறைவனைப் பூசித்துத் தியானத்திலிருந்து வந்தான். பிறகு ஈசன் அவனுக்கிரங்கி, பார்வதி தேவியாரோடு விடப வாகனத்தின் மீது காட்சி கொடுத்தருளினர். தனக்கு முன் தோன்றி நின்ற இறைவனையும் அம்மையாரையும் பணிந்து, "என் ஐயனே சரணம்!! ஈசனே சரணம்!! என்னை யாள்பவனே சரணம்!! கருணாகரனே சரணம்!!" எனத் துதித்து, என்னைப் புரந்தருளவேண்டும் என வேண்டினன். பரமசிவன் "உன் பூசையாலும் உன் தியானத்தாலும் நீ செய்த மெய் யன்பினாலும் எனக்கு மிகவும் மகிழ்ச்சி யுண்டாயிற்று. உனக்கு வேண்டும் வரமென்ன" என்றார். இந்திரன் இது கேட்டதும் தான் கிருதார்த்தனானதாக நினைத்து, "பரமதயா நிதயே! தபோதனராகிய கௌதமரால் கொடுக்கப்பட்ட சாபம் நீங்க வேண்டு"மென்று பிரார்த்தித்தான். பரமசிவன், "என்பால் அன்பு பூண்ட அருந்தவனால் கொடுக்கப்பட்ட சாபம் நீங்குதலரிது. ஆயினும் நீ என்னிடத்துக் கொண்ட பக்தியினால் உன் மேனியெங்கும் காணப்படும் ஆயிரம் யோனிகளும் ஆயிரங் கண்களாகக் காண வரமளித்தோம். நீ இனி உன் பதியையடைந்து சுகமாயிரு" என்று திருவாய்மலர்ந்தருளினர். இந்திரன் இவ்வரத்தைக்கேட்டு மிகவும் ஆனந்தமடைந்து ஈசனைப் பணிந்து பலபடியாகவும் துதித்து, "அடியார்க் கடியனே! நான் செய்த துதியைப் பாடித் துதித்தவர்க்கு நின் *கருணையுண்டாக வேண்டு" மெனவும் வேண்ட, இறைவன் "அங்ஙனமே ஆகுக"

எனக்கூறி ஜோதிலிங்கத்தில் மறைந்தருளினார். பிறகு இந்திரன் தன் பதியடைந்து ஈசனது திருவடி மறவாதிருந்து வந்தான்.

இந்திரன் சாபந்தீர்த்த இந்தச் சரித்திரத்தைப் படித்தோரும், எழுதினோரும், அளவில்லாத காலம் உலகத்தைப் புரந்து பிறகு சந்திரமௌலி யினுடைய பாதபங்கய நீழல் சேர்வார். இதில் ஐயமில்லை யென்றறிக.

## இடிபூசித்த சருக்கம்.

பிறகு முனிவர்கள் சூதமுனிவரைப் பார்த்து, “முனிவர் பெருமானே! இத்தலத்தினில் சூரிய பகவான்வந்து பூசனை புரிந்ததன் காரணத்தைக் கூறவேண்டும் என்று பிரார்த்தித்தனர்.

சூதமுனிவர், “முனிவர்காள்! உதயாசலத்தின் சமீபத்தில் மந்தேகமென்னும் ஓர் தீவிருக்கின்றது. அதில் கொடிய அரக்கர்கள் அநேகர் வாழ்கின்றார்கள். அவர்கள் மிகுந்த தவ வலிமை பெற்றவர்கள். அவர்களை எவர்களாலும் வெல்வதரிது. அந்த அரக்கர்கள் சூரியனோடு அடிக்கடி அமர் செய்வது வழக்கம். ஓர் சமயம் அவர்களை யெதிர்த்து அமர்புரிய ஆற்றாதவனான சூரியன் புறங்காட்டி யோடினான். அவனைக் கண்ட தேவர்கள் “சூரியனே! ஏன் இவர்களுக்குப் பயந்து ஓடவேண்டும். இவர்களை வெல்ல ஓர் உபாயமிருக்கிறது. அதாவது சம்பூத்தீபத்திலே காவேரிநதியின் தென்கரையில் ஓர் மலையிருக்கிறது. அது மேருமலையிலிருந்து விழுந்த சிகரங்களுள் ஒன்று. மிகவும் சிலாக்கியமானது. அதன் மேலுள்ள லிங்கத்திற்கு இரத்தினலிங்கமெனப் பெயர். இது எல்லா லிங்கத்தினும் மேலானது. நீ அங்கு சென்று அந்த இரத்தினலிங்கத்தைப் பூசிப்பாயேயாகில் அரக்கர்களை வெல்லுதற்குரிய ஆற்ற

னுண்டாகும்" எனக் கூச்சலிட்டார்கள். இதைக் கேட்ட ஆதித்தன் நாம் அங்கு எவ்வாறு சென்று பூசிப்பதென யோசித்துக்கொண்டிருக்கையில், நாரத முனிவர் அங்கு எழுந்தருளி "நீ கவலையுறேல், உன் துசகோதரனாகிய இடியையழைத்து அம்மலைக்கேகக் கட்டளையிடுவாயாக" என்றார். பிறகு சூரியன் மனமுவந்து இடியைத் தன் மனத்தில் எண்ணினான். உடனே இடியானவன் உலகமுழுதும் நடுங்கத்தக்க பெருஞ் சத்தமிட்டுக்கொண்டு சூரியன் முன்பு வந்தான். அவனைப்பார்த்ததும் சூரியன் அவனிடத்தில் தன் குறைகளைக் கூறி, "என் சகோதரனே! நீ இரத்தினகிரிக்குச் சென்று ஈசனைப் பூசித்து உலகமுய்யும்படி அங்கு ஓர் தீர்த்தமும் ஸ்தாபிக்கக் கடவாய்" எனவும், இடி உடனே அவிடம் விட்டு வேகமாகப் புறப்பட்டு இரத்தினகிரியையடைந்து அங்கொரு தீர்த்தமுண்டாக்கிப் பரமசிவனையும் உமாதேவியாரையும் பூசித்தான் ஜகதீசன் அவனது பூசைக்குகந்து காட்சிதந்து சூரியனுக்கு அரக்கர்களை வெல்லும் ஆற்றலைக் கொடுத்தார். அந்த வரத்தைப் பெற்றுக்கொண்ட இடியானவன் சூரியனிடம் வந்து நடந்த வரலாற்றைக் கூறினான். ஈசனுடைய கருணையை நினைந்து ஆனந்தமடைந்தான் ஆதித்தன். அன்று முதல் அரக்கர்களை வெல்லும் ஆற்றலுடையவனாகிச் சண்டையில் அவர்களைப் புறங்காட்டி ஓடச்செய்தான்.

அந்தத் தீர்த்தம் சகல பாபங்களையும் போக்கக்கூடியது. சரீராரோக்ய முண்டாக்கத் தக்கது. சூரியன் தன் கிரணங்களால் அத்தீர்த்தத்தைச் சுத்திசெய்கிறான். வருடந்தோறும் சூரியன் மேடராசியிலிருக்கும்போது வருகின்ற பௌர்ணமியில் சூரியன் இரத்தினகிரீசரைப் பூசிக்கின்றான். இது பிரம்மாண்ட முள்ளவரையில் நடக்கும். இரத்தினசைலேசுரருடைய பூசையின் மகிமையை என்னாலளவிட்டுச் சொல்லுதலரிது. அந்தத் தீர்த்தத்தில் ஒருகுடமெடுத்து இரத்தினலிங்கத்திற்கு அபிடேகம் செய்யினும் புத்திரர்களையடைந்து நெடுங்காலம் எல்லாச் சுகங்களையும் அனுபவித்து வாழ்ந்து ஈசனது திருவடி நிழலை இறுதியிலடைவார்களென்பதில் ஐயமில்லை. இச்சரித்திரத்தை செவியால் ஒருமுறை கேட்பானு

பின் அப்பொழுதே அவனது பாபங்களொழியும். ஈசன் திருவருள் கிடைக்கும் என்று கூறி மேலே கூறுகிறார்.

## அகத்தியர் பூசனை புரிந்த சருக்கம்.

முன்னமொருசமயம் அகத்திய முனிவர் இமயகிரியின் வட பாரிசத்திலிருக்கும் புட்பபத்திரா நதிக்கரையில் தவம் புரிந்து கொண்டிருந்தார். அங்கு நாரத மகாமுனிவர் வந்து, அகத்தியரை நோக்கி, "நாமிருவரும் யாத்திரை செய்து வருவோம், வாருங்கள்" என்றழைக்க, அகத்தியர் அதற்குச் சம்மதித்து அவ்விடம் விட்டுப் புறப்பட்டு இருவருமாகக் காஷ்மீரம், பிரபாசம், வில்வாரணியம், கேதாரம், காசி, பிரயாகை, அவந்தி, கோமதி முதலிய பல திருப்பதிகளைத் தரிசனம் செய்துகொண்டு வந்தனர். இப்படி மெய்யன்புடன் ஈசனினிதமர்ந்துறையும் தலங்கடோறும் சென்று தரிசித்து வருகையில் விந்திய பருவதத்தினருகே ஓர் பிரேதத்தைக் கண்டார்கள். கண்ட வளவில் அகத்தியர் அப் பிரேதத்தைக் கரையேற்றுவான் கருதி, மிகுந்த கருணைகொண்டு இதன்பாவத்தை யொழிக்கத்தக்க தலம் பல வணங்கி வருகிறேனென, நாரதமுனிவர் அவரை விட்டுப் பிரிந்து வேறொரு திசையை நோக்கி நடந்தார்.

பிறகு அகத்திய முனிவர், காவேரி நதிக்கரையிலுள்ள கடம்பவனத்திற்குச் சென்று, அந்நதியில் ஸ்நானஞ் செய்து கடம்ப வனநாதரைத் தரிசித்து பின் காவேரி நதியிலிருந்து தமது குண்டிகையில் நீரெடுத்துப் பஞ்சாக்கர மந்திரத்தினால் அபிமந்திரணஞ் செய்து அந்த நீரோடு பிரேதமிருக்குமிடஞ் சென்று அதன் மேல் புரோக்ஷித்தார். உடனே அந்தப் பிரேதம் கடம்பவனேசுவரர் கருணையாலும், காவேரி நதியின் சிறப்பாலும், கும்ப முனி

வரது தவ மகிமையாலும் திவ்ய சரீரம் பெற்று திவ்விய விமானத்திலேறி கைலாயாய கிரியை யடைந்தது. அந்தத் திருத்தல மான்மியம் அளவிடற் கரிது. காவேரி நதியின் மகிமையும் மகா விசேஷமானது.

பிறகு அகத்திய முனிவர் வடக்கு நோக்கிச் சென்று அநேக தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து மீண்டும் கடம்பவனமடைந்து ஈசனைப் பணிந்து மலரெடுத்துப் பக்தியோடு பூசனை செய்தார். மறுநாள் சூரியோதய காலத்தில் கருணைக் கடலாகிய மங்கைபங்காளன் அகத்தியர்க்கு அனுக்கிரகம் செய்யும்பொருட்டு இடபவாகனத்தின் மீது காளகண்ட திரிநேத்திர தாரியாக உமாதேவியாரோடு காட்சி தந்தருளினர். அதுகண்ட அகத்தியர் அடியற்ற மரம்போல் தரையில் வீழ்ந்து தண்டனிட்டுப் பிறகு எழுந்து துதிசெய்து சிவபெருமானுடைய திருவருள் பெற்று ஆனந்தமடைந்த அத்தலத்திற்கு உதயபுரியெனவும் நாமமிட்டு அங்கிருந்து மாணிக்கமலைக் கெழுந்தருளினர்.

இங்கு வேர்ப்படியிலிருந்து வேதம் ஓதும் வேதியனைத் தரிசித்து வணங்கிப் பின் மேற்புறத்தில் ஓர் தீர்த்தம் தமது பிரமதண்டத்தாலுண்டாக்கி அதில் நீராடிப் பிறகு பகல் வேளையில் அத்தீர்த்த மெடுத்து இரத்தினாசலப் பெருமானுக் கபிடேகஞ் செய்து கனிவர்க்கங்களை நிவேதித்துத் தரையில் விழுந்து பணிந்து எழுந்து நின்று "சர்வலோகசரண்யா! ஜகதீசா! முக்கண்ணா! மங்கை பங்காளா! காமதகனா! கறைமிடற்றிறைவா! வந்தனம் செய்கின்றேன். இரத்தினகிரி நாதா! உமது பாதபத்மம் பணிந்தேன், நீயே அடைக்கலம் அடைக்கலம்" எனத் துதித்தார். அப்பொழுது கருணையங் கடலாகிய சிவபெருமான் பார்வதியம்மையாரோடு இடபவாகனத்தின் மீது எழுந்தருளிக் காட்சியளித்தார். முனிவர் பெருமான் அவரது திருவடிகளில் விழுந்து வணங்கி, "ஜகதீசனே! எனக்குப் பரம மந்திரமாகிய பஞ்சாக்கர மந்திரோபதேசம் செய்தருள வேண்டும்" என்று பிரார்த்தித்

தார். பின்னும் "என் அப்பனே! மந்தியானச் சொக்கரெனும் பெயர் வழங்கவேண்டும். உன்னை மந்தியானத்தில் தரிசித்த பேர்கள் சிவகதி பெறுதல் வேண்டும். கார்த்திகை மாதத்தில் என் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்பவர்கள் கொடிய தீப்பிணிகளி னின்றும் சுகமடையவேண்டும்" என்றும் வேண்டிக் கொண்டனர். உடனே பரமசிவன் அகத்திய முனிவர்க்கு அவர் விரும்பிய, வரங் களெல்லாம் நல்கிப் புனிதலிங்கத்தில் மறைந்தருளினர்.

இந்தச் சரித்திரத்தை படித்த பேர்களுக்கு இந்த உலகத்து மன்றி பரலோகத்திலும் சுகமுண்டாம் என்று மேலே கூறுகி றார் சூதர்.

## உரோமேசர் பூசித்த சருக்கம்.

முனிபுங்கவராகிய அகத்தியர் பூசனை செய்த கதையைக் கூறியதும் சௌனகர் இன்னும் அத்தல மான்மியத்தைக் கேட்க விருப்ப மிருப்பதாகத் தெரிவித்தனர். சூத முனிவர், அதில் நாயகனாகிய ஈசனை மனதில் தியானித்துக் கூறுகிறார்.

முன்னாளில் சமரவேலென்னும் அரசன் உலக முழுவதையும் மனுவைப்போல் அரசாண்டுவந்தான். அவன் நீதி முறை தவறாத வன், சகல கலைகளையும் முணர்ந்தவன். ஜீவகாருண்ய சீலன், தரும குணமுடையவன். சுற்றத்தாரைப் பரிபாலிப்பவன், மகா வீரன், பகைவர்களுக்குச் சிங்கம் போன்றவன். தெய்வபக்தி யுள்ளவன், மன்னுயிரைத் தன்னுயிர்போல் காத்து வந்தான்.

இப்படி அரசியற்றி வரும் நாளில் ஓர்நாள் ஓர் காபாலிகன் அவ்விடத்திற்கு வந்தான். அரசன் அவனைக் கண்டதும் அன்போடு உபசரித்துத் தன் அரண்மனையில் சிலநாள் தங்கும்படி வேண்டினன்.

அவனும் அதற்கிசைந்து, அங்கிருந்து வரும்போது அவன், அரசனுக்கு லோகாயதன் மதத்தை உபதேசித்து, அவனைப் பார்த்து. “மகாராஜனே! நீர் சாஸ்திரங்களை யுணர்ந்தும் அநேக வேள்விகளைச் செய்தும் விருதங்களை யனுஷ்டித்தும் தெய்வந் தொழுதும் இது வரையில் அடைந்த பயன்யாது? ஒன்றையுங் காணேமே! பிரத்தியக்ஷமாக அனுபவிக்கத் தக்க சுகங்கள் அநேக மிருக்கின்றன. அவைகளை விட்டு வீணான விருதங்களையு மற்றவிஷயங்களையும் அறிவுள்ளவன் அனுஷ்டிப்பானோ! சரீரத்திற்கு வலுக்கொடுக்கத்தக்க பதார்த்தங்களைப் புசித்து மாதரோடு கூடி உறவாடிக் களிப்பதல்லவா சுகம்! அதுவன்றோ முக்தியென்பதும்!” என்று இப்படிப் பலபடியாகப் பலநாள் போதித்து அரசனைச்சாருவாக மதமென்னும் பெரிய குளத்தில் மூழ்கும்படி செய்தான்.

பிறகு அரசன் தீயவனுடைய போதனைப்படியே நடந்து கடைசியில் காலனுக்கிரையானான். இயமதூதர்கள் அவனைப் பாசத்தினால் கட்டி யிழுத்துக் கொண்டுபோய் தர்மராஜனது சன்னிதியில் நிறுத்தினார்கள். மகா பாதகனாகிய அவனை தர்மராஜன் கண்ணாற் கூடப் பாராமல் கொடிய நரகில் தள்ளும்படி கட்டளையிட்டான். இயமதூதர்கள் அவ்வாறே அவனைக் கொடிய நரகத்திடை வீழ்த்திப் பலபடியாகவும் துன்புறுத்தினார்கள். இதுவன்றி விந்திய பருவதத்தின் கண்ணுள்ள காட்டிலே பிசாசாகத் திரியும்படிக்கும் செய்தார்கள். அந்தப் பாவி அவ்வாறே பிசாசாகி விந்தியமலையின் கண் எங்குந் திரிந்து பசியினாலும் தாகத்தினாலும் வருந்தி நிற்க நிழலற்று, மான் முதலிய விலங்கினங்களைப் பிடித்துத் தின்றும் முன்தான் செய்த தீய செயல்களை நினைத்து நினைத்து வருந்தியும் உழன்று கொண்டிருந்தான்.

இப்படிச் சகித்தற் கரிய துன்பமடையும் அவன் ஓர்நாள் அம்மலைச் சாரலில் ஐம்பொறிகளையும் வென்ற தபோதனராகிய உரோமேசமகா முனிவரைச் சந்தித்தான். அவரைக் கண்டதும்

ஞானமடைந்து அவரது பாதாரவிந்தத்திற் பணிந்து "என்னைக் காத்தருள வேண்டு"மென்று வேண்டினான். அந்த மகாமுனிவர் தமது ஞானதிருஷ்டியால் அவனை இன்னானென்று தெரிந்து கொண்டு, "முன்னம் ஒழுக்கம் தவறி மகா பாபஞ் செய்ததனால் இத்துன்பம் உனக்குண்டாயிற்று. இத்துன்பம் ஒழியும் காலம் சமீபித்து விட்டது. அதனால்தான் நீ இங்குவந்தாய். என்னுடன் வா. உனக்கு க்ஷேமம் உண்டாகும்" எனக் கூறித் தம்முடனே பிசாசுருவாயிருந்த அந்த அரசனையும் அழைத்துக்கொண்டு சிவபெருமான் எழுந்தருளியிரா நின்றபலபதிகள் தோறும் சென்று ஈசனைத் தரிசித்துக்கொண்டும் அநேகபுண்ணிய நதிகளில் ஸ்நானம் செய்து கொண்டும் வந்து பிரமதேவருக்குச் சமமான அந்த உரோமேசர் கடைசியில் காவேரிநதியை அடைந்தார்.

காவேரிநதியை அடைந்ததும் தம்முடன் வரும் பிசாசுருவமான அரசனை அதில் மூழ்கச்செய்து தாமும் அந்தப் புனித தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து அந்நதிக்கரையின் தெற்கே யிருக்கும் வடகயிலாய மொத்த மாணிக்கமலையை யடைந்து, அதனைக் கண்டதும் மெய்யன்போடு வணங்கிப் போற்றி அம்மலைக்குக் கீழ்ப்பக்கம் வாயுதிக்கில் ஒரு தீர்த்த முண்டாக்கி, அதில்கங்கையாதி நதிகளின் தீர்த்தமெல்லாம் வந்து சேரும்படி செய்து அவ்வரசனை அதில் மூழ்குவித்தார். மூழ்கினதும் அந்த அரசன் தன் பிசாசுருவம் மாறிக் கரும்பு வில்லைக் கையிற்கொண்ட மதனன் றானோ இவனென் றெண்ணும்படியான எழிலுருவம் பெற்றான்.

பிறகு அந்த உரோமேசர், அவ்வரசனுடன் மலையின் மீதேறி ஈசனையும் இமயவல்லித் தயானரையும் பணிந்து, "புலியதளுடுத்த புனிதனே போற்றி, பூதநாயகனே போற்றி, கலியுக வரதா போற்றி கண் கண் மூன்றுடையாய் போற்றி" என்று துதி செய்தார்.

இப்படித் துதி செய்த முனிவனை நோக்கி ஈசன் "இவன் (அரசன்) இந்த நாவலந்தீவுக் கெல்லாம் அரசனாகி நீதிவழுவாமல்

ராஜ்ய பரிபாலனம் செய்து பிறகு தேவேந்திரனுமாகிச் சுகமனுபவித்துப் பின் சிவ சின்னங்களுடன் கைலாய மலையின் மீது வாழவும் வரமளித்தனம்" என்று திருவாய் மலர்ந்தருளினர். பிறகு இருவரும் ஈசனைப்போற்றி அவரிடம் விடைபெற்றுக் கொண்டனர். அரசன் தானுய்யுமாறு திருவருள் புரிந்த அம் முனிவரைப் பன்முறையும் வணங்கி அவரிடம் விடை பெற்றுக் கொண்டு சென்று ஈசனை மறவாநெறி நின்று உலகத்தைப் புரந்து வந்தான். முனிவரும் அந்தப் புண்ணியப் பொருப்பிலேயேயிருந்து ஈசனைப் பூசித்து வந்தார். இந்தக் கதையைப் பிறருக்குச் சொல்வோரும் கேட்போரும் எழுதுவோரும் தங்கள் பாவங்களொழிந்து ஈசனது இணையடி நீழல் சேர்வார்.

## வாட்போக்கிச் சருக்கம்

முற்காலத்தில் சூரியவன்னி யென்னும் பெயர்கொண்ட ஓர் அரசனிருந்தான். இவன் மனுநீதி தவறாத மகானுபாவன். பகைவர் கண்டஞ்சத் தக்க ஆண்மை படைத்தவன். வேள் நாணும் பேரழகுடையவன், மகா கீர்த்தி வாய்ந்தவன், சிவபக்தர்களிடத்து விசுவாசமுடையவன். சிவை பூசையின்றிப் புசியான். பிரஜைகளைத் தன் கண்ணிமையில் வைத்துப் பாதுகாத்து வந்தான்.

இவன் இப்படி யரசுபுரிந்து வருகையில், உலக கண்டகனாகிய மகிஷனென்னும் ஓர் அவுணன் பதினாயிரம் சிங்கவலிமையுடன் தோன்றிப் பிரமதேவனைக் குறித்துத் தவம்புரிந்து, அவரிடமிருந்து "முக்கண்ணன், முகுந்தன், இந்திரன் முதலிய இமையவர்கள் இவர்கள் ஒருவராலும் இடையூறின்றி வாழ்தற்கேற்ற ஆயுதங்கள் வேண்டும்" என வரங்கேட்டு அவைகளைப் பெற்றுக் கொண்டு உலகத்திலுள்ள அந்தணர்கள், அவர்கள் செய்யும் யாகங்

கள், அறச்சாலைகள், கோயில், குளங்கள், முனிவராச் சிரமங்கள் முதலியவைகளைத் தகர்த்தும் இம்சித்தும் வந்தான்.

இங்ஙனம் அவனால் துன்பமடைந்த ஜனங்கள் அரசனிடத்தில் முறையிட்டார்கள். அரசன் ஸ்ரீ கயிலாயஞ் சென்று நந்தியம் பெருமான் திருவடி பணிந்து மகிஷன் செய்யுங் கொடுமையைக் கூறினன். அதனை நந்திதேவர் சிவபெருமானுக்கறிவித்தார். சிவபெருமான் வேந்தனை அழைத்து வரும்படி நந்திதேவருக் காஞ்ஞாபித்தார். நந்திதேவர் ஈசன் கட்டளைப்படி வேந்தனை யழைத்துக் கொண்டுபோய் சிவபெருமானிடத்தில் சேர்த்தார். வேந்தன் சிவபெருமானைக் கண்டதும் அடியற்ற மரம்போல் தரையில் வீழ்ந்து நமஸ்கரித்து, அவுணனாகிய மகிஷன் செய்யும் துன்பங்களை யெடுத்தோதி. 'ஜகத்பதியே! நாங்கள் உய்யுமாறு கிருபை புரிய வேண்டும்" என்று வேண்டிக்கொண்டனன். பரமசிவன் "ஏ மன்ன! துர்க்கையை அனுப்புகிறோம். நீ கவலைப்படாமல் உன் நகரஞ் செல்"லென்று கூறியனுப்பி விட்டுத் தேவியை நோக்கி "நீ துர்க்கைவடிவங்கொண்டு சப்தகன்னியரோடு சென்று நமது பக்தர்களுக் கிடுக்கணியற்றும் கொடிய மகிஷனைச் சங்கரித்து வரக்கடவாய்" எனத் திருவாய் மலர்ந்தருள அருட்பெருஞ்செல்வியாகிய தேவியாரும்சிவபெருமானது கட்டளைப்படி துர்க்கை வடிவங்கொண்டு சிங்கவாகனத் தமர்ந்து பூமியில்வந்து அவ்வசுரனை நெடுகலுந் தேடிக் கடைசியில் அருணையம்பதியில் அவனிருக்கக் கண்டு "ஏ பாவி! நீ ஒழுங்கீனமான செய்கைகளைச் செய்து உலகத்தைத் துன்புறுத்துகிறாய்; ஆகையால் நீ உலகிலிருக்கத் தகாது. இதை விட்டொழிந்துபோ. இல்லையேல் என்னோடு அமர் புரிந்து இந்த வாளுக்கிறையாக நின்று உயிர் துறக்கத் துணி" என்று கூறினள். இதைக் கேட்டதும் அவுணன் வெகுண்டு கண்களினின்றும் தீப்பொறி பறக்க விழித்துப் பார்த்து "நீ ஒரு பெண்பாலானதால் இந்த வார்த்தை கூறி உயிர் பிழைத்தாய். ஆண்பாலாயிருந்தால் நீ யடையும் கதி வேறு" என்று சொல்லி "வீணில்

என் உயிரை யிழக்கிறாய். நான் மாதர்களை வருத்துவதில்லை. இவ்விடம் விட்டுச் சீக்கிரமாகச் செல்" என்று கூறினான். இவ்வார்த்தைகள் செவியிற் பட்டதும் தேவி மிகச் சினங்கொண்டு "மகிஷா! நீ புருஷனாயின் சற்று என்னோடு எதிர்த்து நின்று யுத்தம் செய்பார்ப்போம்; இனி நீ பிழைக்கப் போவதில்லை" என்று கூற, அவுணன் மகா கோபங்கொண்டு துர்க்கைமேல் பாணப் பிரயோகஞ் செய்தான். தேவியார் அந்த பாணத்தை மதியாது அவன் மீது பாணங்களைச் சொரிய, அவன் தேகமெங்கும் இரத்தம் ஆறாகப் பெருகியும் சட்டை செய்யாமல் எதிர்த்து நின்று யுத்தம் புரிந்து அஸ்திரங்களைப் பலபடியாகவும் வருஷித்தான் உமாதேவி அவ்வஸ்திரங்களனைத்தையும் நிர்மூலப்படுத்தினார். இப்படி யிருவரும் ஒருவர்க்கொருவர் தோல்வியில்லாமல் இந்தப் பூவுலகமும் தேவ உலகமும் அரிது அரிது என்று ஆச்சரியப் படும்படி ஆயிர வருஷகாலம் அகோர யுத்தம் புரிந்தார்கள்.

பிறகு தேவி மிகக் கோபங்கொண்டு அந்த மகிஷனுடைய இரண்டு கொம்புகளையும் பிடித்து பூமியில் தள்ளி வீழ்த்தி அவன் தலைமேல் காலூன்றி நின்று அந்தக் கொடியவனுடைய சிரசைத் தன் கைவாளால் பிளந்து மற்ற அங்கங்களையும் சிதைத்தாள். அப்பொழுது அவுணன் உயிர் துறந்தான். அங்ஙனம் உயிர் துறந்த அவுணன் பிரமஹத்தி உருவங்கொண்டு தேவியைப் பின் தொடர்ந்தனன். தேவியார் அந்த பிரமஹத்தியைப் போக்கும் பொருட்டு பரமகருணாநிதியாகிய பரமசிவன் எழுந்தருளியிரா நின்ற பல தலங்களையுந் தரிசித்துக்கொண்டு பொன்னி நன்னதியைச் சார்ந்து, அங்கு ஸ்நானம் செய்து மாணிக்கமலைக்குச் சென்று அநாதி முதல்வனாகிய ஜகதீசனைப் பணிந்து துதித்தலும் சிவபெருமான் அதனைப் போக்கவல்ல ஓர் ஆயுதமளித்தனர். தேவி அதைப் பிரயோகிக்க வழி தெரியாது மயங்கினள். ஈசன் தேவியாரின் உள்ளக் கருத்தை யறிந்து தேவியாரைப் பார்த்து "இந்த வாளால் இம்மலையைப் பிளப்பாயாக" என்

றார். பிறகு தேவியார் ஈசன் கட்டளைப்படி அம்மலையைப் பிளக்க அது இரு பிளவுகளாயிற்று. பிறகு பிர்ம்மஹத்தியொழிந்தது. இதைக்கண்ட தேவர்கள் ஆச்சரியமடைந்து இந்த வையகம் சிவாயமென்று கூறி வியந்தார்கள்.

அது முதலாக அந்த மலைக்குச் சிவாயமென்னும் பெயருண்டாயிற்று. கடவுள் அருளிய வாளைக்கையிலேந்தியிருக்குங் காரணத்தால் அத்தேவியாரைக் கட்கதுர்க்கையென்று துதித்து வருகிறார்கள். தேவியார் சப்த கன்னிகளுடன் அம்மலையிலிருந்து எல்லாருக்கும் அநுக்கிரகித்து வருகின்றனர். அந்த மலையின் ஓர் சாரிபில் தீர்த்த முண்டாக்கி யிருக்கின்றனர். அதில் நவமிநாளில் ஸ்நானஞ் செய்தவர்களுக்கு அவர்களுடைய பிரமஹத்தியாதி பாபங்களும் பொழியும். நற்கதியடைவார்கள்.

இந்த மலையின் பெருமை அளவிட்டுச் சொல்லுவதரிது. ஆயினும் தெரிந்தவரையிற் கூறுகின்றேன். இந்தத் தலம் தேவர்களனைவராலும் பூசிக்கப்பட்டது. வராக ரூபங் கொண்ட மகாவிஷ்ணுவும் இந்தப் பூமியைத் தன் மருப்பில் ஏந்திய இன்னலை யொழிக்கும் பொருட்டு இந்த மலையில் மேற்றிசையில் ஓர் தீர்த்த முண்டாக்கினார். அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து ஏழைபரதேசிகளுக்கு அன்னமளித்தவர்கள் தேவராவார்கள். இதுவன்றி பரத்துவாச முனிவர் ஈசான திசையில் ஒரு தீர்த்த முண்டாக்கி யிருக்கிறார். அந்தத் தீர்த்தத்தில் மூழ்கினவர்கள் ஈசனது திருவடியையடைந்து ஆனந்த முறுவார்கள். தேவர்கள் முனிவர்கள் முதலிய அனைவரும் இந்த மாணிக்கமலைக்கு வந்து நம்பனைத் தரிசித்துத் தங்கள் இஷ்டார்த்த சித்திகளை யடைந்தார்களென்று மேலோர் கூறுகிறார்கள். இம்மலையைச் சூரியன் மகரராசியிற் பிரவேசித்திருக்கும் புண்ணியகாலத்தில் வலம்வருபவர் பூப்பிரதக்ஷிணம் செய்த பலனைப் பெறுவார்கள்.

மேடமாதம் சுக்கிலபட்சம் மிருகசீரிட நக்ஷத்திரத்தில் துவஜமேற்றி அத்த நக்ஷத்திரத்தில் சுவாயம்பு மனுவென்பவன் முன்னாளில் இரதோற்சவம் நடத்தினான். அப்படி யிப்பொழுதும் செய்விப்பவன் இவ்வுலகத்தில் எல்லாப் புண்ணியங்களையும் செய்தவனாவான். அவன் வம்சமுழுதும் முத்தியடையும் இந்த வாட்போக்கிச் சிறப்பை ஆதிசேடன் தன் ஆயிரமுகத்தாற் பேசினாலும் பேசமுடியாது. அதன் பெருமையையான் தெரிந்த மட்டில் எடுத்துச் சொன்னேன் என்று கூறி, ஆரியராசன் ஆலாலமுண்ட பரம்பொருளைப் பூசித்து பேறுபெற்றதைக் கூறலுற்றார் சூத முனிவர்.

## ஆரியராசச் சருக்கம்.

நீர்வளம் நிலவளம் நிறைந்து பொன்னாட்டினும் நந்நாடெனப் பூதலம் புகழ விளங்கா நின்ற ஆரிய நாட்டில் மங்கலமாநகர் என்னுமொரு நகரமிருந்தது. இந்த மங்கலமாநகர் பூமிதேவிக்குத் திலகம்போல் விளங்கிற்று. இதை ஆரியராசன் என்னும் பெயர்கொண்ட ஓர் அரசன் தனக்கு ராஜதானி நகரமாகக்கொண்டுபூதலமுழுதும் ஆண்டுவந்தான். இவனை ராஜாதிராஜாக்களும் வந்து வணங்குவார்கள். இவன் சத்துருக்களுக்கு அந்தகன் போலவும் பல உயிர்களுக்கு உடலும் ஆவியும் போலவுமிருந்தான். காருண்யத்தில் கற்பகத்தருவை யொத்து விளங்கினான். இவன் பூதலமெங்கும் மழைவளஞ்சுரந்து தானம், தவம், தர்மம் இவைகள் நிலைபெறப் பல வேள்விகளைச் செய்தான். இவன் யுத்தத்தில் வீமனையும் கொடையிற் கன்னனையும் வில்யுத்தத்தில் விசையனையும் ஒத்திருந்தான். ஆயினும் நீதியோடு அரசாள்வதில் இவனுக்கு இவனே நிகரேயன்றி வேறொருவருமல்லர். தவசிகளிடத்தில் மிகு

வும் பயபக்தி விசுவாசமுடையன். அந்தணர்களிடத்தில் பணிவும் கல்விகேள்விகளில் தேர்ந்தவர்களிடத்து அன்பும், ஏழைகளிடத்தில் இரக்கமு முடையவன். அநேகதானதர்மங்களைச் செய்தும்நந்தவனம் வைத்து வளர்த்தும் வந்தான். கோயில்களைப் புதிப்பித்தும் புதிதாகவே அங்கங்கு கோயில்களைக் கட்டுவித்தும் குளங்களைப் பழுதுபார்த்தும் இல்லாதவிடத்தில் குளங்களை நூதனமாகவே யுண்டாக்கியும் வந்தான். சிவபெருமான் எழுந்தருளிய தலங்களில் விதிப்படி பூசை நடக்கவும் திருவிழா நடக்கவும் வேண்டிய திரவியச் செலவிட்டு உலகெங்கும் புகழ விளங்கினன். விபூதி ருத்திராட்சமணிந்தவர் எவரேனும் வரக்காணின் அவரை அன்போடுபசரித்து அவர்தம் திருவடி பணிந்து ஆனந்தமடைவான். மன்னவர்களுக்குச் சிங்கம்போல் விளங்கும் இவன் அளவிலாத நீதி நூற்பயிற்சியுடையவன் தன்னுடைய நாட்டில், பகைவர், கள்வர், விலங்கு, புள் முதலியவைகளா லாவது எப்பொழுதும் பயமுண்டாகாதபடி விழியினை யிமைகாக்கும் தன்மையாய் ஜனங்களைப் பரிபாலித்து வந்தான்.

இப்படி எண்ணான் கறங்களும் செழித்தோங்க, ஆரியராசன் அரசு புரிந்துவரும் மங்கலமாநகரானது குபேரனது பட்டணமாகிய அளகாபுரியினும் சிறந்து விளங்கிற்று.

வணங்காமுடி மன்னர்களும் வணங்கி யேத்தவும் மேனகை யொப்பாரிருவர் இருமருங்கும் நின்று கவரிவீசவும் அரம்பையை யொப்பார் அடையேந்தி அருகே நிற்கவும் திலோத்தமை யொப்பவர் நடனஞ் செய்யவும் அருந்தவ முனிவர்கள் பல்லாண்டுகூறவும், கவிவாணர்கள் தன்னுடைய புகழாகிய மலரை நால்வகைப் பாவிற் புனைந்து மாலைசூட்டவும் வந்திமாகதர்கள் புகழ்ந்துபாடவும், அமைச்சர்கள் தன் குறிப்பின் வழியே நடக்கவும் அநேகர் வீரர்கள் தன்னைச் சூழ்ந்து நிற்கவும் பேரிகை முதலிய வாத்தியங்கள் முழங்கவும் சிங்காதனத்தமர்ந்து மனுநீதி தவறாமல் அரசு புரிந்து வருகையில் ஓர் நாள் அவ்வாரிய ராசனுடைய விலைமதிக்

கொண்ட நவரத்னகிரீடத்தின் சிகரத்தை வாட்போக்கித் தலத்தி லெழுந்தருளிய சிவபிரான் காவேரி தீர்த்த ஸ்நானம் செய்ய வேண்டு மென்கிற காரணங்கொண்டோ, அந்தகிரீடங்களில் பதித்துள்ள மணியின்மே லாசைகொண்டோ, அல்லது அரசனு டைய பக்தியை உலகத்திற் கறிவிக்கத் துணிந்தேயாது காரண த்தாலோ எடுத்து எங்கேயோ மறைத்தருளினர்.

பிறகு மந்திரிகள் கிரீடங்காணாதிருப்பதை யறிந்து மிக வும் பயந்து, மெய் நடுக்கத்துடன் வேந்தரிடம் வந்து தெரிவி த்து நின்றார்கள். மன்னனது கேட்டதும் மனந்திடுக்கிட்டு மிகக்கவலையுற்றுத் தன் காவலாளர்களை யழைத்து, எனது மாணிக்க முடியைத் திருடியவன் யார்? உங்கள் காவலின் திறம் நன்று நன்று என நகைத்தான். இதைக்கேட்டதும் காவலாளிகள் வணங்கி, "தாங்களோ எவ்வுயிர்க்கும அன்னை யைப்போ லிருக்கிறீர்கள். அப்படியிருக்க, தங்கள் முடியைக் கவர்பவர்கள்யார்? இந்த உலகத்திலுமில்லை. அந்த உலகத்திலு மில்லையென்றே கருதுகிறோம். மற்றப்படி நாங்களுமறியோம். தங்கள் கட்டளைப்படி நடக்கச் சித்தம் என்றார்கள். இவ்விதங் கூறக்கேட்டதும் மன்னன், "இன்று நம்மிடத்திற்கு வந்தவர் கள் இந்நகரத்துள்ளவரன்றி மற்ற நகரத்துள்ளார் யாரையும் இங்குக்கொண்டு வாருங்கள்" என்று கட்டளையிட்டான். காவ லர்கள் தங்கள் தலைவன் ஏவியகட்டளையைத்தலைமேற்கொண்டு, மங்கல நகருள்ளார், மற்ற நகரத்தவர்கள் யாரையுங் கொணர் ந்து நிருபன் முன்பு நிறுத்தினார்கள்.

அவர்களைக் கண்டதும் மன்னவன், "என்னுடைய மாணி க்க முடியை எடுத்தவர்கள் கொடுப்பார்களாகில் அவர்களுக்கு அளவில்லாத சொர்ணம் கொடுப்பேன். அதுவின்றி அவர் கள் எதை விரும்பினும் அளிப்பேன். அவர்களுக்கு யா தொரு தண்டனையும் நான் விதிப்பதில்லை. இது சத்தியம்" என்றான். இம்மொழிகேட்ட ஜனங்கள் இறைவனது இருசர

ணமும் வணங்கி, "என் ஐயனே! தங்களுடைய பொருளைக்கவ ரும் எண்ணங்கூட எங்களுக்குண்டாகுமோ? ஒருக்காலுமுண் டாகாது. தாங்கள் எங்களனைவர்க்கும் பெற்ற தாயைப்போ லல்லவா யிருக்கிறீர்கள். என் ஐயனே! கருணையங்கடலே! தங்களது முடியை நாங்கள் எடுக்கவில்லை. இது சத்தியமான சொல்" என்றுரைத்தார்கள்

இதைக்கேட்டதும் மன்னன் வியப்பும் வருத்தமு மடை ந்து அவர்களனைவரையும் தத்தமிடத்திற் கேகப் பணித்து, தன்னுடைய அமைச்சர்களைப் பார்த்து, மணிச்சிகரத்தைக் கவர்ந்தவர் யாராகத்தானிருப்பார்கள். உங்களுடைய அறிவால இதைக்கண்டு பிடியுங்களென்றான். மந்திரிகள், "ஐயா! சபை யில் யாவருமிருந்தார்கள். அப்பொழுது நாங்களும் அருகே யிருந்தோம். வாளேந்திய காவலர்களும் சூழ்ந்திருந்தார்கள். சமயமும் திருடர்கள் வந்து திருடக்கூடிய சமயமல்ல. ஆகை யால் மாணிக்கமுடி போன வழி இதுவென எங்களறிவினுக்கே புலப்படவில்லை" என்றார்கள். இதைக் கேட்டதும் மன்னன் வெகுண்டு விழியினின்றும் தீப்பொறி பறக்க அவர்களைப்பார் த்து, "உங்களைப் போலொத்த மந்திரிகளை நான் கண்டதே யில்லை. நீங்கள் உங்கள் இருப்பிடம் செல்லுங்கள். என்முன் நில்லாதீர்கள்" எனக்கோபித்தான். இதைக் கண்டதும் அமைச் சர்கள், இது மன்னன் கோபமாயிருக்கும் வேளையாகையால் நாமிங்கிருத்தல் கூடாதெனக் கருதி அவ்விடம் விட்டு விலகினார் கள். பிறகு மன்னன் வேறொருஅறைக்குட்சென்று கதவைத்தா ளிட்டுக்கொண்டு அங்கு தரையில்விழுந்து புரண்டு, ஐயோ! முப் பத்திரண்டு தருமங்களும் குறைவற நடத்தி, மனுவைப்போல் இந்த உலகத்தைப் புரக்கும் பாக்கியம் யாருக்கும வாய்க்கும்? அத்தகைய வைபவம் வாய்க்கப்பெற்ற யான் நாளை சிகரமில் லாத மகுடத்தைச் சிரமேற்கொண்டால் உலகம் நகைக்காதா? வேறு புதிதுசெய்து கொள்வோமெனின் அதில் பதித்திருந்த

மணிகள்போல் இந்த மூவுலகத்திலும் கிடைப்பதரிதே! அந்தோ! இச்செய்தி எனது பகைவர் செவியிற்படின் நகைக்கமாட்டார்களா? அப்பொழுது நான் உயிர்தரிப்பேனோ? அந்தோ! அநேகபடைகளுங்காவலர்களுமிருந்தும் அமைச்சர்களிருந்தும் பல குடிகளிருந்தும் அநேக உறவினரிருந்தும் என்ன பயன்? திருடரால் வரும் இடையூறை என்னால் நீக்கமுடியவில்லையெனின், என்னையே துணையாக நம்பியிருக்கும் என் குடிகளுக்குறும் இடையூறுகளையெவ்வாறுநீக்குவேன். ஐயோ! கடவுளுக்கு என்னிடத்திற் சிறிதுங் கருணையில்லை போற்காண்கிறது. இதற்கென் செய்வேன். ஜகதீசா! கருணைக்கடலே! எனக்குற்ற இப்பெருங்குறையை நீக்கியருள்வாய்; பரமதயாநிதியே! பாவனாதீதப்பொருளே! உன்னுடைய அஞ்செழுத்தை இடையறாதோதும் எனக்கு இத்தகைய இடையூறுண்டாவது நீதியோ? முன்னம் ஆலால விஷத்திற்குப்பயந்து ஓலமிட்ட மாலாதி தேவர்களையும் அஞ்சேலெனச் சொல்லி அபயமளித்த தயாபரனல்லவோ நீ! அப்படிப்பட்ட கருணையையுடைய உனக்கு நானும் என் குலமும் என் குடியும் அடியோமன்றோ? நாங்கள் துயருறக்கெட்ட உலகம் உன்னைப் பழியாதோ? உனதடியார் கூட்டத்து ளொருவர் முதலைவாய்ச் சேயினை மீட்டனரன்றோ? இம்மகிமைவாய்ந்தவராகிய உமக்கு எனது முடிச்சிகரத்தை மீட்டளித்தல் ஒரு பெரிதா? அப்படிப்பட்ட வலிமை யெனக்கில்லை யென்பீராகில்; நான் இக்கணமே உயிர் துறந்துவிடுகிறேன். நான் இனி இந்த அவனியைப்புரப்பதில்லை. யார் அரசுபுரியினுஞ் சரி. நான் வனத்திற்கேகித்தவம்புரியச்செல்வேன்" என்று கூறித் தன் அரசையும் வெறுத்து மிகவும் வருத்த முற்று மனநொந்து தானிருந்த அறையின் கதவைத் திறக்கும் சமயத்தில், பிரமனும் மாலும் தங்கள் கனவினுங் காணாத வாட்போக்கி யமர்ந்தருளும் சிவபெருமான் ஓர் பிராமணக் கிழவன்போல் வேடம்பூண்டு அரசனெதிர் தோன்றினார். அவரைப் பார்த்ததும் மன்னன் ஒன்றும் பேசாமல் இங்குயார் இ

சமயம் வந்திருப்பதெனநினைத்து மனதில் அச்சங்கொண்டு இருந்த இடத்திலேயே நின்றான். அப்படி நிற்கும் அரசனைக் கருணையங்கடலாகிய ஜகதீசன் பார்த்து "மன்னா! நீ சிறிதும் அஞ்சாதே! அஞ்சாதே" யென்று கூறி "அப்பா! உனது முடிச்சிகரம் வாட்போக்கியி லெழுந்தருளிய அமலனிடத்திருக்கக் கண்டேன். நீ அவனிடம் போய்ப் பெற்றுக்கொள். அவன் இதுவன்றி நீ விரும்புவதெதுவாயினு மளிப்பான்" எனக்கூறி மறைந்தருளினர்.

பிராமணோத்தமர் மறைந்ததும் சூரியராஜன் ஈசனெனக் கண்டு பரமானந்தமடைந்து அவரைத் துதித்து, வெளியே வந்து அமைச்சர்களை யழைத்து அகிலலோக சரண்யனாகிய பரமசிவன் தன்மீது காட்டிய பெருங்கருணையை மனமகிழ்ச்சியுடன் தெரிவித்து அவர்களோடும், தன் மகனோடும் உறவினர்களோடும் இரதங்களிலேறிப் படைவீரர் புடைசூழ மங்கலமாநகரை விட்டுப் புறப்பட்டு, பலநாடுகள், வனங்கள் வனந்திரங்கள் யாவுங்கடந்து தொண்டைநாட்டையடைந்து, அங்கு காஞ்சி முதலான தலங்களைத் தரிசித்துக்கொண்டு பிறகு திருவெண்ணெய் நல்லூர் முதலிய தலமெலாந் தொழுது பின்பு வாட்போக்கி யமர்ந்தருளிய சிவபெருமானது திருவருளால் தில்லைத் தலமடைந்து அங்கு நடேசப் பெருமானது திவ்ய தரிசனங் கண்டு ஆனந்த பரிதனானான். பிறகு வைத்தீசுரன் கோயில், மாயூரம், ஆடுதுறை, குடந்தை, சம்புகேசுவரம், சிரகிரி, திருப்பாராய்த்துறை, கடம்பந்துறை முதலிய தலங்களை முறையே தரிசித்துக்கொண்டு காவேரிநதியில் ஸ்நானஞ்செய்து தென்றிசையை நோக்கினான்.

அங்கே மாணிக்கமலையைக் கண்டு இருகரங்களையும் சிரமேற்கூப்பி வணங்கி, மெய்யன்புடன் துதித்து "இனித்தேரேறிச் செல்லக் கூடாதெனக் கருதி தேரினின்று மிழிந்து கால் நடையாகவே சென்று மாணிக்கமலையை யடைந்து, அம்மலை

யின் அடிவாரத்திலுள்ள ஆயிரக்கால் மண்டபத்தில் தங்கினான். அந்த மண்டபத்தில் புராணிகர் புராணம் படித்தார்கள். அதை அரசன் மனமகிழ்ச்சியுடனிருந்து கேட்டான். அவர்கள், அத்தலப்பெருமையையும் அதிலுள்ள தீர்த்தங்களின் சிறப்பையும் அங்குவந்து இறைவனைப் பூசித்த முனிவர்களின் பெயரையும் கூறிக் கடைசியாக இம்மலை முழுதுஞ் சிவபெருமான் வடிவமென உரைத்தார். அதை அரசன் கேட்டதும் பரமானந்த மடைந்து, தலங்களெல்லாவற்றுள்ளுஞ் சிறந்த இந்த திவ்விய தலத்திற்கு நான் வர நேர்ந்தது என் புண்ணியவசமே யென நினைத்து, ஆ! இந்தவரை முழுதும் ஈசனது திருமேனியாயின், நான் இந்த வரைமேல் எப்படி யேறுவேன் என்று மனங்கலங்கி நின்றான். அப்பொழுது ஆகாயவாக்கொன்று "மலைமீது வருகவென" மும்முறை யெழுந்தது. அம்மொழி செவியிற் கேட்ட அரசன் இதுவும் இறைவனது பெருங் கருணையே யென நினைத்து, இருகரங்களையுஞ் சிரமேற் குவித்து ஈசனைத் துதித்துக்கொண்டே மலையின்மீதேறினான். அங்கு சிவபெருமானினிதமர்ந்திருக்கும் கோயிலின் கோபுரத்தைக் கண்டு அதை வணங்கி உள்ளே புகுந்து, கோயிலைப் பலமுறை வலஞ்சூழ்ந்து பிறகு சந்நிதிக்குச் சென்று இறைவனைத் தரிசித்து இருகரங்களையும் சிரமிசை குவித்து நின்று பலபடியாகவும் துதிபுரிந்து பரவசமாக நின்றான். இப்பொழுது ஜகதீசன் லிங்கத்தின் பின்புறம் ஓர் வேதியன்போல் தோன்றி அரசனைப்பார்த்து, "நீ யார், உன் பெயரென்ன? நீ இங்குவந்த காரணம் யாது" தென்று கேட்டார். மன்னவன், என் பெயர் ஆரியராசன், ஆரிய நாட்டின் கண்ணுள்ள மங்கலமாநகர் எனது வாசஸ்தலம், எனது முடிச்சிகரம் கெட்டுப்போயிற்று, அது இங்கிருப்பதாகக்கேள்விப்பட்டு இங்கு வந்தேன்" என்றான். அதுகேட்டு அந்த அந்தணன், அரசனை "எனது கனவில் ஈசன் தோன்றி, ஆரியநாட்டு மன்னன் வருவான். வந்தால் அவனை இந்தக் கொப்பரைநிறையக் காவேரி நீர் கொண்டுவந்து கொட்

டும்படி செய்; அவன் அப்படிக் கொட்டியபிறகு நமது வைப் பறையிலிருக்கும் மணிமுடிச்சிகரத்தைக் கொடுஎன்று கூறி மறைந் தருளினர். ஆகையால் நீ அவ்விதம் செய்யவேண்டும்" என்றான். அரசன் அம்மொழி கேட்டதும், " அந்தணரே! என்னை யாட் கொண்ட இறைவனுக்கு இந்தப் பணிபுரிய நான் செய்த புண்ணி யம் யாதோ அறிகிலேன். தங்களது கட்டளைப்படியே செய்கி றேன்" என்று கூறி குடமெடுத்துக்கொண்டு காவேரி நதிக்குச் சென்று குடங்குடமாகத் தீர்த்தங்கொணர்ந்து கொப்பரை யில்நிரப்பினான். கணக்கற்றகுடநீர்கொண்டுவந்து கொட்டியும் அக்கொப்பரை நிரம்பவில்லை. வெளியே கசிந்தொழுகுவது போல் காணப்பட்டது. இதைக்கண்ட அரசன் ஆச்சரியமடை ந்து அந்த அந்தணனை நோக்கி, "இந்தப் பொத்தலுள்ள கொப் பரையில் நீர்கொண்டுவந்து நிரப்பப் பணித்தது நீதியாகுமோ" என்றான்.

அதற்கு மறையவன் "மன்னனே! வருத்தத்தைப் பாரா மல் மறுபடியும் நதிக்குச்சென்று நீரெடுத்து வந்து ஊற்றுவாயா கில் முன்போல் குறையாது" என்றான். உடனே மன்னன் பொன்னிநதி சென்று முன்போல் நீர்கொணர்ந்து கொப்பரை யில் கொட்டி நிரப்பினான். மீண்டும் அந்தக் கொப்பரையில் கொ ஞ்சம் நீர் குறைந்தது. அதுகண்ட அந்தணன் "கொப்பரையில் நீர் கொஞ்சம் குறைந்திருக்கிறது. அதையும் நிரப்பினாலன்றி முடிமணியையளித்திடேன்" என்றான். இதைக்கேட்டு மன்னன் வெகுண்டு அந்தணனை நோக்கி, "ஐயா! உமது மனம் கல்லோ இரும்போ, முன்பென்ன வார்த்தை நீர் சொன்னீர்; உமக்கு ஜீவகாருண்ணியமென்பது சிறிதுமில்லை போலிருக்கிறது. ஒரு பெரிய குடமெடுத்துக்கொண்டு வெகுதூரம் சென்று நீர் திரட்டிவந்து இந்தப் பெரிய மலையிலேறி யான்படுந்துயரம் நீ கண்டும் மணியைக் கொடாததன் காரணம் என்ன!" எனக் கேட்டான். அதற்கு அந்தணன்," "மன்னு! நான் கூறியபடி செய்துமுடித்தாலன்றி உனது மணியைக் கோடேன்" என்றான்.

உடனே அரசன் தன்வாளை யோங்கி, வேதியன் முடியில் வெட்ட, அவ்வேதியன் அக்கணத்திலேயே சிவலிங்கத் தொளித்துக்கொள்ள வெட்டு சிவலிங்கத்தின் முடியில் வீழ்ந்தது.

வெட்டு விழுந்ததும் லிங்கத்தின் முடியிலிருந்து இரத்தம் பெருக ஆரம்பித்துவிட்டது. அதைக் கண்டதும் அரசன் மனம் பதறி “ஐயோ! நான் என்ன காரியம் செய்தேன். மகா பாவியானேனே!” என்று முகத்திலறைந்துகொண்டு தரையில் வீழ்ந்து அழுதான். பிறகு அரசன், சிவலிங்கத்தைத் தனது இருகையாலுந் தழுவி “ஐயனே! பாவியாகிய யான் இந்த இதற்குத்தான் வந்தேனோ?” என்று கூறி மெய்ப்பதைத்துக் கண்ணீர் சொரியத் துயரமுற்றுத் தன்னுடைய வஸ்திரத்தால் பரமனது திருமுடியிலிருந்து ஒழுகும் இரத்தத்தைத் துடைத்தான். துடைத்ததும் இரத்தம் மேன்மேலும் பெருகிக்கொண்டேயிருந்ததே யொழிய அடங்கவில்லை. அதைக்கண்டு அரசன் மிக்கவருத்தமுற்று விரைந்தெழுந்து அந்தமலை யெங்கும்சென்று அளவில்லாத பச்சிலைகளைக் கொணர்ந்து சிவபிரான் திருமுடியில் அவைகளின் ரசத்தைப் பிழிந்து அவைகளை யறைத்தும் பூசினான். பூசியும் இரத்த நிற்காமல் பெருகக்கண்ட வேந்தன், “ஆ! இனி என்ன செய்வேன், இந்தப் பொய்யுடலைத் துறப்பேனல்லது சுமக்கேன்” என்று கூறி அங்கிருந்த கல்லில் தன்னுடைய சிரசை மோதிக்கொண்டான். உடனே சிவபெருமான் சிவலிங்கத்தினின்று தோன்றி, ‘அன்பனே! நில்லு, நில்லு’ என்று கூறித் தமது கையால் தடுத்தார்.

இப்படிப் பரமசிவன் தடுத்ததும் அந்த லிங்கத்தின் முடிமீது இரத்தம் வராமலிருக்கக் கண்டு சொல்லற்கரிய மகிழ்ச்சி கொண்டு இரண்டு கரங்களையும் சென்னிமேற் சேர்த்து, “ஐயனே! மாலயன் காணுத்திருவுருக்காட்டி, எனக்கருள் புரிந்த ஈசனே! இனி என் குறைகள் யாவும் ஒழிந்தன” என்று கூறி பன்முறை தோத்திரஞ்செய்து, “கருணையங்கடலே! 'சினந்து வாளால் வெட்டிய தீமையை மறந்து என்னை யாட்

கொண்ட நினக்குயான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்; எண்ணிலலாத பிறவிக ளெடுத்துக் களைத்தேன். இன்னமும் பிறந்து துயரக் கடலில் மூழ்காத வண்ணம் என்னை நின் திரு வடி சேர்ப்பாய்; எனக்குப் பிரமனுடைய பதவியும் வேண் டாம். விஷ்ணுவினுடைய பதவியும் வேண்டாம்; இந்திர னுடைய பதவியும் வேண்டாம்; உன்னடிவாழ்த்தலே வேண் டும்." எனச் சொல்லித் துதித்தான் அரசன்.

இப்படி மன்னன் தன்னை மறந்து ஈசனைத் துதித்ததும் பரமகருணாநிதியாகிய இரத்தினாசலேசுவரர், மனமிரங்கி, "மன்னா! மனத் துயரத்தைவிடு" எனத் தேற்றி, அவனது தலை மிசை தாமெடுத்துவந்த மணிச் சிகரத்தைப் பொருத்தி எமதி றைவன் அளவில்லாத மகிழ்ச்சியடைந்து, "மன்னனே! இன்னும் சிலகாலமிருந்து இந்த உலகத்தை யாள்; பின் அரசு ரிமையை உன் புதல்வனுக்காக்கி உன்னை எமது திருவடியை விட்டுப் பிரியா நெறியில் வைப்போம். அஞ்சேல்; எமக்கு நீ செய்த வழிபாட்டிற்கு மிகவும் மகிழ்ந்தோம், உனக்கு வேண்டு வரங்களைக் கேள்தருகிறோம்." என்றார்.

அரசன், "ஜகதீசா! என் குலத்தவர்கள் எப்பொழுதும் உனக்குப் பொன்னி நீர் கொண்டுவந்து அபிஷேகஞ் செய் விக்க வேண்டும். கடைசியில் அவர்கள் நற்கதி பெறவேண் டும். இராசலிங்கம் என்கிற பேர் உனக்கிருக்க வேண்டும். அந்தப் பெயரை வகித்தபேருக்கு நற்கதி யளித்தல் வேண் டும். இந்த மலைக்கு மணிவரை யென்றே பெயரிருக்கவேண் டும். உன்னைத் திருமுடித் தழும்பனென்று யாவரும் துதித் திடல் வேண்டும். உனக்கு அபிஷேக நீரெடுக்கக் குடமளிப் பவரும், பொற்கொப்பரை செய்து வைப்போரும், நீரெடுத்து வருவோரும், உனக்கு வேண்டுவன சோர்வில்லாமல் கொடுப் பவரும் இந்த வையகத்தில் மிகுந்த செல்வவான்களாக விருந்து உனது இணையடியை வாழ்த்திடல் வேண்டும். அண்ணலே!

தங்கள் திருவுளப்படி இப்புவியில் யான்சிறிது நாளிருந்து அரசு புரிந்தபின் உம்முடைய திருவடி சேரவேண்டும். எனது புதல்வன் இந்தப் புவியைத் தனியரசு செய்யத்திருவருள் புரிந்து அவனும், அவன் வழியோரும் நற்கதி யடையும்படி செய்யவேண்டும் எனக்கேட்டான். பக்தபராதீனனாகிய பார்வதி மணாளன், அரசன் கேட்ட வரங்களனைத்தையும் தந்து லிங்கத்திலுள்ளே மறைந்தார்.

பிறகு அரசன் பரமசிவனை விட்டுப் பிரிய மனங்கலங்கி, அவரிடம் விடை பெற்றுக்கொண்டு முன்னேக்கிய வாறே சென்று கோயிலின் புறம்பே வந்து, அம்மன் சந்நிதிக்குச்சென்று தேவியை வணங்கி வலம் வந்து தோத்திரித்து தேவியிடம் விடை பெற்றுக்கொண்டு மாணிக்க மலையினின்றும் கீழிறங்கி, தன்னுடைய நாடாகிய ஆரியநாட்டை யடைந்தான். பிறகு மங்கலமாநகர் வந்து சிங்காதனத்து வீற்றிருந்து மன்னுயிர்க்குத் தாய்போலிருந்து அரசு செலுத்திவந்தான்.

## சிற்றுயர் அருள்பெறு சருக்கம்

பல வளங்களும் நிறையப்பெற்ற சோழ நன்னாட்டில் குழித்தண்டலை யென்னும் ஊரில் இடையர் குலத்தில் ஒருவர் பிறந்தனர். இவர் சிவபிரானது திருவடிமலரன்றி வேறொன்றையும் சிந்திப்பதில்லை. சதா அந்நிலையே தியானமாக விருப்பவர். பஞ்சாக்கர மந்திர ஜபம் தினந்தோறும் செய்து வருவார். இவர் வயதிற் சிறியர். ஆயினும் மெய்யன்பு செய்வதில் மிகவும் பெரியர்.

இவர் எப்பொழுதும் மாணிக்க மலைக்கு தம்முடைய பசுக்களை யோட்டிக்கொண்டு அங்கு ஓர் சாரலில் மேய்த்து வருவது

வழக்கம். அங்கிருந்து பசுக்களை மேய்த்தபிறகு ஒவ்வொரு நாளும் ஒருபெருங்குடத்திற் பாலைக் கறந்து அப்பாலைச் சுமந்து கொண்டு மலைமேலேறி சிவபெருமானுக்கு மெய்யன்புடன் அபிடேகம் செய்து வருவார்.

இப்படி யிருந்து வருகையில் பாற்குடத்தை வைத்துவிட்டு வேறொரு வேலையிலிருந்து குடத்தினருகே திரும்புகையில் அங்கு ஒரு காகம் அப்பொழுது வந்து அந்தக் குடத்தைக் கவிழ்த்து விட்டு ஓடி விட்டது. அதைக்கண்ட சிற்றுயனார் மிகவும் பயந்து தரையிற் புரண்டு அழுது ஐயோ! ஈசனுக்கபிடேகம்செய்ய வைத்திருந்த பாலாயிற்றே; இனியென் செய்வேனெனக் கலங்கினார்.

பிறகு ஜகதீசனை நினைத்து "என் ஐயனே! உனக்கபிடேகமாட்டுவிக்க வைத்திருந்தபாலைக்காகங் கவிழ்த்துவிட்டமையால் இனி நான் பொய்யனானேன். என்னுயிரை விடுதலுண்மையே" என்று முறையிட்டழுதார்.

காருண்ய மூர்த்தியாகிய பரமசிவன் அவர் மீதிரக்கங்கொண்டு தேவியாரோடு இடபவாகனத்தின்மேலெழுந்தருளிக் காட்சிதந்து, தன்னை மறந்து நிற்கும் ஆயனாரைப் பார்த்து, "அப்பா! இப்பாலை முழுதும் என்மேனியே யாதலால்" இந்த வெப்பில் சிந்தியபால் வீணாயிற்றென் றெண்ணாதே. குற்றமற்ற எமது திருமேனியைக் குளிரச்செய்தபடியால் நாம் மகிழ்வுற்றோம்" என்றார். உடனே அன்பர் பரமானந்த பரிதராகி ஈசனைப்பணிந்து என் ஐயனே! முன்னம் வேளைக்காய்ந்ததுபோல்சொல்லுதற்கரியபெரியபிழையைச் செய்த காகத்தையும் எரிந்தருள வேண்டுமெனப் பிரார்த்திக்க, அடியாருள்ளத் தெண்ணிய எண்ணத்தை முடித்தருளும் சிவபெருமான் ஆகாயத்திற் பறக்கும் காக்கையைத் தமது செங்கண்ணால் நோக்கினார். அக்கணமே அந்தக்காகம் எரிந்து தரையில் வீழ்ந்தது. அதுகண்ட சிற்றுயனார் "என் அப்பனே! ஏழையின்மேல் வைத்த கருணைக்கு யான் என்ன

செய்யப்போகிறேன். "நினக்கு அடிமை செய்வதல்லால் வேறொன்றும் புரிய அறியேன். கருணாகரனே! கடலெழுமமுதே! கண்ணுதற் பெருமானே" எனத் துதித்தார். இப்படித் தன்னை மறந்து துதிபுரிபா நின்ற தம்முடைய பக்தராகிய சிற்றாயனாரை ஈசன் பார்த்து உனக்கு வேண்டும் வரம் யாது கேளென அவர் மனமுவந்து "என்னையனே! இந்தப் பிறவித் துன்பத்தை இனியான் சகியேன். அதனை நீக்கி உமது பாதாரவிந்த நீழலிற் சேர்த்துக்கொள்ள வேண்டும்" என்று வணங்கினார். அப்படிக் கூறி வணங்கி நின்ற அன்பரைப் பார்த்து "நீ கேட்ட வரத்தைக்கொடுத்தே"னெனக் கூறி அவரைத் தமது பாதநீழல் சேர்த்தனர். தேவர்கள் பூமாரி பொழிந்து மகிழ்ந்தார்கள்.

## வயிரப் பெருமாள் மலைகாவல் பெற்ற சருக்கம்

தொண்டை நாட்டின்கண் மிகவும் சிறப்புற்றோங்கிய காஞ்சிமாநகரில் ஆயர் குலத்தில் ஒருவர் பிறந்தார். அவர் பஞ்சாக்கரமும், விபூதியும், ருத்திராக்ஷமுமே பொருளெனக் கொண்டவர். பரமசிவனுடைய பக்தர்களிடத்து அன்புடையவர், அவர்களுக்கு ஆடைகளுதவி அன்னமளிக்கும் புண்ணிய சீலர்.

இவருக்கு ஒரு தங்கையிருந்தனர். இந்த அம்மாள் மகா பதிவிரதா சிரோமணி. எல்லாரிடத்திலும் தாயைப்போன்ற அன்புடையவளாயிருந்தாள். இவளை ஒருநாள் இவளுடைய மாற்றாள் அவமதிப்பாகப் பேசினாள். அதைப் பொறாமல் சிவபெருமானிடத்து மெய்யன்புடையவராகிய தன் தமயனிடம் சென்று அவரிடம் முறையிட்டாள். அவர் "நீ ஏன் வருந்துகிறாய்; காரணமென்ன? சொல்" என்று கேட்டார். அவள் எனது

மாற்றாளுடைய குழந்தை பூசைப் பாத்திரத்தைத் தொட்டது. அதைத் தொடாதேயென்று விலக்கி விட்டேன். அக்குழந்தை அழுதது. அதைக்கண்டு மாற்றாள் குழந்தையை கையப்புடைத்தது மன்றி மிகக் கோபத்துடன் என்னிடம் வந்து என்னைத் திட்டி "நீ பிள்ளையைப் பெற்றிருந்தாலல்லவா தெரியும், மலடியானதால் தான் இப்படிக் குழந்தையைச் சினந்தாய்" என்று கூறி என்னை யிகழ்ந்தாள். அந்தோ! இவளிடம் இந்தப் பேச்சுக் கேட்க நான் என்ன பாபஞ் செய்தேனோ தெரியவில்லை. முனிவர்களுடைய சாபமாக விருக்குமோ? என்னுடைய குருவின் வார்த்தையை மறுத்ததால் வந்ததோ, அல்லது குல தெய்வத்திற்கிழைத்த பிழையால் நேர்ந்ததோ அறியேன்" என்று கூறிக் கண்ணீர் விட்டாள். அப்படி அழுது வருந்தும் தன் தங்கையைப் பார்த்து அந்த பக்தன் "அம்மா வருந்தாதே. சிவபெருமானுனது குறையைத் தவிர்ப்பார். உனக்கொரு மகவை ஈசனருளுமட்டும் நான் பலதலங்களுக்குஞ் சென்று பரம்பொருளைத் தரிசித்து வருகிறேன். நீ இங்கிரு; எனக் கூறி சிவபெருமானையும் காமாட்சியம்மையையும் தியானித்துத் துதிபுரிந்து தன்னை மறந்து நிற்கையில், "பலதலங்களும் சென்றுவா; அப்பொழுது உனது எண்ணம் நிறைவேறும்" என ஓர் அசரீரி வாக்குண்டாயிற்று. அதைக் கேட்டதும் மகிழ்ந்து. பக்தியோடு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு சிதம்பரம் வந்து நடேசப் பெருமானது திவ்ய தரிசனம் கண்டு ஆனந்தமடைந்தார். பிறகு முன்றிய பல தலங்களை யடைந்து அங்கங்கு ஈசனது திவ்ய தரிசனஞ் செய்து கொண்டு திருப்பராய்த்துறை வந்து சிவபெருமானையும் தேவியாரையும் தரிசித்துப் பிறகு குழித்தண்டலை வந்து சேர்ந்தார். அங்கு காவேரிநதியில் ஸ்நானஞ்செய்து அருகேயுள்ள கடம்பந்துறைப் பெருமானையும் தரிசித்துப் பின் அதற்குத் தென்பால் விளங்கா நின்ற மாணிக்க மலையைக்கண்டு ஆனந்தங்கொண்டு அதனை யடைந்து அம்மலை மீதேறி முதலில் விநாயகரைத்தொழுது அங்குள்ள பொன்னிடும் திருப்பாறை கண்டு அதற்கு வணக்கஞ் செய்து பஞ்

சாட்சாஜபம் செய்து "என் அப்பனே! ஆலாலமுண்ட பரமனே! கருணாகரனே! என் கோரிக்கை நிறைவேறுமாயின் என் தலையைத் தருகிறேன்" எனப் பிரார்த்தித்துக் கொண்டார். அந்த மலையிலேயே ஒரு மண்டலமிருந்தார். அப்போது ஒருநாள் அவருடைய கனவில் எமதிறைவனாகிய இரத்தின சபேசுவரர் ஓர் வயோதிகப் பிராமணனாகத் தோன்றி, "உனது குறையை நீக்கினோம்; நீ உன் பட்டணம்போ; தெரியவரும்" என்று கூறி மறைந்தருளினர். பிறகு அவர் மனக்கவலை தீர்ந்து "ஐயனே! பரம்பொருளே! ஆதி முதல்வனே! நினது கருணை பெற்றவர்க்குக் குறையேதேனு முண்டோ" வென்று கூறிக் கங்காதரனைத் துதித்தெழுந்து மலையை வலம் வந்து சிவபெருமானைப் பணிந்து மனக்களிப்புடன் அவ்விடம்விட்டு நீங்கித் தன்னகரம் நோக்கி வந்தார். வரும் வழியில் மீண்டும் ஈசனைப் போய்த் தரிசித்து வருவோமென்கிற எண்ணங்கொண்டு மலையை நோக்கித் திரும்பினார். பிறகு "சே! நான் மீண்டும் மலைக்குச் செல்வேனாயின் ஈசனுடைய 'கட்டளையை மீறினவனாவேன். செல்வது கூடாது" என்று நினைத்து மலைக்குச் செல்லாமல் வழியே திரும்பி தன்னுடைய பட்டணம் வந்து சகோதரியின் கிருகத்திற்குள் நுழைந்து அவளுக்கு ஆண்டவனுடைய விபூதிப் பிரசாதமளித்து, ஈசன் தமது கனவிற்றோன்றித் திருவருள் புரிந்ததைக் கூறி மனமுவந்தார் அவரது சகோதரியும் ஈசனது கருணைக்குகந்து இடைவிடாமல் அவரையே தியானித்து வந்தாள்.

பிறகு அவள் கர்ப்பந் தரித்து ஒரு புத்திரனைப் பெற்றாள். அவனை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தாள்.

இப்படியிருந்து வருகையில் அவளது சகோதரன்தான் பரமசிவனுக்குத் தன் தலையைத் தருவதாகக் கூறி பிரதிக்ஞை செய்துகொண்டதை மறந்துபோனார். அப்பொழுது அடியார்க்கடியவனாகிய பரசிவமூர்த்தி அவரது கனவில் தோன்றி "நீ யேன்

உன் பிரதிக்ஞைப்படி தலையைக் கொடுக்க வில்லை, மறந்தனை போலும் " என்று கூறி மறைந்தார். பிறகு அவர் விழித்துக் கொண்டு அநாதி முதல்வனாகிய சிவபெருமானைத் துதித்து, தியானஞ் செய்து பொழுது புலர்ந்ததும் நித்யகடனை முடித்துக் கொண்டு தன் சகோதரியிடம் சென்று " வாட்போக்கி யென்னும் திவ்விய தலத்திற்குப் போய்வர வேண்டு"மெனச் சொல்லி அவ் வுத்தமியோடும் இன்னும் சில சுற்றத்தாரோடும் புறப்பட்டார். புறப்படுமுன்னர் கையில் ஓர் வாளையு மெடுத்துக்கொண்டு மெய் யன்புடன் இரத்தினகிரியை நோக்கி நடந்து குழித்தண்டலை வந்து சேர்ந்து அங்கு பொன்னி நதியில் ஸ்நானம் செய்து அங் கிருந்து தனது சகோதரி முதலானவர்களோடு புறப்பட்டார்.

அவர் மலையை நோக்கிப் போகும்போது தன்னுடைய சிரசில் இருகரங்களையும் குவித்துக்கொண்டு துதி புரிந்துகொண்டே போனார். அவருடைய உறவினர்கள் சிவசிவ வெனச் சொல் லிக்கொண்டே அவரைச் சூழ்ந்து சென்றார்கள். அந்த அன் பர் மாணிக்கமலையை நெருங்கினதும், காசிபன் முதலாகிய இருடி கள் எம்பெருமானைத் துதி புரிவது செவியிற் பட்டதுகண்டு அகங் குளிர்ந்து ஆனந்தமடைந்து புளகாங்கித முற்றார். பிறகு மலையை யடைந்து அதன் மேலேறி அங்குள்ள திவ்யதீர்த்தத்தில் தன் சகோதரி முதலானவர்களை மூழ்குவித்து அவர்களை ஈசன் ஸந்நிதிக்குச் செல்லும்படி சொல்லித் தானும் அந்தத் தீர்த்தத் தில் ஸ்நானஞ் செய்து பக்தியோடு பஞ்சாக்கர ஜபஞ் செய்து விபூ திருத்திராக்ஷமணிந்து புஷ்பங்களாலும் தன்னை யலங்கரித்துக் கொண்டு தான் கையில் கொண்டுவந்த வாளையரையிற் சொருகிக் கொண்டு சந்நிதியை நோக்கிச் சென்று முதலில் விநாயகரைப் பணிந்து, "இடர்களைத் தருளவேண்டு"மெனப் பிரார்த்தித்துக் கொண்டு பிறகு பொன்னிடம் பீடத்தைப்பணிந்தார். பின் கோயிலை வலம் வந்து சிவபெருமானை அநேகவித மாகத் துதிபுரிந்து சந் நிதிக்கு மேற்சப் பக்கத்தில்நின்றுகொண்டு, "என்னை யாட்கொண் டருளவேண்டும். என் மீதுகோபம் வைத்துக்கொள்ளக் கூடாது.

என்னப்பனே! இமயவல்லி நாதனே! ஈசனே நீயே யெனக் காண்" எனப் பிரார்த்திக்கையில், அஞ்சேல், அஞ்சேல், உன் தலையை எமது பாதத்தில் அணிந்திடுவோம்," என்ற ஓர் ஆகாய வாக்குண்டாயிற்று.

அந்தி ஆகாய வாக்கைக் கேட்டதும் ஆனந்தமடைந்து வீர சிங்கக் கோலத்துடன் பொற்பாறை யண்டை வந்து நின்று, வாளை நிறுத்தி அதன்மேல் "என்னப்பனே! ஆலாலமுண்ட பரம் பொருளே! தயாநிதியே! சர்வசங்காரமூர்த்தியே! சங்கரா! சம்போ"வெனத் துதிகூறிப் பாய்ந்தார். உடனே அவருடைய தலை வெட்டுண்டு அந்தப் பாறையிறினின்று மலைனுச் சிக்குச்சென்று ஈசன் சன்னிதானத்திலிருந்து புன்னகையுடன் தோத்திரஞ் செய்தது.

இதுகண்ட அவருடைய சகோதரி முதலியவர்கள் "அந் தோ! "என் சகோதரிக்குமகவுண்டானல் என் தலையை உனக் களிப்பே"னென வேண்டி வந்தனர் போலும். இந்த மருமம் நம க்குத் தெரியாமற் போயிற்று, எனப் பரமாச்சரியமும் துக்கமு மடைந்து தங்களுடைய நகரத்துக்குத் திரும்பினர்.

அந்தத் தலையானது அங்குள்ள வேம்பின் கீழ் ஓர் லிங்க மாய் நின்றது. அப்பொழுது அந்தணர் தீபாராதனை செய் தனர். அக்கணத்தில் "இந்த லிங்கத்திற்கு எப்போதுந் தீபா ராதனை புரிக" என ஒரு ஆகாய வாக்குண்டாயிற்று. அவரது வைரா க்கியத்தின் காரணமாக அவருக்கு வையிரப் பெருமாளெனும் பேருண்டாயிற்று.

## பொன்னிடும்பாறைச் சருக்கம்

திருவாரூர் என்னும் திவ்ய க்ஷேத்திரத்தில்வசித்து வந்த சுந் தரமூர்த்தி சுவாமிகள், தமது தோழனாகிய சேரமான் என்னும் அரசனைக் காண, அவன் வசித்துவந்த கொடுங்கோளூர் என்னுந் திருநகருக்குச் செல்லக் கருதி அடியார்களுடன் புறப்பட்டு கரி

வேரி நதியின் தென்பாரிசத்திலுள்ள தலங்களெல்லாவற்றையுந் தரிசித்துக் கொண்டுவந்து சிராப்பள்ளியடைந்து தாயாம் ஈசனைத் தரிசித்து வணங்கித் துதிபுரிந்து பிறகு திருப்பாய்த்துறைக்கு எழுந்தருளி அங்கு இறைவனைத் தரித்துக்கொண்டு கடம்பூர் கோயில் வந்து கடம்பவனநாதரைப் பணிந்து தமிழ்ப்பாமாலை புனைந்து அப்பரம்பொருளுக்குச் சாத்தி ஆனந்தமடைந்து, அங்கிருந்து மாணிக்கமலை நோக்கிச் சென்றனர். அந்த மலையினருகே சென்றதும் அவருக்கு அது ஓர் ஜோதி லிங்கமாகக் காணப் பட்டமையால் சுந்தரமூர்த்தியையர் "ஆ! இதிலெங்கனேயான் யேறுவ"தெனத் திகைத்து நின்று அங்கிருந்தே தமிழ்ப்பாப் புனைந்து ஈசனைத் துதித்துத் தமக்குப் பொன் வேண்டுமெனப் பிரார்த்திக்க, அவருக்கு ஈசன் திருவருள் புரியக் கருதித் தமது பூதகணங்களை யழைத்து அம்மலைப் பாறையில் பொன்னைக் கொணர்ந்து சொரிய ஆக்ஞாபித்தார். பூதகணங்கள் அவ்வாறே பொன்கொணர்ந்து பறையிற் சொரிந்தன. அவைகளை நாயனார், எடுத்துக்கொண்டு பரமானந்த மடைந்து தன்னை மறந்து தமிழ்ப் பதிகம்பாடித் துதிபுரிந்தனர். ஈசன் அங்குள்ள ஒன்றுபாதி என்னுமிடத்தில் அவருக்குக் காட்சி தந்து "வேண்டும் வரங் களைக் கேட்க"வென நாயனார், "என் அப்பனே! இந்தத் தலத் திற்கு வந்து திருநீலகண்ட தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்த வர்களும் இந்த மலையைத் தரிசித்தவர்களும் முக்தி பெறு தல் வேண்டும். உனது கீர்த்தி பொருந்திய லீலைகள் இந்த உல கத்தில் பிரசித்தியடைய வேண்டும்" என வரங்கேட்டனர். நீல கண்ட மூர்த்தி அவர் விரும்பியவாறே வரமளித்து லிங்கத்துட் மறைந்தனர். பிறகு நாயனார் எம்பெருமானை வணங்கி அவரது கருணையை நினைந்து நினைந்து உருகிப் பன்முறையும் துதிபுரிந்து அங்கிருந்து மலை நாடேகினர்.

வாட்போக்கிப் புராண வசனச் சுருக்கம்.

முற்றிற்று.

சிவகணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# திருவாட்போக்கிப்புராணம்.

## காப்பு

பெரும்புவன மேவற்றினையும் பெற்றவொரு சிற்றுதரக்
கரும்பினொடு மொருமுக்கட் கனியும்வீற் றிருந்தருளுந்
திருந்துமொளி மாணிக்கத் திருமலையிற் சிறந்தென்று
மிருந்தருளும் வேழமுக னிணையடித்தா மரைபணிவாம்.

## பாயிரம்.

### வாழ்த்து.

அறுதொழிலந் தணர்வாழ்க வானினங்க டழைகமழை
புறுமுறையிற் பொழிகசைவந் தோங்குகவின் ணவர்மலிக
முறைபயிலு மறைதழுவா மூகர்நெறி தாழ்கபொறை
நிறைபெற்றுபூ தலம்பொலிக நீடுகசை வமுமன்றே [க]

### நூற்பயன்

அறுசீரடியாசிரிய விருத்தம்

மதிதவழும் வாட்போக்கி மாதேவன் மான்மியத்தை மகிழ்ந்து கேட்போர்
நிதிபலவு நனியெய்தி நிலம்புரந்து மகவுயிர்த்து நீடு வாழ்ந்து
விதியுலகு முதலாய விண்ணுலகபோகங்கள் வெறுக்கத் துய்த்து
நதியணியு நம்பெருமான் றிருக்கயிலை யென்னாளு நண்ணி வாழ்வார் [உ]

# திருவாட்போக்கிப்புராணம்.

## கடவுள் வாழ்த்து

### சிவத்தைப் போற்றல்

#### கலிவிருத்தம்

மன்னிய மணிமறை மன்ற நீத்தொரு
இன்னருளுருதவுவான் கனக மெய்திறற்
பன்னக வயவரி பலருங் காணுறக்
கொன்னடம் புரிகழன் முடியிற் கொள்ளுவாம் [௧]

### சத்தியைப் போற்றல்.

குஞ்சித பதத்தொளி குறித்து நோக்கிநின்
றஞ்சன்மி னெனவுயிர்த் தொகுதி யாவைக்கு
மஞ்சென வருண்மழை வழங்கு நாயகி
செஞ்சர ணிணைமலர் சென்னி சேர்த்துவாம் [௪]

### இரத்தினகிரீசுவரர் துதி

#### அறுசீரடியாசிரிய விருத்தம்.

சீர்தந்த நான்மறையின் சிரத்தொளியைச் சித்தாந்தத்
தெளிவை யன்பார்
பார்தந்த விமயமலைப் பசுந்தேனைக் கலந்தவொரு
பாலை வேலைக்
கார்தந்த வாலால முண்டவிண்காத் தருள்கருணைக்
கடலை நாளு
மேர்தந்த வாட்போக்கி மாணிக்க மலைக்கொழுந்தை
யிறைஞ்சி வாழ்வாம் [௫]

### சுரும்பார்குழலம்மை

அரும்பாருந் தனதடமு மங்கலநா ணணிந்தகண்டத்
தழகுந் தோடுங்
கரும்பாரும் பசுந்தோளு மதிமுகமுங் கருணைபொழி
கமலக் கண்ணு
மிரும்பாரும் பொன்னுலகு மேத்தவடி யவர்வாழ்த்த
வெதிர்நின் றாளுஞ்
சுரும்பாருங் குழலுமையா டிணையடித்தா மரைமுடிமேற்
சூடி வாழ்வாம் [௬]

## அருள்பொழிவிநாயகர்

கொச்சகக்கலிப்பா

இருவினையும் விடமாசை யீடகல வாணவத்தின்
விரிவுதரு வலிசாய விரைந்துசுழல் கறங்கேபோல்
வருபிறவிக் கோடையினால் வாடாம லுயிர்தளிர்ப்பக்
கருணைதழை பொழியுமொரு கடாக்களிற்றை வணங்குவாம்

## குமாரக்கடவுள்.

பொன்னிருகை விரல்சேர்த்திப் புடைவீசி யிறுமாந்து
முன்னிருகை யானைபொத்து மூர்க்கனைத் திரிந்துழலு
மென்னிருகைத் தொழும்பேற்கு மிருசரண முளரியுடன்
பன்னிருகை படைத்தருளும் பாலகனைப் பரவுவாம் [௮]

## திருநந்திதேவர்.

மருவந்த தவநீழல் வாசவனு மாலயனும்
வெருவந்து புடைவிலங்க விலக்குதிருப் பிரம்பேந்தி
ஒருவன்பி னுமையாள்வோ னோலக்க நடாத்தியரு
ளருணந்தி யடிக்கமல மகக்கமலத் திருத்துவாம் [௯]

## திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்.

பொங்குபுன லிடுமேடு புனலோடு மோடாம
லிங்கேவரு மதிசயிப்ப வெதிரேறச் சமண்கையர்
துங்கமலி கழுவேறத் தொடர்ந்தவரை வாதில்வென்ற
சிங்கமறைக் குருளையிரு சேவடிசென் னியில்வைப்பாம் [௰]

## திருநாவுக்கரசுநாயனார்.

வெற்பினையா மடல்வேழம் வேகம்விடுத் தடிதாழ்த்தி
யற்புதமா மெனுப்படிநீற் றறைமலர்ப்பூந் தடமாக்கிப்
பற்பலர்பார்த் தகங்குழைப்பப் பல்பிணியார்த் திட்டவொரு
கற்புணையாற் கடல்கடந்த கவிக்கரசைப் பரவுவாம் [௰௧]

சுந்தரமூர்த்திநாயனார்.

அப்புயப்போ தமர்ந்தோனும் அலைகடல்வாய்த் துயின்றோனு
மும்பர்களியா வரும்பிறரு புணர்வரிய திருவடிக
ளிம்பரிற்பா ரிடந்தோய விருமுறைநள் ளிரவினிடை
நம்பனைத்தூ தெனநடத்து நம்பியையன் புடன்பணிவாம்

மாணிக்கவாசகசுவாமிகள்.

கூடனெடுந் தெருவினிடைக் குறுநரியின் குலமனைத்து
மாடல்வயப் பரியாக்கி*யைங்கதியின் முறைநடப்பத்
தோடவிழ்பூங் கொன்றைபுனை தோன்றன்மறைப் பரியில்வரப்
பாடல்புரி வாதவூர்ப் பாவலனைப் பரவுவாம் [௧௩]

அறுபத்துமூவர்.

மறுவுற்ற புறச்சமய வழியனைத்தும் பிழையென்று
குறைவற்ற பேரன்பாற் குருலிங்க சங்கமத்தி
னுறுபத்தி நெறியெவர்க்கு முணர்த்துதல்செய் தெனையாண்ட
வறுபத்து மூவர்கள்பொன் னடிக்கமல முடிக்கணிவாம் [௧௪]

ஆரியராஜன்.

சூரியரா யிரங்கோடி தோன்றியபோற் சுடர்மணிக்காக்
காரியல்கண் டனைப்பொன்னிக் கடனீரா யிரமாட்டப்
பூரியெனப் பாத்திரத்திற் பொசிவாசி தரமுனிந்த
ஆரியமன் னனைநாளு மகக்கமலத் திருத்துவாம் [௧௫]

வைரப்பெருமாள்.

ஆற்றமில்காஞ் சியிற்பிறந்து வாயர்குலத் தவதரித்துக்
குற்றமிலா வுடன்பிறந்தாள் (1) குழவிபெறத் தலைபலியா
யுற்றுதவி மாணிக்க வோங்கனற்பெம் மானருளைப்
பெற்றெமையாண் டருள்வயிரப் பெருமானைப் பரவுவாம்

---

* மல்லகதி, மயூரகதி, வியாக்கிரகதி, வானரகதி, விடபகதி.

1. பாலன்.

சிற்றுயனார்.

அறுசீரடியாசிரிய விருத்தம்

(2) ஆனஞ்சு பரம்பரனுக் காட்டுவான் பானையில்வைத் தகலக் காகந்
தானஞ்சுங் கவிழ்ப்பவுயிர் வெறுப்பனென வரைமுழுதுந் தாமே யென்னத்
தேனஞ்சு மொழிபாகர் தெளிவிப்பச் சாம்பராய்த்திியக் காக
மூனஞ்சு விழவருளன் றுற்றசிற்று யனைநாளு முளத்துள் வைப்பாம் [கஎ]

மற்றைச் சிவ நேசர்கள்

கொச்சகப்பா

நாவலந்தீ வாதியவின் ஞாலத்திற் சீலத்தான்
மூவகைய காலத்து முறைமையினிற் றிறப்பாது
மாவடுவை யனையவிழி பங்கையொரு பங்குடைய
தேவர்பிரான் றொழும்பேற்ற திருத்தொண்டத் தொகை பணிவாம் [கஅ]

நூல் செய்ததற்குக் காரணம்

அறுசீரடியாசிரிய விருத்தம்

முன்னம்வே தந்தொ குத்த முனிவர னருளாற் சூதன்
சொன்னவாட் போக்கி மேன்மை தூயசெந் தமிழி னாலே
தன்னிக ராதி சைவத் தானிகர் தலத்தோ ரன்பாய்ப்
பன்னுவா யென்ன வன்னோர் பணிகொண்டு புகல்வன் மாதோ [சக]

அவையடக்கம்.

சூதமா முனிவன் றேர்ந்து சொன்னமுன் னையபு ராண
மோது நீருததி தன்னுண் முகந்திடுங் கலசம் போல
ஏதமில் சிலவே யான்கொண் டியம்புகேன் கலைகள் முற்று
மோதிய நல்லோ ரியாரு முவந்துரைத் திடுவரென்றே [உ0]

---

2 ஆனஞ்சு—பஞ்சகௌவியம்

கொச்சகப்பா

அக்கரவ மணிந்தபிரா னமர்ந்துறையும் வாட்போக்கி
மிக்கபுரா ணந்தமிழால் * விஞ்சையர்மு னியான்மொழிந்த
றக்கவனக் குழுவினெதிர் தகைசிறிது மறியாத
கொக்கினங்க ணடைகாட்டிக் குறைகாட்டும் படித்தாமால்

ஆகத் திருவிருத்தம் ௨க

---

## சிறப்புப் பாயிரம்.

எழுசீரடியாசிரிய விருத்தம்

அன்னமார் வயல்சூழ் மாணிக்க மலேயி
ஞரிய மொழிப் புராணத்தைக்
கன்னலுந் தேனு மமுதமும் போலக்
கனிந்தசெந் தமிழினற் செய்தான்
பன்னுசெந் தமிழக் ககத்தியன் போலப்
பாரினில் வந்தவ தரித்து
மன்னுதென் கயிலே மாநகர் மருவும்
வைத்திய நாத தேசிகனே [௧]

## பதிகம்.

அறசீரடியாசிரிய விருத்தம்

நிலங்கொளா ரணிய மென்னு நைமிச மான வாறு
மிலங்குமா ணிக்கக் குன்ற மிருநிலத் தடைந்த வாறுந்
துலங்குமக் குன்ற மேவுந் தொல்புகழ்ச் சிறப்பி னேடுஞ்
சலங்கொளும் வாயு சேடன் சார்ந்தருச் சித்த வாறும் [௧]

இந்திரன் பணிந்த வாறு மிடியருச் சித்த வாறுஞ்
செந்தமிழ் முனிவன் பூசைச் சிறப்பொடு சோம சப்பே
ரந்தமின் முனிவன்பூசித் தானருள் பெற்ற வாறுஞ்
சந்திர காசங் கொண்டு தடவரை பிளந்த வாறும் [௨]

ஆகத் திருவிருத்தம் 24.

---

* கற்றுணர்ந்த புலவர்.

## புராணவரலாறு

### கலிவிருத்தம்

அருந்தவம் வடிவெடுத் தனைய ரியாவர்க்கு
மருந்தினு மினியவர் வாய்மை பூண்டுளார்
கருங்கடல் விடநுகர்ந் தருளுங் கண்ணுத
றிருந்தடித் தாமரை மிலைந்த சென்னியார் [௧]

வார்சடை முடியினர் வயங்கு கண்டிகை
யேர்கெழு மாலைய ரிலங்கு நீற்றொளி
சேர்தரு மேனியர் சீரை யாடையர்
தார்முகி லெனப்பொழி கருணை பூத்துளார் [௨]

முப்புரி நூலணி மார்பர் மூதுணர்ந்
தெப்புவ னமும்புக ழெய்த நின்றுளா
ரொப்பருங் கலைகளு மோது மங்கமுந்
°திப்பிய மறைகளுந் தெளிந்த சிந்தையார் [௩]

முண்டகப் போதென முகம லர்ந்துளார்
புண்டர மூன்றினாற் பொலிந்த நெற்றியார்
உண்டிகாய் கிழங்கயின் றொடுங்கு மேனியார்
தண்டுநீர்க் குண்டிகை தாங்குங் கையினார் [௪]

*கருநிற மானுரி கதுவு மார்பினார்
புரிதரு மஞ்செழுத் துணரும் புந்தியார்
அருமறை விதிவழு வாத தன்மையார்
தெரிவரும் பெருமையார் சீல மாய்ந்துளார் [௫]

---

°திப்பியம்—திவ்யம். *கருநிறமானுரி—கிருஷ்ணாஜினம்

## நைமிசைச் சருக்கம்.

உருப்பமார் கோடையி னுடற்று 1 மைவகை
நெருப்பினின் றருந்தவ நிகழ்த்து நீர்மையார்
வரிக்குயி லழுங்குநீண் மாரி நாள்வயிற்
பெருக்குநீ ரிடைத்தவம் புரியும் பெற்றியார் [௬]

எழுசீரடி யாசிரியவிருத்தம்.

அங்கிரன் வசிட்டன் பிருகுமார்க் கண்ட
னத்திரி கோதமன் கபிலன்
றுங்கமா தவங்கூர் கௌசிகன் மேன்மைச்
சுகன்சதா னந்தன் வான்மீகி
மங்குல்சூழ் விந்தத் தகந்தைபைத் தவிர்த்த
மாதவன் கண்ணுவன் மரீசி
சங்கமே நிகர்க்கும் விபாண்டகன் வாய்மைச்
சதுமறைப் பராசர முனிவன் [எ]

துகளறு காட்சி முற்கலன் கருணைத்
தூயகா சிபன்றுரு வாச
னிகலறு வாம தேவமா முனிவ
னிசைபெறு சவுபரி யென்போன்
புகழ்பெறு மறைதேர் காவலன் மேலாம்
புலத்திய னத்திமா தவத்தோன்
முகையவிழ் கமலப் பொகுட்டில்வீற் றிருக்கு
முதல்வனோர் தமனமா முனிவன் [அ]

தள்ளரும் பெருமை யுரோமசன் குரசன்
சௌனகன் முதலிய வறவோ
ரெள்ளருந் தவங்க ளியற்றுதற் கமைந்த
விடஞ்சகத் தியாதெனத் தெரிவான்
கொள்ளைவண் டினங்கள் கூட்டிணைப் பசுந்தேன்
கொழுமட லுடைந்துகொப் பளிக்கு
முள்ளளை முளரித் தவிசில்வீற் றிருக்கு
முதலவ னுலகினை யடைந்தார் [௯]

---

1 ஐவகைநெருப்பு-நாற்புறமும் எரியவிடுத்த வக்கினியோடு பானுவின் வெப்பம்.

அடைந்தமா முனிவர் நான்முகக் கடவு
ளடித்தல முடித்தலம் புனைந்து
படர்ந்தபே ரன்பாற் பரவினர் நிற்பப்
பங்கயத் தவிசின னோக்கி
யுடங்குநீர் நம்பா லுற்றதென் னேயென்
றுரைக்கலுந் தரைத்தலை நோற்க
இடம்பெறற் கடைந்தோ மருளுதி யெந்தா
யென்றலு நன்றுநன் றென்று [௰]

அன்னவன் குசையா னேமியொன் றியற்றி
யவிரொளி நித்தில மிறைக்கும்
பின்னல்வெண் டரங்கக் கருங்கட லுடுத்த
பெரும்புவி யதனிடைச் செலுத்தி
பின்னதெவ் விடஞ்சேர்ந் துற்றதவ் விடமே
யெய்திநீ ரிருந்தவ மிழைக்கத்
துன்னுநற் றலமென் றதனுட னடுத்த
தூயமா தவரையும் விடுத்தான் [௰௧]

விடுத்தலும் பேரன் புவட்டெடுத் தொழுக
வேதியன் விரைச்செழுங் கமல
வடித்தலம் போற்றி முனிவரர் விடைகொண்
டாழிமுன் செலவதன் பின்சென்
றிடர்ப்பட வின்றிப் போந்தனர் போந்த
விலங்கொளி யமையு மந்நேமி
தடைப்படா தென்றுந் தவப்பயிர் வளர்க்கத்
தக்கதோர் தலத்தையுற் றதுவே [௰௨]

காமமுந் துயர்செய் யறுவகைப் பகையுங்
கடிந்தவ ரவ்வனந் தமக்கந்
நேமியும் போந்தங் கிருத்தலாற் படிமே
னெறிபுரி நைமிச மென்ன

நாமமங் கியற்றிப் பற்பல வேள்வி
நற்றவ மவற்றுட னாற்றி
யோமவெங் கனலிற் சத்திர யாக
முனுற்றியே யுளமகிழ்ந் துறைந்தார் [௰௩]

கலிவிருத்தம்

மற்றவந் நைமிச வளனையா முளமுற
வற்றமின் றுரைசெயற் கருமையே யாயினுங்
கற்றவ ரிகழினுங் காதன்மிக் கூர்தலா
லுற்றவா றொருவகை யோதுகின் றுமரோ [௰௪]

மேகமுங் கொடிவிடு வேள்வியும் புகையுமெய்ப்
பாகமுந் தவழ்வது பானுவாய் மரகதப்
பூகமுங் குருமுகைப் பொதியவிழ் நறியபுன்
னாகமுஞ் செறிவது நைமிசா ரணியமே [௰௫]

தாவில்செண் பகமுநீள் சாலமுஞ் சந்தனப்
பூவியன் பொழில்களும் பொதியவிழ் வகுளமுங்
காவியம் பங்கயக் கானமுங் கானுலா
நாவியுங் கமழ்வது நைமிசா ரணியமே [௰௬]

புளினமே வுதலினாற் பூவகத் திடுதலாற்
றெளிவுசேர் முத்தினாற் றிகழ்ந்தபா சொளியினாற்
றளிமுகிற் படிதலாற் சங்கமார்ந் திடுதலா
னளிர்கடற் போல்வது நைமிசா ரணியமே [௰௭]

அண்ணல்வெங் களிநல்யா னையுமடற் சீயமுங்
கண்ணலந் திகழ்மயிற் கணமும்வா ளரவமும்
பண்ணலந் தருகிளிப் பறவையுங் கலுழனு
நண்ணியங் குறைவது நைமிசா ரணியமே [௰௮]

உற்றவ ரூலகினுக் குறுதிநா னெறிமுறை
சொற்றவர் நீறணி தூயவர் மேலைநாட்
பொற்றவர் வனைவுசெய் புங்கவர்க் கன்பரு
நற்றவ ருறைவது நைமிசா ரணியமே [௰௯]

### எழுசீரடியாசிரிய விருத்தம்

நீற்றொளி பழுத்த நெற்றியன் முற்று
நிலவிய கண்டிகை மார்பன்
சாற்றுமைந் தெழுத்தை மனத்திடை யழுத்துந்
தன்மையன் மெய்ம்மைசால் குணத்தன்
மாற்றரு மீறுந் தொலையநீத் துயர்ந்த
சோதிவா னவனடிக் கமலம்
போற்றுநற் றவத்தோன் புராணமு வாறும்
புகரறத் தெளிந்தபுந் தியினோன் [உ0]

வேதநான் கினையு மையமுந் திரிபும்
விதண்டையு மின்றியே தெரிந்த
வாதரா யணதே சிகன்சரோ ருகமா
மலர்க்கழன் முடிமிசை புனைந்த
சூதமா முனிவன் றமிழ்முனி முதலாந்
தூயமா தவர்தமைக் காண்பான்
போதவிழ் நறையாற் காவதங் கமழும்
பொய்கைசூழ் நைமிசம் புகுவான் [உக]

விண்டலைநீ தவழுஞ் சீதமா மதியின்
விரிநிலா வெள்ளமு மிமையோர்
பண்டுவந் தடைந்து கடைந்தவத் தீம்பாற்
பரவையு மெதிர்ந்தெனப் பார்மேற்
கொண்டலுக் கிணையா யிணையிலாக் கருணை
கொழித்தருள் சூதமா முனிவ
னெண்டிசை வளாகம் பழிச்சுமா முனிவ
ரெதிர்கொள நைமிசம் புகுந்தான் [உஉ]

### கலிநிலைத்துறை.

புகுந்த சூதனுக் கமைவுறப் பொலன்றவி சுதவி
மிகுந்த காதலின் முகமனும் பலமுறை விளம்பி
அகந்தை வேரறு முனிவர ரளவளாய் வைகி
மகிழ்ந்து மற்றவன் மதிமுக நோக்கியே வகுப்பார் [உ௩]

வான நாயக னமர்ந்தருள் பொழியும்வாட் போக்கித்
தான மேன்மைசீ சாற்றெனச் சவுனகன் முதலா
ஞான மாதவ ருரைத்தலு நன்றுநன் றெனவோர்
மோன மாதவச் சூதனுஞ் செப்புவான் முறையால் [உச]

பிரமம் பத்மமே வைணவம் பெருமைசால் சைவம்
பரவு நாரதம் பாகவ தம்பவு டிகம்
உரைசெய் மார்க்கண்ட மாக்கினே யத்துட னேத
விருமை யுந்தரும் பிரமகை வர்த்தமோ டிலிங்கம் [உரு]

வராகங் காந்தம்வா மனமுடன் கூர்மமே மற்சம்
விராக முற்றுழி விளங்குகா ருடம்பிர மாண்டம்
பராக நீறணி பராசர முனிவரன் பாலன்
தராத லத்தினக் கிவைபதி னெட்டையுந் தந்தான் [உசு]

இலக்க மீராறு பத்தினெண் ணாயிர மிறைவற்
கலக்க னூறுமோ ரையிரு புராணமாங் கிரந்தம்
துலக்க நாரணற் கைப்பதை யாயிரந் துகளில்
ஒலிக்கு நான்குமோ திமுயர்த் தோற்கினி யுரைப்பாம் உஎ

ஆறு பத்தொடை யாயிர மிருபுரா ணமுமாம்
பாறு பெற்றுடைப் பரிதியம் பகவற்கி ராறும்
ஆறு மற்றிரண் டுறு 0 முத கவற்கென வறிவோர்
தேறு வித்தவா றுரைத்தன முணருமின் றெளிந்நீர் [உஅ]

சொற்ற மூவறு மீடுறு புராணத்திற் சுருதி
கற்ற நாயகன் மாயவ னடிமுடி காணு
நிற்ற வான்செழுங் கறைக்களற் குறுபதி னிறைந்த
கொற்ற சைவமிம் மணிமலைத் தகைமையைக் குயிலும் [உகூ]

வளமை தங்கிய வெள்ளிமால் வரையிடை முன்னு
ளுளம கிழ்ந்துமூ வுலகையு முதவிய வுமைக்கு
மிளகு மன்புறு தனக்குநாப் பண்ணுய ரிளஞ்சே
யளவ ளாயுறைந் திட வருளமலன்வீற் றிருந்தான் [௩௰]

அனையமூவரு மளவளா யமர்ந்தருள் காலை
புனைகொள் வேல்வன் முக்கணன் முகமலர் நோக்கிக்

---

0 உதகவன்—அக்கினி தேவன்

கனக டற்புவி யிடத்துநீ காதலித் துறையும்
புனித மெய்த்தலத் துயர்ந்திதத் தலப்புக லென்றான் [கூக]
குழவி மாமதி யரவணி யெம்பிரான் குமரன்
மழலை வாய்மொழி கேட்டனு முளமிக மகிழ்ந்து
தழலை யன்பினாற் சாலமந் தணமிஃ தேனும்
மொழிது மியாமெனப் புத்திர வாஞ்சையின் மொழிவான்
சப்புத் தீவினிற் சையமால் வரைபயந் தருளும்
பம்பு நீர்மிகு காவிரி நாட்டிற்பல் வளங்கூர்
செப்பொன் மாளிகை சூளிகை சேணளாந் தொளிரு
மம்பொன் மாநக ரொன்றுள தந்நகித் தென்பால் [கூகூ]
ஆங்கு மாணிக்க மலைமய மாமென்று மன்பா
யோங்கி யாமுயிர்க் குறுதிக ளியாவையு முதவி
நீங்க ரும்பெருங் காதலா னுறைகுவ னின்போற்
பாங்கின் வைகிய பாவைபோன் மகிழ்ச்சிகூர் பண்பால் [கூச]
என்று கொன்றையந் தார்புனை மௌலியெம் பெருமான்
அன்று கட்டுரைத் தத்தலப் பெருமையை யறைய
வென்றி வேலவ னுளங்கொடு விருப்ப மீதூர
நன்று நன்றெனத் தாதைதாள் பணிந்தன னயந்தான் [கூரு]
நயந்த வேலவ னந்திதே வருக்கது நவில
வியந்து மற்றவன் சனற்குமா ரருக்கதன் மேன்மை
யியம்பி னானவன் வியாதமா முனிவரர்க் கிசைப்ப
வயங்கொண் மாதவன் றமியனேற் கவைமுற்றும் வகுத்தான்
அத்தி ருத்தலச் சிறப்பினை வியாதனே யல்லா
லித்த லத்திடை யாவரே யியம்புவர் நீவிர்
சித்த மின்புற வினவலாற் சிறிதுரைப் பேனென்
றுத்த மோத்தம வருளுடைச் சூதனங் குரைப்பான் [கூஎ].

அறுசீரடியாசிரிய விருத்தம்

இனையநற் காதை கேட்போ ரெழுதுவோ ரெழுது விப்போர்
கனைகட லமுத மென்னக் கட்டுரை செய்யுந் தூயோர்
முனைவன தருளினாலே மூதுல காண்டு பின்னர்
புனையணித் தவிசின் வைகும் புரந்தர னாகி வாழ்வார் [கூஅ]

நைமிசச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் கூஉ

## மாணிக்கமலைச் சருக்கம்.

எழு சீரடியாசிரிய விருத்தம்

செய்யதின் கரும்பு மமுதமும் பாகுந்
தேறலும் போலுமென் குதலைத்
தையலோர் பாகன் றிருவடிக் கமலந்
தாழ்ந்துமே தக்கவம் முனிவன்
பைபரா முடிமேற் கிடந்தபா ருலகம்
பழவினைச் சிமிழ்ப்பினை யொருவி
யுய்யவே திருவாட் போக்கிமான் மியத்தி
னுண்மையை யோதுதற் கமைந்தான் (௧)

ஈறிலாத் தவமோர் வடிவுகொண் டனைய
விசைபெறு மந்தணீருள்ளம்
வேறொரு விடையத் தெய்துறா வண்ணம்
வேட்கைமேன் மேலுமீதூரத்
தேறுமா கேண்மி னென்றுயர் சைவச்
சீர்கெழு புராணத்துட் டேர்ந்து
கூறுமெய்த் தலமான் மியத்துண்மா ணிக்கக்
குலவரை வரவு சொற்றிடுவான் (௨)

அறு சீரடியாசிரிய விருத்தம்.

அழலெனச் சிவந்து நீண்ட வவிர்சடை மவுலி தாங்கி
யிழைவுட னக்க மாலை வெண்டிரு நீறு சாத்திக்
குழன்மொழி பாக னுமங் குறிக்குமைந் தெழுத்து மோதி
பழமறை பயின்ற நாவீர் பிரமகற் பத்தி னோர்நாள் (௩)

முத்தக முரிஞ்சுங் கொம்மை முகிழ்முலை மயிலஞ் சாயற்
கத்திகைக் கருமென் கூந்தற் காம்பெனத் திரண்ட மென்றோட்
டத்தரி நெடுங்கட் செவ்வாய்த் தளிரிபற் பரவை யல்குற்
புத்தமு தனைய தீஞ்சொற் பூவையோர் பாகத் தெங்கோன் (௪)

சங்கொடு திகிரி தாங்கித் தண்டுழாய்த் தெரியல் வேய்ந்து
பொங்கொளி பசும்பொற் றூசு புனைந்துநீர்ப் புணரி யாடை
யங்கண்மா ஞால முற்று மருந்திய நாபி பூத்த
பங்கயச் செங்க ணகைப் பாம்பணை துயிலு மேலோன் (௫)

எண்ணுதற் கரிய வேத வேழிசைக் களிவண் டார்ப்பப்
பண்ணினு மினிய தீஞ்சொற் பாமக ளுவின் வைகக்
கண்ணகன் ஞால முற்றுங் காதலாற் படைத்த வாசத்
தண்ணறுஞ் செழும்பொற் றோட்டுத் தாமரைத் தவிசின்
வாழ்வோன் (௬)

விண்ணவர் வணங்கிப் போற்ற மெல்லிய லரம்பை மாதர்
தண்ணிலாக் கற்றை காலுஞ் சாமரை யிருபால் வீச
வொண்ணுதற் சசிமென் கொங்கை யுகளமார் புழக்க நாற்
கோட்
டண்ணலங் களிற்று லாவு மாயிரங் கமலக் கண்ணன் (௭)

அங்கியங் கடவுள் வீசு படல்கெழு பாசத் தண்ணல்
சிங்கவெள் ளெயிற்றுப் பேழ்வாய்ச் செருவிக னிருதி
வேந்தன்
பொங்கொலிப் புணரி மன்னன் பொரியழற் சகாயன் முக்கட்
சங்கரற் குவந்த நண்பன் றனிவிடைக் கொடியி சானன் (௮)

மாயிருட் படலங் கீறும் பன்னிரு தபனர் தெய்வ
மீயுயர் விமான வூர்தி மேல்வரு மிருவ ரெண்ம
ரோய்வறு விடைக டாவு முருத்திரர் பதிற்றொன் றுறநேரோர்
சேயுயர் விசும்பின் வைகுந் தேவர்முப் பத்து மூவர் (௯)

சித்தர் சாரண ரியக்கர் தேன்பிழி மகதி யாழ்நல்
வித்தகர் கருடர் விச்சா தரருட னுரக வேந்தன்
இத்திகை நாற்பத் தெண்ணு யிரமுனி வரர்கண் மற்றோ
ருத்தம மேருக்குன்றத் தொருங்குவீற் றிருந்தா ரன்றே (௰)

வீற்றிருந் தருளுங் காலை விரைகமழ் பொதிகைச் சார
லூற்றிசை கமழுஞ் சோலை நறுமல ருகுத்த தாதி
லூற்றிருந் தொழுகு தெண்ணீ ருடைதிரைப் பொன்னி யாதி
யாற்றினி லளவ ளாவி யழலூர்தண் ணெனவே யண்ணி (௰௧)

மன்றலம் போது வேய்ந்து வந்திழி யருவி தோய்ந்து
குன்றுறு சுனையின் மூழ்கிக் குறுகுறு நடந்து லாவித்

# மாணிக்கமலைச் சருக்கம்.

தென்றலஞ் சிறுகான் மெல்லத் திளைத்தலுந் தேவ ரெல்லா
மொன்றலர் பலவு மேத்தி யுவந்தன ரனிலந் தன்னை (கஉ)

உகந்துழி மகதி நல்யா ழுறுதவன் வாயுத் தன்னை
யிகழ்ந்தவன் போல நோக்கி யெறிகட லேழு மெட்டுத்
திகந்தமும் பரிக்கு மோலிச் சேடனுண் டிடவ னாகிற்
புகழ்ந்துரைத் திடுவ தெங்ஙன் புல்லிய வங்கூ ழென்றான் (கங)

என்றலும் வெகுளி பொங்கி யெரியெழ விழித்துச் சீறிக்
குன்றெனத் திரண்ட திண்டோட் குடங்கையாற் கொட்டி யார்த்து
நன்றுநன் றென்னச் செந்தீ நறுநெய்பெய் தலுமெ ழுந்தாங்
கொன்றிய வமரர் முன்ன ருடன்றெழுந் திளைய சொல்வான்

பொறிமயிற் குணவா மிந்தப் புல்லிய வரவந் தன்னை
யறிவுடை யறவோன் சொற்ற தடுக்குமோ வடுப்ப தன்றான்
மறுவறு மெனது திண்டோள் வாகையும் வேக நாகத்
துறுவலி யதுவுங் காண்மி னுழுந்துருள் பொழுதி லென்றான்

அத்திற நிகழ்ந்த போழ்தி னமரர்கை யமைத்து நீயிவ்
வித்தக மேருத் தன்னை வேரொடும் பறிய வீழ்த்தித்
துத்தியம் பணத்தி னீயத் தொல்வரை வீழா வண்ண
மெத்திற மத்தி றத்தா லியல்புறக் காத்தி யென்றார் (கரு)

உம்பரவ் வாறு கூறி யுயர்வரைச் சிகர நீங்கி
யிம்பரின் விலங்கி நின்றா ரிருவர்தம் வலியுங் காண்பா
னம்புவி முழுதுந் தாங்கு மனந்தனு முலகுக் கெல்லாந்
தம்பமாய் நின்றமேருச் சயிலத்தைப் பயிலச் சூழ்ந்தான் (கசு)

ஆயிரம் பணத்தா லன்றே னவ்வரைக் குவட்டை யெல்லா
மேயனு வளவிற் பொத்தி விழாவகை யிறுக்கிக் காப்ப
மாயிரு ஞாலமுற்று மசகமொத் தழுங்க வாயுச்
சேயுயர் விசும்புள் ளோருஞ் செவிடுபட் டொழிய வார்த்தான்

உலவையார்த் தடித்த லோடும் ஒன்றனோ டொன்று தாக்கிக்
குலவரை யேழு நொய்திற் குமைப்புண்டு துகளாய் வீசி
யலைகட லேழுந் தூர்ப்ப வாழிமால் வரையு மந்தச்
சலதியின் வீழ்ந்த தென்றாற் சதாகதி வலியார் சொல்வார்

திசைக்கரி யெட்டும் வானிற் செல்லெனச் செல்லச் செல்லுங்
குசைத்தலை விரிந்த பூவிற் குவிலைபந் தன்னைச் சார
விசைத்தெழு பரிதி வட்டம் வெண்மதி வட்டங் காற்று
லசைத்திடி மாலவட்டத் தவனிவட் டத்தில் வீழ (உ0

புன்னைமெல் லரும்பு போலப் பொங்கொளி யுடுக்க ளெல்லாந்
தந்நிலை யழிந்து வேறு தலைத்தலை யுதிர்ந்து போத
விந்நில மருங்குற் றூறு மெவையுமேற் செல்லப் பொன்னாட்
டுந்நிலத் தருக்க ளெல்லா மகலிடத் தடைய வீழ (உக)

பருப்பத மனைத்தும் வானிற் பறவையொத் திபங்க வானத்
திருத்தெழு கலுழ றொதி பொருங்குசேர்ந் தவனி சேரத்
தருக்குமா மேருச் சையஞ் சலாகையே யாகக் கோத்திட்
டிருக்குமோர் கறங்கு போல விருந்தது புவன வட்டம் உஉ

மதவலி வாயுச் சீறி மாறுமா றுந்தி யாவுஞ்
சிதைவுறத் தாக்க லோடுஞ் சின்னபின் னங்க ளாக
வுதையமத் தமன மொன்று முணர்வுறு தூழி கால
மிதுகொலென் றயிர்த்து நின்று ரிமையவ ரெவரு மன்றே உ௩

ஊற்றமிக் கெழுந்த வங்கூ ழுறுவலி யினைய தாகத்
தோற்றமிக் குடைய மேருத் தொல்வரை யதனைச் சூழ்ந்து
போற்றுதல் புரியுஞ் சேடன்பொருப்பிடைத் துகளொன்றேனு
மாற்றுத லுறுமற் காத்தா னவன்வலி மதிக்கற் பாற்றே உச

காண்டகு துறவின் மிக்க கடவுளர் கருத்து முற்றப்
பூண்டநல் விரதம் போலப் பொருப்பினை விடாது பற்றி
மூண்டெழுஞ் சண்ட வாயு முழுவதும் பருகிப் பின்னும்
வேண்டுவான் போலத் தன்வாய் வியன்பிலந் திறந்தான்
[குற்றுங்

ஊழ்வினைப் பயனு நல்லோ ரொப்புர வும்பூங் கானத்
தாழளை யுடம்புந் தூயோ ரகமகிழ்ந் தளவ ளாவுந்

தோழமை யதுவும் போலத் துளக்க மொன் றேனு மின்றிப்
பாழியம் பொருப்பைப் பற்றிக் கிடந்தனன் பார்தள் வேந்தன்

ஒலித்துவெங் காற்றுச் சீற்றத் துருமெனத் தாக்குந் தோறு
மெலிப்பகை போல வெண்ணி யிடர்சிறி தேனு மின்றிச்
சலிப்பதை யறியா னாகிச் சதாகதி யிலனே யாக
விலக்குவா னுருத்து முற்றும் விழுங்கவாய்ப் பிளந்தான்
மன்றே ௨௪

அன்னவே லையின்கண் வானத் தலைவரு மலக்க னெய்தி
முன்னையம் பூதத் தொன்று முடியுமேன் முடியு மெல்லாம்
என்னமால் வரையைச் சூழ்ந்த வீடுடை யுரக வேந்தன்
றன்னைவேண் டினரா லற்புஞ் சதாகதிக் களித்தி யென்றே

வானவ ருரைத்த மாற்ற மறுப்பது மெவன்கொ லென்று
மேனகங் கவியா நின்ற வியன்பணஞ் சிறிது சேடன்
றூன்றொரு புடையை நீக்கச் சதாகதி குவடோ ரைந்தும்
பேனவா ரிதிசூழ் பாரிற் பெயர்த்துவீ சினனா லன்றே ௨௬

வீசிய குவடு சோணாட் டுபயமும் வியன்கொள் பாண்டி
மாசறு தொண்டை நன்னாட் டோரொரு சிகரம் வாய்ந்த
ஆசுகம் பாய்ந்தாங் கொன்றங் கமிழ்ந்தன கொங்கிற் பூவிற்
பூசிதை பெறுமைந் திவ்வா றினையன புராரி கண்டான்

உலகினை நிறுவு மேரு வுயர்கிரிச் சிகர மும்மாற்
கிலனுறப் படுத்தீர் மேலைக் கேடுணர்ந் திலீ ரென்றான்
பலருமான் முதல்வின் னோரும் பனிப்பொடும் பிதற்று
[மொல்கி
நலமிலேம் புரிந்த தீமை நம்பனீ பொறுத்தி யென்றே ௨௮

துதித்தன ரடியில் வீழ்ந்தார் துணையிலை யென்று ரையன்
பதத்துணை பிடித்தார் நாவும் பற்களு முலர்ந்தார் நெஞ்சம்
பதைத்தனர் கலுழ்ந்தா ரேங்கிப் பாதலித் திரந்தார் மண்மேல்
உதித்த பல்லுயிரும் பெற்றோ ருறுசினந் தவிர்த்து நின்றார்

பிறைமுடிக் கடவு ணின்ற பெற்றிகண் டுவகை மேலாய்ச்
சிறைவிடுத் தனைய ராகித் திருவருள் சுரந்தா னென்றே
மறைமுடிப் பொருளை யெங்கண் மறுவறு மணியை தூய
நறைமலர்ச் சரணம் போற்று நாயினேர்க் கருளல் வேண்டும்

சிற்றறி வுடைய மியாங்க டெரிகிலா தியற்றுந் தீமை
யிற்றையோ கண்டா யையா வென்செய்கேங் கடக்க கில்லேம்
பற்றிய வழுக்கை மேலே பற்றறத் துடைப்பான் வைகும்
பொற்றையைஞ் சிகரந் தோறும் பொலிந்தருள்புரிதி யென்றே

வேண்டலு முகுந்தன் போதன் விடையவ னருட்கண் ணோக்கி
யீண்டுநா மிருத்தல் போன்றீ தைந்தினுந் தேசி யோடு
மாண்டகு மிலிங்க ரூப மருவிநின் றிடுவே நீவி
ரீண்டுகொண் டுவந்து பூசித் தகலுநும் பதிகட் கென்றான் ௩௬

பெருந்தவைப் புணரி யண்ணல்விடைமிசைப் பிராட்டியோடுந்
திருந்தல ரிதழி தூங்கச் சென்றன ரயன்மால் காண
வருந்தல மொழிப்ப வீண்டே வரமளித் தருளுஞ் சீல
மிருந்தவா றென்னேயென்றென் றிறைஞ்சினரிறும்பூதெய்தா

பொன்னிநன் னதியின் மூழ்கிப் புனிதமா ணிக்க வெற்பைச்
சென்னியால் வணங்கிப் போற்றிச் சீதமா மதியஞ் சூடும்
முன்னவற் பணிந்திஞ் ஞால முழுதலைத் தரந்தை போக்கி
நின்னுடை நகரம் புக்கா யென்றனர் 1 நிழலி தன்னை (௩௮

என்னும்வா னவர்கள் பின்னு மீடுசா லரவுக் கெல்லர
மன்னவ கேட்டி யேழு வளைகட லுலக மெல்லாஞ்
சின்னபின் னங்க ளாகச் சிதைவதற் கேது வாகத்
துன்னினை யதனு லந்தத் தூசினை நீங்கி யுய்ய (௩௯)

இரங்குநீர்ப் பொன்னித் தென்பா லிரத்தின கிரியைச் சார்ந்து
நிரந்தர மனைய தீர்த்த நேயத்திற் றோய்ந்து மேலாம்
பரம்பரன் பாதம் போற்றிப் பத்தியாற் பூசை யாற்றி
வரம்பல பெற்று மற்றுன் வான்பதி யடைதி யென்றார் (௪௦)

---

1 நிழலி—வாயுதேவன்.

என்றுவின் ணவர்க ளேவ விருவரு மிசைந்து வாசக்
கொன்றையஞ் சடையோன்பாதங்குழைந்துப்த்தியிறைற்பூசித்
தோன்றிய மனத்த ராகி யுவகைமீ தூர்ந்து பெம்மா
னன்றருள் புரியத் தத்த நலஞ்செழு நகரஞ் சேர்ந்தார்" (௪௧)

மாதவ முனிவீர் கேண்மின் வாயுவால் வீச வந்த
வேதமில் சிகரமந்தி னியல்பினை யுரைத்து மென்னுச்
சூதமா முனிவன் கங்கை சூடினோன் சரணம் போற்றி
யோதுவான் புணரி சூழ்ந்த வுலகெலா முய்ய மாதோ (௪௨)

பாண்டிநன் னாட்டி லந்தண் பாய்புனற் பொருனைக் கூலத்
தீண்டிய வனங்கண் மல்கி யிலங்குநீ லாச லப்பேர்
பூண்டதோர் சிகரம் போந்து பொலிந்தது போதிற் கோமா
னாண்டவந் தடிகள் போற்ற வமலனு மாங்குற் றுனல் (௪௩)

ஐயன்சந் நிதிக்கி சானத் தருப்பவிழ் வில்வ மொன்று
மொய்தளிர் பொதுளி மீது மூன்றியோ சனை யுயர்ந்தே
யெய்துபு கண்டு ளோர்க்கு மீட்டிய பாவ மெல்லாம்
நொய்திினி னீங்கி நீங்கா நோன்கதி யுதவு மன்றே (௪௪)

பொன்னிநன் னதிக்கு மேல்பாற் புகழுமோர் சிகரம் போந்து
பின்னமில் புகழ்ச்சு வேதா சலமெனும் பெயரின் மேவு
மன்னதன் பெருமை யாரே யளப்பவ ரதன்பா லென்றும்
வன்னிநன் னீழல் செய்ய வயங்குமோர் தேவ தீர்த்தம் (௪௫)

அத்திருத் தீர்த்தந் தன்னி லகமகிழ்ந் தினிது மூழ்கிக்
கொத்தலர் வன்னி நீழற் குறுகியஞ் செழுத்து மோதி
வித்தகன் றனைப்பூ சித்தார் வியன்புவி முழுதுங் காத்து
முத்திவீ டெங்கோ னல்க முறைமையி னடைவர் மாதோ ௪௬

பூவிரி தரங்கம் வீசிப் பொதிகதிர் மணிகள் சிந்துங்
காவிரி வட்டபா லொன்று ககனமண் டலம ளாவ
மாவியன் பொதும்பர் சூழ்ந்த மரகதா சலமென் றோங்கித்
தேவரும் பணிந்து போற்றத் திசைதிசை விளங்கிற் றன்றே

தேம்பொதி புளியாங் கொன்று தெய்வத வடிவ மாகிப்
பாம்பணி மௌலி யண்ணல் பணியினா லென்று மோங்கும்
பூம்புனற் பொன்னி தோய்ந்து புளியையுற் றெழுத்தைந் தோதித்
தாமபரம பொருளைப்போற்றுந் தன்மையோர்நன்மைசேர்வார்
அண்டர்நாட் டவரு மெய்தி யாசையுற் றிருக்க வெண்ணும்
தொண்டைநாட் டகத்தெல் லோருந் தொழுவதாய்த் தூயதாகி
மண்டுநீர் பெருகுங் கந்த மாநதிக் கரையின் பாங்கர்
விண்டுவீழ்ந் ததுவா லொன்று விளங்கன லுருவ மாகி (சகூ)

அதுவரு ணாசலப்பே ரணிதந்த தொருகா லேனுங்
கதுமென வதனை யுள்வோர் கரிசெலாங் கடிது நீங்கி
விதுமுடி யணிந்த மேலோன் மெய்யரு ளதனால் வானோர்
புதுநலந் துய்த்தா நந்தப் புணரியிற் படிவ ரன்றே (ரு0)

கரைபொரு திரங்குந் தெண்ணீர்க் காவிரித் தென்கூ லத்தின்
றரையரைக் காவ தத்திற் றயங்குமோர் சிகரம் வீழ்வுற்
றுரையரா தணாசலப்பே ருபர்வரை யென்ன வோங்கும்
புரையிலா வளங்க ளென்றும் பொலியுமவ் வரையின் மீது
எம்மையா ளாராள கேசிக் கீசான திசையி னிப்பஞ்
செம்மையி னோங்குமொன்றுதேவதீர்த்தமுமொன்றுண்டான்
மும்மலந் தவிர வாங்கு மூழ்கிமுன் னவனைப் போற்றித்
தம்முடை விருப்பா னிப்பந் தனைமூன்று வலஞ்செய்தன்றே
பாசிலை பொதுளி மேற்போய்ப் பனிமதி யகடு தோய்ந்து
தேசுறு தெய்வ வேம்பின் சீர்கெழு நீழல் வைகி
யீசனா தெழுத்தைந் தோதி னிப்புவி முழுதுங் காத்து
மாசறு மின்ப வீட்டின் மருவிவீற் றிருப்பா ரன்றே [ருக]

இயம்புமிக் காதை கேட்போ ரெழுதுவோ ரெழுது விப்போர்
நயம்பெறப் படிப்போர் கேட்டு நன்றுநன் றெனவி யப்போர்
வயங்கொலி வாரி சூழ்ந்த வையக முழுதுங் காத்துப்
புயங்கம தணிந்தோன் பாத புண்டரீ கத்து வாழ்வார்

உ வது-மாணிக்கமலைச் சருக்கம்
முற்றிற்று-ருச
ஆகத் திருவிருத்தம் ௱ருச

## ௩-வது-மாணிக்கமலைச் சிறப்புரைத்த சருக்கம்.

---

துங்கமா ணிக்க வெற்புத் தொல்புவி யடைந்த வண்ணம்
மங்கையி னெல்லி போல வறிவுறப் பகர்ந்தா யின்னுஞ்
சங்கையின் றாக வந்தச் சயிலத்தின் பெருமை சூத
விங்கெமக் குரைத்தி யென்ன விருந்தவர் வினவச் சொல்வான்

கலிநிலைத்துறை

நாதன்மா ணிக்க நல்வரைச் சிறப்பினை நவில்வான்
வாதரா யணன் பூம்பாதத் தாமரை முடிவணங்கி
வேத பாரகர் விருப்பமீ தாரமெய் யுணர்ந்த
சூத மாமுனி கனிவொடு சொல்லுவா னன்றே [௨]

தோன்று முன்னதமீரெட்டி யோசனை சுற்று
மூன்றி யோசனை யுள்ளது புடவியுண் மூழ்கி
யூன்றி நின்றதா லதனுச்சி மெய்ச்சிவ ரூப
மென்று கண்குளிர்ந் துலகெலா மிறைஞ்சுவ தன்றே [௩]

கண்ணிற் காணினுங் கனிவொடு கேட்பினு நோக்கி
மண்ணிற் சென்னியால் வணங்கினும் பரகதி வழங்கு
நண்ணிற் செஞ்சடை முடிப்பர னுருவமே நல்கு
மெண்ணிற் பற்பல வற்புத முறுவதா லின்னும் [௪]

திசைக ளெட்டினுந் தீர்த்தமோ ரெட்டுள வன்றி
யிசைகொ ளங்கியந் திசையினிற் றீர்த்தமொன் றிலங்கு
மசைவி லத்தணீ ரதுபஞ்சாக் கரப்புன லாகும்
மிசையுற் றேதெய்வ தீர்த்தமொன் றெழிலுற விளங்கும் [௫]

சொற்ற மாணிக்கத் தொல்வரை யதன்கணோர் பாங்கர்
முற்று மோதிய முனிவர்காண் முக்கண னருளாற்
பெற்றி கூரும்பஞ் சாக்கரக் குகையொன்று பிறங்கு
மற்ற மின்றது முத்திசா கரக்கரை யாமால் [௬]

சித்தர் சாரணர் தேவர்விச் சாதர ரொருபால்
பத்திகூர்தரு முனிவரர் பணவர்மற் றொருபால்
சத்த சாகர மெனமறை தழங்குவ தொருபா
லுத்த மோத்தம வேள்விக ளுஞற்றுவ தொருபால் [எ]

அரம்பை மாதர்க ளாடல்செய் யரவமும் புவியிற்
குரும்பை மென்முலை மடந்தையர் கீதமுங் கொழுங்கட்
கரும்பு மொன்றெனத் தும்புரு நாரதர் கனிவால்
விரும்பு பாடலு மடையவு மிடைவன மாதோ [அ]

கடலு டைந்தெனக் கவுட்புடைக் கடந்திறந் தொழுகு
மடலு றுங்களி யானையு மசைநடைப் பிடியும்
விடையு யர்த்தருள் விமலனு மெல்லிய லுமையுந்
தடையி லன்பினு லுலாவரு தகைமையிற் சரிக்கும் [கூ]

இருப்பி னைத்திரித் துடைத்தென மருப்பிணைக் கலைகள்
விருப்பு தம்முடைப் பிணையொடும் வெளியிடந் தோறு
மருப்பு மெல்லிய புல்லினை யகனமர்ந் தயின்று
வரம்பி லாதன குழாங்குழா மாயவண் வழங்கும் [௰]

தள்ள ருந்தருக் கனுகொடு விசும்பிடைத் தாவி
வெள்ளி நன்னிற மதியக டிரிஞ்ச மீதெழுந்து
துள்ளி யின்னமு தத்துளி துளித்தெனத் துளங்கும்
புள்ளி மானினம் பொழிறொறும் பற்பல பொலியும் [௰க]

மரகதச்செழு மணியினைக் குழைத்துக்கை வல்லோ
னுருவு கண்டென வொளிசெயு மெருத்த மண்ணுக்கு
கருவி மாமழை யெனப்பொழின் மதுத்துளி கால
விரிக லாபமூ டாடுவ மயிலினம் விரைந்தே [கஉ]

விசும்பு தோய்வன வெங்கதிர் வானவன் வியன்றேர்ப்
பசும்ப ரிக்குல மினிதிளைப் பாறுவ பனித்தே
னசும்பு கால்வன வெண்மதி தோயுமின் னமுதத்
தசும்பு தங்குவ தென்றல்வந் துலாவுவ தடங்கா [கங]

பைங்கொ ணாகமும் பாய்புலி முதலிய விலங்குஞ்
செய்யுந் தீத்தொழி லவ்வரைச் சேய்மையுஞ் செய்யா
வெய்ய பாதக மொருவுருத் திரர்விளங் குளபேர்
மைகொள்கா கங்க ளவ்வரை மருங்கினு மருவா [கச]

சிங்க வேற்றேறுடி களிற்றினஞ் சேர்ந்தினி துலவும்
பொங்க ராமயி லெருத்திடைப் போர்த்துகண் படுக்குங்
கங்க மோடுபைங் கிளியொரு குடம்பையிற் களிக்கு
மங்க ணீர்புலி யொடுபுல்வா யொருதுறை யருந்தும் கரு

தருக்க ளியாவையுங் கற்பகத் தருக்களே தருவிற்
கருக்கொள் வல்லிக ளியாவையுங் காமவல் லிகளே
திருக்கொ ளவ்வரை விலங்கெலாந் தேனுவே சிறந்த
வுருக்கொள் கல்லெலா முதவுசிந் தாமணி யுருவே கசு

மாந்த ரியாவரும் வானவ ரேயிடை நுடங்க
வேந்து பூண்முலை யெழிற்குல மடந்தைய ரெவருங்
காந்தண் மென்விரற் கரும்பென மிழற்றுதீங் குதலைப்
பூந்தண் மாலிகை புனைபுரி குழலரம் பையரே [கள]

பொங்கு பூம்புன லியாவையும் புனிதநீர்க் கங்கை
யங்கண் மீதெழு மொலியெலா மருமறை முழக்க
மெங்கு மீண்டிய வட்டில்க டொறுமடுப் பிடுதீச்
சங்க வானவ ரவிநுகர் வேள்வியந் தழலே [கஅ]

செய்ய வாய்க்கிளி பாடுவ செழும்பொழி லெங்கு
மெய்ய வாவிய யோகிகள் வியன்குகை யெங்கும்
பெய்யு மாகுதி யாகங்கள் பெருகுவ வெங்கும்
மொய்கொள் வானவர் விமானங்கள் மொய்ப்பன வெங்கும்

அண்ட வாணர்க ளணிமுடி விளக்கழு மமுதத்
தொண்டை வாயர மங்கையர் மணிப்பணிச் சுடரும்
பண்டை நான்மறை முனிவரர் படிவநீ டொளியு
மண்டலா லென்றும் வல்லிரு ளில்லதவ் வரைக்கே [உ0]

கோல மாமணிக் குவைகளுங் காழகிற் குறடு
மேல மோடிலை வங்கமுஞ் சந்தமு மெறிந்து
சூல பாணிதன் முடியினைச் சூடிய தும்பை
மாலை யாமென வருவிகள் பற்பல வயங்கும் [உக]

அளிக்கு லங்குடைந் தாடவு முகையுடைந் தந்தேன்
றுளிக்கும் பொங்கர்வா யகன்றிடு மந்திதுன் னெனப்
பளிக்குப் பாறையி தாமெனப் பாய்ந்துவெண் மதியிற்
களித்தங் காடலுங் கன்றிய தாமதன் களங்கம் உஉ

வேங்கை நாண்மலர் வெறிகமழ் பூந்துணர் விரிந்த
கோங்க மாமல ரவற்றொடுங் குலவிய பாறை
யாங்கு நாயக னருந்தமிழ் நாவலர்க் களித்த
வோங்கு நீடொளிப் பொன்னிடு பாறையி னொளிரும் உங

காவல் செய்திரு நீலகண் டச்சோ ழனைப்போற்
கூவல் கண்டவர் குளம்பல தொட்டவர் குளிர்ந்த
நாவ லம்பொழின் முழுவதும் நாட்பல புரந்து
தாவில் கொள்கையிர் தற்பரப் பொருளினைச் சார்வார் உச

நறிய நாண்மலர் நந்தன வனம்பல தொகுத்தோர்
செறியும் வார்தளிர் தேன்பொழில் பற்பல செய்தோர்
மறைவ லோருறை மனைபல வளத்தொடும் வகுத்தோ
ரறியு மந்தணீர் புவிபுரந் தம்பொனு டாள்வார் உரு

அன்ன தானமே யலகினற் றானங்கோ தானஞ்
சொன்ன தானமோ டவ்வயிற் புரிந்தரு ளோயோர்
மன்ன ராகிமார்க் கண்டனைப் போலென்றும் வாழ்ந்து
பொன்ன வாஞ்சடை மௌலியான் கயிலையிற் பொலிவார் உசு

கோவி னுக்கிட ரிழைத்தவர் குரவரைப் பிழைத்தோர்
தாவி லந்தணர்த் தப்பியோர் தமனியக் களவு
மேவு புன்மையர் விளைவுறு கருவினைச் சிதைத்தோர்
ஆவ தோர்கில ரறிவிலர் மதுநுக ரவலர் உஎ

முனைவ னூலினை நிந்தனை செய்துழன் மூடக
ரனையை யன்னத்தை யரும்பெறற் றாரத்தை மகவைத்
துனியி லாதநல் லறத்தினைத் தூயதீம் புனலை
யினைய வாகிய பற்பல விற்றிடு மீனர் உ௮

குறளை கூறுநர் பொய்மொழி மொழிந்திடுங் குணுங்க
ரறன ழித்தவர் நடுநிலை யுறாதவ ரயல்வாழ்
பிறர்ம னைக்குளம் விழைபவர் பிறர்பொருள் கவர்ந்தோர்
தறுக ணாளர்செய் நன்றிகொன் றுழலும்புன் றகையர் உ௯

அறுசீரடி யாசிரிய விருத்தம்

கொண்டவர்ப் பிழைத்த மாதர் குலவிய கற்பி னாளை
விண்டிகழ்ந் திட்ட தீயோர் விரிகடற் கலத்தி னேறி
யெண்டரு நிதிய மீட்டு மிருபிறப் பாள ரில்லின்
மண்டழ விடுவோர் செய்யும் வஞ்சனை யதனால் வெல்வோர்

கொலைத்தொழி லாள ராசான் கோதையை விழைந்த தீம்பர்
நிலைபடத் தந்தை தாயை நெறியினாற் புரந்தி டாதா
ரிலர்க்கிரு நிதிய மீயா ரின்றுபோய் நாளை வாவென்
றலைத்தலைத் தழிவு கூறி யாதுலர்க் கலக்கண் செய்வோர் ௩௧

மாறுமா றாகிக் கூறி வாதுசெய் துழலும் வஞ்சர்
தேறுமா றின்றி மேலாந் தெய்வநிந் தனைகள் செய்வோர்
வேறுவே றொருங்கு செய்யும் வேள்வியைச் சிதைக்கும் [வெய்யோர்
பேறுசா றவத்தி னோர்க்குப் பேதுற விழைக்கும் புல்லர் ௩௨

ஊன்சுவைத் துடல மோம்பு முணர்விலா முசுண்டர் பார்மேற்
றூண்பிறர்க் கிடுக்கண் செய்யுந் தகவிலா தவரும் பேணார்
மீன்கெழு வேலை சூழ்ந்த மேதினி வெருவ வெய்ய
கான்செழு புலிபோற் சீறுங் கடியசொற் கொடிய வேந்தர் ௩௩

மந்திரி யாகி வேந்தை வதைத்துளோர் நட்புற் றோர்க்குப்
புந்தியின் மறைப்பு வைத்தோர் போகத்தாற் கன்னி தன்னைச்

சிந்தனை கலங்கப் பற்றுந் தீயவர் நம்பி னோரைச்
சந்ததம் புரவீரர் தூது தவிரவே யுரைக்கு மாந்தர் ௩௪

இன்னன பாவ மியாவு மிழைத்தவ ரெனினு மிந்தத்
தன்னிகர் திருமா ணிக்கச் சைலத்தைக் கண்ட போதே
பன்னிய நொய்ய பஞ்சிற் படர்சிகைக் கனலுற் றாற்போற்
றுன்னிய பாவ மெல்லாந் துகள்படத் தூய ராவார் ௩௫

மாசிலாத் திருமா ணிக்க மலையினை வலஞ்செய் தோர்க
ளாசிலாப் பொன்னி நீரா லமலனுக் கபிடே கித்தோர்
நேசமா ரன்ன மாதி நிவேதனஞ் செய்வித் தோர்க
ளீசனுக் குவந்த தாம மெழிலுறச் சாத்தி னோர்கள் ௩௬

திக்கெலாம் வணங்கிப்போற்றுந் திருவிழா நடத்துஞ் செல்வர்
முக்கண னாலயங்கண் முறைமையாற் புதுக்கு மேலோர்
மிக்கவா கனங்க டேர்கள் விமானங்கள் புனைவித் தோர்க
டக்கபூ சனைந டாத்துந் தகைமைசேர் நிலையுற் றோர்கள் ௩௭

நாடுறு மலர்கள் பூத்த நந்தன வனம்பூம் பொய்கை
பீடுடைப் பழனந் தோட்டம் பிறங்குமா னிரைக ளீய்ந்தோர்
தேடுறு மாவி னெய்பாற் றிருவிளக் கேற்றி னோர்கள்
பாடகத் துடக்குப் போன்ற பழவினை மாற்றி வாழ்வார் ௩௮

விலைவரம் பறிய லாகா வெண்டுகில் செழும்பட் டாடை
நிலவிய வன்ன பேத நீடொளி பசும்பொன் னாடை
குலவிய குங்கு மாதி குழைத்தநல் வாசத் தெய்வக்
கலவைகற் பூரஞ் சாந்தங் கடவுளுக் கணிவித் தோர்கள். ௩௯

குடைமணி யால வட்டங் குவவுதோ ரணங்கள் பாயும்
விடைநெடுங்கொடிகள்வீணைவிழையும்வாத்தியங்களாதி
நடைவயப் பரிக ளியானை நல்லன பிறவு மீய்ந்தோ
ரடைவுறப் புடவி காத்தே யமரருக் கமர ராவார் ௪௰

திருமடஞ் செய்வித் தோர்க டிருந்துநற் றவத்தோர் வைக
விருநிதி யவர்கட் கீவோ ரிலகொளி யம்பொ னாதி

யருமணிக் குடங்கள் பொன்னி யாற்றுமஞ் சனமு கப்பத்
தருபவர் தரணி யாண்டு சம்புவி னடியைச் சார்வார் (சக
ஒருகுடங் கொடுத்து ளோர்க ளும்பரே யாவ ரன்பா
லிருகுடங் கொடுத்து ளோர்க ளிந்திர ராவர் பொன்னித்
திருநதித் தீர்த்தந் தங்கள் சென்னியி லேந்திக் கொண்டு
வருபவர் கங்கை சூடும் வள்ளறன் கயிலை வாழ்வார் சஉ

களவினை மேற்கொண் டேனுங் கணிகையர் நிமித்த மேனும்
வளநிதி பெறுவா னெண்ணி வாணிபப் பொருட்டா லேனு
முளமகிழ் சிறப்புக் காண்பா னொருபகல் வைகி னோருந்
தளவவா ணகையாள் பங்கன் றன்பதி யடைந்து வாழ்வார் சங

ஊழிபல் கோடி கால முறைப்பினுந் தவத்தான் மிக்கீர்
வாழிமா ணிக்க வெற்பின் வளத்துக்கோர் வரம்பு முண்டோ
வேழையே னுரைப்ப தெங்ஙன் னிளமதி முகிழுஞ் சூடும்
பேழையஞ் சடையோ னல்லாற் பிறரெவர் பேச வல்லார்

மாணிக்க மலையின் மேன்மை வகுத்தவிச் சருக்கந் தன்னைப்
பேணித்தம் முள்ள மொன்றிப்பிறழ்ந்திடா தன்பிற்கேட்போர்
சேணிற்பொன் னுலகத் தும்பர் சேவடி வழுத்தக் கங்கை
வேணிப்பிஞ் ஞகனைப் போல வெள்ளியங் கிரியில் வாழ்வார்

வஞ்சிவிருத்தம்

என்று சூத னுரைத்தலு
நன்று நன்றென மாதவர்
துன்று மன்பொடு கைதொழு
தன்ற வன்கழல் வாழ்த்தியே சரு

அறுசீரடியா விருத்தம்

தீதிலாத் திருமா ணிக்கச் செழுமலைச் சிறப்பை யெல்லா
மோதினை யாமு முள்ள முவந்தன முள்ள வாறு
சூதமா முனிவ விப்பாற் சுரர்விளம் பியவா றெய்தி
மேதகு வாயு பூசை விளைத்தவா றுரைத்தி யென்றார் சஎ

மாணிக்கமலைச் சிறப்புரைத்த சருக்கம்
முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம்-௱௩௯

# ௫-வது வாயு பூசித்த சருக்கம்.

## கலிநிலைத்துறை

என்று மாதவ ரியம்பலு மிருந்தவச் சூத
னன்று நன்றென நாகிளம் பிறைக்கொழுந் தணிந்த
குன்ற வில்லியைக் குழைவொடும் வணங்கிவங் கூழ்வந்
தொன்று பூசனை யுஞற்றிய பரிசெடுத் துரைப்பான்

உம்பர் கூறிய திறத்தினை யுலவைவேந் துட்கொண்
டிம்பர் மானிலத் தெய்திக்கா விரிப்புனன் மூழ்கிச்
சம்பு வாழ்திரு மாணிக்கச் சைலத்தைத் தாழ்ந்து
நம்ப னாரரு ளாலந்த நல்வரைக் கீழ்பால்

பாறை யொன்றினிற் பற்றிய வயிரத்தண் டதனு
ளூறி வண்புன லொண்சுவை யமுதெனப் பெருக
வீறி லாதநற் றடாகமொன் றியல்புறக் கண்டே
யாறு சூடியை யகத்துள்வைத் தப்புன லாடி

செய்ய மாணிக்கத் திருமலை தனைவலஞ் செய்து
சைய மீதுற்றுப் பச்சிம துவாரத்தாற் சார்ந்தே
யையன் பாதபங் கயங்களை யன்பொடு வணங்கி
யுய்யு மாறுபற் பலதுதி யொருங்கெடுத் தோதி

இமய வல்லிதன் னிருபத முளரிக ளிறைஞ்சி
யமைவில் காதலி னைங்கர னடிமலர் போற்றிக்
குமரன் சீரடி கும்பிட்டுக் குழகன்வீற் றிருக்குஞ்
சிமைய மால்வரைச் சிகரத்தை வலஞ்செய்து மகிழ்ந்தே

இனைய வாறுமா ருதம்பல பருவமங் கிருந்து
முனைவன் சேவடி முதிர்ந்தபே ரன்பினிற் போற்றித்

துனிபி லாத்தவம் பற்பல விபற்றனுந் தூங்க
வனையும் வார்சடை மௌலியான் வந்துதோன் றினனால் ௧

காள கண்டமுங் கரதல நான்குமுக் கண்ணுந்
தோளி னீணிலாச் சொரியுமுந் நூலும்வான் சுடிகை
வாள ராமணிப் பணியுமுத் தூளமும் வயங்க
மீளி மால்விடை மேல்வந்து தோன்றும்விண் ணவனை

உலவை வேந்தன்முன் கண்டன னுவகைமீ தூரத்
தொலைவி லாதபே ரன்பினாற் றுணைபடிக் கமலந்
தலையிற் சூடினான் றன்னையு மறந்தன னாகி
யலகி லாதன வருந்துதி பற்பல வறைந்தான்

எண்சீரடியாசிரிய விருத்தம்

கங்கா தரனே சரணஞ் சரணங்
கருணா நிதியே சரணஞ் சரணம்
பொங்கா ழியினஞ் சுண்டாய் சரணம்
புரமூன் றெரிசெய் தருள்வாய் சரணம்
வெங்கா லனையன் றடர்த்தாய் சரணம்
விற்கா மனைமுன் வென்றாய் சரண
மிங்கா தரவா ரெந்தாய் சரண
மிரத்னா சலனே சரணஞ் சரணம்

மருவா ரிதழித் தொடையாய் சரணம்
வானோ ரணிமா மணியே சரண
முருவா யருவா யுறைவாய் சரண
மொருநான் மறையின் பொருளே சரணங்
கருவா யுலகந் தருவாய் சரணங்
கண்மூன் றுடைய கனியே சரண
மிருளா யொளியா யியல்வாய் சரண
மிரத்னா சலனே சரணஞ் சரணம்

கல்லா லடிவாழ் கனியே சரணங்
கமலா சனனுக் கரியாய் சரணம்

நல்லார் பரவப் படுவாய் சரண
நாரு கலையும் நவில்வாய் சரணம்
வில்லா நுதலாள் பாகா சரணம்
விடைமேல் வருவாய் சரணஞ் சரண
மெல்லா வுலகு நிறைவாய் சரண
மிரத்ந சலனே சரணஞ் சரணம் கக

எழுசீரடியாசிரிய விருத்தம்

மெய்ம்மயி ரரும்ப நாத்தழும் பேற
மேதகு மின்னன துதிக
ளையன்முன் னியம்பிச் சதாகதி பணிய
வண்ணலு மவன்முகம் நோக்கி
யுய்யநீ மனத்தி லுன்னிய வரங்க
ளுரைத்தியென் றோதலு நாயேன்
வையமா ரூட மேருவைப் பெயர்த்த
மாசொழித் தருளுதி யென்றான் கஉ

என்றலு மிறைவ னவ்வர முதவி
யீடுசால் பிராணனே டபான
னொன்றிய வியான னுதானனே சமான
னாக்கமார் நாகனே கூர்மன்
றன்றருக் ககலாக் கிருகரன் றேவ
தத்தனே தனஞ்சய னென்னும்
வென்றிகொ ளீரைந் துருவநீ யெய்தி
மேதினி புரந்துவாழ் கென்றான் கங

புங்கவன் பின்னுந் துலாமதி யதன்கட்
பூரணைப் பக்கத்தி னுனது
பங்கமீ றீர்த்தம் படிந்தவர் படிறு
பகருதல் பிறர்பொருள் கவர்த
லிங்கிவை யாதி கரிசகன் றுய்ய

வின்னருள் புரிகுவ மென்ன
வங்கவற் குரைத்தே விலிங்கத்துட் கரந்தா
னளவிலா வருட்பெருங் கடலே ௧௪

அண்ணல்வான் கருணை யிருந்தவா றியம்பி
யதிசய மென்றக மகிழ்ந்து
வண்ண மாணிக்க மலையினைச் சூழ்ந்து
வந்தனை பலமுறை புரிந்து
கண்ணகங் குளிர நோக்கியே பின்னுங்
கைதொழு தனிலவன் சென்று
நண்ணினன் றனது பதியினை யென்று
னற்றவ முனிவரு நயந்தார் ௧௫

அனிலவ னன்பாற் பூசனை யியற்றி
யண்ணலி னருள்பெற்று மீண்ட
புனிதநற் காதை படித்தவர் படிக்கப்
பொருள்பல வழங்கிய தூயோ
ரினிதென மகிழ்ந்தோ ரெழுதினோர் கடல்சூ
ழிப்புவி முழுவதும் புரந்து
பனிமதிக் கண்ணிக் குழகனை தருளாற்
பரானந்த வாரியிற் படிவார் ௧௬

வாயு பூசனை புரிந்த சருக்கம்

முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் ௱௭௯

# ௫-வது ஆதி சேடன் பூசனை புரிந்த சருக்கம்.

---

### ஆறு சீரடியாசிரிய விருத்தம்

மாருதம் பூசை செய்து வரம்பெறு காதை முற்றுஞ்
சோருதல் சிறிது மின்றிச் சொற்றனை சூத விப்பாற்
றரணி சுமந்த சேடன் றற்பரன் றனைப்பூ சித்த
சீருரைத் திடுதி யென்று ரவனுமச் செய்தி சொல்வான்

மதவலி வாயு வீசன் மலரடி பணிந்து மாசு
கதுமெனப் பெயர்த்த மாற்றங் கதங்கெழுஞ் சேடன்கேட்ப
விதமுற மகதி நல்யா ழிருந்தவ னுரைத்த லோடுந்
திருமுறு மிமையோர் முன்னந் தெரித்ததுங் கருதியன்னோன்

பார்ப்பன வேடங் கொண்டு பார்மிசை யெம்பி ரானைச்
சீர்த்தளி பலவுஞ் சென்று சேவிக்கு நசையான் மேல்பாற்
கார்க்கடற் கூலத் தோர்சார் கடிபவெம் பிறவி நீங்கக்
கூர்த்தமெய்த் தவத்தோர் போற்றுங் கோகன்னஞ் சென்று
வாழ்த்தி ௩

பிருத்துகன் னத்தி னோடு பிரபாசம் பணிந்து போற்றி
மருமலர்ப் பொதும்பர் மந்த ராசலம் வணங்கிப் போந்து
மருவி பாய் பிரம சைய மனந்தசை யமுஞ்சென் றேத்திக்
கருதுசோ மேச மோங்குங் கபிலேசம் வணங்கிப் பின்னர்

தூயகே ளத்தி னுற்ற சுசீந்திர மயேந்தி ரத்தோ
டேயகூ விளவண் கான மிறைஞ்சிநற் கதக சப்போ
ராயபார்ப் பதீசம் போற்றி யழகுறும் வியாத சாலை
நாயக னுறையும் வேத நகரங்கோ மேசம் போற்றி ௫

# திருவாட்போக்கிப் புராணம்,

சுந்தர நதிதீ ரத்திற் றலங்கவி ஞசி யோடவ்
வந்தமில் பதிக்குத் தூய வங்கியந் திசையின் மேவு
மந்தமா ருதமு லாவு மரகத வனஞ்சூழ் வந்து
கொந்தலர் பவானிக் கூடற் குலநகர் தொழுது மாதோ

சேயிதழ்க் கமல பீடத் திருமகள் வனம்வ ராகித்
தூயசங் கமவி சாலைத் தொல்புகழ்ப் பிரமம் வாழ்த்தி
யேயவண் சுவேத வெற்பை யிறைஞ்சியெம் பெருமான்மேவு
நேயமார் திருகூ டத்தோ டானிலை நேசித் தேத்தி ௭

கொல்லியம்பொருப்பிற் பஞ்சக் குளிர்நதித்தீர்த்தந்தோய்ந்து
நல்லறப் பள்ளி நாதர் நாண்மலர்ச் சரணம் போற்றி
யொல்லைவே தாச லத்தோ டோங்குமீங் கோயு மேத்தி
யல்லறீர்த் தருள்க டப்பா டவிபுகுந் தடைவின் வாழ்த்தி ௮

முத்தொடு வயிர முந்தி மூரிவெண் பருப்புப் பீலிக்
கொத்துடன் சந்தம் வாரிக் குங்குமக் குறடு வீசி
தத்துநீர்ப் பொன்னித் தென்பாற் றராதலமுழுதும்போற்றும்
வித்தகத் திருமா ணிக்க வியன்பொருப் பதனைக் கண்டான் ௯

கண்டபின் னனைய வெற்பைக் கண்ணிணை குளிர நோக்கித்
தெண்டெனப் படியின் வீழ்ந்து சிந்தனை மகிழ்ந்து போற்றி
வெண்டிரைப் பொன்னி மூழ்கி விரைவு மீதூர வெய்தி
யண்டர்நா யகனைப் போற்று மாசையா லாங்கு செல்வான் ௰

அத்திரி வியாதன் காத்தி யாயனன் பரத்து வாசன்
வித்தகத் ததீசி கீர்த்தி மேவிய பிருகு மேலோன்
புத்தமு தாச னிப்பேர்ப் புனிதன்மா தவங்கூர் கற்கி
யித்தகை முனிவ ரங்க ணிருந்தவ மியற்றக் கண்டான் ௧௧

அன்னவர் தம்மைப் போற்றி யனுமதி பெற்றுச் சேடன்
முன்னவன் சிகரத் தேறி முதல்விசந் நிதிக்குத் தென்பாற்
றன்னுடைக் கரங்க டப்மாற் றடாகமொன் றமைத்து மூழ்கிப்
பின்னர்மும் முறைசூழ் வந்து பெருந்தகை கோயிற் புக்கான்

புகுந்தடி வணங்கிக் கண்ணீர் பொழிபமெய் புளகம் பூப்ப
மிகுந்தபே ரன்பாற் போற்றி வெய்பவன் தீர்த்தந் தன்னைத்
திகழ்ந்தநூற் றெட்டுக் கும்பந் திவ்யலிங் கத்துக் காட்டித்
ததும்புது மலர்கள் கொண்டு தற்பரன் றனைப்பூசித்தான் ௧௨

பூசனை புரித லோடும் புண்ணியன் கருணை பூத்து
நேசமுற் றெதிர்நின் றேத்து நெடும்பணி வேந்தை நோக்கி
யாசையா யினையா மீது மறைதியென் றருள வன்றே
னீசனே யெந்தாய் நின்றாட் கினியவன் பென்றும் வேண்டும்

ஆயினு மேருக் குன்றை யனிலவ னலைக்க யானு
நாயக நிமித்த மாகி நண்ணிய வனைய தீமை
போயகன் றிடுதல் வேண்டு மென்னலும் புனித னல்கி
யேயும்வெள் விடைமே லுற்றோனிலிங்கத்துட்கரந்தானன்றே

சேடன்கூர் மகிழ்வி னுற்றன் சிகாமணி யினைத்து ளொன்றை
யாடகப் படிமே லீசர்க் கணிவிளக் காக வைத்துத்
தோடவிழ் கொன்றை யெம்மான் றுணைபடிக்கமலம்போற்றிப்
பீடுடைத் தனது செம்பொற் பெரும்பதி புகுந்தான் மன்னோ

கள்ளவிழ் மலர்ப்பூங் காவிற் கற்பகக் காவு மானி
னுள்ளருங் காம தேனு வென்பதும் புணரி தன்னுட்
டள்ளருங் தீம்பால் வெள்ளத் தடங்கட லதுவும் போல
வள்ளல்வாழ் திருமா ணிக்க மால்வரை சிறந்த தன்றே ௧௭

தீதின்மந் திரத்திற் காயத் திரிபுந்திண் ணிபதுன் றத்துப்
போதவிழ் பொதும்பர்சூழ்ந்த பொன்னெடுங் குவடு மாற்றான்
மேதகு கங்கை யாறும் வேந்தருண் மனுவும் போல
மாதவர் புகழ்மா ணிக்க மால்வரை சிறந்த தன்றே ௧௮

அரியதீஞ் சுவைக டம்மு ளமிர்தமு மாத ராருட்
பொருவிலா விமைய மீன்ற பூங்குழ லணங்கும் வாச
விரியல ரவற்றுட் செம்பொன் மேதகு கமல மும்போல்
வரமிகு திருமா ணிக்க மால்வரை சிறந்த தன்றே ௧௯

அருவிபாய் மேருக் குன்றத் தாயிரங் குவட்டி னுள்ளும்
பொருவிலா வீங்கோ யாதிப் பொற்சிக ரங்க ளொத்து
முறைசெயி னதிக மாகு மோதிய வவற்றி னுள்ளு
மருவளர் திருமா ணிக்க மால்வரை சிறந்த தன்றே உ0

தொழத்தகு கன்னி மாதச் சுக்கில பக்கத் தூற்ற
விழுத்தகு சதுர்த்தி தன்னின் மேதகு நாக தீர்த்தத்
தொழுக்க முற்றடி யோர்க ளுமாபதி யன்பர்க் கின்னா
விழைத்தவத் தீமை நீங்கி யிமையவர்க் கிறைவ ராவார் உக

சூரிய குண்டந் தன்னிற் சூரிய னுயர்வா ரத்தி
லார்வமிக் காடி னோர்க ளருப்பிணி யெவையும் நீங்கிப்
பாரிடை நெடிது வாழ்ந்து பரம்பரன் கருணை தன்னாற்
சீர்கெழு சுவர்க்க மேவிச் செல்வமுற் றிருப்ப ரன்றே உஉ

பொறிப்பணைப் பாந்தள் வேந்தன் பூசனைப் புரிந்து பெம்மான்
றிறத்தருள் பெற்ற காதை செப்பினர் தெளியக் கேட்போர்
கறைக்களத் தாரகந் தன்னாற் கதுவுத லின்றிப் பார்மேன்
மறுக்கமற் றிருந்து நாதன் மலரடி நீழல் சேர்வார் உங

ஆதிசேடன் பூசனை புரிந்த சருக்கம்

முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் உ0உ

## ௯-வது இந்திரன் சாப விமோசனச் சருக்கம்.

---

### கலிநிலைத்துறை.

என்று சூதமா முனிவர னிசைப்பமா தவத்தோர்
நன்று நீயினி யுயர்புகழ் நாகநாட் டிறைவன்
றுன்று பாவவி மோசனஞ் சொற்றிடு கென்று
ரொன்று மன்பினா லம்முனி வரனெடுத் துரைப்பான்

### கலிவிருத்தம்.

அறைகடல் கடைந்துபுத் தமிர்தம் விண்ணவர்
பெறுவதற் கெண்ணிமுன் பிறங்கன் மந்தரஞ்
செறிவுறு மத்தெனச் சேர்த்தி வாசுகி
முறைதிரி நாணென முற்றுஞ் சுற்றியே

வானவ ரொருதலை மதுகை வாகைவிற்
றானவ ரொருதலை தமது செங்கையான்
மோனமெய்த் தவத்தினீர் முறுக வீர்த்தலும்
பேனமுன் னமுந்திரைப் பெற்றி கண்டுமால்

தோடவிழ்ந் திளநறுந் துளிக்குந் தாமரைக்
காடுபூத் தனையவன் கையி ரண்டினால்
ஈடுறப் பற்றிநின் றீர்த்திட் டானதிற்
பீடுறப் பிறந்ததிப் பெற்றி முற்றுமே

மருப்புநான் குடையமாக் களிறு வாம்பரி
தருக்குல மணிக்குவை சங்க மியாவரும்
விருப்புறு நிதிகள்வார் வீசி விம்மிய
வருப்பிள வனமுலை யரம்பை மாதரார்

அம்புயா சனத்தில்வீற் றிருக்கு மாயிழை
விம்பவா யகலிகை விளங்கு வாண்மதி

யிம்பரா ரேக்குறு மினிய புத்தமு
தும்பரு மகிழ்வுற வுதித்த வென்பவே ௬

வண்டுழா யலங்கலான் வான வேந்தனுங்
கொண்டிற லதுபெற வுவந்து நல்கியே
தெண்டிரைப் பிறந்ததெள் ளமுதொ டைந்துபூம்
புண்டரீ கைபையகம் பொலிய வைத்தனன் ௭

தெள்ளறல் படநெரி செறிந்த நீக்கரு
மள்ளிருள் குடிபுக வலங்கல் வேந்துதேன்
றுள்ளிகொள் காரினைத் துறந்து காவலா
மெள்ளிய கருங்குழ லெழிலெ றிப்பவே ௮

முற்றுறா விளமதி முகிழை யேசிவான்
விற்றிறம் பழித்துவில் வீசு பட்டமு
முற்றபொற் சுட்டியு மொருங்கு சேர்சிறு
நெற்றிநோக் கினருயிர் நிறைபொ ருண்ணவே ௯

இருங்கடற் றிரையினை யிகழ்ந்து காமவேள்
பொருங்கழைச் சிலையினைப் போன்று வேம்பிலைக்
கொருங்கிணை போகிக்கத் திரிகைக் கொத்துறு
கருங்கொடிப் புருவமேர் கனிந்து காட்டவே ௰

சேலெனப் பிறழ்ந்தரி சிந்தி வெம்முனை
வேலென மிளிர்ந்துமான் வெள்க வெண்ணிலாக்
கோலினை யொத்திரு குவளை வென்றகண்
மால்புரிந் தனங்கற்கு வாகை சூட்டவே ௧௧

எள்ளிளம் பூவினை யெள்ளி மென்குமி
ழொள்ளிய போதைவென் றெழுந்து பொற்கொடி
தள்ளிய நாசிபச் சோந்தி தன்னுருக்
கள்ளியல் புரிந்தொளி கனிந்து காட்டவே ௧௨

வண்ணமென் கபோலமோ ரிரண்டு மாரவேள்
கண்ணடி யாமெனக் கவின வார்ந்துலாய்த்

தண்ணெனும் வள்ளையந் தண்டு மூசனு
நண்ணிய காதென நலம்ப டைப்பவே ௧௩

தொண்டையங் கனியுங்கிஞ் சுகமுந் தோழமை
கொண்டசெம் பவளவாய்க் குமுதம் வென்றிடத்
தண்டள வத்திள முகையைத் தண்ணகை
வெண்டா ளத்தொடும் வென்றி கொள்ளவே ௧௪

மறுத்துடைத் தொளிதிகழ் மதியின் வட்டமு
நறைக்கம லத்தலர் நலனு நாணுற
நெறிப்பட நோக்கியோர் நெடுங்க ணோக்கெலாஞ்
சிறைப்படுத் தியமுசஞ் செவ்வி காலவே ௧௫

நாகுடன் பழகுபு நாணம் பூசிமென்
பூகபோத் தருபணி கடைந்த பொற்பின
தாகுநன் கழுத்தணி யணிந்த ரம்பைமா
ரோகைகொண் டேத்தநீ டொளிக ழைக்கவே ௧௬

வேயினைப் பழித்ததோள் விலகி வில்லிட
வேயுமுன் கைகள்யா மெழில்க வற்றிடச்
சேயொளி யங்கைசெங் காந்தள் போன்மென
வாயுமெல் விரல்களிற் றழக ளிக்கவே ௧௭

பொருப்பொடுங் கச்சினைப் பொருது பூரித்து
மருப்பினைப் பழித்துவேள் மகுட மாமெனக்
கருப்புரக் கலவைகை செய்த பூண்முலை
யுருப்பசி தன்னையு முளமு ருக்கவே ௧௮

ஆலிலை தனைவெறுத் தரிகை போன்றொரு
நீலரோ மாவரை நிலவ ரேகைமுன்
னேனுறு திரையென விலக நீர்ச்சுழி
மானுறு முந்திமேல் வயிறு பொற்பவே ௧௯

மின்னென நுடங்கிமென் கொடியின் வீறழித்
தின்னதிங் கெதுவென வெவர்க்குங் கண்ணுறா

தன்னநுண் ணிடைகளை யஞ்சும் வல்லவன்
றன்னையொத் தலர்முலை தாங்கி னையவே ௨௦

வாளராப் பணமென வயங்கு தேரெனக்
கோளிலாப் பசும்பொனாற் குயின்ற தட்டென
வேளையா ளாகவே விற்கு மல்குல்வண்
காளையா டவர்களைக் கருத்து ருக்கவே ௨௧

வாழைத்தண் டெனத்திரண் டுற்ற வான்றுடை
வேழத்தின் றடக்கையை வென்று வீறுற
வாழத்தண் புனறிரி யலவ னைத்துல
கேழுக்கு மான்முழந் தாளி ழைக்கவே ௨௨

சினைவரால் வென்றுவேள் சின்னம் போன்றுமெய்
முனைவரா னவர்களு முடிவ ணங்கவே
புனைகுலாந் தூணியைப் பொருது பேரெழில்
கனியுமா றிருகணைக் கால்வி ளங்கவே ௨௩

பரடுபொற் றராசினைப் பழித்து வீறுறப்
புரைதவிர் புறவடி யாமைப் பொற்புற
விரல்செழும் பவளத்தை வெல்ல மெல்லுகிர்த்
தரளமொத் தடிபஞ்சின் றகைமை காட்டவே ௨௪

நின்றன ளகலிகை நின்ற காலையி
னன்றறி கோதம னயத்தை நோக்கியே
மன்றவந் துளவினுன் கொடுப்ப வாசவ
னின்றெனக் களித்துயி ரெனக்கு நல்கென்றான் ௨௫

வாசவ னத்திறம் வகுப்ப மாயனு
நேசமுற் றீர்ம்புன னெடிது மூழ்கினே
ராசையிற் கொண்மினென் றறைய வாங்கவ
ரோசைபெற் றுறுபுன லொருங்கு மூழ்கினார் ௨௬

வெள்ளைவா ரணப்பகட் டுழவன் வெள்ளநீ
ருள்புகுந் தொய்யென வும்பர் தோன்றினான்

பள்ளநீர்க் கிடந்தனன் பாசி கோரையுற்
றள்ளல் பாய்ந் திடமுனி யநேக கற்பமே
மொய்குழ லகலிகை சோக வாரியோ
டொய்யென வாரியி னூழி மூழ்கினை
பொய்தப வினியவள் போக வாரியிற்
செய்தவ மூழ்கென்றான் றிகிரி தாங்கினான் உஎ

இவ்வகை யிசைத்தனு மெழுந்து மாதவன்
மௌவலங் குழலிபை மணந்து மற்றவள்
செவ்விய புதுநலந் திளைத்துத் தேக்கெறிந்
துய்வகை யவ்வயி னுறைந்திட் டானரோ உகூ

அன்றுதொட் டகலிகை யாரம் பூண்டுயர்
குன்றென வருமுலை கொடுத்த காமநோய்
தன்றலை மேற்கொளத் தளர்ந்து வாசவ
னென்றல பற்பல வுளத்தி லெண்ணுவான் நூ

பஞ்சஞ்சு மலரடிப் பாவை தன்னையோர்
வஞ்சஞ்செய் தாயினு மணைத்து மியாமென
நெஞ்சங்கொண் டொருக்குபி னோரு மாறுகொண்
டஞ்சுந்துஞ் சிருளிற்கூ யார்த்திட் டானரோ நூக

வரிக்குயி லுருக்கொடு வந்து கூவலும்
பொருக்கென வெழுந்துநற் புனித மாதவன்
குருக்கிளர் நதிக்கரை குறுகித் தண்புனற்
றருக்கொடு துயிலுமத் தன்மை கண்டனன் நூஉ

மெய்முனி வஞ்சமீ தென்று மீளலும்
பொய்மையி லுவனுருப் புணர்ந்து வாசவன்
கொய்மலர்க் குழலியைக் கூடும் வேட்கைபாற்
கைமலர் பற்றினன் கரிசு பற்றினான் நூநூ

காசறு முனிவனக் காலை யெய்தலும்
பூசையாய்ப் போந்தனன் போத மாதவன்

கோசமா யிரம்பெறு கென்று கோபித்தான்
வாசவ னவ்வகை மாசுண் டானரோ ௯௪

பூம்புனற் பொய்கையுட் போந்து நாணினுற்
றேம்பொதி தாமரைச் செவ்வி யாரிதழ்
தாம்பொதி பொகுட்டினிற் றங்கி னான்புரந்
தோம்புத லின்றிவிண் ணுலக நையவே ௯௫

பூங்கொடி தன்னையும் புனித மாதவ
னீங்கருங் கலவியி னெறியி னாலிவன்
றீங்குசெ யிந்திர னென்று தேரியு
மாங்குடன் பட்டனை பேதை யாதலால் ௯௬

கல்லுருக் கொண்டிவண் கிடத்தி காகுத்தன்
மெல்லடித் துகளுறும் வேலை காறுமென்
றல்லலுற் றிடச்சபித் தறவ னீங்கினா
னெல்லையில் பருவமெல் லியலும் வைகினாள் ௯௭

இறைமக னின்மையி னீண்டு தந்திருக்
குறைபட வானவர் குழாமுங் குன்றின
வுறுமழை யொழிதலா லுண்டி யின்மையா
லறைகட லுலகமு மழுங்கி நொந்ததே ௯௮

விண்ணவர் குரவனு மெலிவை நோக்கிப்
பண்ணவர்க் கிறைபவன் பழியி னீங்குமா
றெண்ணினன் பொய்கையங் கரையை யெய்தினா
னண்ணலைக் கூவினா னன்பு கூரவே ௯௯

மந்திரி கூவலும் வான வேந்தனு
மந்தமி லுவகையா யருகு நண்ணுதற்
கெந்தைசா பத்தினா லேத முற்றுநா
னைந்தன னீக்கொணா நாண்ட டுத்ததே ௱

வருவதன் முன்னமே மாசு றுவகை
பெரிதுகாத் தியல்வது பெருமை யவ்வகை

யொருவினை யினியவை தொழித்தற் கோர்வது
கருமமென் றுரைத்தனன் ககன வேந்தனும் ௪௧

நன்றென மனங்கொளா நாண நீங்குறச்
சென்றெதிர் வணங்கினன் வணங்கிச் செல்வநீ
யின்றெனக் கினியருள் புரிதி யென்னவே
ஒன்றல பற்பல வுரைத்திட் டானரோ ௪௨

உரைத்தலுஞ் சுரர்குரு வுவந்து வீசுவெண்
டிரைக்கட லுடுத்தவித் தீவிற் றெய்வதப்
பருப்பதம் பற்பல பதிகள் பற்பல
மருக்கிளர் நதிபல வருந்த லென்கொலாம் ௪௩

வெள்ளியங் குவட்டொடு விளங்கு மந்தரம்
வள்ளல்வீற் றிருந்தருண் மல்லி கார்ச்சுனங்
கள்ளவிழ் பொதும்பர்கற் குடிவிண் காளத்தி
யெள்ளருங் கழுக்குன்ற மிடப மால்வரை ௪௪

அருணையங் கிரிதிருத் தணிகை யார்மலர்த்
தருவளர் கொடுமுடி தாவி லாதநற்
றிருவளர் கொல்லிநற் றிருச்செங் கோட்டொடு
பொருவிலீங் கோய்மலை பொதிய மாமலை ௪௫

பழமலை சிராப்பளி பழனி மாமலை
விழைவுறு பரங்குன்று வியன்ம யேந்திரந்
தழைகெழு பொதும்பர்சூழ் சைய வெற்பொடு
குழகன்மே வியதிரி கூட மால்வரை ௪௬

ஏடவிழ்த் தளியின மினிதி னேழிசை
பாடலும் புதுமதுப் பாயுஞ் சோலைசூழ்
கேடில்கே தாரம்வான் கிளருந் தண்பொழிற்
பீடுறு மாதனப் பெரிய நீள்வரை ௪௭

கன்னலுந் தேறலுங் கனியு மாமெனச்
சொன்னலந் திகழ்வரைத் தோகை தன்னொடும்

பொன்னிலங் கவிர்சடைப் புனிதன் வாழ்வுறு
மிந்நில வரைகளு மினிதுண் டாமரோ ௪௮

வாநதி காளிந்தி வாணி பற்குனி
சரயுவா னதிதிருப் பெண்ணை சங்கமா
ருறைபெரு கண்டகி யோடு தண்புனற்
புரையில்கோ தாவிரி புனிதநீர்ப் பம்பை ௪௯

துங்கபத் திரைநவில் சோணை காவிரி
பங்கவா ரிதிபுனற் பாலி மாநதி
பொங்குதண் புனல்வகை பொருனை யேமுதற்
சங்கமார் நதிபல தாமுண் டாமரோ ௫௰

காசிவீ ரேச்சுரங் காஞ்சி மாநகர்
தேசுலாஞ் சிதம்பரந் திருக்கு டந்தைநம்
மீசனு ருகந்தரு ளிலம்பிய மானைக்கா
வோசைகூர் மறைவன முற்று வாஞ்சியம் ௫௧

வயங்குவெண் காடிடை மருத மாந்துறை
நயங்கொள்சீர் காழிமா யூர நன்னிலம்
வியந்திடு நாகைநள் ளாறு வீறுசால்
பயன்புரி தேவையை யாறு பாம்பணி ௫௨

ஆனிலை யுயரவி னாசி யன்பினுற்
கோனுறை மகோதைகீழ்க் கோட்டங் கூடல்பூந்
தேனுலாம் வெய்வனஞ் சேது வேமுதல்
வானவ னமர்பதி மற்று முண்டரோ ௫௩

ஆதலாற் பருப்பத மனைத்துஞ் சூழ்வந்து
சீதநீர் நதியெலாஞ் சென்று மூழ்குபு
கதாலாற் பதிபல கண்டு கைதொழு
தேதநீ போக்குதி யிரங்க லென்கோலாம் ௫௪

இருந்தவம் புரிந்துளோர்க் கெய்து றுதமெ
னருந்திறற் கொற்றமு மளவில் செல்வமுந்

திருந்திய ஞானமுந் திதின் முத்தியுந்
தருமுயர் கற்பகந் தவமென் றோர்தியால் ௫௫

இன்னன மந்தண னியம்ப வானுளோர்
மன்னனும் வந்தடி வணங்கி வாய்மையான்
முன்னவன் பதமலர் முடியிற் சூடுவா
னன்னவ னுறைபதி யனைத்து நண்ணினான் ௫௬

எய்திவா னவர்க்கிறை யாண்டு பற்பல
செய்தவம் புரிந்தனன் செல்லுங் காலையி
லுய்யுநா ளெய்தலு மோங்கு மாணிக்கச்
சையநேர் கண்டனன் றளர்ச்சி காண்கிலான் ௫௭

அறுசீரடியாசிரியவிருத்தம்.

காண்டலு மகவா னோக்கிக் கரகம லங்கள் கூப்பி
பூண்டெழு மன்பாற் பொன்னி மூழ்கிமுன் னுலக மேத்துஞ்
சேண்டொடு திருமா ணிக்கச் செழுமலைச் செம்பொற் கோயி
லீண்டொளிப் பிழம்பை யுற்றா னிருமையும்பெற்றா னோற்றான்

மும்முறை வலஞ்செய் தன்னோன் முடியினாற் படியிற் றாழ்ந்தே
யம்மலை தன்னி னேறி யண்ணல்சந் நிதியிற் பின்னுந்
தெம்முனை கடந்த வேந்தன் சேவடி வணங்கிப் போற்றி
மெய்ம்மயிர் முகிழ்ப்ப நோக்கி விழிகணீர் பொழிய நின்றான்

நின்றவன் மீட்டு மீட்டு நித்தனை வணங்கிப் போற்றிக்
கொன்றையஞ்சடையோனீண்டுகுடிகொண்டு வாழ்வனென்றே
யொன்றிய வுளத்த னாகி யுறுதவன் சபித்த சாப
மின்றெமக் கொழிப் பதிந்த விரத்தின கிரியென் றோர்ந்தே ௯௰

வச்சிரப் படையி னாலம் மாணிக்க வரையின் பாங்கர்
செச்சையங் கலவை மார்பன் றீர்த்தமொன் றமைத்தவ்வெற்பி
னுச்சியிற் றேவ தீர்த்த மொன்றுகண் டும்பர் வேலை
யச்சுதன் மதிக்க வந்த வமிர்தத்தா னிறைத்து மாதோ ௯௧

பைந்துழா யலங்கன் மாயன் பாற்கடல் கடைந்த வஞ்ஞா
றைந்தரு வுடன்வந் துற்ற வாயவேம் புலைக்கீ சானச்

சுந்தரத் திசையி லூன்றிச் சுதையினாற் பூர்த் தன்பாற்
சிந்தையின் புறவி லிங்கஞ் சிறப்புடன் றாபித் தன்னோன் ௩௨

மறிதிரைப் பொன்னி மூழ்கி வச்சிர தீர்த்தந் தோய்ந்து
வெறிகமழ் தேவ தீர்த்த விபன்றடம் படிந்து முக்க
ணிறைவனை வலஞ்செய் தேத்தி யிமையமா தினையும் போற்றி
நறைகமழ் நிம்ப நீழ லண்ணியஞ் செழுத்து மோதி ௩௩

விண்ணவர்க் கிறைவன் வேத விதிமுறை வழுவா தன்போ
டுண்ணெகிழ்ந் துவகை மேற்கொண் டுயிர்க்குயி ராகு முக்கண்
பண்ணவற் றொழுது போற்றிப் படிமவே டத்த னாகிப்
புண்ணிய தேவ தீர்த்தப் புடையினோர் குகையின் வைகி ௩௪

இடையும்பிங் கலையும் வாயு வியங்காத படிம டக்கி
யடியினா ரனலை மூட்டி யசநாடி யிடையே போக்கி
முடிவிலா ரமுது தேக்கி முயற்சியொன் றானு மின்றித்
தடையிலாப் பிரமா னந்தத் தன்மய மாகி யுற்றான் ௩௫

பருவமொன் றினைய வாறு பண்ணவற் கிறைவன் வைகத்
திருவிளம் பிறையுங் கங்கைச் செம்பொனீண் முடியு மல்க
வருள்பொழி முகமு மானு மடல்கெழு பாச மேந்து
கரதல மலருங் காள கண்டமுங் கவின்கொண் டோங்க ௩௬

புலியத ளசைத்து வெய்ய பொறிப்பணப் பணிகள் பூண்டு
நிலவொளி பரந்தா லென்ன நீறுமெய் விளங்கப் பூசி
யிலைபயி லிதழி மென்பூ வேடவிழ் தெரியல் சூடி
மலைமக ளொருபால் வைக மால்விடை மீது வந்தான் ௩௭

வந்தெதிர் தோன்றி நின்ற வள்ளலை வான வேந்த
னந்தமி லுவகை கூர வடிமலர் முடிமேற் சூடிச்
சிந்தனை மகிழ்ந்து மீண்டு சேவடிக் கமலம் போற்றி
யெந்தையே யுய்ந்தே னென்ன வின்னணம் வழுத்து கின்றான்

புரிசடை முடிமேற் கங்கை புனைந்தருள் குழகா போற்றி
யுருவிலி யாக வேளை யுருத்தகண் ணுதலாய் போற்றி

பருதியு மதியு மாகும் படரொளி விழியாய் போற்றி
யருமறை யனைத்துஞ் சாற்று மத்தனே போற்றி போற்றி ௬௯

சங்கவார் குழையுந் தோடுந் தரித்தரு ளிறைவா போற்றி
வங்கவா ரியினஞ் சுண்ட மணிமிடற் றமலா போற்றி
சிங்கமா யெழுந்த மாலைச் சிப்புளா யடர்த்தாய் போற்றி
வெங்கண்மான் மழுவோ டேந்தும் விமலனே போற்றி
போற்றி ௭0

அருந்திற லேனக் கொம்போ டாமையோ டணிந்தாய்போற்றி
இருந்துநீண் மணிக்கச் சாகச் சீறர வசைத்தாய் போற்றி
பொருப்பகை மேற்கொண் டுற்ற புலியத ளுடுத்தாய் போற்றி
கருங்கயத் துரிவை போர்த்த கடவுளே போற்றி போற்றி ௭௧

தூயபல் கோடி வேதந் தொடுகழல் விசித்தாய் போற்றி
மாயன்கண் ணிடந்து சாத்தும் வனசச்சே வடியாய் போற்றி
காயழ லென்ன வந்த காலனைக் காய்ந்தாய் போற்றி
தேய்வுற மதியந் தேய்த்த செல்வனே போற்றி போற்றி ௭௨

முப்புர மெரித்தாய் போற்றி மூலகா ரணனே போற்றி
திப்பிய வடிவாய் போற்றி தேவர்தந் தேவே போற்றி
யொப்புமை கடந்தாய் போற்றி யுறுதவப் பயனே போற்றிக்
கப்புடைச் சூல வைவேற் கரத்தனே போற்றி போற்றி ௭௩

அக்கர வணிந்தாய் போற்றி யகிலமு மானாய் போற்றி
செக்கர்வா னிறத்தாய் போற்றிச் செங்கண்மால் விடையாய்
போற்றி
நக்கனே போற்றி யென்னை நயந்தருள் புரிவாய் போற்றி
தக்கன்றீ வேள்வி சாய்த்த சப்புவே போற்றி போற்றி ௭௪

வெள்ளியங் கிரியின் வைகும் விண்ணவர் தலைவர் போற்றி
யுள்ளொளி யாகி நின்ற வொருவனே போற்றி வாசக்
கள்ளவிழ் கடுக்கை மாலை காதலித் தணிந்தாய் போற்றி
தெள்ளிய சாம கீதச் செல்வனே போற்றி போற்றி ௭௫

வெண்பொடி யணிந்தாய் போற்றி வேதநா யகனே போற்றி
தண்பிறை முடித்தாய் போற்றி தற்பரப் பொருளே போற்றி
யெண்கண்வா னவன்க பால மேந்துபிஞ் ஞகனே போற்றி
நண்பனே போற்றி யார்க்கு நாதனே போற்றி போற்றி ௭௬

திருமுடித் தழும்பா போற்றி செழுமலைக்கொழுந்தேபோற்றி
பொருதிரைப் பொன்னி நன்னீர் பொசிவாசி கொள்வாய் போற்றி
வரையகம் பகிர்ந்துகாட்ட வாட்போக்கி மகிழ்ந்தாய் போற்றி
துரிசறு மடியா ருண்ணுந் தூயசெங் கனியே போற்றி ௭௭

இத்திறம் வான வேந்த னிருகணீ ரருவி பாயக்
கைத்தல முகிழ்த்து மேனிக் கம்பிதஞ் செய்ப வன்பாற்
பத்திமை மேன்மே லோங்கிப் பணைத்தெழப் புளகம் பூப்ப
நித்தனைப் போற்றி நின்றா னிற்றலு நிமலன சொல்வான் ௭௮

நெஞ்சகத் தன்பினாலு நீபுரி நியமத் தாலு
மஞ்செழுத் தோதி யோகத் தமர்ந்திடு நிலைமை யாலுஞ்
செஞ்சொல்கூர் துதியி னாலுந் திருவுள மகிழ்ந்தோம் வேண்டி
செஞ்சலில் வரங்க ளெல்லா மியப்புதி யீய்து மென்றான் ௭௯

முன்னநின் கருணை யால்வான் முற்றுறா வரங்களி யாவை
யன்னவை யொழிக மேலா மருந்தவன் சாப நீங்கப்
பன்னகா பரணா வின்று பாலித்தல் வேண்டு மென்னச்
சொன்னகா வலற்குப் பெம்மான் சுரந்தருள் பொழிதல் செய்வான் ௮௦

அலர்கதிர்ப் பருதி வெம்மை யாற்றினு மாத வத்தி
னிலைகெழு வாலு கத்தி னிற்பதிங் கரிதா லவ்வா
றுலகினி லெமக்குத் தீமை யுஞற்றினு முய்வ ருய்யார்
குலவுநந் தொழுப்பு பூண்டோர் கொள்கையிற் பிழைத்தா ரன்றே ௮௧

ஆதலா னம்பா லன்பா லருந்தவன் சபித்த சாபம்
போதவே வரிதென் றாலும் புரிந்தநின் பத்தி தன்றா
காதலா லிவைக ளெல்லாங் கமலம்பூத் தனைய கண்ணாப்
நீதியிற் காணத் தந்தே நின்பதி யடைதி யென்றான் அஉ

என்றலு மிமையோர் வேந்த னிறைவனை யுமையா ளோடுஞ்
சென்றெதிர் வணங்கிப் போற்றிச் சிந்தனை களித்து மீட்டு
மொன்றல பலவும் போற்றியுரைத்தவித் துதிபைச்சொற்றோர்
நன்றுறப் புரிதி யென்றா னம்பனு மதற்கு நேர்ந்தான் அங

சோதிலிங் கத்தி னூடே தோன்றல்புக் குறைப வேந்த
னீதியின் வணங்கி நெஞ்ச நிருமல னிடத்து வைத்தே
மாதவர் விண்ணோர் சூழ மடங்கலந் தவிசி னேறி
வேதனை யெவையுந் தீர வீற்றினி திருந்தா னன்றே அச

இந்திரன் சாபந் தீர்ந்த விப்பெருஞ் சரிதை தன்னைச்
சிந்தனை மகிழ்ந்து கற்றோர் தெரிவுற வெழுதுகின்றோர்
அந்தமி லூழி கால மகிலமும் புரந்து மேலாஞ்
சந்திர மௌலி பாதத் தாமரை நீழல் சேர்வார் அரு

இந்திரன் சாப விமோசனச் சருக்கம்

முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் உஅரு.

# எ-வது இடிபூசித்த சருக்கம்.

### அறுசீரடியாசிரிய விருத்தம்.

சுரர்பதி சாபந் தீர்ந்த தூயமாக் காதை முற்றுந்
தெருளுறத் தெரித்தா யிப்பாற் செங்கதிர்ப் பருதி தீர்த்தப்
பெருமைநீ யுரைத்தியென்னப் பெருந்தவ ருரைப்பப் பெம்மா
னிருபத முளரியேத்தி யியம்பினன் சூதன் மாதோ க

ஒழுகொளி வீசுஞ் செய்ய வுதையமால் வரையின் பாங்கர்
வழுவிலா வளங்க ளெய்து மந்தேகத் தீவி லங்கண்
முழுவலித் திரடோள் வெற்றி மூரிவெற் பரக்கர்விண்ணோர்க்
கழிவுசெய் துழலுந் தீயோ ரழுவெழ விழிக்குங் கண்ணோர் உ

கன்றிய மனத்தோ ரேழு கடலையுங் கடக்க வல்லார்
நன்றியொன் றறியார் பாரி னுப்பணுற் றெவையுந் தாங்கும்
பொன்றிகழ் சிகர கோடிப் பொலிந்துள வடபான் மேருக்
குன்றையுந் துகள்செய் கிற்பார் கூற்றுக்கோர் கூற்ற மன்னார்

அத்திறத் தரக்கர் தோன்று மலர்கதிர்ப் பருதி தன்னை
முத்தலைச் சூலத் தானு மூரிவேற் படையி னானும்
பைத்தலை நாகம் போலும் பகழியி னாலும் போர்செய்
தித்தலைத் தோன்று வண்ண மிடுக்கண்செய் திகழு நாளில்

பேரொளி விரிக்கும் வெய்யோன் பிறங்குதேரிறங்கியோர்நாட்
போர்செய வாற்று னாகிப் பொருவலி போக்கிப் போக
வோர்வதை யுணர்ந்து வானோ ரொருங்குவந் தெய்தி வெய்ய
கார்நிறீ வரக்கர்க் சஞ்சுங் கவலைநீ யொருவி யின்றே ரு

திங்களங் கண்ணிப் புத்தேள் சேவடிக் கமலம் போற்றி
சொங்கவிழ் மலர்க ளேவிக் குடந்தம்பட் டிறைஞ்சி யேத்திற்

சங்கர னெதிரே தோன்றிச் சமரிடை வெல்லு மாற்ற
லிங்குனக் கருளு மென்று விமையவ ரெவரும் போனார் ௬

ஈசனைப் பூசை செய்தா லெத்திற மாமோ வென்று
தேசுடைப் பருதி வேந்தன் சிந்தனை கவலுங் காலை
பாசவே ரரிந்து மேலாம் படிமவே டத்த னாகு
மோனைகூர் மகதி நல்யா ழுறுதவ னவண்வந் துற்றான் ௭

உறுதலும் பதங்க னோக்கி யுளத்திடை யுவகை பொங்க
மறுவறு முனிபா லெய்தி வானவ ருரைத்த மாற்ற
மறிவுறுத் திடலு மன்னோ னங்கதற் குபாயந் தேர்ந்து
தெறுகதிர்ச் சுடரை நோக்கிச்சிவார்ச்சனை முறைமைசொல்வான்

விதிமுறை சிவனைப் பூசை விக்கிர கங்க டம்மிற்
கதிர்வலி லிங்கத் தாற்றல் கட்டுரைத் திடுதுங் காலை
மதிகமா மானு டத்தி லாரிட மதிக மாகுந்
துதிபெறு தேவ லிங்கந் தன்னினுந் தூப தாமால் ௯

தூபதிவ் விபலிங் கத்திற் சுயம்புவே சுயம்பு தன்னி
லேபமா விரத்ன லிங்க மிரத்தின லிங்கந் தன்னின்
மேயமா ணிக்க மேலா மேருவில் வருமா ணிக்கப்
பாயொளி யிலிங்க மேயிப் பாரிடத் ததிக மாமால் ௰

ஆதலாற் றிருமா ணிக்க வசலத்தை யடைந்து பூசை
காதலா லுன்பின் வந்த கடுங்கா லுருமு தன்னை
லேதமின் றுகச் செய்தே யிராக்கதர் தம்மை வென்று
வாதவ களைதி யென்றே யாழ்முனி போயி னனால் ௧௧

வரமுனி போய பின்னர் வானுரு மேற்றை வானந்
திரிபவ னினைப்ப வெய்தித் திரைகட லெழும் வெம்பிக்
குரைபுனற் சுருக்குண் டோம குண்டமொத் தழல வோங்கும்
பருவரை யெவையுந் தீயப் பகிரண்ட முடைப மாதோ ௧௨

வந்துரு மேறு முன்னோன் மலரடி வணங்க லோடுஞ்
சிந்தனை மகிழ்ந்து பெம்மான் சேவடி தொழுது பூசை

யந்தமி லன்பி னூற்றி யரக்கரை* வெல்வான் வேண்டிப்
புந்திசெய் தனைநீ போந்து பூசனை புரிதி யென்றான் ௪௩

என்றுகா விரியின் றென்பா லிரத்தின கிரியைச் சார்ந்து
மன்றநீ யெமது பேரால் வாவியொன் றமைத்து மூழ்கிக்
கொன்றையஞ்சடையோன்பாதங்குழைவினூற்போற்றுகென்ன
நன்றெனப் போந்தவ் வாறே நானில மதன்க ணெய்தி ௪௪

செய்ய மாணிக்க வெற்பைச் சேர்ந்ததி னிருதி திக்கிற்
பையரா முடிமே லூற்ற பரவைசூ ழுலக மெல்லா
முய்யவே பதங்கன் பேரா லுவந்தொரு தடாகங் கண்டு
நையுபா றின்றி மூழ்கி நய்டனு லயத்தை நண்ணி ௪௫

அருச்சனை புரித லோடு மமலனு மெதிரே தோன்றி
விருப்புடை நீசெய் பூசை வியந்தனம் வேண்டிற் றெல்லா
முரைத்தருள் பெறுதி யென்ன வுருமுசே வடிகள் போற்றி
விரிச்சிக னரக்கர் போரில் வெல்வது வேண்டு மென்றான் ௪௬

என்றலு முருமை நோக்கி யிளமதிக் கண்ணி யெம்மான்
நன்றுநன் றென்னச் சோதி ஞாயிறு நிருதர் தம்மை
வென்றிடு மாற்ற றந்தோம் வெஞ்சமர் விளைத்தன் னோரைப்
பொன்றிடப் பொருதி யென்னப் புங்கவ னிலிங்கத் துற்றான்

வரப்பா னருளப் பெற்று வானுரு மேறு மீண்டு
திரங்கொள்பே ரன்பு தன்னூற் செங்கதிர் தனைவந் தித்தே
அரந்தைவே ரறுக்கும் பெம்மானருள்பெற்றுவந்தேனென்னக்
கரம்பல படைத்தோன் சாலக் கடங்கடர் தமைவென் றானல்

பசும்பரி யேழு பூண்ட படரொளித் தேர்க டாவி
விசும்பினி லிரவிப் புத்தேள் விளங்கியங் கியங்கா நின்று
னசைந்திடு மேட மாதத் தெய்துபூ ரணையி லத்த
மசைந்தன னடையுங் காலை யருச்சனை புரிவ னன்றே ௪௯

அண்ணல்பூ சனையு வந்த வருணூன்ற னிளவ லுக்குக்
கண்ணகன் ஞாலத் துற்றுக் கடவுண் மால் வரையை யெய்தி

பெண்ணொரு பாகன் பூசை பேணுதி யென்றவ் வாறே
யுண்ணயந் திடியும் பூசை யூம்பனுக்கியற்று மன்றே ௨0

அன்று தொட் டென்றுஞ் சோதி யலர்கதிர்ப் பரிதி வேந்து
மொன்றிய வசனி தானு முமையொரு பாகன் பூசை
நன்றெனப் புரியு மாயி னலங்கொளத் தலத்தின் மேன்மை
யின்றெவ ருரைப்ப தெங்ங னிணையதற் கில்லை மாதோ ௨க

இருப்புட னிரவி தீர்த்த மேதகு நாளில் மூழ்கிக்
கருப்புரத் தீப மேற்றிக் கண்ணுத றனைவந் தித்தோர்
பொருக்கெனப் பிணிக ளெல்லாம் போக்குவர் போரில்
வெல்வார்
செருக்குட னுலகங் காத்துத் தேவர்தம் முலகுங் காப்பார்

பாரிடத் தினைய காதை படிப்பவர் படிக்கக் கேட்போர்
போரிடைப் பகையை வென்று புவனமோர் மூன்றும்
போற்றச்
சீர்பல பெற்று வாழ்ந்து தீப்பிணி முழுது நீங்கி
மாரன்பே ரழகு வாய்ந்து வானுல காள்வ ரன்றே ௨௩

இடி பூசித்த சருக்கம்

முற்றிற்று.

ஆகத்திரு விருத்தம் ௩0௬

## ௮-வது அகத்தியர் பூசித்த சருக்கம்

---

### கலிநிலைத்துறை

விந்த மால்வரை யடக்கிய விழுந்தவக் கிழவன்
வந்து பூசனை யுஞற்றிய மான்மிய மினிச்சீர்
முந்த மால்வரை முனிவிர்காள் கேண்மினென் றுரைப்பா
னிந்த வானில முய்வதற் கிருந்தவச் சூதன் ௧

இமைய மால்வரைக் குத்தர திசையினி லிசைகூர்
தமைய லானிக ரின்றிய தாபதர் சூழ்கொண்
டமைய வாழ்தரு புட்பகத் திரைக்கரை யடைந்தே
யுமைம ணாளன தருளினா லகத்திய னுறைநாள் ௨

ஆர்வ மீக்கொள வந்தமா முனிவரன் றன்பா
னார தப்பெயர் மாமுனி நண்ணுதல் புரிந்தே
யீர நெஞ்சினா லிருவரு மளவளாய் வைகிப்
பாரி டத்தினிற் பதிபல தொழுதுமென் றெழுந்தார். ௩

எழுந்து காசுமீ ரதம்பிர பாசமு மிறைஞ்சித்
தொழுந்த கைத்தகே தாரம்வில் வாடவி தொழுது
செழும்பு னற்கங்கைத் தீரத்துக் காசிசென் றேத்தி
யழுந்து மன்பினாற் பிரபாசை போ டவந்தி கைதொழுதே ௪

கும்ப யோனியு நாரத முனியுங்கோ மதியோ
டிம்பர் மேவிய தலங்களு நதிகளு மேத்தி
யும்பர் நாடுபோ யுறுவிந்தா டவியுறுங் காலை
வெம்புதீ விழிப் பிரேதமொன் றங்கண்மே வியதே ௫

உற்ற போதினி லுளங்குழைந் தகத்திய முனிவன்
மற்ற விங்கிது முத்தியீ டெய்துறு மாண்பா

லற்ற மில்சிவ தலம்பல வணங்கி வந்தடைவ
னற்ற வாவென நாரத னோர்திசை நடந்தான் ௬

ஓதென்று ளித்தனைற் றிப்பிய மகதியாழ் முனிவன்
ஞான்ற ளித்தனன் போதலுந் தண்டமிழ்ச் சலதி
யேன்று தெண்டிரைக் கடலினைப் பருகிய வெங்கோ
ஞன்ற, வன்பினுற் காவிரி நதிக்கரை யடைந்தான் ௭

அடைந்த மாமுனி திருக்கடம் பந்துறை யதனைத்
தொடர்ந்த வன்பினுல் வணங்குபு சுருதிநான் முகத்தோன்
படர்ந்த பேரொளி வேள்விசெய் தத்திறம் படைத்த
தடங்கு லாவிய காவிரித் தண்புனல் மூழ்கி ௮

நிறைந்த வப்புனல் கொண்டுதண் குண்டிகை நிரப்பி
யறந்த வாதவ னங்கெழுந் தருணெறி யோதி
விறைந்து போய்ப்பிரே தத்தினிற் றெழித்தலும் வில்வேள்
சிறந்த பேரெழில் பெற்றனன் றிசையெலாம் வியப்ப ௯

ஏறிய மாமுனி குண்டிகைப் புனறெளித் திடலும்
வெறிய பிரேதமாங் கும்பனு குதலொரு வியப்போ
வறியிற் காரிருட் பிரேதமங் குறுதலு மம்பொன்
செறியு மாமணித் தீர்த்தமான் மியமெலாந் தெரிப்பார் ௰

அத்தி ருத்தல பான்மிய மளப்பதற் கெளிதோ
முத்தி யாவர்க்குங் கொடுத்தது முறைமையா லென்றுங்
கத்தி கைக்குழல் பாகன்வீற் றிருப்பனுற் கடல்சூ
ழித்த ராதலத் தெப்பதி யிப்பதிக் கிணையே ௧௧

கும்ப யோனியு மவ்வழிக் குழைந்தபே ரன்பா
லும்பர் போற்றுறு முத்தா திசைமுக னுகி
கம்பன் பூசனை செய்யுதை யத்தெதிர் நண்ணி
இம்பர் வேண்டிய வரமெலா மியன்முனிக் களித்தான் ௧௨

உதைய காலையி லும்பர்கோன் றேன்றலா லவ்வூ
ருதைய மாபுரி யாயதிவ் வுலகெலாம் போற்ற

வுதைய காலையி லொருங்கலர் தாமரை வதனத்
துதைய பானுவொத் தொளிதிக ழுந்தனி ரன்றே ௬௰

விடையின் பாகனை விடைகொடு மேதகு முனிவன்
சடையின் வானதி தரித்தகோன் மாணிக்கச் சயிலத்
தடைவி னெய்தின னண்ணற்கு மேற்றிசை யதன்கட்
டடையி லன்பொடு தண்டினுற் றடாகமொன் றமைத்தான்

கங்கை யாதிய தீர்த்தங்க ளனைத்துமக் கணத்திற்
பொங்கு தீம்புனற் றடமெலாம் பொலிவுறத் தாபித்
தங்கை யால்விந்தத் தகந்தையைக் கடிந்தரு ளறவோன்
சங்கை யின்றியே மூழ்கினன் சந்நிதி யடைந்தான் ௬௨

அடைந்த மாமுனி யருச்சனைக் காயின வெல்லாம்
படர்ந்த காதலா லொருவயிற் பாங்குறத் தொகுத்து
மடங்க ளேக்கிதன் பங்கனை மத்தியா னத்திற்
றொடர்ந்து பூசனை புரிந்தன்பா லெதிர்நின்று துதிப்பான் ௬௩

அறுசீரடியாசிரிய விருத்தம்

நேயனே யன்பு தன்னா னெஞ்சிடை நினைபா ரோர்க்குச்
சேயனே யளவி லாத செல்வனே திகிரி தாங்கு
மாயனே முதலாந் தேவர் வணங்குமா ணிக்க வெற்பிற்
றாயனே மத்தி யானச் சொக்கனே போற்றி போற்றி ௬௪

ஆதியா யனாதி யாகி யகண்ட பூரணமாய் மேலாய்
நீதியாய் நினைவுக் கெட்டா நின்மலா னந்த மாகி
யோதியா வையுமு ணர்ந்தோ ருறையு மாணிக்க வெற்பிற்
சோதியாய் மத்தி யானச் சொக்கனே போற்றி போற்றி

ஞான்றுதேன் றுளிக்குங் கொன்றை நாண்மலர்த் தொடைய லோடும்
வான்றளிக் கங்கை யாறு மணிமுடிக் கணிந்தாய் போற்றி
யேன்று பேரன்பு பூண்டார்க் கிடர்புகா வண்ணங் காக்குந்
தோன்றலே மத்தி யானச் சொக்கனே போற்றி போற்றி ௬௬

முத்தனை யினைய வாறு மூதறி முனிவன் போற்ற
வத்தனு நெதிரே தோன்றி யகத்திடை வேண்டிற் றெல்லாஞ்
சுத்தனே மொழிதி யென்னத் தூயமா தவனு மன்பா
லித்தகை வரங்க ளெல்லா மியல்புறக் கேட்க லுற்றான் ௨0

அஞ்செழுத் துண்மை யின்ன மடியனுக் கருளல் வேண்டும்
நெஞ்சிடை யன்பா லென்று நின்னைமத் தியானந் தன்னிற்
செஞ்சவே தெரிசித் தோர்கள் சிவகதி பெறுதல் வேண்டு
நஞ்சமு தாக வுண்ட நம்பனே யென்று பின்னும் ௨௧

துய்யனே மத்தி யானச் சொக்கனே யென்று நாமம்
வையகம் வழங்கல் வேண்டும் வபங்குகார்த் திகைமா தத்திற்
செய்யசெங் கதிரோ னாளிற் செய்தவென் றீர்த்த மூழ்கில்
வெய்யதீப் பிணிக ளெல்லாம் விரைந்துடன் றீர்த்தல் வேண்டும்

அண்ணலே யனைய மாதத் தாரனாள் கோமயத்தை
வண்ணவான் சிரத்தில் வைத்து மற்றிதின் மூழ்கி னோர்கள்
எண்ணியின் றுதித்த பாட லியல்புற வழுத்தி னோர்கள்
திண்ணிய பவங்க ளெல்லாந் தீர்ந்துசீர் பெறுதல் வேண்டும்

என்றலு மற்கால் பாட வேடவிழ்த் திளந்தேன் பில்கு
மன்றலங் குழலி பாகன் வகுத்தவவ் வரங்க ளெல்லாம்
நன்றெண மலையத் துற்ற நற்றவன் மகிழ நல்கி
பொன்றிகழ் புனித லிங்கம் புக்குவீற் றிருந்தா னன்றே ௨௪

சாற்றுமிச் சரிதை தன்னைச் சந்ததம் படித்து ளோர்க
ளாற்றிசைப் புவன மெல்லா நலம்பெறப் புரந்து பின்னர்
கோற்றொடி யரம்பை மாதர் குவிமுலைத் தடத்தின் மூழ்கி
வீற்றினி திருப்ப ரம்பொன் விண்ணுல கதனி லன்றே ௨௫

அகத்தியர் பூசித்த சருக்கம்

முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் ௱௯௪.

# ௯-வது உரோமசர்
# பூசித்த சருக்கம்.

குறுமுனிச் சரிதை முற்றுங் கூறினை வேறு வேறா
வுறுதிகள் பலவுஞ் சொற்றா யுயர்தவச் சூத பின்னு
மறிவுறு நெறியி னாலே யத்தல மான்மி யங்க
ணெறிபெறத் தமியேங் கேட்ப நேயமுற் றுரைத்தி யென்றார்

மாதவ ரினைய வாறு வருத்தலும் புராண முற்று
மோதிநன் குணர்ந்த தூயோ னுரோமசன் சரிதை தன்னைப்
பாதிவெண் பதிடஞ் சூடும் பரம்பரன் பாதம் போற்றிக்
காதலாற் றுறவின் மிக்க கடவுளர்க் குரைக்க லுற்றான் ௨

திக்கிரு நான்குங் காக்குந் திரமிசன் வரத்தால் வந்த
தக்கவி ராச னப்பேர் சமரவே லரசன் மேனா
ளிக்குவேள் வனப்புஞ் சேட னெனத்தகு மறிவு மெய்தி
மைக்கடற் புடவி யெல்லா மனுவெனப் புரக்கு நாளில் ௩

நாலிரு கோடி செம்பொன் ஞாயறா னெறியா லீட்டிக்
கோல்வளை யாம லோச்சிக் குவலயம் புரக்கு நாளின்
மேலுயர் தருவைப் பற்றி வெறியபுல் லுருவி யுற்றாற்
போலவோர் தூர்த்தன் வந்து புரவலன் றன்னைச் சார்ந்தான்

புதரிடை மறைந்த வேடன் புள்ளினைச் சிமிழ்த்தா லென்ன
விதமிவன் போல யாரே வியப்புவர் வல்லா னென்ன
சதமகன் குரவன் போலச் சற்குண மெவைக்கும் வித்தாய்
மதவலி வேந்த னுள்ள மகிழ்வுச் சரிக்கு நாளில் ௫

மந்திரித் தலைவன் கூறு மாற்றங்க ளவையுஞ் சாற்றச்
சிந்துரத் திலத மாதர் சேட்டைநாற் றிறமே செப்பிச்
சந்தனக் கலவை மார்பன் சற்குணம் பிறழ்ந்து சாய
வந்தமின் றுய லோகா யதன்மத மறைதல் செய்வான் ௬

அறுவகைப் பொறியி னாலு மறிதலை யளவை யாகு
நெறிதரு மவற்றாற் காணு நேயங்க ளாவை யென்னுஞ்
செறிதரு வங்கி நீநீர் திகழுமாற் பொன்னி னங்கும்
நெறிதெரிந் துறுமின் னன்கு நிச்சய மென்பர் மேலோர் ௭

தாதகி யரும்புஞ் செய்ய சாலிபோ தனமுங் கன்னன்
மேதகு மணியு நெல்லும் விரவிய சமட்டி தன்னாற்
காதநேர் கமழு மின்பக் களிமதுப் பிறந்தாற் போல
வேதமில் பூத நான்கி னிசைவினா லுணர்வு தோன்றும் ௮

ஓதுமப் பூத நான்கு மொன்றுபொன் றினுமப் போதே
மேதகு முணர்வு மாயும் வியந்தவப் பூத நான்குந்
தாதவிழ் தாம மார்பத் தமர்பூதந் தத்த முள்ள
நீதிபி னோங்கு மிந்த நெறியினின் றாரே யுய்ந்தார் ௯

ஆதலாற் பலங்க ளில்லை யன்னவை தன்னைத் துய்க்கு
நீதிபான் மாசு மில்லை நெறியினா லவற்றை யூட்டு
நாதனு மில்லை முத்த நகைவடந் திளைக்குங் கொங்கை
மாதரா ரின்ப வாரி மடுத்தலை முத்திபாமால் ௰

இன்னன பலவும் பண்ணா ளெடுத்தெடுத் தினைய கூறி
மன்னனைச் சாரு வாக மதமெனுங் கயத்துள் வீழ்த்தி
யன்னவன் றானுந் தீபோ னானைபா லறங்கண் மாறிக்
கன்னியர் போகந் துய்த்துக் காலனுக் குணவு மானான் ௧௧

அந்நெறி திறம்பு வேந்த னுயுளுக் கெல்லை கண்டு
மறலிதன் னுலகத் தெய்த மற்றவன் மறலி தானு
முறுமுறை யிலோப னென்பா னொருவனைக் காண வஞ்சித்
தறுகணா ளரைபங் கேவித் தண்டஞ்செய் விக்க லுற்றான் ௧௨

எரியழன் முதலாந் தானத் திருத்தெனக் கொடிய வெய்ய
நரகிடை யுய்த்தி டுக்கண் ணனிவிளைத் திட்டுப் பின்னர்
பருதியு மதியுந் தாழப் பனிவிசும் பகடு கீண்ட
பெருவரை யடவி தன்னுட் பிரேதமாய்த் திரிப நேத்தார் ௧௩

அழிபசிக் காற்ற ளாகி யடவிக ளொடித்து மென்று
மழுவினும் பிளத்தல் கூடா வண்சிலைக் கரியுந் தீய
உழுவையே முதல்வி லங்கி னூன்சுவைத் துண்டுந் தீரா
தெழுதரு முதரத் தீயா லெரிப்புண்டு நிழலு மின்றி ௧௪

உருத்தெழு மாத பத்தா லுலைப்புண்டுஞ் சண்ட வாயு
முரித்தடித் திடலும் பாரின் மொத்துண்டு நிகம மின்றிக்
குருத்துவிட் டெழுந்துகாட்டுங் கொளுங்கனல்கனிந்துமாறாத்
தரித்திரத் தழுங்கு வார்போற் றெருமந்துதயங்குங்காலை ௧௫

விந்தமால் வரையி னங்கண் மேலைநா ளறத்தி னாலே
சந்திரோ தயம்போல் வந்து தவத்தினுக் குறையுள் ளாகி
ஐந்துதீப் பொறியும் வென்ற வறிவுடை யுரோம சப்பே
ரெந்தைதோன் றுதலுந் தீயோ னெரிபசிக் கிங்கென்றுற்றான்

மாமுனி தன்னைக் கண்டு மகிழ்ச்சியால் வந்தங் குற்று
வேமமா ஞான மெய்தி யிணையடி இறைஞ்சி நிற்பக்
காமமே முதல வாய கடும்பகை யெவையும் வென்ற
கோமுனியன்னோன்செய்திகுறிக்கொண்டங்குரைக்கலுற்றான்

முன்னைய பிறவி தன்னின்மூர்க்கனே யெண்ணில் பாவந்
துன்னினை யாகை யாலே சூழ்ந்தநின் னறங்க ளெல்லா
மின்னல்கூர் சூது வெஃகு மீனர்தம் மில்லம் போல
மன்னுத லின்றி முற்று மாய்ந்தன மாத ராலே ௧௯

கூறுதற் கரிதாய் நீசெய் கொடியவெம் பாவத் தாலே
வேறொரு வழியு மின்றால் விளைத்தவித் தீமைதீர
வாறெதிர்ப் படுத லாலே யண்ணறன் கருணை தன்னாற்
பேறுதந்திடுது மென்னாப் பெருந்தவ னுடன்கொண் டேற்றான்

அஞ்சிறை வண்டு கீண்டு வலர்கெழு மஞ்சி லோதிப்
பஞ்சின்மெல் லடியாள் பாகன் பதிபல தொழுது போற்றி
மஞ்சிவர் சோலை சூழ்ந்த மாநதி பலவு மாடிக்
கஞ்சமா மலரோ னன்னான் காவிரி நதியைச் சார்ந்தான் ௨௦

உடன்வரும் பிரேத ரூபத் தொருவனை யொளிநீர்ப் பொன்னி
படிவது செய்து தென்பாற் பாயொளி பரப்பி யோங்கிப்
புடைவளர் பொதும்பர் மல்கிப் பூதலம் பொலிய வந்த
வடகயி லாய மொத்த மாணிக்க மலையைச் சார்ந்தான் உக

தாண்டவு மகிழ்ச்சி பொங்கிக் கரகம லங்கள் கூப்பி
யாண்டடை முனிவ னங்கே யவனொடும் பணிந்து போற்றித்
தூண்டிய சுடரே போலத் தோன்றல்வீற் றிருக்கு மந்தச்
சேண்டொடு திருமாணிக்கச் செழுமலைப் பாங்க ருற்றான் உஉ

மருப்பினைப் பழித்தண் ணாந்து மருங்குலாள் வாங்க வோங்கு
மருப்பிள முலையாள் பாக னமர்ந்தினி துறையு மந்தப்
பொருப்பின்கீழ் வரையின் மேலாம் புண்ணிய தீர்த்தமொன்று
விருப்புடன் வாயு திக்கில் மேவரக் கண்டு மாதோ உங

இளப்பிறை முதிய பாந்த ளிகலறப் புனைந்த மோலிக்
களங்கனி யனைய கண்டன் கருணையாற் கங்கை யாதி
வளங்கெழு நதிக ளெல்லாம் வரப்புரிந் தவனை நோக்கி
யுளங்கனிந் தாடு கென்றா னுரோமச முனிவ னன்றே உச

பெருந்தவ முனிவ னேவப் பிரேதரூ பத்தைப் பெற்றோ
னருப்பெருந் தீர்த்தந் தன்னி லாடின னாட லோடும்
கருப்புகைச் சிலையாக் கொண்ட காமனே யிவனென் றோர்த
விருப்புனல் லுருவம் பெற்றான் விகடரூ பமுமொ ழிந்தான் உரு

காயினை யென்ன நின்ற காவலன் றன்னோ டன்னோ
னேமநீள் வரையி னேறி யிருஞ்சிறை வண்டு கிண்டுந்
தாமநேர் குழலி பாகன் றணைமலர்ச் சரணம் போற்றி
கோமகற் கருளல் வேண்டுங் குழகவென் றேத்து கின்றான்.

புலியத ளுடுத்தாய் போற்றி பூதநா யகனே போற்றி
கலியுக வரதா போற்றி கண்கண்மூன் றுடையாய் போற்றி
வெளிபுனி மூன்றங் காக்க வின்னருள் புரிந்தாய் போற்றி
வொலிகடல் விடமுண்டெல்லா வுலகமும் புரந்தாய் போற்றி,

முப்புர மெரித்தாய் போற்றி மூவரைக் காத்தாய் போற்றி
துப்புடை மத்த யானைத் தோலுடை யசைத்தாய் போற்றி
யொப்புமை யில்லாய் போற்றி யுணர்பவ ருளத்து ளென்றும்
வைப்பெனப் பொதிந்து வைகும் வள்ளலே போற்றி போற்றி

கடுங்குரன் மானுந் தீய கணிச்சியுந் தரித்தாய் போற்றி
நெடுங்குவட் டினைத் துளக்கு நிருதனை யடர்த்தாய் போற்றி
யடுங்கொடுங் கூற்றை பெற்று மம்புயப் பதத்தாய் போற்றி
நடம்புரிந் தருளா நிற்கு நம்பனே போற்றி போற்றி ௨௯

பூங்கணை தொடுக்கும்வில்வேள் புரம்பொடித் தருள்வாய்போற்றி
தீங்கரும் பென்ன நாளுந் தேனொடு பழகிக் கூவு
மாங்குயிற் குலத்தை யெள்ளி வடித்ததெள் ளமுத மென்னப்
பாங்குறுங் குதலை நங்கை பங்கனே போற்றி போற்றி ௩௰

பின்னிய பணியு மூவர்ப் பிறையும்வெள் ளெருக்கு மாறும்
வன்னியுங் கொன்றைப் போது மத்தமு மறுகு நன்னீர்க்
கன்னியுந் தும்பைத் தாருங் கமழுங்கூ விளமுஞ் சூடுஞ்
சென்னியிற் செந்நீர் பாயுந் திருமுடித் தழும்பா போற்றி

என்றின்ன பலவு மேத்தி யிறைஞ்சிப முனிவை நோக்கி
நன்றுநன் றென்ன வீசன் றுவலந் தீவுக் கொல்லாம்
வென்றிவே லரசனுகி வேதிய வூழி காறுந்
தன்றனிச் செங்கோ லோச்சித் தாரதலம் புரந்து பின்னர் ௩௨

அலர்முலை மயிலஞ் சாய லரம்பையர் கவரி வீச
பொலனருந் தருவி னீழற் புரந்தர னுகி வைகி
வலந்தருஞ் சூல வேலு மழுவுங்கைக் கொண்டு நம்ப
னலம்பெறு னுதலெ வாழ நல்வரந் தந்தா மென்றூர் ௩௩

பொருவறுந் திருமாணிக்கப் பொருப்பினுக் கிறைபைப் போற்றி
யிருவரும் விடைகொண் டேற்று ரீசனு மிலிங்கத் தூற்று
னருவரை யனைய மார்ப னருந்தவ முனிவன் பாதம்
விரைகமழ் மலர்க டூவி மீண்டுமீண் டிறைஞ்சிப் போற்றி ௩௪

தீயனைப் பிரேத ரூபஞ் செறிந்திடுஞ் சிறியே னாகில்
பேயனைத் திரிந்தேன் றன்னைப் பெரிதுங்கை தூக்கியைய
நாயனா ரருள்பெற் றுய்ய நல்கினை யிதற்குக் கைம்மா
றாயின தென்சொல் யானுன் னடிமைக்கு மடிமை யென்றான்

வேந்தனவ் வாறு கூறி விடைகொண்டு முனியைப் போற்றிப்
போந்தனன் முனியு மந்தப் புண்ணியப் பொருப்பின் வைகிச்
சாந்தணி குவவுக் கொங்கைத் தையலோர் பாகன் பாத
வேந்திரன் மலர்க டேவி யினிதுட னமர்ந்தா னன்றே ௬௬

பேசுமிக் காதை சொற்றோர் பெரிதெனக் கேட்கு நல்லோர்
நேசங்கொண் டெழுது வோரோர் நீக்கருந் தீமை யோரும்
பாசங்க ளனைத்து நீங்கிப் பாருல காண்டு பின்ன
ரீசன்செம் முளரி போலு மிணையடி நீழல் சேர்வார் ௬௭

உரோமசர் பூசித்த சருக்கம்

முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம். ௬௭௧

MAHAMAHOPADHYAYA DR. U.V. SWAMINATHA IYER LIBRARY THIRUVANMIYUR MADRAS

## க௦-வது திருவாட்போக்கிச் சருக்கம்.

### கலிவிருத்தம்

நல்லறம் புரிந்தருண் ஞான மாதவ
ரெல்லொளி நீண்முடி யிறைவன் வைகிய
மல்லலங் குவடுவாட் போக்கி யாயது
சொல்லுக வென்னலுஞ் சூதன் சொல்லுவான் ௧

திருந்திய கோலினான் செய்ய வேலினான்
பொருந்தலர்க் கடந்திடும் பொருவி லாற்றலான்
மருந்தினு மினியவன் மாக ரார்தொட
ரருந்திறற் காமனை யனைய பொற்பினான் ௨

அருளினுக் குறையுளே யாய தூயவன்
மருளறு காட்சியான் வரம்பில் சீர்த்தியான்
தெரிவரும் பெருமையான் சிவனை நாடொறு
முரிமையிற் பூசைசெய் துவந்த சிந்தையான் ௩

கல்வியுங் பெருங்கடற் கரைகண் டுற்றவன்
செல்வமு நற்குணச் சிறப்பும் பெற்றவ
னெல்லையி னுலகைக்கண் ணிமையிற் காத்தரு
ணல்லவன் மனுபதி னாவின் மேலவன் ௪

நகைநில வெறிக்கும்வெண் ணளினப் போதென
முகமலர்ந் தருளிய முத்த வெண்கொடை
யகலிட நீழல்செய் யானை போக்கினா
னிகலறுஞ் சூரிய வன்னி யென்பவன் ௫

### அறுசீரடியாசிரிய விருத்தம்

பின்னல்வெண் டரங்க வேலைப் பெருங்கடல் வளாக மெல்லா
மன்னை டோற் புரக்கு நாளி லகிலமு நடுக்க மெய்த
மன்னிய சிங்க வேற்றின் வலிபதி னாயி ரத்தோ
டின்னல்கூர் மயிட னென்றோ ரிகல்புரி யவுண னுற்றான் ௬

உற்றகா ரவுணன் பன்னா ளுந்திபூத் தவனை நோக்கி
நற்றவம் புரிந்தா னந்த நான்முகக் கடவு டோன்றிக்
குற்றமின் றாக நீசெய் கோதிலாத் தவங்க ணோக்கி
யற்றமி லுவகை பூத்தா மார்வமெவ் வரத்தி லென்றான் ௭

வேதிய னினைய கூற வெஞ்சினத் தவுணன் கஞ்சப்
பாதங்கள் பணிந்து முக்கட் பண்ணவன் முகுந்த னோடு
மேதமி லிந்தி ராதி யிமையவ ரிவரா லென்று
மாதங்க மின்றி வாழ்தற் கரும்படை யெவையும்வேண்டும் ௮

இங்கெனக் கென்று வேண்டி யியம்பிய வரங்க ளெல்லாம்
பங்கய னுதவிப் போந்தான் பாழித்தோ ளவுணர் கோவுஞ்
சங்கரன் றனக்கு மம்ம தடுப்பதற் கரிய தாகி
யங்கண்மா நிலத்தில் வெய்ய வாலகா லம்போற் புக்கான் ௯

நல்லற மெவையு மாற நலந்திக ழந்த ணாள
ரெல்லையில் வேள்வி யெண்ணி லிமையவ ரால யங்கள்
பல்லவுஞ் சிதைய நூறிப் படுமதஞ் செருக்கிப் பாருக்
கல்லல்செய் தழிக்க வன்றோ னழிவினுக் கிரங்கி வேந்தன் ௰

பாலொளி விரிக்குஞ் செய்ய பருப்பத மதனைச் சார்ந்து
மேலுறை யமரர் சித்தர் விஞ்சைய ரியக்கர் மேன்மை
நாலிரு திக்குங் காக்கு நலங்கெழு மிமையோர் மல்குங்
கோலநீள் வரையி னந்தி குரைகழற் கமலம் போற்றி ௰௧

வானைவே லரசன் வெய்ய மயிடனா லுலக மெல்லாம்
சோகமிக் கழிந்த வண்ணஞ் சொற்றனன் றொழுது நிற்ப
நாகிள மதியஞ் சூடு நந்தியம் பெருமா னன்றென்
றேகநா யகனுக் கிவ்வா றியம்புது மென்று போந்தான் ௰௨

நம்பனை வணங்கி நந்தி நாயக னணித்தாய் நின்றே
யம்புவி மயிடன் றன்னா லலக்கணுற் றழிந்த வண்ணந்
தும்பையந் தொடையா யீங்கு சொல்லுவான் மனுவந் துற்றா
னெம்பிரான் றிருவு ளத்துக் கேற்றவா றென்னை யென்றான்

# திருவாட்போக்கிப் புராணம்.

நந்தியிவ் வாறு கூற நாதனு நயந்து நோக்கிப்
பைந்தொடை மனுவை யீங்கு வரப்பகர்ந் திடுவா யென்னச்
சிந்தனை மகிழ்ந்தன் னேனுந் திண்டிறன் மனுவுக் கோதக்
கந்தடு களிற்று வேந்துங் கழல்பணிந் தாங்கு புக்கான் ௰௪

புக்கவ னன்பு கூர்ந்தே புளகமெய் யரும்பக் கண்ணீ
ரொக்கமார் பகநனைப்ப வொளிமுடி வணங்கிப் போற்றி
மைக்கட லுலகமெல்லா மயிடனா லுலைந்த வாறு
செக்கர்வா னிறத்தி னார்க்குத் திருவுளந் தேறச் சொற்றான்

சொற்றலுங் கருணை மூர்த்தி தோடவிழ் கமலப் போதி
னுற்றவன் றன்னா லன்னே னுறுவர மனைத்து நோக்கி
மற்றவன் றன்னைப் பார்த்து மயிடனை யிடப்பான் மேவுஞ்
சிற்றிடை யிவளை யேவிச் செகுத்துநீ சேர்தி யென்றான் ௰௬

பரம்பர னினைய கூறப் பார்த்திபர் திலகன் றானுங்
கரந்தலை முகிழ்த்துப் பாத கமலங்கள் முடிமேற் சூடி
நிரந்தரன் றன்னைப் போற்றி நெடிதக மகிழ்ந்து சால
வரந்தைதீர்ந் தகிலத் தெய்தி யணிநகர் புகுந்தான் மன்னே

மாதுமை தன்னை நோக்கி மயிடனைக் கொல்லு மாற்றல்
ஓதின்மற் றுன்னா லன்றி யொருவர்க்கு முறுவ தன்றா
லாதலாற் சிங்க மூர்ந்து வடல்கெழு துர்க்கை யாகிப்
பூதலம் புகுதி யென்றான் பூவையு மனைய வாறே ௰௮

கன்னிய ரெழுவ ரோடுங் காசினி புகுந்து சோதி
மின்னியற் படைக ளெல்லாம் வியன்கர மெட்டுந் தாங்கித்
துன்னருஞ் சிங்க மூர்ந்து துர்க்கைதன் வடிவ மெய்திப்
பன்னிய வட்ட காசம் பலமுறை புரிந்து மாதோ ௰௯

பற்பல வரைக ளெல்லாம் பாரகமொத் தழுங்க வெற்றி
மற்றொழில் கிளர்ந்த திண்டோண் மயிடனைத் தேடிக்காணான்
சிற்பரை சீற்றத் தோடு சேண்டொடு மருணை வெற்பிற்
பிற்படத் தாண்டு மம்பிற் பெருகுவே கத்தோ டுற்றாள் ௨௰

காண்டகு சிறப்பி னோடு கவலையோன் றானு மின்றித்
தூண்டிய சுடர்போ லங்கு சுராசுரர் தொழுது போற்ற
வாண்டகை மடங்கற் பீடத் தமர்ந்தன ளிருந்த காலை
யூண்டெழுஞ்சண்டவாயு முழக்கம்போன் முழங்கி னேர்ந்தாள்

கொழுங்கனல் விழிகள்சிந்தக்குவவுத் தோள்கொட்டியார்த்து
முழங்கிய விசையை வைகு மூர்க்கனை நோக்கி ஞாலத்
தொழுங்கல பலவுஞ் செய்தா யொழிதியோ வொழியா தாவி
விழுங்குமிக் கொடிய வாளால் வீழ்தியோ விளம்பு கென்றாள்

விந்தையவ் வாறு கூற வெகுண்டெரி சிதற நோக்கிப்
பைந்தொடி யாத லானம் பக்கல்வந் தினைய கூறி
யுய்ந்தனை பெண்மை யாண்மை யுறுவதெவ் வகையோ வென்று
நிந்தனை பலவுங் கூறி நின்றிட வென்று சொன்னான் ௨௩

ஊக்கமிக் கெழுந்த தூர்க்கை யுடன்றுபற் பலவா றிந்தை
நாக்கவ னடுங்க வீசி நாந்தகஞ் சுழற்றி யோச்சக்
கோக்களிற் றுழுவன் வல்லே கொதித்தெழுந் தணங்கின் மீது
நோக்கரும் படைகள் வீசி நொடிவரை செருப்ப னென்றே

பெண்ணுரு வெடுத்துக் கூற்றம் பிறங்கிய தெனவே நின்ற
திண்ணிய வணங்கி னாகந் திறந்துசெங் குருதி பாய
வெண்ணில் பல்கணைக டூண்டி யிகல்செய வவனு மன்னோன்
வண்ணமார் பகத்துச் சூல வாகைவேல் வீசி யார்த்தாள் ௨௫

இருவரு மினைய வாறே யிமையவர் படைகள் வீசி
யொருவருக் கொருவ ராற்ற லொழிவில ராகி மண்டி
வருடமாயிரம்போர்செய்தார்மண்ணும்விண்ணகமுமெல்லாம
மரிதரி தென்ன வம்ம வவர்வலிக் களவு முண்டோ ௨௬

வடவையு முருமுஞ் சீறி மாறுகொண் டமர்செய் தென்னத்
தடவரைத் தோள்கள் கொட்டிச் சமர்க்களத் தடருங் காலை
யுடல்சினங் கதுவி விந்தை யுறுவலி மயிடன் றன்னை
யடர்மருப் பிரண்டும் பற்றி யவனியிற் சுழற்றி வீழ்த்தாள்

# திருவாட்போக்கிப் புராணம்.

ஆற்றல்சான் மயிடன் சென்னி யழுந்தத்த னடியா லூன்றிக்
கூற்றுவா யன்ன வாளாற் கொடியவன் சிரத்தை யீர்ந்து
வீற்றுவீற் றுக வேலை யங்கமும் வீசி யார்த்தா
ளேற்றமாம் பிரமகத்தி யுடன்வீர கத்தி மன்னோ   உஅ

இகல்புரி மயிடன் மீண்டு மீருரு வெடுத்தா னென்ன
வகலிட முழுது மஞ்ச வணங்கெதி ரடுத்த லோடும்
பகலெனக் கிரணம் வீசும் படையுடைச் சமரி வேறு
புகலிடமொன் றுங்காணாள்பொன்னிநன் னதியைச் சார்ந்தாள்

அத்திபோ ரிரண்டும் வல்லே யணுகலு மாளி யூர்தி
வித்தகன் வணங்குந் தென்பால் விளங்குமா ணிக்க வெற்பை
முத்தக முரிஞ்சுங் கொம்மை முகிண்முலை யெழுவ ரோடுஞ்
சித்தமின் புறவந் துற்றாள் சென்றவப் பிரம கத்தி   ௩௦

அடிவரை யிடுதற் கஞ்சி யத்திபோ ரிரண்டு மாங்கே
தடைபட்டுத் தியங்கி நிற்பச் சமரியும் வரைமீ தேறி
முடிமிசை மதியஞ் சூடு முதல்வனை வணங்கிப் போற்ற
வெடிபடுஞ் சிங்க வூர்தி விழைவுற வெதிர்வந் துற்றான்   ௩௧

கொண்டல்போ லிருண்டகண்டன்குமரியைக்குறிப்பினோக்கிக்
கண்டித்த லரிய சந்திர காசமீய்ந் தவையி ரண்டுந்
துண்டித்தல் புரிதி யென்னத் தூர்க்கையு மிதுகொ டேயோ
வெண்டிக்கு மிடிக்கு மாற்ற லிடியினை யிடிப்ப தென்றே

மனத்திடைக் குறித்த லோடு மற்றஃ தறிந்து பெம்மான்
கனத்திடை யுருவி யோங்குங் கதிர்மணிச் சிகரத் தொன்றைச்
சினத்திது கொண்டுபோழச் செய்திடென் றருளத் தாழ்ந்து
புனக்களி மயிலன் னாளும் போழ்ந்தன ளதுகொண் டன்றே

ஐயமீ தின்றிப் பின்ன ரத்திபோ ரிரண்டு மாளத்
தையல்சந் திரகா சப்போர்த் தாரைவா ளோச்சிப்போழ்ந்தாள்
பெய்கழ லமர ரெல்லாம் பெரிதரி தென்ன வேலை
வையகஞ் சிவாய மென்ன மனத்திலற் புதமுற் றால்   ௩௪

அருந்தவ முனிவிர் கேண்மி னன்றுதோட் டணையவெற்பைத்
திருந்திய சிவாய மென்லாத் திசையெட்டும் பகரா நிற்குங்
கருங்கட லுலகந் தேவ கட்கையென் றுவந்து வாழ்த்தப்
பொருந்திய வெழுவ ரோடும் பூவையு மங்கு வாழ்வாள் ௬௫

கம்பொடு திகிரி தாங்குங் கன்னிதன் பேரி னாலே
பம்புநீர்த் தீர்த்த மொன்று பாங்கரிற் கண்டா ளாங்கு
நம்பன்ற னருளி னாலே நவமிநாள் படிந்து ளோர்கள்
வெம்புதீ யத்தி தீர்ந்து விசயமும் பெற்று வாழ்வார் ௬௬

பேதையே னறிந்த வாறப் பிரான்மலைப் பெருமைசொற்றேன்
தீதிலாத் திருமா ணிக்கச் செழுமலைச் சிறப்பை யாரே
யோதுவ ரின்னுங் கேண்மி னுலகமுண் டவனை யாதி
மேதகு தேவ ரேனோர் விழைந்துபூ சித்த தாமால் ௬௭

முன்னநாள் வராக ரூப முகுந்தன்கொண் டிலகை யெல்லாந்
தன்னுடை மருப்பி னேந்தித் தரையெலாந் துளக்க வந்த
வின்னல்தீர்த் திடுவான் றீர்த்த மேற்றிசை யதன்கட் கண்டா
னன்னதி மூழ்கி யன்ன பளித்துளோ ரமர ராவார் ௬௮

ஈறிலாப் பிரத்து வாச னீசான திசையி லன்னாட்
டேறுநீர்த் தீர்த்த மொன்று சிவபிரா னருளாற் கண்டான்
கூறினு லனைய தீர்த்தங் குளித்தவர் பாத முத்திப்
பேறுதந் துறுவா ரந்தப் பெருமையார் பேச வல்லார் ௬௯

விண்ணவ ரெவரு முண்மை மேதகு முனிவ ரியாரு
மண்ணக முழுதுங் காக்கு மனுகுல வேந்தர் முற்றும்
நண்ணிமா ணிக்க வெற்பி னம்பனைத் தொழுது போற்றி
யெண்ணிய வெண்ணி யாங்கே யெய்தின ரென்பர் மேலோர்

சொல்லரு மன்பி னாலே சுவாயம்பு மனுமே னாளில்
நல்லதோர் மேட மாத நலங்கொள்சுக் கிலபக் கத்தி
லெல்லொளி மிருக சீரத் திருட்பிழம் பெடுத்து நங்கும்
பல்கதி ரால வட்டம் பரித்திடுந் துவச மேத்தி ௭௧

அத்தநா ளதனி லாழி யம்பொற்றேர் நடாத்திப் பின்னர்
சித்திரை நாளிற் றீர்த்தங் தேவனுக் கியற்று மிந்த
வுத்தமத் திருநாட் சேவை பொருந்தினஞ் சேவித் தோர்கள்
முத்தன்வாழ் கயிலை மேவி முதல்வனைப் போல வாழ்வார் சஉ

எண்ணில்பே ருள்ள மேரு பிரத்தின கிரீச மேலாம்
புண்ணியம் போலு மார பூஷணர் கடக நாதர்
திண்ணிய மத்தி யானச் சொக்கர்திக் கெங்கும் போற்ற
நண்ணும்வாட் போக்கி நாத ரென்பவர் நம்ப ராவார் சங

ஊழிபல் கால முள்ள முவந்துவாட் போக்கி மேன்மை
பேழையஞ் சடையீர் சேடன் பேசினும் பேச வற்றோ
வாழியம் புடவி மேல்யா னறிந்தவா றறியச் சொற்றே
னேழையங் காளன் றாப வின்னரு ளதனா லன்றே சச

சொற்றவிப் புராணம் வாழி சோதிவாட் போக்கி வாழி
வற்றமில் திருமா ணிக்க வணிகிள ரசலம் வாழி
நற்றவர் வாழி பூசை நான்மறை முதல்வர் வாழி
வுற்றபே ரன்பர் வாழி யுலகெலாம் வாழி வாழி சரு

திருவாட் போக்கிச் சருக்கம்

முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம். சகரு.

## கக-வது ஆரியராசச் சருக்கம்.

அறுசீரடியாசிரிய விருத்தம்

காரியல் கண்டத் தண்ணல் கவுரியொ டுறைவாட் போக்கிச்
சீரியல் பணைத்துஞ் சொற்றேன் செய்தவக் கிழமை பூண்ட
வாரிய ராஜன் காதை யறைகுவன் கேண்மி னென்று
நேரியன் மனத்துச் சூத னிமலனைப் பாவிச் சொல்வான் க

சீர்கொண்ட மாமணியில் வைத்தநகை யான்மணிக
டிகழ்பல் சூட்டு
வார்கொண்ட மாசுணஞ்சீர்ச் சென்னிமுத லங்கமெலாம்
வனைந்துங் கூட
வேர்கொண்ட வீதியிற்பன் மணிசுமந்து மேன்மேலு
மிச்சை யோங்கப்
பார்கொண்ட மாணிக்க மலையமரும் பெருமானைப்
பாவி வாழ்வாம் உ

எழுசீரடியாசிரியவிருத்தம்

மணிமறு மார்பி னுறைதிரு மடந்தை
மனமழுக் காறுகொண் டேடத்
தனிவரு மகிழ்வா விளநகை புரிந்து
தழுவமண் மகடிரு முகத்திற்
பணியிணை மீது கண்படை கொள்ளும்
பச்சைமா லெழுந்தகை யா
லணிபெற வணிந்த திலகமே நிகர்க்கு
மியாம்புக ழாரிய நாடு ந

நலமலி யறத்துட் டுறவறம் போலு
நதியினிற் கங்கையே போலும்
புலமலி மலருட் பங்கயம் போலும்
புருடருண் மாயனே போலுங்

குலமணி தருவுட் கற்பகம் போலுங்
குவட்டினுண் மேருவே போலும்
அலமணி வயல்சூழ் பற்பல நாட்டு
ளியாம்புக ழாரிய நாடு ௪

வேலைமீன் சுமந்து மெய்பல குறிகண்
மேவியுஞ் சர்ப்பமா யுழன்றுங்
காலைநே ரசுர ராலடி பட்டுங்
கலங்குமிந் திரனுறை நாடோ
சாலவே பெருமை யுற்றொரு குறையுஞ்
சார்பிலா ரியர்பிரா னரசாள்
சீலமார் நமக்கொப் பாவதென் றன்னைச்
சிரிப்பதிவ் வாரிய நாடு ௫

மறைவளந் தொலைந்த சிறுமையான் மூன்று
மன்னரும் வலாரிபாற் சென்று
விழைவொடு மிரந்த மூன்றுநாட் டினுக்கு
மிகச்சிறப் புடையதே யன்றோ
தழைமழை வளப்ப மெற்றைக்கு மோங்குந்
தன்மையா லாரியர் கோமான்
பிழையுறப் பிறர்பாற் சென்றிர வாமற்
பெருமையோ டாண்டவிந் நாடு ௬

சிவபிரா னென்று மமர்ந்தருள் சிறப்பாற்
றிகழ்சிவ லோகமாங் கடல்சூழ்
புவனமுண் டருண்மா லென்றும்வை குதலாற்
புகழ்மிகு வைகுந்த வைப்பாந்
தவமறைக் கிழவ னென்றும்வாழ் தலினாற்
சத்திய லோகமா மமர
ரவமிலா மகவா னுறைதலாற் பொன்னா
டாமுய ராரிய நாடு ௭

சீரினிற் றிகழுஞ் சிவார்ச்சனை செய்தி
சிவனடி யார்பணி செய்தி
யேரினிற் றிகழு மகம்பல செய்தி
யாவர்க்கு நன்மையே செய்தி
நாரினிற் றருமம் பலசெய்தி யென்றெந்
நாட்டிற்குஞ் செவியறி வுறுக்கு
மாரியத் தன்மை பூணலா லிந்நா
டாரிய நாடெனும் பெயர்த்தால் ௮

தினமுமிந் நாட்டை வணங்கிவாழ்த் துதலாற்
சென்னிநா டாயதொன் றிதன்சீர்
நனிதெரிந் தழுக்கா றடைதலாற் குன்று
நாடென்று மாயதொன் றிந்நா
டினமலி யெந்நாட் டினுக்குமே லாய
தெனவுண்மை நடுமொழி யியம்பி
வனமலி நடுநா டாயதொன் றென்றான்
மற்றிதன் பெருமையார் வகுப்பார் ௯

அறுசீரடியாசிரிய விருத்தம்

ஓங்குதமிழ் முதற்பலவாம் பாடையினு மாரியமிக்
குயர்வா மென்று
தேங்குபல கலையுணர்ந்து தெளிந்ததெய்வப் புலவர்களுஞ்
செப்பு வாரேல்
வீங்குதமிழ் முதற்பலபா டைகள்வயங்கெந் நாட்டினுக்கு
மேலா மென்று
தாங்குபுக ழாரியஞ்சே ரிந்நாட்டை யுரைப்பதற்குத்
தடையா துண்டே ௰

எழுசீரடியாசிரிய விருத்தம்

எங்குமே வேள்வி யெங்குமே மணங்க
ளெங்குமே யெம்பிரான் விழாக்க
ளெங்குமே யறங்க ளெங்குமே செல்வ

ரெங்குமே யினியபா வலர்க
ளெங்குமே கீத மெங்குமே யியங்க
ளெங்குமே கணிகையர் நடன
மெங்குமே யுவகை யெனிலிந்த நாட்டி
னெழில்வள மியம்புதற் கெளிதோ ௧௫

பெருந்தட மொன்றிற் பலரு நீரெடுத்துப்
பெருகிய தத்தமா ளிகைசேர்த்
தருந்தியேற் பவர்க்கு மளிப்பது போலிவ்
வாரிய நாடொன்றின் மகவான்
பொருந்தள கேசன் பிரமன்மா லெவரும்
பொற்குவை கைக்கொண்டு தத்தம்
இருந்தலந் திளைத்தி யாவர்க்கு மளிப்பா
ரெனிலிதை யென்சொல்லிப் புகழ்வாம் ௧௬

திருவினு லழகார் கல்வியாற் போகச்
சிறப்பினாற் கொடையினாற் பொறையான்
மருவிய பிறநாட் டினர்களை யுயர்த்த
வலியள கேசன்வேள் சேட
னுருவளர் மகவான் றருமண்மா திவரை
யுவமிப்ப ரிணையமை யுயர்த்த
வருளினிந் நாட்டு மைந்தரை யுவமை
யாக்குவ ரிவர்க்குயர்ந் தவரியார் ௧௭

அறுசீரடியாசிரிய விருத்தம்

வாங்கலெனு மொழியிரப்போர் புகல்வார்தன் தயெனவஃதை வரைந்து மற்ற
நீங்கலிலா வளைத்தலின்பே ரியாவையுஞ்சொல் வாரியார் நிகழ்த்து மாற்றந்
தீங்கதையு மில்லெனுஞ்சொல் லெனவஃதை வரைந்துமற்றத் திகழ்விட் டின்பே
ரீங்கமையா வையும்புகல்வா ரிந்நாட்டோ ரிவர்கொடையை யென்சொல் வாமால் ௧௮

எழுசீரடியாசிரிய விருத்தம்

விரும்பிய சிறுமா னேந்திய பெருமான்
விநாயகற் களித்தமாங் கனியு
மரும்புகழ்க் காரைக் காலம்மை யாருக்
கன்னவ னளித்த மாங்கனியும்
விரும்புமிந் நாட்டின் மாம்பொழிற் பழுத்து
விழுந்தசெந் தீங்கனி யென்று
லரும்புக ழுடைய விப்பொழிற் கனியி னமைசுவை
யளப்பவ ரெவரே க௫

அறுசீரடியாசிரிய விருத்தம்

பாய வேரினிற் பழுத்ததீங் கனியினைப்
பாதலத் தவருண்ண
வாய நாப்பணிற் பழுத்ததீங் கனியினை
யகலிடத் தவருண்ண
மேய வுச்சியிற் பழுத்ததீங் கனியினை
விண்டலத் தவருண்ண
தூய வண்பலாத் தினந்தொறும் வழங்குமித்
தொல்புகழ் நன்னாட்டில் க௬

அந்த ரத்தொரு சிறுகடு கெறியினு
மவனியில் விழுமாறு
லந்த ரத்துறு பெரும்பொறை சுவர்க்கநா
டவனியில் வீழாம
லந்த ரத்திடை நிற்கின்ற விந்தநாட்
டணிபொழின்முடிநீட்டி
அந்த ரத்தெழுந் தென்றுமே கவலைக
ளறச்சுமப் பதினன்றோ க௭

எழுசீரடியாசிரிய விருத்தம்

கோதில்பல் விளமை பொருந்திலாங் கலிவண்
குருத்தின்மே லிவர்ந்துகா னீட்டி
நீதியிற் புலகார் மந்திகூளுறைத
னிகரிலாக் கௌணியர் கோன்செய்

வாதினிற் றோல்வி யடைந்தகா ரமண
வஞ்சகர் பலர்மது ரையினி
லாதி யினூட்டுங் கழுக்கண்மே லேறி
யவைநுனி யமருதல் போலும் ௧௮

### அறுசீரடியாசிரிய விருத்தம்

இலையென் பதுபூஞ் சோலையிலே யீயென் பதுதே மாலையிலே
யலையென் பதுநீர் வாவியிலே யடியென் பதுதீஞ் செய்யுளிலே
சலமென்பதுவான் பண்ணையிலே தாழென் பதுநீள் வாசலிலே
நலமென் பதுவே நிறையளகை நாணுஞ் செல்வ விந்நாட்டில்

காவென் பதுபூங் காவினையே காதென் பதுவார் காதினையே
தாவென்பதுவோர் தாவினையே சரணென்பதுசெல்சரணினையே
யேவென்பதுகூரேவினையேயெள்ளென்பதுநெய்யெள்ளினையே
மாவென்றுரைக்கு மடவார்கண் மருவுமிந்த வளநாட்டில் ௨௦

### எழுசீரடியாசிரிய விருத்தம்

விலகிலாப் புவிமா மடந்தையந் தரத்தின்
மேனுல கெவையுமோர் கானந்
தலையின்மேல் விழினும் விழுமென வஞ்சித்
தக்கவவ் வுலகெவற் றினையு
மிலகுமெண் ணில்லாக் கைகண்மே னீட்டி
யெற்றைக்குந் தாங்குதல் போலு
மலகிலாத் தென்னந் தருக்குழாம் விண்ணை
யளாவிமே லோங்கிய தோற்றம் ௨௧

தாங்குசெங் கமல விருமலர் வளியாற்
சாய்ந்தொன் றோடொன்றுதாக் குறநீர்
வீங்குபா சடைமேன் முத்தெனத் துளிகள்
விளங்கல்செங் குமுதநண் பகலி
னோங்குவெள் வளையை மதியெனத் தழீஇப்பின்
னுண்மைதேர்ந் தானனம் வாடிப்
பாங்குநின் றிடலைக் கண்டுகை கொட்டிப்
பழிப்பறச் சிரித்திடல் போலும் ௨௨

நண்ணிய கொடிமேற் புனைந்தபூந் தொடைகண்
 ஞான்றிடப் புரிசைமே னிற்ற
லண்ணியவீ ரிருசுடர் நம்மா
 னருள்விழி யாயசீ ரறிந்து
மெண்ணிய வவற்றை விழுங்குவ தென்னென்
 றெதிர்த்துவிண் ணியங்குரு பணியைத்
திண்ணிய வீட்டி யாற்குத்தி யஃதைத்
 திசைவியப் புறவைத்தல் போலும் உ௩

மருதமாஞ்சோலை கூந்தன்மற் றதன்பால்
 வருமதி முகங்கண் டங்கமுகு
குருகுவேய் தோள்கண் மணற்குன்று கொங்கை
 கொடியிடை நிதம்பம்வான் றடாகம்
 பெருகிய வாழை துடைகைகாற் செவ்வாய்
பிறங்குவண் கமலநீள் விழிகள்
 வருமலர்க் குவளை யாகவீற் றிருந்து
 வளந்தர மகிழ்வதிந் நாடு உ௪

மடந்தையர் மேல்வீட் டுள்ளிடு மகிலின்
 வண்புகை வாயிலின் புறமே
யடர்ந்துசெல் பான்மை யன்னவர்குழலை
 யாய்முகி லினமென வகத்துப்
படர்ந்துசென் றருகே பார்த்தலு நமக்குப்
 பகையிவை யினியென்செய் வோமென்
றடங்குபே ரச்சம் புறந்தள்ள நடுங்கி
 யோட்டஞ்செய் தோற்றமொப் பாமால் உ௫

அறுசீரடியாசிரிய விருத்தம்

உருவேய்த்தோ ளிருநிதம்ப நலமூன்று விழிமூக்கி

மிருளோட நான்முக 'மின் னஞ்சிடையொப் பறுபதமே
 லெழுபொற் கொங்கை

மருவார்செங் கமலமென்கை யுடையாரிந் நாட்டினில்வாழ்
மயிலன் னார்க
ளருகாத விவ்விரும்பூ இவ்வளவன் றெடுத்துரைப்ப
வடங்குங் கொல்லோ உக

எழுசீரடியாசிரிய விருத்தம்

விரிமலர் மேலோன் மிளிர்துழாய் மாலோன்
விண்ணவர் வியக்குமிந் நாட்டி
னரிவைய ரிடத்துஞ் சோலையி னிடத்து
மகன்றபூங் கடிதடங் கவினுங்
கரியபூங் குழலார் மார்புமா ளிகையுங்
கைக்கடங் காத்தன நிமிரு
முரியமின் னனையார்கொங்கையு மேலோ
ருள்ளமுஞ் சாந்தமே மணக்கும் உஎ

கருதிய தெய்வப் புலவர்பாக் களுக்குங்
கணக்குறு வளமையிந் நாட்டிற்
கருதுமை பரிசேர்ந் திலங்குமின் னனையார்
கண்ணும்வான் சோலையின் கண்ணுங்
கருதிய வன்னச் சிலம்புறு நல்லார்
காலுநீர்ப் பண்ணையின் காலுங்
கருதுமால் வளைகள் விளங்குறு மடவார்
கையும்பூ வாவியுங் கையும் உஅ

திருமகள் கணவன் மார்பினை வெறுத்துத்
தினமும்வா ழினையபொன் னாட்டி
னிருமைசேர் மணிமே கலையுறு மாதா
ரிடையும்பொன் மாளிகை யிடையு
மருவுமா லாம்ப லேயும்பொன் னனையார்
வாயும்பே ரகழியின் வாயுந்
தருமலர்மஞ்சு துஞ்சும்பூ வையர்தந்
தலையும்வான் புரிசையின் றலையும் உகூ

கொடிநடு நிறுத்திச் சூழவெண் முத்தங்
குயிற்றுசெம் மணிமுற்றஞ் சூழ்ந்த
வடிவுறு பவளக் கைபிடிச் சுவர்மேல்
வயங்கமா ளிகையுயர் தோற்றம்
படிசுவை யுணவு நதிமத வேழம்
பசுமணி யொவ்வொன்றால் விண்ணை
நெடியநா வெண்பற் செய்யவாய் திறந்து
நிமிர்ந்துநேர் சிரிப்பது போலும் ௩௰

இருவகை முளரி மலருமேன் மலர
வெண்ணிலா நாளநீர் வயங்க
வுருவின்வான் கதிர்க ளிரண்டையுண் டுமிழு
முரகங்கட் கெளியமோ வென்று
பெருகிய வரவின் குழுவெலா மொருங்கு
பிலத்தினின் றெழுந்துமேல் வந்து
வெருவவெண் ணில்லாப் பானுவு மதியும்
விழுங்கிவாய் கக்குதல் போலும் ௩௧

ஓங்குநம் முருவ மெடுத்தமா லந்நா
ளுபேந்திர னாகிவீற் றிருந்த
வீங்குசீர்த் துறக்கங் காண்டுமென் றெழுதல்
விழையமீன் வானதி பாய
ஆங்கவை தடத்தி லின்மைகண் டெருமை
யடுத்தலுங் கமுகிளம் பாளை
தேங்குநீர் தோன்றச் சேலென வருந்துந்
தெளிவிலார் சுகமென்று மடையார் ௩௨

நகைபுனை குயிற்றி விண்ணுயர் மாட
நகுமுடி புனைந்துதாழ் தொடையின்
மிகைமலர் தொடுத்த நுனிசிறு வளியான்
மேன்மனை வாயிலின் சைவ
தகையினுட் டுயிலுங் கையலார் முகத்தைத்

தண்மதி யென்றுவாய் விழுங்கப்
பகையின்வான் பணிகள் சினந்துநேர் வந்து
படம் விரித் தாடுதல் போலும் ௧௩

கொச்சகம்

எழுதுபுகழ் மறையொலியு மெழுதாத மறையொலியு
மெழுசுவையா கமவொலியு மினியபுரா ணத்தொலியு
மெழுதரும நூலொலியு மியம்புபிற பாவொலியு
மெழுகலியி னெழுகலியி னிறுமாப்பை யடக்குவன. ௧௪

முரசொலிய முழவொலிய மொய்தரள வலம்புரியின்
விரவொலியும் பொற்சின்ன மேவொலியுங் கஞ்சனத்திற்
பரவொலிய மியாழொலியும் பல்வகைய துளைக்கருவி
வரவொலியு மிந்நாட்டின் மல்குவன பலர்வியப்ப ௧௫

எழுசீரடியாசிரிய விருத்தம்

ஓதிமங் கரையிற் சூழச்செங் கமல
மொளிர்தட நீறணி மறையோர்
நீதியிற்சூழ்ந்து செய்யும்வேள் வித்தீ
நிறைகுண்ட நிகர்த்திடு மதன்பாற்
றீதின்மா முழுதுந் தளிர்த்தொன்று நின்றல்
சிவனவி பெறநிற்றன் மானுங்
கோதிலவ் வாவி நாப்பணிற் றுயில்கார்க்
குழாமெழல் புகையெழல் போலும் ௧௬

கடிமணி குயிற்றி மேனுல கெல்லாங்
கடந்தபொன் மாடங்கார் மேக
மடியுற வருகு வெண்முகின் முடியி
லமரமேற் செலநிற்குந் தோற்றம்
பொடியணி பெருமான் முன்புபோ வின்மை
பொங்கழ லாயடி முடியு
நெடியனுமயனுங் கேழலா யனமாய்
நேடநிற் பதுநிக ராமால் ௧௭

நிலைபுறு பொழில்கள் கிளைதொறு மிருசெந்
நிறத்தளிர் பொதுளிய தோற்ற
மிலைகனி காய்பூ முதற் பலகைமா
றெண்ணுறு தளிப்பது மன்றிப்
புலமுறு பவற்றைக் கவர்வதற் கடைந்தோர்
பொங்கிரு ளாலவை தெரியா
தலமரு வாரென் றெண்ணிலாத் தீப
மளவில்கை யேந்துதல் போலும் கஅ

மன்னிய தடமும் பொழிலும்வான் பணையு
மாடமும் புரிசையு மகழுந்
துன்னிய பிறவு மறையமேன் முகிலின்
றொகுதிவந் துறைந்திடன் மகவான்
றன்னில வளமை யலர்களு நோக்கிற்
சாருங்கண் ணேறெனக் கையான்
முன்னிய கரிய படாம்பல வெடுத்து
மூடிய பரிசினை நிகர்க்கும் கக

நலமுறு தம்மை யீன்றுதாங் குதல்செய்
நன்றியூற் கனிதரப் பாங்கர்
நிலவுபற் கதலி முயல்கள்போற் குனிந்து
நிற்பமற் றதுகண்டு புவிமான்
குலவுவாய் திறத்தல் போலுமா சினிவேர்க்
குழாத்தினிற் பழுத்ததீங் கனியாற்
பலமுறு மவனி குளிர்ந்தபூஞ் சோலைப்
பரப்பெலாம்வெடித்திடுந் தோற்றம் உ0

மந்திகள் கரையிற் சூழ்ந்திடச் செந்தா
மரைமலர் வாவியி னடுவோர்
முந்திய மயிட மூழ்கிமே லெழுதன்
மொய்புகழ் வழுதிமே லேவ
நந்திய வமணர் சூழ்ந்துசெய் வேள்வி
நகுமழற் குண்டத்தி னுப்பண்

வெந்திறல் வேழ மொன்றுமே லெழுந்த
வியப்பினை நிகர்த்திடு மன்றே. ௪௫

உழுபவ ரொலியு நென்முளை வீச
லுறுபவ ரொலியுநீர் பாய்ச்சி
யெழுபவ ரொலியுங் களையெலாங் களைவுற்
றெடுப்பவ ரொலியுந்தந் தெய்வந்
தொழுபவ ரொலியும் விளைகதி ரறுத்துத்
தொகுப்பவ ரொலியுநெற் குவித்துக்
கெழுபவ ரொலியு மிடந்தொறு மோங்குங்
கிளர்புக ழாரிய நாட்டில். ௪௬

மனுவினு மதிக நீதியோ னாகி
வானவ ருய்யநஞ் சுண்ட
கனைகடற் பிறவாத் தெள்ளமு தினுக்குக்
கண்ணப்பர் போலன்ப னாகி
நினையுமெவ் வுயிர்க்கும் பெற்றதாயாகி
நிகரிலா வாரியர் கோமான்
வனைதடந் தோளாற் புரந்தவின் னாட்டின்
வளமெலாம் வகுக்கவல் லவர்யார் ௪௭

கலிவிருத்தம்

இனைய பல்வள மெய்திய நாட்டிடை
சிவனின் மாயன் மணத்திற்பூ தேவியா
மனைக முத்தணி மங்கல நாணென
வனைய வோங்குமோர் மங்கல நன்னகர். ௪௮

இலங்கு மின்னக ரெண்ணருஞ் செல்வமுந்
துலங்கு போகமுந் தொக்க சிறப்பினா
லலங்கு விண்பொன் னகரு மளகையுங்
கலந்தி ருக்கின்ற பான்மை கடுக்குமால் ௪௯

நாம கட்சய னவ்னுஞ் சானறது
மாம கட்கரி மார்பினு மேலாய

தேம மூன்றுல கீன்றதாய்க் கெம்பிரான்
வாம மெய்யினும் வண்மைய திந்நகர் ௪௬

அன்னம் வேண்டினு மாடைகள் வேண்டினுஞ்
சொன்னம் வேண்டினுஞ் சொற்கலன் வேண்டினு
மென்ன வேண்டினு மியார்க்கு மளித்தலா
லிந்ந கர்க்கிணை யாநக ரில்லையே ௪௭

கவினு மாறு முகமின்றிக் கந்தனு
மவிர்க ரும்புவில் லின்றி யனங்கனும்
புவனி வந்தவிப் பொன்னகர் நண்ணினு
லிவரை யாவரி னையரென் றோர்வரால் ௪௮

எங்கும் வேள்விக ளெங்கு மறையவ
ரெங்கு யாதவ ரெங்கு மறவொலி
யெங்கு மீகைய ரெங்குந் தருமங்க
ளெங்கு மாமண மெங்கு மியங்களே ௪௯

மாசி லாத மகிழ்நரோ டூடிய
நேச மங்கையர் செங்கை யினீக்கிய
காசு மல்கு கலன்களு மாமணம்
வீசு மாலையும் வீதியிற் குப்பையே ௫௦

எல்லை யிந்நகர்க் கெல்லா முளவென்பா
ரில்லை யென்பன வெத்தனை யோவுண்டு
செல்ல லில்லை திருட்டில்லை பொய்யில்லைக்
கொல்ல லில்லை குறையில்லை நோயில்லை ௫௧

பருகு நீர்த்தட மேபங்க முள்ளன
மருவு செய்யே மலிக்கம் பலையன
திருவின் சந்தனச் சேறே கடியன
கருது மின்னார் சிலம்பே கலியன ௫௨

செய்ய வாவியே தீர்வில் பயத்தன
துய்ய கரேவே யலரன தோகைய

ரைய ரிக்கணை மையன வாங்கவர்
வெய்ய கொங்கையே மேவிய வம்பன ௫௩

அனந்த னந்த வலாரி யயன் பொய்ப்பார்
அனந்த னந்த வனப்பூ வலர்வன
அனந்த னந்தவ மில்பணை யார்வன
அனந்த னந்தவ மேவு மகங்களே ௫௪

கண்ட னங்கருங் காமுற மங்கையர்
சண்ட னங்கரும் பாவிசை காட்டுவ
வண்ட னங்கரு தில்ல பலிவன
உண்ட னங்கரு மேதிநீர் மல்குவ ௫௫

நலங்க லந்த வுளத்தினர் நற்றவர்
பொலங் கலந்தவரு நல்லார் பொற்றனம்
விலங்க லந்தம் விரவுவ மாடங்கண்
மலங்க லந்த கரப்பாய் வவண்பணை ௫௬

அம்ப ரத்தை யளாவும் பொழிற்சிறார்
பம்ப ரத்தை யலர்க்கையிற் பற்றுவார்
அம்ப ரத்தை யறிவர்மே லோர்சனர்
பம்ப ரத்தை யரிவையர் பாற்றுவார் ௫௭

வளைகண் மீது வளைகண் பயில்வன
கிளைகண் மீது கிளைக ளுறைவன
விளையும் பண்ணைமேற் பண்ணை மிளிர்வன
வளையு மாலமே லால நிறைவன ௫௮

பறக்கு மன்னம் பசும்பொழி லெங்குமே
பறந்தி டாவன்னம் பன்மனை யெங்குமே
பறக்குந் தும்பிபணிமல ரெங்குமே
பறந்தி டாத்தும்பி பற்கூட மெங்குமே ௫௯

கமல மீது கமலங்க ளுல்வன
கமழு யாம்பன்மே லாம்பல் கமழ்வன

மைனும் பானன்மேற் பான லமர்வன
வமருங் கானின்மேற் கான மமழுவன ௯௦

நடக்கு மாம்ப னகுதெரு வெங்குமே
நடப்பி லாம்ப னறுங்குள மெங்குமே
நடக்கும் பாடல நண்ணிட மெங்குமே
நடப்பில் பாடல நந்தன மெங்குமே ௯௧

வாய்ந்த பூக முறிந்திட வண்பலாச்
சாய்ந்து சிந்தத் தழையுந்தே மாவிழ
மாய்ந்து கன்னலும் வாழையும் போழ்ந்திட
பாய்ந்து தென்னம் பழங்க ளுதிருமால் ௯௨

தோய்ந்த மேதி சொரிபால் பெருந்தடம்
வேய்ந்த நல்லார் பலர் மூழ்கி மேலெழு
லாய்ந்த பாற்கட லப்புயச் செல்விமார்
வாய்ந்த பற்பலர் வந்தெழல் போலுமால் ௯௩

புகரி னுன்மறை யாளரெப் போதுஞ்செ
யிகன்ம கத்தி யிரவைப் பகல்செயு
மிகழ கத்தீ யெழூப்புகை விண்படர்
பகன்ம றைத்துப் பகலிர வாக்குமால் ௯௪

மள்ளர் நல்ல குணமும் வணக்கமு
முள்ள சீலரென் றோதுதற் கென்றடை
கள்ள மில்லவர் கையிற் கொலைவில்லுங்
கொள்ளு நல்ல குணமும் வணக்கமும் ௯௫

இணையி லாத விளந்தென்றல் வீசமேன்
மணிநிலா முற்ற மாமலர்ப் பள்ளியி
லணையுங் காளையர் நல்லா ரணிமுலைத்
துணையின் மேன்முகம் வைத்துத் துயில்செய்வார் ௯௬

இட்ட மைந்த ரிணைக்கை பகனல்லார்
கட்டும் வண்ணக் கலைக ளவிழ்ப்பன

விட்ட மேன்மை விசைய நிசிநல்லார்
கட்டும் வண்ணக் கலைக ளவிழ்ப்பன ௬௭

நகுவி மானம்வி மானத்தை நண்ணுவ
தகுபொன் வேதியோர் வேதிகை சார்வன
மிகுக ரும்பு கரும்பினை மேவுவ
தொகுபல் கொக்கொரு கொக்கினைத் தோய்வன ௬௮

செருக்கு மைந்தர் பிணக்கறச் சிற்றுணு
வுருக்கு நல்லார்வா யூட்டலைக் கண்டுகாப்
பெருத்த நாகம் பிணக்கறத் தேன்றொட்டு
வருக்கை யின்சுளை மந்திவா யூட்டுமால் ௬௯

செய்கை நல்ல தெரிவையர் யாவரு
மைக லப்பின் மகிழ்நர்க் கடங்குவார்
வைக லும்மிறு மாந்துமே னோக்குங்கொங்
கைக ளந்நவர் கைகட் கடங்கிடா ௭௰

உயருந் தங்க ளுரைக்குப் பகையென்று
மயிலன் னார்பலர் வன்சிறை வைத்தல்போற்
குயிலுங் கிள்ளையும் பூவையுங் கூட்டினிற்
பயிலச் செய்து பழக்குவர் தேமொழி ௭௧

தொடுத்த பாகச் சுவைசொட்டு பாக்களை
மடுத்த காதலிற் கேட்டு மகிழ்ந்துநே
ரடுத்த நாவலர்க் கம்பொன்னு மாடையு
மெடுத்தெ டுத்துப் பெருஞ்செல்வ ரீவரால் ௭௨

வேழ மெண்ணும் விழுமநம் பேரினை
வேழ நீகொண்ட தென்னென வீட்டல்போல்
வேழ மீர்த்து மிதித்தொடித் தெண்ணிலா
வேழம் பல்லிற் கறித்து விழுங்குவ ௭௩

கொச்சகம்

வாங்குவன வார்சிலையே மயங்குவனா னிலப்பொருளை
யேங்குவன பொற்சிலம்பே யிழிவசெழு மலர்த்தேனை

தூங்குவன மாலைகளே துகளுறுவ வீதிகளே
தாங்குவன நிதிப்பெருக்கே தத்தைமேவுவ பொழிலே ௭௪

வாடுவமின் னேரிடையே வணங்குவமின் னேர்நுதலே
சாடுவநல் லார்விழியே தாழ்வவவர் பூங்குழலே
வீடுவவெந் தீமைகளே வெறுப்பவொரு முப்பிழையே
வொடுவநீர் நதித்திரளே யொடுங்குவகற் றவருளமே ௭௫

கலிநிலைத்துறை

தேக்கு பூமுதற் பற்பல தானஞ்செய் செல்வர்
வாக்கு நீர்ப்பெருக் காற்பயிர் நாட்குநாள் வளர்த
னோக்கு மப்பெரு வியப்பினை நோவறத் தம்மைக்
காக்கும் விண்முகிற் குரைப்பமேலெழுவனக் கடுக்கும் ௭௬

புனைமற் போர்செயப் பகன்முற்றுங் கடிதடப் பொற்றே
ரினிய காளைய ரேறுத லன்றி வின்மதவே
ணினையு மாகமக் கலவிப்போர் செயநிசி முற்றுங்
கனிவி னேறுவர் மங்கையர் கடிதடப் பொற்றேர் ௭௭

நீடு சாபமு நிறைவலிப் பகழியு மாக்கி
நாடு மூவுல கீன்றரு ணங்கைதான் படைத்த
கோடி மாரர்கைக் கொடுத்திட வளர்ப்பன போல
வாடில் செய்யெலாங் கன்னலு மலர்களும் வளர்வ ௭௮

நிதமு நீசிலை யாகக்கொள் கழையெலா நெரிய
வதிரு மாலையிட் டரைப்பர் புன்மள்ளர்க ளந்தோ
விதைமுன் வந்துபா ரணத்தமை நாணியாக் கொண்ட
மதனை யோலமிட் டழைத்தல்போ லொலியிடும் வண்டர் ௭௯

அறுசீரடியாசிரியவிருத்தம்

பாவலர் செய்யு ளெங்கும் பாவலர் செய்யு ளெங்கும்
பூவலம் படரு மெங்கும் பூவலம் படரு மெங்குங்
காவியங் கண்ணு ரெங்கும் காவிய கண்ணு ரெங்கு
மாவினம் பலங்க ளெங்கு மாவினம் பலங்க ளெங்கும் ௮௰

ஓதுசங் கலைக ளெங்கு மூருசங் கலைக ளெங்கும்
போதுசெய் மணத்தா ரெங்கும் பொங்கெழின் ௮௧
மணத்தா ரெங்குந்
தீதறு மகத்தா ரெங்குஞ் செந்தழன் மகத்தா ரெங்கு
மேதமே வைய்பா ரெங்கு மியாரையும் வைய்யாரெங்கும்

கலிநிலைத்துறை

இனிய சொல்லன பூவைவா யேகுயில் வாயே
கனிவின் கிள்ளைவா யேபல கழனியின் வாயும்
புனித நன்மணஞ் செய்துமா தரையணை பொற்பு
முனிவின் மைந்தர்பா லேபல மொய்பொழிற் கண்ணும் ௮௨

அறுசீரடியாசிரிய விருத்தம்

கொங்கை யேந்துதன் மின்னனா ரேபல
கொய்வன் நறும் போதும்
சங்கை யொட்டுதல் கலைவலா ரேபல
தையலர் மிடற்றேட்டுந்
துங்க வண்டொலி காவின்பா லேபல
தோகையார்கைப்பாலும்
அங்கமோ துதன் மறையவ ரேபல
வலர்த்தடம் பயில்சேலும் ௮௩

கொச்சகம்

அரியமறை முழக்கொருபா லாகமத்தின் முழக்கொருபாற்
புரிமிருதி முழக்கொருபாற் புராணத்தின் முழக்கொருபாற்
றரியிசைநூன் முழக்கொருபாற் றமிழ்மறையா முழக்கொருபால்
விரியியனூன் முழக்கொருபான் மிளிர்பிறபா முழக்கொருபால்

மண்ணவர்த் நெருக்கொருசார் மாதிரத்தர் நெருக்கொருசார்
பண்ணவர்த நெருக்கொருசார் பாதலத்தர்நெருக்கொருசார்
விண்ணவர்த நெருக்கொருசார் மிலைவனத்தர்நெருக்கொருசா
ரெண்ணயனர் நெருக்கொருசா ரிந்திரர்த நெருக்கொருசார்

முழவொலி யொருபான் மிக்க
முரசொலி யொருபாற் கஞ்ச
மெழுமொலி யொருபா லியாழி
னியம்பொலி யொருபாற் சின்னந்
தழுவொலி யொருபாற் செல்வர்
தருமொலி யொருபால் வாழ்த்திக்
கெழுமொலி யொருபாற் கீர்த்தி
கிடைத்தமங் கலமு தாரில் ௮௬

கலிநிலைத்துறை

ஓங்கு மாதவ ருறைதிரு மடங்களும் பல்ல
தாங்கு மன்னமா தானஞ்செய் மடங்களும் பல்ல
தேங்கு தீஞ்சுவை திகழுநீர்ப் பந்தரும் பல்ல
பாங்கு சேர்பலர் கலைபயில் சாலையும் பல்ல ௮௭

அறுசீரடியாசிரியவிருத்தம்

யோனி வாய்ப் பட்டுப் பிறந்திடா வீசனை
யுயர்பதி பன்னாளும்
யோனி வாய்ப்பட்டுப் பிறக்குமா லயன்முத
லும்பரு மண்ணோரு
மேனையோ ரும்புன் பசுக்களே யென்பதை
யிழுதையோர் தெளியாத
தேனை யோவெனக் கிள்ளைக ளுரைத்தல்கேட்
டிரங்குவ பலபூவை ௮௮

அறுசீரடியாசிரியவிருத்தம் [பூண்டு

ஈசன்மெய் யெழுத்தைந் தெண்ணி யிணைபில்கண் மணிகள்
வாசவெண் ணீறு மேனி முழுமையும் வயங்கப் பூசி
மாசிலா நான்குஞ் செய்து நான்கையு மருவ வைகு
மாசைமே லாசையில்லா வடியவர் கூட்ட மெங்கும் ௮௯

கலிநிலைத்துறை

காசு நாண்மலர் பறப்புநற் காய்கனி தேமா
வாசி லாதசீ ரின்னிசை யணிபொருள் வியப்பும்

பேசு வான்றே டுகாவெலாம் பிறங்குத லன்றி
மாசி லாதநன் ஞுவலர் பாவெலாம் வயங்கும் ௯௰

தூய்ய கொங்கையுந் தோள்களு நிதம்பமுந் துடையுஞ்
செய்ய தாள்களும் புறஞ்சற்றே தெரியநுண் டுசு
மையின் மெய்புனைந் திளநகை யுலகெலா மயக்க
வைய மன்றெலா மங்கைய ரணிநடஞ் செய்வார் ௯௧

தளர்ந சுப்பின்மே கலைபொன்முன் றுனைவெண் டரள
மொளிர்தன் மங்கைய ருறுப்பெலா முற்றபல் கலனை
யிளமை யல்குலைப் போதுந்தோய் சுகமெலாந் நல்லா
லுளது கொல்லுமக் கென்றுமுன் சிரித்தலை யொக்கும் ௯௨

தங்க ளுயகர் மணிநிறந் தலைபுய மெல்லா
மங்கை மார்பிற மாதர்கள் கவர்ந்திடா வண்ண
மங்க மார்குறி யிட்டென விளங்குமன் போடு
துங்க வூடலா லுதைத்ததாட் செம்பஞ்சிச் சுவடு ௯௩

கொச்சகம்

காலெல்லாந் தகட்டுவராற் கரையெல்லா மடவன்னம்
பாலெல்லா மலர்ச்சோலை பணையெல்லாம் விளைசாலி
சாலெல்லாஞ் சூற்பணிலந் தடமெலாஞ் செழுங்கமலம்
மேலெல்லா முகிற்றொகுதி வீடெல்லாந் தனக்குவியல் ௯௪

அறுசீரடி ஆசிரியவிருத்தம்

சேறு மணக்குஞ் செய்யுளெலாந் தெய்வ மணக்குஞ் செய்யு
ளெலா
நீறு மணக்கு மங்கமெலா நிறைபூ மணக்கு மங்கமெலாஞ்
சாறு மணக்கு நியமமெலாஞ் சாந்த மணக்கு நியமமெலாஞ்
சோறு மணக்கு மகங்களெலாஞ் சொரிநெய் மணக்கு மகங்க
ளெலாம் ௯௫

அறுசீரடியாசிரிய விருத்தம்

முன்னமொரு சூர்ப்பகையான் மனைவியொடும் வலாரிபய
முதிர்ந்து நீங்கத்
தன்னமொடு சயந்தனும்வண் சிறைமேவப் பலவளமுந்
தவிர வேங்கு
மந்நகரை மனைபுகல்வர் வளத்தோடு மாரியர்கோ னகலா தாளு
நன்னகர்வெண் சுதைமாடம் வரிசையாம் பற்காட்டி
நகைக்கு மன்றே

கலித்துறை

இன்ன சீர்பல வெய்திய மங்கல மென்னும்
பொன்ன கர்க்கர சாயினன் பூதல முழுது
முன்னு மாரிய ராசனென் றுரையியற் பெயரான்
மன்னர் மன்னரும் வணங்குதாண் மணிமுடி வேந்தன் கூஎ

கொற்ற வெண்கொடை குவலைய மெங்கணு நிழற்றச்
செற்ற நேமிவெண் டிசையெலாந் தடையறச் செல்ல
சொற்ற வாருதி சூழ்புவி முழுமையு மொருதார்ப்
பொற்ற டம்புய மேருவாற் பொதுக்கடிந் தாண்டான் கூஅ

அடலின் மாற்றலர்க் கந்தகன் போன்றுபல் லுயிர்க்கு
முடனு மாவியு மொப்பவ னெங்குமே யருளாற்
படரு மைந்தரு நிகர்ப்பவன் பற்றலர் நிணம்வா
யிடமொய் திக்கெலாம் பார்க்கின்ற வெரிதவழ் வேலான் கூகூ

வாய்ந்த பூதல மெங்கணு மழைவளஞ் சுரப்ப
வாய்ந்த தானமுந் தவங்களு மறமும்வண் பொருளுந்
தோய்ந்த வின்பமு நிலைபெறச் சுரர்மகிழ் வெய்த
வேய்ந்த நான்மறை வேள்விக ளெண்ணில செய்தான் ள

கோதி லாதமற் போரினல் வீமனைக் கொடையாற்
றீதி லாதசீர்க் கன்னனைத் திகழும்விற் போரி
லோதி நேர்புய விசையனை யொத்தவ னேனு
நீதி யேரட ரசாள்கையாற் றன்னையே நிகர்த்தோன் ளக

முற்று நீத்தமா தவத்தினர் முன்மிகு பயமும்
பெற்ற நான்மறை யாளர்பாற் பொருவிலாப் பணிவுங்
கற்ற நாவல ரவையின்மேற் கணக்கிலா மதிப்பு
முற்ற நல்குர வெளியர்பா லிரக்கமு முள்ளான் ௱௨

சொன்ன தானமுந் தூயகோ தானமும் பூமி
மன்னு தானமும் பற்பல தானமும் வழங்கிப்
பொன்ன வாமலர்ப் பொழில்வைத்து வளர்த்திடன் முன்னு
தன்ன நீங்கிய தருமமென் னுன்னகையும் புரிந்தான் ௱௩

விழையு மாலம்வேய்ந் தாலமுண் டாலம்வாழ் விமலன்
பழைய வாலயம் பற்பல புதுக்குபு புதிதாத்
தழையு மாலயம் பற்பல சமைத்தவன் விழாக்கள்
குழையு மன்பொடு பற்பல குறைவறச் செய்தான் ௱௪

எங்க ளுயக னினிதுறை யாலய மெல்லாந்
துங்க வாகமஞ் சொல்விதிப் படிசெயும் பூசைக்
கங்கண் வேண்டுவ யாவையுந் தினந்தின மகிழ்விற்
றங்கு முண்மையாற் காலங் டொறுமிகத் தந்தான் ௱௫

மின்னு கண்மணி நீறணி மெய்யினர் வந்தான்
மன்னு மாதனத் தெழுந்துமுன் வரவெதிர் காண
வென்ன பாக்கியஞ் செய்தன னடியனே னென்று
சென்னி மேற்கரங் குவித்தவ ரடியில்வீழ் சீலன் ௱௬

அறுசீரடியாசிரியவிருத்தம்

படைகுடி கூழ மைச்சு பற்றுநட் பரணென் றாறு
முடையவ னாகி மன்னர்க் கொருசிங்கம் பொன்றான் மிக்க
வடலினஞ் சாமை யீகை யறிவூக்கந் துணிவு கல்வி
முடிவி லின்பந்தூங்காமை முதற்பல நலமு முள்ளான் ௱௭

அளவிலா நீதி நூலு மறநனி வகுக்கு நூலும்
பளகிலா விரதம் வேழம் பரிபடைத் தொழினூ லாதி
வளமுறு கலைக ளெல்லா மாசறத் தெளிந்தவ் வாறே
யுளநுழை தரப்பல் லோர்க்கு முணர்த்துறு முரவு மிக்கான்

தளவொடு மிரந்து நின்று தங்குறை சொல்வோர் காட்சிக்
கெளியவனாகிச் செய்ய முகமலர்ந் தின்சொற் கூறி
யளியினஞ் சீரஞ் சீரென் றவரவ ரெண்ண மெல்லா
முளமகிழ் தாமு டிக்கே யுயிர்ப்பினிற் பிறவுஞ் செய்வான்னாகூ

பகைவ ராற் கள்வர் தம்மாற் பரிசனம் விலங்கு புள்ளாற்
றகையுறு தன்னா லென்றுஞ் சார்பய மொழித்துப் பூவின்
மிகையுறு முயிரையெல்லாம் விழிபினை யிமைகாக் கின்ற
வகையென வோம்பி யாதி மறைநெறி புதுக்கி வைத்தான்

வேறு

அன்பு பொறுமை நடுநிலைமை யடக்கமொழுக்கமருள்வாய்மை
யின்ப நட்புப் புகழீகை யின்சொல் கல்வி கேள்வி குணம்
வன்பி னூக்கங் கண்ணோட்ட மாட்சி யறிவு செங்கோன்மை
முன்பொப் புரவு சான்றாண்மை முற்றும்பிறக்குமிடமானான்

வலிமை கால மிடனறிந்து வலிய கொடுங்கோன் மன்னர்களை
மெலிய வமர்செய் தோர்கணத்தில் வென்று வாகை மிகச்சூடி
கலிசெய் வீரக் கழற்சரணங் கவின வணிந்தன் னோர்பொருளை
யலையக் கவர்வன் குடிதளர்த்தா லாறிலொன்றும்வாங்காதான்

வேறு

கூறுதிசை யெட்டினுமெய்த் தருமமகிழ்ந் தெழுந்தெழுந்து
குதிகொண் டாடப்
பாறுதலில் விண்ணோரு மண்ணோரும் பல்லாண்டு
பல்லாண் டென்னத்
தேறுநெறி மறையறவோர் செயுமகத்தில்வலஞ்சுழித்துச்
செந்தீ யோங்க
நாறுதொடைப் படையேந்தி யிந்தமா நிலம்புரக்கு
நாளி லோர்நாள் ாகஉ

கலிநிலைத்துறை

நறும லர்க்கொடி நாமக ளண்ணலு பொற் றவி
யறுப டார்வகை நஞ்சமூண் டருளிய பெருமா

னுறி நட்புறுந் தோழன்வா ழொருநக ரென்ன
மறுவி லாதபல் வளமுஞ்சால் மங்கல நகரில். ௱௧௪

## முசீரடியாசிரியவிருத்தம்

ஓங்குபொன் மடந்தை கமலமுங் கணவ
னுரமுநீத் தகன்றிடா துறையத்
தேங்குபல் பாவை பங்கொடு தூங்கத் திசையெலாஞ்
செவிகரங் கவிழ்ப்ப
வீங்குபே ரெழில்செய் சுடர்மணி நால
விளங்குபல் கொடிகள்விண் ணசைபத்
தாங்குபல் படையின் வீரர்க ணிற்பத்
தகுமுர செண்ணில முழங்க ௱௧௫

வாய்ந்தபல் வளஞ்சேர் சுடர்மணி முகப்பு
வானளா வோங்ககன் மணியா
லாய்ந்துசெய் சிலம்புங் கொலுவின் மண்டபமு
மரங்கமுந் தெற்றியுஞ் சால
வேய்ந்தவத் தாணி மண்டப முதலா
விளம்பிய பிறவுநன் கொளிர
வேய்ந்தபொன் வாயிற் பற்பல கவின்செ
யெழுநிலை மல்குகோ யிலின்கண் ௱௧௬

## அறுசீரடியாசிரியவிருத்தம்

நிகரில்செழும் பொற்றரைமேற் சுடர்விடுசெம் பவளக்கா
ணிறுவி யும்பர்
திகழுமர கதப்போதி சேர்த்தவைமேல் வச்சிரவுத்
திரங்கி டத்திப்
பகருநவ மணிபரப்பி யோவியங்கை புனைந்தசெம்பொற்
பலகை மீது
நகவிணக்கி நவமணிச்சா ளரப்பளிங்கின் சுவர்த்தலமு
நன்கு செய்து. ௧௭

பேணிலைமா ளிகைவேதி சூளிகைபன் மணிச்சிகரம்
விழைய வாக்கி
மாணிலைகோ மேதகத்தி னமைகொடுங்கை சூழமுத்து
வடங்க ளூற்றிக்
காணிலைபன் மணியொளிர்பொன் விதானமேல் யாத்தபல
கையினின் றோங்கும்
வாணிலைபொற் சோபானச் சுடர்பரட் புமத்தாணிமண்டபத்தில்

எழுசீரடியாசிரிய விருத்தம்

தூங்குபே ரிருளை யெடுத்துவாய் விழுங்குஞ்
சுடர்விடு செய்மணி குயிற்றி
வீங்குசெம் பொன்னு லழகுறப் புனைந்து
விளங்குசிங் காதன மீது
தாங்குபா துகைமேற் சரணம்வைத் திருபாற்
றக்கவர் மருங்குறச் சென்று
வாங்குவிற் றடக்கை யாரிய ராச
பன்னவர் சிங்கம் வீற்றிருந்து க௰சு

முயங்குமெய் நடுமோய் கறையொடு சூழ
முதிர்சுவைத் தெள்ளமு தொழுக
இயங்குவிண் மதிபார் வந்து நின்றென்ன
வெழின்மணிக் காம்பொடு பச்சை
வயங்குநற் சிகரங் கவினவெண் டரள
மணிவடஞ் சுற்றெலாந் தூங்க
தயங்குவெண் கவிகை திசையெலா நிழற்றித்
தண்ணிய விளநிலா வெறிப்ப கஉ௦

அறுசீரடியாசிரிய விருத்தம்

பூமேவு தாஞ்சுமக்கும் புவிப்பொறையை யொருதோளாற்
பொறுத்து நீக்கு
மாமேவு நன்றியினை மகிழ்சேட னுந்திசையில்
வதிபல் பாப்புங்

கோமேவு தமதுபல்கூட் டினுமெடுத்துச் சொரிந்தமணிக்
குவியல் போலத்
தூமேவு முடிமீது விலைக்கடங்கா மணிமகுடஞ்
சுடர்விட் டோங்க ௱௨௧

திருமுகத்தி லிருவிழியும் பெருங்கருணை மடைதிறந்த
செயல்போன் மின்ன
வொருமதியி னிருபாலு மிருபருதி யுதித்தொளிர்த
லொப்ப நாளுங்
குருமலர்மா துறைவதனத் திருபாலு மணிமகரக்
குழைவில் வீச
நிரைநுதற்புண் டரந்திலக நிலவுறவாய் முறுவலிள
நிலவெ றிப்ப ௱௨௨

தகைமுகமா முழுமதிய மீன்றவொரு குழவிமதி
தவழ்தல் போல
மிகையொளிவெண் முத்தாரந் தவழொருபாற் சிறந்தமறு
விளங்க மேவிப்
புகழுமைநா வலர்பலரு மகலநிற முரமென்று
புகழ்தற் கேற்ப
வகலநிற முரம்வாய்ந்து முல்லைத்தா ரணிமரும
மழகு செய்ய ௱௨௩

கொங்குறுதார்ப் படைசுழற்றிச் சயமாது வாழ்செம்பொற்
கோயி லாகி
மங்குமுறை யிகல்வேந்த ரெவரையும்போ ரிடைவென்று
வாகை சூடித்
தங்குசுடர் மணிவலயம் புனைந்தொன்னார் முகம்வாடத்
தழைந்து செம்பொன்
பொங்குமக மேருவெனப் புடைபரந்து வீங்கியிரு
புயங்க ளோங்க ௱௨௪

பங்கயமா நிதிசங்க நிதியிரண்டும் வள்ளன்மை
பழகு மாறு
தங்கியசீர்க் கமலமொடு சங்கவிலை கையமைந்து
கவின்ற தும்பப்
பொங்குபுகழ்ப் பாவலரும் வறியோரு மிவைபோதும்
போது மென்னச்
செங்கனக முதற்பலவு மெடுத்தெடுத்து வீசியிரு
செங்கை சேப்ப கஉரு

வெயின்மணிப்பூ ணொடுமானை ரிவ்வரச னிலகுதிரு
மெய்ம றைப்ப
வயன்மறைத்த துந்திபொளிர் கௌவுத்துவநன்மணிமறைத்த
தகலங் குல்லை
வயமலிபொற் றோண்மறைத்த வலைபோலவியான்மறையேயன்
மறைக்குங் குற்ற
வியலெனது நடுவெனும்பேர்க் கடாதெனப்பீ தாம்பரத்தை
யிடைசேர்த் தோங்க கஉசு

முந்தமுந்தப் பணிவேந்தர் முடிமகுட மொன்றொடொன்று
மோதி மீது
சிந்துநவ மணித்திரளும் பொற்றுகளும் போர்ப்பமறை
செம்பொற் றாள்க
ளிந்தநிலப் பகைவர்தலைத் தொகையெல்லாஞ் சிதறவுதைத்
தெட்டுத் திக்கி
னந்தவிழுந் துருளவெற்றிச் சயவீரப் பொற்கழல்க
ளணிந்து மல்க கஉஎ

பெருகுபுகை பொறிதும்பி விழுஞ்செந்தீ யெதிரெடுத்துப்
பிறழொன் றார்மெய்
தருமிறைச்சி பூளையலரு மெடுத்தெடுத்து வாய்ப்பெய்துந்
தணியா தோங்குங்

கருதுகடும் பசியின்மிகு நிணம்விழுங்க நாவளைத்துக்
கடைவாய் நக்கி
மருவலர்முன்வரவையெட்டுத்திசையினும்பார்த்துறுசினவேல்
வலப்பா னிற்ப கஉஅ

வணங்காத பணிமகுட மன்னரும்பொன் முடிசாய்த்து
வணங்கி யேத்த
வணங்கார்மே னகையனையாரிருபாலும் பொற்கவரி
யசைத்தல் செய்ய
மணங்கால்பூங் குழலரம்பை போல்வார்வெள் ளடைசுருட்டி
வணங்கி வாழ்த்தப்
பணங்காலு நிதம்பவுருப் பசியன்னார் செம்பொன்மணிப்
படிக மேந்த கஉகூ

செய்யதிலோத் தமையனையார் முன்னடஞ்செய்
தின்னிசைத்தேன் செவிவா யூற்றத்
துய்யசெழும் பனிதிருங் கலவையும் பூ மகள்போல்வார்
துளிப்ப வீச
மையமர்பூம் பொழின்மலர்த்தேன் றுளிசிதற விளந்தென்றல்
வந்து லாவ
வெய்யமலர்த் தொடைச்செழுந்தேன் சொரிந்துமிகு
மணமெங்கும் வீசி நால கங0

அருந்தவமா முனிவர் குழாம் பல்லாண்டு வாழ்கவென
வாசி கூற
வரும்புகழ் நாவலர்கீர்த்தி மலரெடுத்து நால்வகைப்பா
மாலை சூட்ட
விருந்தமா முடிமன்ன னிருகடைக்க ணருளின்வழி
யேவல் செய்ய
பொருந்தியமா கதர்சூதர் பிரதாபச் சீர்த்தியினைப்
புகழ்ந்து நிற்ப கஙக

நுண்ணறிவி னமைச்சர்பலர் குறிப்பின்வழி யெப்பணியு
நொடியிற் செய்ய
விண்ணவர்போல் விழியிமையா வீரர்பலர் சுடர்வடிவாள்
விதிர்த்துச் சூழ
வெண்ணரும்பின் னிசைவீணை முதற்பலயா ழமுதவொலி
யெங்கும் விம்மத்
தண்ணுமைபே ரிகைமுதற்பல் லியங்களுமா மணிமுற்றஞ்
சால வார்ப்ப ௱௯௨

ஆய்ந்தமனு நீதிநெறி தழைத்தோங்க வரசுபுரி
யமையந் தன்னில்
வாய்ந்தகவுத் துவமணியும் விண்மணியுஞ் சிவற்ச
மணியு நாணப்
பாய்ந்ததிரு சுடர்கான்று விலைக்குலகம் பதினான்கும்
பற்று மேன்மை
யேய்ந்தமணி யாரியர்கோன் செம்பொன்முடிச் சிகரமா
யிருந்த தொன்றை ௱௯௩

கலித்துறை

புரந்து செல்வவாட் போக்கிவா ழெம்பிரான் கரந்தான்
கரந்த காரண மென்னையோ தினமுங்கா விரிநீர்
நிரம்ப மூழ்கவோ மணியின்மே லாசையோ நீதி
சுரந்த மன்னவ னன்புபார்க் கறிவிப்பத் துணிந்தோ ௱௯௪

விழைவிற் றன்னையே நம்பிய மெய்யன்ப ரிடத்திற்
பழைய வேடுகோ வணமறை பழைமையாங் கள்வன்
மழைபொ ரூஉங்கொடை மன்னவன் முடிமணி மகுடந்
தழையு மாமணி தனைத்திரு டுதலொரு வியப்போ ௱௯௫

வல்லை பொன்முடிச் சிகரமா மணியின்மை நோக்கி
நல்ல மைச்சர்க ளஞ்சிமெய் நடுங்கிவேந் தன்பா
லொல்லை வந்துகை வாய்புதைத் துயர்முடி சாய்த்து
மெல்ல வேதிருச் செவியிடை விளம்பினர் நின்றார். ௱௯௬

அனைய வாசகங் கேட்டலு மாரிய மன்ன
னினையு நெஞ்சொடு முகம்மலர்ந் திருகையா லெடுத்து
வனைய வோங்கொளி மாமணிச் சிகரமின் மையினாற்
புனையு மாமுடி பொலிவிழந் திருத்தலைக் கண்டான். ௨௩௭

ஆவி நீங்கிய வங்கமு மையமை தோட்சி
தேவி நீங்கிய கமலமுந் திகழ்சுடர் பரப்பும்
பாவை நீங்குகண் மணியுமிப் பருஉமணிச் சிகர
மோவி மேன்மையின் முடியுமொப் பாமென வுரைத்த ௨௩௮

காவ லாளரைக் காவல னழைத்தெதிர் நிறுத்தி
நீவிர் கையில்வாட் படையொடு சூழ்ந்து முன்னின்று
மாவின் மாமுடி மாணிக்கங் கவர்ந்தவ ரியாரென்
றாவிநேருறுங் காவலே யழகென நகைத்தான் ௨௩௯

மன்ன னிம்மொழி வகுத்தலுங் காவலர் வணங்கி
யன்ன போலுவா யார்க்குநீ நின்மணி கவர்வோ
ரிந்நி லத்திலை பிறவுல கினுமிலை யாங்க
ளென்ன வான்பணி யேவினு மியற்றுது மென்றார் ௨௪௦

என்ற காவலர் முகத்தினை யிறையவ னோக்கி
யின்று நம்மரு குற்றவ ரிந்நக ருள்ளார்
துன்று மற்றைய நகருளா ரியாரையுந் தொகுத்து
நன்று நம்மெதிர் கொணர்மினின் னேயென நவின்றான் ௨௪௧

தலைவ னேவிய பணியினைத் தலையின்மேற் றாங்கி
மலைவின் மன்னவ னருகுற்றோர் மங்கல நகரார்
குலைவின் மற்றைய நகரினர் யாரையுங் கொணர்ந்து
நிலைவில் லேந்திய காவலர் நிருபன்முன் விடுத்தார். ௨௪௨

விடுத்த யாரையும் வேந்தெதிர்பொ துப்பட நோக்கி
படுத்த காதலி னென்முடி மாமணிச் சிகர
மெடுத்து ளோரளித் தாலவர்க் கெண்ணிலாக் கனகங்
கொடுப்பன் வேண்டுவ யாவையுங் கூறினு மளிப்பேன் ௨௪௩

### எழுசீரடியாசிரிய விருத்தம்

வெருவுறத் தண்டஞ் சிறிதுநான் செய்யேன்
மெய்மை யீதென்றன னியாரு
மிருசரண் வணங்கி நின்பொருள் கவரு
மெண்ணமும் வருங்கொலோ வெமக்குப்
பெருகிய தலையா லெங்களுக் கெல்லாம்
பெற்றதாய் போன்றனை யன்றோ
கருணையங் கடலே நின்முடி மணியைக்
கவர்ந்திலேங் கவர்ந்திலே மென்றார் ௱௪௪

வந்தவர் டலரு மிவ்வகை மொழிய
மன்னவ னதற்குடன் பட்டு
நுந்தம திடத்திற் செல்லுமென் றவரை
நொடியினி லனுப்பி மெய்யன்பு
நந்திய வமைச்சர் பலரையு நோக்கி
நண்ணரு நுண்ணறி வுடையீர்
கந்தமார் மலர்த்தார் முடியின் மாணிக்கங்
கணத்தினிற் போயவா றென்னே
முந்திய துணிவிற் கவர்ந்தவ ரியாவர்
மொழிந்திடு முண்மைதேர்ந் தென்றான் ௱௪௫

ஐயநின் சபையி லியாவரு முறைந்தா
ரியாங்களு நின்னரு கமர்ந்தோம்
வெய்யவா ளேந்தி வீரர்க ணின்பொன்
மேனிகாப் பாளராய் நின்றார்
மையுறு மனத்துக் கள்வர்கள் வந்து
மறைந்திடுஞ் சமயமு மில்லை
துய்ய மாணிக்கந் தொலைந்த வாறென்னோ
சூழ்ச்சியாற் றெளிந்திலே மென்றார். ௱௪௬

அமைச்சரிவ்வாறு மொழிந்திடக் கேட்ட
வாரிய மன்னவ னவரை

யிமைப்பிலா விழிதீச் சொரிந்திட நோக்கி
யெரியுயிர்த் திருகையுங் கொட்டி
நுமைப்பொரு வமைச்ச ரிலையென நகைத்து
நுவல்சின வடவைத்தீ பொங்கச்
சமைப்பரு முங்கண் மாளிகைக் கின்னே
சாருதிர் சாருதி ரென்றான். ௩௪௭

ஆங்கவர் வேந்தன் சினமுறுஞ் சமய
மியாநிற்றல் பிழையென வகன்று
ரோங்கிய மன்ன னவரையும் போக்கி
யொருதனி வேற்றறை புகுந்து
வீங்கிய கதவ மடைத்துத் தாழ் கொழுவி
மென்மலர் மெத்தையிற் றோய்ந்த
தேங்குபொன் மேனி புழுதியிற் றோயச்
செழுந்தரை விழுந்தெங்கும் புரண்டு. ௩௪௮

எண்ணிலா வேள்வி புரிந்தெணுன் கறமு
மியற்றியும் மாநிலத் தவரைக்
கண்ணினை யிமைகாக் கின்றவா றென்னக்
கருணைபாற் புரந்து மாமனுப்போ
னண்ணிய செங்கோ லெங்கணுஞ் செலுத்தி
நன்கர சளித்தவர் தம்மு
ளண்ணிய வென்போ லிப்பெரும் பபனை
யாவர்தாம் பெற்றன ரந்தோ ௩௪௯

சிகரமின் மகுட நாளைநான் சிரமேற்
சேர்த்திடு வியாவர்தாஞ் சிரியார்
நகையுறு பஃது புதிதொன்று செய்ப
நன்றுமுன் கிடைத்த மாமணிபோற்
றகையுறு மணிமு வுலகினு மிலையே
தக்கபொன் முடியெனுற் சிதைந்த

பகைவரிச் செய்தி கேட்டுமுன் னகைத்தாற்
பாவியே னுயிர்தரிப் பேனோ ௩௫0
படைபல விருந்து மரண்பல விழுந்தும்
பற்பல வமைச்சர்க ளிருந்துங்
குடிபல விருந்தும் பொருள்பல விருந்துங்
குறைவில்பல் லுறவின ரிருந்துந்
தடையற நேமி திசையெலாஞ் சென்றுந்
தண்ணிழல் வெண்குடை புரிந்து
மிடைவிடா தோங்கு முடிமணி யிழந்தேற்
கென்பய னென்பய னந்தோ ௩௫௧
திருடரா லெனக்கு வருமிடை யூற்றைச்
சிதைப்பநான் வலியிலே னென்றுன்
மருவிய வெனையே துணையென நம்பி
வாழுமா நிலத்தவ ரெல்லாம்
பெருகுமற் றவராற் சாரும் விக்கினத்தைப்
பேதையே னகற்றலெவ்வாறு
தருமமாங் கடவுட் கொருசிறி தேனுந்
தண்ணளி யில்லையென் செய்வேன் ௩௫௨

அறுசீரடியாசிரிய விருத்தம்

ஈசனே பெருங்கருணைக் கடலேசிந் தாமணியே
யெந்தா யன்பர்
நேசனே யிமையவர்தங் குலக்கொழுந்தே தெள்ளமுதே
நிமலவாழ்வே
நாசிநீங் கியமுகமும் விரலிழந்த பாணியும்வெண்
ணகையில் வாயு
மாசின்மணிச் சிகரமிலா முடியுமொப்பா மிக்குறையை
மாற்று வாயே ௩௫௩
தனக்குநிகர் செழுஞ்சுடரே தந்தையுமா யெவ்வுயிர்க்குந்
தாயுமான
வுனக்குவழி வழியடிமை யாய்ச்சைவ சமயத்தி
லுதித் தேனீறு

மெனக்கினிய கண்மணியு மணிவேணின் மெய்யடியா
ரேவல் செய்வேன்
மனக்கினிய நின்னுமைமஞ் செழுந்துமொழி வேணியான்
வருந்த லாமோ ௱௫௪

மறந்துநினை யல்லாது வேறுபல சிறுதெய்வம்
வணங்கே னன்பிற்
சிறந்தநின தடியவர்பா லல்லாதிங் கெவர்பாலுஞ்
சேரேனின்று
ணிறைந்தபுகழ்ப் பிரதாப மல்லாது வேறொன்று
நிகழ்த்தேன் மெய்மை
துறந்தபல பரசமயக் குழிவீழ்ந்தோ ரடைதுயர்யான்
சுமக்க லாமோ ௱௫௫

தாயனைய பெருங்கருணைக் கடலேசிந் தாமணியே
தருவே யிந்த
நாயனையேன் றனையுமொரு பொருட்படுத்தியரசாள்கை
நன்கு தந்தாய்
பேயனையேன் செம்பொன்முடிச் சிகரமிழந் திருகண்ணீர்
பெருகி யோடப்
பாயதரை வீழ்ந்தழுதா லஞ்சலெழுந் திருவென்னுப்
பான்மை யென்னே ௱௫௬

ஆலமெழ நடுங்கியழு தலறிவிழி நீர்சொரிய
வையா வோல
மோலநினக் கெனச்சரண்மேன் மாலயனு மும்பர்களு
மோடி வீழச்
சாலவவர் கண்ணீரைத் துடைத்தஞ்சீ ரென்றபயந்
தந்து காரின்
கோலவிட நுகர்ந்தபெருங் கருணையிலோர் சிறிதளித்தாற்
குறைவ தென்னே ௱௫௭

அடியேனு மடியேன்றன் குடிமுழுது நினக்குவழி
யடிமை யென்று
படியேழு மறியுநின தஞ்செழுத்துங் கண்மணியும்
பரவு நீறு
மடியாமெய்ப் பொருளாக்கொண் டேவகைமறை நெறிபுரக்கும்
வகையாற் றோரார்
நடியாமன் றுறைவாவென் றுயர்கேட்டோர் நின்னையன்றோ
நகைப்பா ரையா ௱௭௮

அறுசீரடியாசிரிய விருத்தம்

இன்புறுநின் னடியார்கூட் டத்தொருவர் முதலைபுண்சே
யிளையுந் தந்தார்
வன்புறுநீ முடிச்சிகர மறைத்தவர்பாற் கவர்ந்தெனக்கு
வழங்கென் றேன்மெய்
யன்பர்களுக் கெளியே னியா னவர்வலிமை யெனக்கிலையென்
றறைவா யாலுற்
றுன்புறுமென் னுயிலையா னினிச்சுமக்கே னிப்போதே
துறப்பே னையா ௱௭௯

புரம்பொடித்த நகையாவோ கூற்றுதைத்த தாளாவோ
பூவின் மேலோன்
சிரந்தடிந்த நகையாவோ மதனெரித்த கண்ணோவோ
செழியன் மேனிச்
சுரந்தணித்த நீற்றோவோ நஞ்சடக்கு மிடற்றோவோ
தூய கங்கை
கரந்தடக்குஞ் சடையாவோ வென்செய்வே னென்செய்வேன்,
கடையே னையா ௱௮0

நின்னடியார் நினைக்குமுனம் வந்தவர்பா லிடையூற்றை
நீக்கு கின்றோ
யுன்னடியேன் மகுடபங்க மடைந்துபரி பவமேவி
யொழுகக் கண்ணீர்

தன்னமுற மெய்வேர்த்து நெடுநேர நின்றழுது
தவிக்க லாமோ
வென்னமுதே யென்னமுதே யென்றழைத்தால் வாராத
தென்னே யையா ௱௫௯

என்றினைய பலவுமொழிந் தீசனுக்கென் னரசாட்சி
யாவர் செய்ய
நன்றுதிரு வுளப்பாங்கோ வவரேசெய் திடுகவினி
நான்செய் யேன்காண்
சென்றுதவம் புரிவேனென் றொருவாறு மனக்கவலை
தீர்ந்தெ தூந்தே
யன்றினருக் கேறனையான் பொற்கதவந் திறக்கமுய
லமையந் தன்னில் ௱௬௰

கனவினுமா லயன்காணா வாட்போக்கி யமர்ந்தபெரும்
கருணை வாரி
நனவினிடைத் திருவுள்ள மிரங்கியொரு நரைதிரைகூ
னண்ணி மூத்த
பனவரெனக் கோலூன்றி வந்துநின்று ரவரை மன்னன்
பார்த்துப் பேசா
தினையவரியார் காப்பறையில் வந்ததெவ னென்று பயந்
தெதிரே நின்றான் ௱௬௧

எஞ்சலிலா மணிக்கதவந் திறவாம லஞ்சிநின்ற
விறையை நோக்கி
யஞ்சலஞ்சல் மன்னவகா விரிநாட்டில் வாட்போக்கி
யமலன் றன்பால்
பஞ்சுதிகழ் நினதுமுடிச் சிகரமிருந் திடக்கண்டேன்
வாய்மை யீது
தஞ்சமவ னிடநீபோ வஃதொன்றே வேண்டுவன
தருவா னென்று ௱௬௨
மறைதனுமா ரியராச னெனையாளத் தெய்வசிகா
மணியே வந்தான்

குறையினியா வுளவெனக்கென்றெழுந்தெழுந்து குதித்தாடிக் குப்புற்றேபூ
நிறையுளத்தி னடங்காத பெருமகிழ்ச்சி மலர்முகத்தி னிறைந்து தோன்ற
விறையொடுதன் முன்னனாகா வமைச்சர்பல ரையுமழைத்து விருப்பி னோக்கி ௨௬௫

எம்பெருமானெளியேன்பால்வைத்தபெருங்கருணை யென்னே யென்னே யென்று
நம்பெருமான் மறைமொழிந்த கனிவாயா லுரைத்தவெலா நன்கு சாற்றத்
தம்பெருமா னோரணாக வையா நீ முன்பென்ன தவஞ்செய் தாயோ
வும்பர்பிரான் றிருவருளே திருவருளென் றமைச்சர்வியந் துவந்துநின்றார். ௨௬௬

நின்றவர்யான் மன்னர்பிரான் மாமறையு மாலயனு நேடிக் காணா
நன்றருமைத் திருவடிக ளேயனுங் கண்குளிர நன்கு காணப்
பொன்றயங்கு சடைப்பெருமான் வந்தருளிப் புகன்றபடி பொன்னித் தீர்த்தஞ்
சென்றுவளம் பொலிநாட்டில் வாட்போக்கி நகர்க்கின்னே செல்வே னென்று. ௨௬௭

விரைந்துபரி பூட்டுதடப் பொற்றேரின் மீதேறி வீற்றிருந்து
புரிந்ததன இளவரசா கியசெல்வப் புதல்வனுமோர் பொற்றேர் மேவ
விரைந்துநாற் சேனைகளுஞ் சேனைகா வலர்களுஞ்சுற் றெங்கு மொய்ப்ப
நிரைந்துபல பல்லியமு முழங்கிடச்சா மரைகுடைக ணெருங்கி மின்ன. ௨௬௮

மந்திரிக ளுறவினர்க ளியாவர்களும் பலசெழுந்தேர்
வதிந்து சூழ
வெந்திறல்வாழ் கதைநேமி சூலமழு சிலைபரிசை
வேன்முன் னாகச்
சந்தமுறு படைபலவுந் தாங்கிவிழுத் தழல்சொரியத்
தகுபற் சிங்கம்
வந்தபரி சேய்ப்பவெண்ணில் வீரர்குழாம் வந்துபுடை
வளைந்து மொய்ப்ப. ௩௬௬

கலிவிருத்தம் — கலிநிலைத்துறை

வளமை யோங்கிய மங்கல நகரினை நீங்கி
யளவி லாதசீ ராரிய நாட்டினை யகன்று
பளகி லாதபன் மன்னர்க ளெதிர்கொடு பணிய
வுளம கிழ்ச்சியாற் பற்பல நாடுக ளொருவி, ௩௭௦

வான ளாவிய மலைகளு நதிகளுங் கடந்தே
யூன ளாவிய வாய்விலங் குறைவழி வருங்காற்
றேன ளாவியுண் வண்டுகள் செழுமுகை விரிப்பக்
கான ளாவிய கானமொன் றெதிருறக் கண்டான் ௩௭௧

காம வேளினுக் கம்புநாண் கரிபரி யிரதந்
தாம மார்சிலை காகளஞ் சத்திரம் படிகம்
வாம மாரும்வெண் சாமரம் வைகுதற் கிடமாய்ச்
சேம மார்பல தருக்களுஞ் செழித்தவக் கானில் ௩௭௨

வாய்ந்த கோட்டுமா நீழலிற் கோட்டுமா வதிவ
வாய்ந்த வேங்கையி னீழலின் வேங்கைக ளமர்வ
வேய்ந்த வத்தியி னீழலி னத்திக ளிருப்ப
தோய்ந்த நாகநன் னீழலி னாகங்க டுயில்வ ௩௭௩

வளரும் வன்னிமேல் வன்னியும் வானின்மேற் சென்று
தளர்வி லாதுமொய் யெகினமேலெகினமுந் தளர்கா

யளவு சூதமேற் சூதமு மளவிலா விலைப்பூக்
கிளரு நாகமே னாகமுங் கிளர்வன வெங்கும் ௱௭௪

திருவி னுக்களின் பாலெலா மாக்களுஞ் செழிப்புற்
றொருவில் சேக்களின் பாலெலாஞ் சேக்களு மோங்கு
மெருமை மேவிய பாலெலா மெருமையு மெங்கும்
பெருகு சம்புவின் பாலெலாஞ் சம்புவும் பிறங்கும் ௱௭௫

ஆனை யானும்பூம் பூவையைப் பூவையு மணையக்
காணி டந்தொறு மளவிலா நகையவர் கலப்ப
ஆனை யானும்பூம் பூவையைப் பூவையு மணையக்
காணி டந்தொறு நகையவர் கலப்பது முறையே ௱௭௬

ஆனும் பூவையு மிடைவிடா தணைந்திடு மிடத்திற்
பேண வேபல கான்முளை பிறப்பன பிரிவி
லானும் பூவையு மிடைவிடா தணைந்திடு மிடத்திற்
பேண வேபல கான்முளை பிறப்பது வியப்போ ௱௭௭

சம்பு வின்றொரு பாற்சிவை தயங்குறுஞ் சாற்றிற்
சம்பு வின்றொரு பாற்சிவை தயங்குத லியல்பே
சம்பு வின்முனஞ் சேவொன்று தங்குறுந் தகைய
சம்பு வின்முனஞ் சேவொன்று தங்குவ முறையே. ௱௭௮

பாலை மேவிய பாலெலாம் வெண்ணெயே பல்கும்
பாலை மேவிய பால்வெண்ணெய் பல்குதல் வியப்போ
வாலம் வாரியி லெழுந்துமேல் வானினை யடரு
மாலம் வாரியி லெழுந்துவா னடர்தலும் பெரிதோ. ௱௭௯

எழுசீரடியாசிரிய விருத்தம்

நாகம் வேங்கையின் முன்மன்ற நற்சம்பு
நண்ணிநின் றூடுறுஞ் சாற்றி
னாகம் வேங்கையின் முன்மன்ற நற்சம்பு
நண்ணிநின் றூடுத லருளே

நாகம் வேங்கையின் முன்கம்ப லைபச்ச
நண்ணினர் பெற்றிட மேவு
நாகம் வேங்கையின் முன்கம்ப லையச்ச
நண்ணினர் பெற்றிடல் வியப்போ. ௱௮௰

கலிநிலைத்துறை

மந்த மாருத மெல்லவே வந்துவந் துலாவ
நந்த வாமலர் தேன்சிந்தி நறுமணம் வீச
வந்த மார்பல கிள்ளையுங் குயில்களு மளியும்
வந்த பற்பலர் மனத்தையு மிசையினு லுருக்கும். ௱௮௧

இனிய தாமரை முகமலர்ந் தெய்தினர்க் கெல்லாம்
புனித வாவிதெள் ளமுதமிக் களிப்பன பொருவிற்
கனியுங் காய்களு நுகர்ந்திடக் கனிவொடு வழங்கி
நனிது யின்றிடத் தருவெலா நன்னிழ லளிப்ப. ௱௮௨

நயமி குந்தவிக் கானிலா ரியர்பிரா னண்ணி
யயர்வு யிர்த்துநாற் சேனையு மார்த்திட வெழுந்து
துயர கற்றுசீர்த் தொண்டைநா டண்மியாங் குள்ள
பயன்செய் காஞ்சியே முதற்பல தலங்களும் பணிந்து. ௱௮௩

புலவர் போற்றுசீர்ப் பெண்ணைநன் னாட்டினிற் பொருந்தி
யலகில் சீர்த்திரு வெண்ணெய்நல் லூர்முத லாய
தலமெ லாந்தொழு தன்பினர் சான்றவாட் போக்கி
யிலகு மெம்பிரான் றிருவரு டென்றிசை யிர்ப்ப ௱௮௪

படியு ளோர்செய்த பாக்கியப் பயனெனும் பொன்னி
நெடிய பல்வளஞ் சுரந்தரு ணேரிய னாட்டிற்
கடிது வந்துநான் மறையவர் கவின்மகம் புரியு
மடிவில் சீர்த்தில்லை நகரினின் மகிழ்வொடுஞ் சார்ந்தான். ௱௮௫

சார்ந்த மன்னவன் தாங்குபொற் கோபுர மிறைஞ்சி
யார்ந்த காதலி னுட்புகுந் தணிகொள்சிற் சபையை

நேர்ந்த வன்பொடு வலஞ்செய்து நெடியனுங் குறுகாக்
கூர்ந்த பேரருட் கோதிலா வமுதினைக் குறுகி. ௱௮௬

விழியி லானந்த வருவிநீர் சொரிந்திட வேர்வை
வழிய மெய்யெலா மலர்க்கரஞ் சென்னிமேற் கூப்பி
யழிவி லன்பினு லடியற்ற மரமென வீழ்ந்து
தொழுது பன்முறை யெழுந்துநேர் துயரற நின்று. ௱௮௭

அன்னை போலுநின் னற்புதத் திருநடங் காண
என்ன பாக்கியஞ் செய்தன னடியனே னெந்தாய்
கன்ன லேயமு தேயுயர் கருணையங் கடலே
யின்ன மாலய னெய்தரு மரியசெம் மணியே. ௱௮௮

ஐய னேநின தருமையாந் திருமுகத் தழகுஞ்
செய்ய வாயிள முறுவலி னழகும்பொற் சிலம்பின்
றுய்ய குஞ்சித பாதத்தி னழகுநேர் தொழுது
நைய னேன்கணிற் கண்டன னிதுதவப் பயனே ௱௮௯

என்று தோத்திரம் பன்முறை யியம்பி நின்றுடி
யொன்று மானந்த வெள்ளத்து மூழ்கிமுன் னும்பர்
சென்று ஞுதபொன் னம்பலத் தாடுந்தெள் ளமுதை
நன்று கண்டபின் பிரியவாற் றுமையா னமர்ந்து ௱௯௰

இடைவி டாதுமுன் னேக்கியே சென்றெதி ரிறைஞ்சி
விடைபெற் றுள்ளந்தன் னுடும்வரா தன்பர்பால் வேட்கை
யுடைய நாயகன் குஞ்சித வடிமல ருன்னிப்
புடைய கன்றசிற் றம்பலத் தின்புறம் போந்து ௱௯௧

செய்யபூம் பொழிற் சிதம்பரத் தலத்தினை நீங்கித்
துய்ய சீர்க்கழு மலப்பரஞ் சுடரினைத் தொழுது
வெய்ய புன்பிற விப்பிணி யொழித்தருள் வேளூர்
வையம் வாழ்த்துறு வயித்திய நாதனை வணங்கி. ௱௯௨

அங்க மாருமா யூரத்தி லரனடி பரவித்
துங்க மார்திருத் துருத்தியிற் பரனடி தொழுது

தங்கு சீர்நமச் சிவாயசற் குருமணி சார்ந்த
எங்க ளாவடு துறையம ரீசனை யிறைஞ்சி ௱௯௩

திருவ நீடரு மப்புரத் தீசனைச் சேவிக்
தருகு சீரிடை மருதம ரான்றனைப் பணிந்து
மருவு சீர்க்குடந் தையிற்கும்ப நாதனை வாழ்த்திப்
பருகு மன்பினை யாற்றுறை பரமனை யேத்தி ௱௯௪

ஆயுஞ் சம்புகேச் சுரத்துறை யமலனைப் பழிச்சிப்
பாயுஞ் செம்பொற்சோ பானநீள் சிரகிரி மீது
தாயு மானவன் றாளினைப்பன்முறை தாழ்ந்து
மேவுஞ் சீர்த்திப்ப ராய்த்துறை விமலனை வழுத்தி ௱௯௫

பலவ ளப்பமு மிகுகடம் பந்துறை சார்ந்து
புலவர் போற்றுசீர்க் கடம்பலிங் கேசனைப் போற்றி
யிலகு மப்பிரான் பொற்றளிக் கெதிருறச் சென்று
குலவு காவிரித் தீர்த்தமெய் குளிர்ந்திட மூழ்கி ௱௯௬

பிரிய மோடுயர் தென்றிசை நோக்கலும் பெருகு
நரியெ லாம்பரி யாக்குசித் துடையநம் பெருமா
னருளி னுற்புக ழமைந்தவாட் போக்கி மாமலைச்சீர்
விரியு மாணிக்க மாகத்தன் விழியெதிர் தோன்ற ௱௯௭

கண்ட போதிஃ தற்புத மற்புதங் கருதி
தண்டர் நாயக னடியேனேன் பால்வைத்த வருளை
யெண்ட ருங்குறை யென்னையெற் கிங்கென மகிழ்ந்து
கொண்ட வன்பினு லிருகையுஞ் சென்னிமேற் குவித்து ௱௯௮

எந்தை யார்மகிழ்ந் திருக்குமா மலைக்கணித் தாக
வந்த பான்மையா லினிப்பொற்றேர் வதிந்துசெல் கேனென்
றந்த மார்படை சூழ்ந்திட நடந்துசென் றன்பான்
மந்த மாருத மாணிக்க மலையரு குற்றான் ௱௯௯

அனைய வாரிய மன்னவ னங்குற்ற போது
நினையு மவ்வரை யடியினி னிலவி விண்ணோங்க

வினையு மாயிரக் கான்மண்ட பத்திடை வதிந்து
புனையு மத்தலப் புராணநூற் கலைவலோர் புகல்வார் ௨00

முத்தி வேண்டினு மளிப்பது மொழியிரு நான்கு
சித்தி வேண்டினுந் தருவது சிவபிரான் மலர்த்தாட்
பத்தி வேண்டினு மீவது பகர்குசை நூனிநேர்
புத்தி வேண்டினுங் கொடுப்பதிப் புண்ணியத் தலமே ௨0௧

மாயன் வாழ்பதம் வேண்டினு மலர்மிசை யிருக்குந்
தூயன் வாழ்பதம் வேண்டினுஞ் சொல்லுமா யிரங்கட்.
காயன் வாழ்பதம் வேண்டினுங் கடுவமு தாக்கொ
ணாயன் வாழ்பதம் வேண்டினு நல்குமித் தலமே ௨0௨

மிக்க வாயுளுஞ் செல்வமுங் கல்வியும் வீறு
தக்க மக்களு மனைவியுஞ் சரீரமா பலமுந்
தொக்க தெவ்வரை வெற்றிகொண் மேன்மையுந் துணிவும்
புக்க வன்பினர்க் களிப்பதிப் புண்ணியத் தலமே ௨0௩

அன்னம் வேண்டினு மணிகலன் வேண்டினு மளவில்
சொன்னம் வேண்டினும் பற்பல நவமணித் தொகுதி
மன்ன வேண்டினு மாடைகள் வேண்டினும் வயங்கு
மென்ன வேண்டினு மியாவர்க்கு மளிக்குமித் தலமே ௨0௪

வாயு வும்பணிக் கிறைவனும் வானவர்க் கிறையு
மாயும் பானுவு மகத்திய முனிவனு மன்பு
தோயு ரோமச முனிவனுந் தூர்க்கையு மாவப்
பாயி னோனும்பல் லமரரும் பங்கயத் தவனும் ௨0௫

பரத்து வாசமா முனிமுதற் பலமுனி வருமு
முரத்தின் மாநிலத் தவரும்பா தலத்துறை வோருந்
தரத்தி னேனைய பலருமித் தலத்தெம் பிரான்பால்
வரத்தின் வேண்டிய வரமெலாம் பெற்றுவாழ்ந் தனரால் ௨0௬

எழுசீரடியாசிரியவிருத்தம்

வாயுதீர்த் தஞ்சீர்ச் சேடனற் றீர்த்தம்
வளமுறு மிந்திர தீர்த்த

டாயுமின் சுவையின் சூரிய தீர்த்த
மகத்திய தீர்த்தமெய் யின்பிற்
ரேயுசோ மசதீர்த் தந்துர்க்கை தீர்த்தந்
தூய்மைசேர் வராகமெய்த் தீர்த்த
மேயுநற் பரத்து வாசதீர்த் தம்முன்
னெண்ணிலாத் தீர்த்தமிங் குளவால் உ0௯

இனையபற் பலவாந் தீர்த்தத்திற் படிந்தோ
ரியாவருஞ் செல்வரா யுலகிற்
றனியர சாளும் வேந்தராய் விண்மேற்
றயங்குறு தேவர்க ளாகி
வனைதரு நீழ லிந்திர ராகி
மலர்மிசைப் பிரமர்க ளாகிப்
புனைதுழாய் வேய்ந்த கேசவ ராகிப்
பொருவில்சீ ருருத்திர ராவார் உ0அ

பெருகுமித் தீர்த்த மாடினோர் மெய்யிற்
பிணியொடு பிறவிவெம் பிணியு
மொருவிநல் லழகு ஞானமும் புகழு
மோங்குமா யுளுஞ்செல்வப் பெருக்கு
மருவிய கற்பின் மனைவியுஞ் சிறந்த
மக்களுஞ் சுற்றமும் பெற்றுக்
கருதிய வெல்லா மடைந்துநம் பெருமான்
கழலிணை நீழல்சேர்ந் திடுவார் உ0க

கலிநிலைத்துறை

அடுஞ்சி லைக்கரத் தரியய னிந்திர னமரர்
விடும்ப னிக்கதிர் வெங்கதிர் மணிசர்புள் விலங்கு
நடுங்கி மாய்ந்திட வேழிரண் டுலகமு நலிவுற்
றொடுங்கு மூழியுஞ் சிறப்பொடு மோங்குமித் தலமே உக0

கொச்சகம்

நிலைமருவத் துதிப்போர்க்குநினைப் போர்க்குங்கா ண்போர்க்குந்
தலையளியால் வேண்டுவன தந்தருளும் வாட்போக்கி

மலைமுழுதுஞ் சிவபெருமான் வடிவமெனி லதன்பெருமை
யலைகடல்சூழ் புவியினிடை யாவர்தாஞ் சொலவல்லார் ௨௧௧

என்றுபுரா ணம்புகல்வோ ரிசைத்தமொழி செவிபுகலுங்
குன்றுநிகர் பெருங்கருணைக் கோமான்வீற் றிருந்தருளு
நன்றுபல தலங்களினு நனிசிறந்த தித்தலமே
யின்றுநா னிங்கெய்த வென்னதவஞ் செய்தேனோ ௨௧௨

மருவுமிந்த வரைமுழுது மாதேவன் வடிவமிதி
லருவினையேன் மிதித்தேற லாகாதென் றகங்கலங்கி
நிருபர்தொழு முடிவேந்த னிற்பமணி மலைமீது
வருகவென மும்மைமுறை யாகாய வாக்கெழலும் ௨௧௩

கடிகமழ்தா ரோனிதுவுங் கண்ணுதலோ னருளேயென்
றடிமலர்பொற் படியேற வங்கைமலர் முடியேற
நெடியதுதி வாயேற நெஞ்சினிடை மகிழ்வேற
மடிவின்முன்செய் தவமேற மணிவரைமே லேறினான் ௨௧௪

ஏறியபோ தெம்பெருமா னினிதமர்செய் பொற்கோவில்
வீறின்மணிக் கோபுரந்தன் விழியெதிரே தோன்றிடலு
மாறில்பெரு மகிழ்ச்சியொடு வணங்கிப்போ யுட்புகுந்து
பாறில்பெரு நசைதாண்டப் பற்பலகால் வலஞ்சூழ்ந்து ௨௧௫

முடிவற்ற பெருங்கருணை மூர்த்தியார் சன்னிதியிற்
கடிதுற்று மெய்முழுதுங் கண்ணீர்வெள் ளம்பெருக
வடியற்ற மரமென்ன வவனிமிசை விழுந்துவிழுந்
தொடிவற்ற பேரன்பா லுவந்துபல முறைவணங்கி ௨௧௬

திருமலர்ச்செங் கையிரண்டுஞ் சென்னியின்மேற் குவித்
தெழுந்து
பெருகுமுரை வாய்குழறப் பிறங்குமுரோ மஞ்சிலிர்ப்பக்
கருதுமுளங் கசிந்துருகக் கணக்கில்பர வசமாகி
மருவியரி யயன்காணா மாணிக்க மலைக்கொழுந்தை ௨௧௭

பெய்யாநின் மெய்யடியார் விரும்பியுணுந் தெள்ளமுதே
செய்யாசிந் தாமணியே தேவர்குலக் கொழுந்தே
மையார்பூம் பொழில்சூழ வளம்பெருகும் வாட்போக்கி
யையாநின் றனையல்லா லடியேனுக் கார்துணையே உகஅ

முன்னேகோ னூன்றியொரு மூத்தமறை யவனாகி
யென்னேர்வந் தெனையிங்கு வருவித்த வென்னமுதே
மன்னேமா மருமணியே மறைதுதிக்கும் வாட்போக்கி
யன்னேநின் றனையல்லா லடியேனுக் கார்துணையே உகசு

கண்ணேயென் கண்மணியே கருணைப் பெருங்கடலே
தண்ணேர்தண் மதிசூடுஞ் சம்புவே சங்கரனே
யெண்ணார் புரமெரித்த வெந்தையே வாட்போக்கி
யண்ணாநின் றனையல்லா லடியேனுக் கார்துணையே உஉ0

வித்தகவெண் ணீறணிய மெய்யன்பர்க் கேவல்செய
வுத்தமவைந் தெழுத்தோத வொளிசெயுங்கண் மணிபூணப்
பித்தனேற் கறிவளித்த பெருமானே வாட்போக்கி
யத்தனேநின் றனையல்லா லடியேனுக் கார்துணையே. உஉக

வண்டார் குழலொடுநீ மருவு மணக்கோலங்
கண்டார்வ முறத்தொழுது கன்னைபெற்ற பேறுபெற்றேன்
றண்டாது தென்றன்மெல்லச் சார்ந்துலவும் வாட்போக்கி
யண்டாநின் றனையல்லா லடியேனுக் கார்துணையே. உஉஉ

அறுசீரடியாசிரிய விருத்தம்

என்றுமுன் றுதித்து நின்ற விறைவனைத் தேவ தேவன்
வென்றுறு மாதி சைவ வேதிய னாகி யன்பாற்
சென்றுமா லயனுங் காணாச் சிவலிங்கப் பெருமான் பாங்கர்
நின்றுபொன் முகம லர்ந்து நிறையருட் கண்ணா னோக்கி

எழுசீரடியாசிரிய விருத்தம்

நினதுபேர் யாது நின்பதி யாது
நீயிவ ணெவன்பெற வந்தா
யெனவின வுதலு மன்னவ னுரைப்பா

னென்பெய் ராரிய ராசன்
வ்வனமுறு மெனதா ராரிய நாட்டின்
மங்கல மென்முடி மணிவிக்
கினமுற மறைந்த திங்குமே வியசீர்
கேள்வியுற் றதுபெற வடைந்தேன் உஉச

என்னலு நுதற்கண் மறைத்தவே தியர்கோ
னெம்பிரான் கனவிலென் பால்வந்
தன்னமார் கழனி யாரிய நாட்டை
யாளுமோர் மன்னவன் வருவான்
பின்னமி லவனை நிரப்பநா மூழ்கப்
பெருகிய பொன்னிநீர் கொணர்ந்து
கொன்னவிர் நம்பா லிருக்கும்வான் செம்பொற்
கொப்பரை நிறைத்திடச் செய்து உஉரு

பின்னர்நங் கலன்கள் வைத்தகாப் பறையிற்
பிறங்குமோர் மணிச்சிகரத்தை
யன்னவன் றனக்கு வழங்கென மறைந்தா
ரரசநின் சொண்மையியா தென்றனு
மென்னையா ளுடைய கருணையங் கடலுக்
கேழையே னிப்பணி புரிய
முன்னைநான் செய்த தவமென்று நம்மான்
மொழிந்தவா றியற்றுவே னென்று உஉசா

ஆரியப் பெருமா னுயிரங் குடநீ
ரமுதமோர் பொன்னியிற் கொணர்ந்து
பேரியன் மணிப்பொற் கொப்பரை நிறையச்
செய்தலுஞ் சிவபிரா னருளாற்
பாரிய லந்நீர் புறங்கசிந் தோடும்
பான்மையாற் குறைந்திட முடியி
னீரினை மறைத்த வேதியன் பொன்னி
நீரினுங் கொணர்கென வேவ உஉஎ

பின்னுமவ் வேந்தன் பற்பல தசும்பிற்
பெருகுகா விரிப்புனல் கொணர்ந்து
மின்னும்வான் செம்பொற் கொப்பரை நிறைய
விடவுமுன் போற்குறைந் திடல்கண்
டுன்னுமிப் பெரிய பாத்திரம் பொள்ளை
யுற்றதென் றறிந்துநீ யதனுட்
பன்னுகா விரிநீர் கொண்டுவந் தூற்றப்
பகர்ந்தது நீதியோ வென்றான் ௨௨௮

மன்னனே யின்னுஞ் சிலகுட நீரால்
வருத்தநோக் காதுபோய் பொன்னி
நன்னதி யின்பா லெடுத்துவந் தினைய
நலமுறு பாத்திர நிறைத்தி
யன்னநீ ரோமுகி முன்புபோற் குறைந்தி
டாதென மறைபவ னிசைப்பப்
பின்னரும் வேந்தன் பொன்னிநீர் கொணர்ந்து
பிறங்குபொற் கொப்பரை நிறைத்தான் ௨௨௯

பின்புநீர் சிறிது குறைந்திட முன்றும்
பிறைமுடி கரந்தநான் மறையோன்
வன்புறும் வேந்தே சிறிதுநீர் குறைந்த
வகையினா லந்தநீ கொணர்ந்து
பொன்புனைந் தொளிரு மினைய பாத்திரத்திற்
பொலிவுற நிரப்பினா லன்றி
யன்புற நினக்குத் தூயமா மணியை
யளித்திடே னளித்திடே னென்றான் ௨௩௦

கண்ணினை யிடப்பக் கழுத்தினை யரியத்
லுகையினை யன்பர்கற் றேய்ப்ப
வெண்ணிய சேயை யறுத்திடத் தலையை
யிருஞ்சிலை மோதிடச் சலித்த

புண்ணியப் பெருமான் பன்முறை வேந்தன்
பொன்னிநீர் தூரம்போய்க் கொணர்ந்து
புன்னிய வரையா யிரம்படியேறிப்
படுந்துயர் சகித்திடான் கொல்லோ ௨௯௧

மறையவன் புகன்ற தீமொழி மன்னர்
மன்னவ னிருசெவி புகலு
நிறையழல் விழிகள் சொரிந்திட வடங்கா
நெடுஞ்சினங் கொண்டெதிர் நோக்கி
முறையிலாநினது மனங்கல்லோ விரும்போ
முன்பென்ன வார்த்தைநீ மொழிந்தாய்
தறைமிசை நினைப்போற் சிவகா ருணியஞ்
சற்றுமில் லாதவ ரில்லை ௨௯௨

சாற்றுகா விரிநீர்த் தூரம்போய்ப் பெரிய
தசும்பினின் முகந்துசென் னியின்மே
லேற்றுபு சுமந்து பன்முறை வெயிலி
னிப்பெரு மலையின் மேலேறி
யாற்றுற வேர்வை பொழியக்கால் சலிப்ப
யான்படு துயரநீ கண்டு
மாற்றுறு வொளிமா மணியினை வழங்கா
வகையென்னே யெனவெகுண் டார்த்தான் ௨௯௩

துய்யபொன் வேணி கரந்தவே தியனியான்
சொற்றவா றியற்றினு லன்றி
ஐயனேநீ யெத் தனைசினங் கொளினு
மவிர்மணி யளித்திடே னென்ன
வெய்யவா ளோச்சி யாரிய ராசன்
வேதியன் முடியில்வெட் டுதலுஞ்
செய்யவ னிலிங்கத் தொளிப்பவாள் வெட்டுச்
சிவலிங்க முடியில்வீழ்ந் ததுவே ௨௯௪

விழுதலு நம்மான் றிருமுடி யிரத்தம்
வெள்ள மிக்கெழுவதைக் கண்டான்
பழுதிலா மணிமேய யென்னகா ரியமிப்
பாவியேன்செய்தன னினக்கென்
றழுதனன் பதறிக் கதறினான் முகத்தி
லறைந்தனன் சோர்ந்துவீழ்ந் தெழுந்து
தொழுதனன் புலன்கள் கலங்கிமெய் வேர்த்துத்
துடித்தனன் விழுந்தெங்கும் புரண்டான் ௨௯௫

வெய்யவேல் வேந்தன் சிவலிங்கப் பிரான்பொன்
மேனியை யிருகையாற் றழுவி
யையனே யுனக்குக் கொடும்பிழை செயவோ
வடியனேன் விரைந்திங்கு வந்தேன்
மெய்யனே யெனக்கண் ணருவிமெய் பொழிய
மெலிந்துளம் பதைத்துநெட் டுயிர்த்தான்
றுய்யதன் கலையாற் றிருமுடி யொழுகுஞ்
சோரியை மென்மெலத் துடைத்தான் ௨௯௬

துடைத்தனு மேன்மே லிரத்தமிக் கொழுகச்
சோர்ந்துவீழ்ந் தனன்விரைந் தெழுந்து
படைப்பரும் வளஞ்சால் மாணிக்க மலையின்
பாலெலாம் பன்முறை தேடிக்
கிடைப்பரு மளவில் பச்சிலை கொணர்ந்து
கேடிலாச் சிவபிரான் முடிமே
னடைப்பரி வேந்தன் பிழிந்துவார்த் தவற்றை
நலமுற வரைத்துப்பூ சினான் ௨௯௭

பூசிய பின்னுங் குருதிமிக் கொழுகப்
புலையனே னினிச்செய்வ தென்னே
மாசினின் னருமைத் திருமுடி யிரத்தம்
வருவதுமாறிடா வகையான்
மூசிய புழுவு மலமுமூத் திரமு
முயங்குமிப் பாழுடல் சுமக்கேன்

றேசினின் னெதிரென் முடியினைமோதிச்
சிதறிமாய் வேனெனத் துணிந்தான் உ௧அ

புண்ணிய வருமைத் திருமுடி யிரத்தம்
பொழிவதை யெனதுகண் மணியே
யண்ணிஞற் காணச் சகிப்பனோ வென்று
கருணைநா யகற்கணித் தாக
வண்ணிய கல்லின் முடியினை மோத
வன்பனே நில்லு நில்லென்று
வெண்ணிய பெருமான் சிவலிங்கத் திடைநின்
றெழுந்திரு கையினுற் றடுத்தான் உ௧௯

தடுத்தலு மிலிங்க முடியின்மே லிரத்தஞ்
சற்றுமில் லாமைகண் டரச
னடுப்பரு மளவின் மகிழ்ச்சிகொண் டெதிர்நின்
றஞ்சலி சென்னிமேற் குவித்துத்
தொடுத்தபூந் துளவ மாலயன் காணுச்
சோதிநின் றிருவுருக் காட்டி
யெடுப்பருங் கருணை தந்தனை யையா
வினிக்குறை யாதெனத் துதிப்பான் உ௨0

வேறு

தேமருவு கொன்றைமலர் சடைக்கணிந்த சிவனைக்
காமனைமுன் னெரிசெய்த கண்ணுதலை யடியார்
நாமருவு வாட்போக்கி நல்வரைமேன் முளைத்த
மாமணியை யெண்ணுத மனமென்ன மனமே
மாதேவன் றனையெண்ணு மனமென்ன மனமே உ௨௧

கோதேயு மென்னையுமாட் கொண்டருளுங் கோனைக்
காதேயும் வெண்சங்கக் குழையானைக் காவிற்
றுதேயும் வாட்போக்கி சார்ந்துறையு மெங்கண்
மாதேவன் றனையேத்தா வாயென்ன வாயே
மாதவர்வைப் பினையேத்தா வாயென்ன வாயே உ௨௨

பொங்கழலின் விடநுகர்ந்து பூமடந்தை நாவி
னங்கமுறு கலைமடந்தை யிவர்கழுத்தி லணிந்த
மங்கலநாண் காத்தருளி மாணிக்க மலைவாழ்
சங்கரனை வணங்காத தலையென்ன தலையே
தற்பரனை வணங்காத தலையென்ன தலையே ௨௪௫

மாலுடையார் காணரிய வானவன் கூற்றுதைத்த
காலுடையான் மெய்ச்சுரும்பார் குழலம்மை கலந்த
பாலுடையான் வாட்போக்கிப் பதியுடையான் வேத
நூலுடையா னீறணியா நுதலென்ன நுதலே
நுண்ணியன்வெண் ணீறணியா நுதலென்ன நுதலே ௨௪௬

அற்பகத்தை மகிழ்ந்துறையு மண்ணலை மால்வெள்ளி
வெற்பகத்தை யொழியென்று வேண்டினருக் கமுதை
மற்பகத்தை யலர்சூடு மாணிக்க மலைமேற்
கற்பகத்தைக் காணாதகண் ணென்ன கண்ணே
கண்மணியைக் காணாத கண்ணென்ன கண்ணே ௨௪௭

தவமுடைய நால்வர்கள்செய் தமிழ்வேத முடையா
னுவமையிலாத் திருக்கரத்தி னோங்குமழுப் படையா
னவமகற்றி வாட்போக்கி யமர்ந்தபெருங் கருணைச்
சிவபெருமான் சீர்கேளாச் செவியென்ன செவியே
தேவர்பிரான் சீர்கேளாச் செவியென்ன செவியே ௨௪௮

மாயனயன் காணாத மாமணியை யிந்தப்
பேயனையேன் றன்னையுமாள் பெருங்கருணைக் கடலை
மேயபுகழ் வாட்போக்கி வீற்றிருக்குந் தெய்வ
நாயகனை யென்னாதார் நாவென்ன நாவே
நமச்சிவாய வென்னாதார் நாவென்ன நாவே ௨௪௯

நண்ணுதம னியப்பொதுவி னடப்புரியு மிறைவ
னெண்ணுமடி யார்பலர்க்கு மெய்ப்பிணில்வைப் பணியான்
மண்ணுலகோர் கொண்டாடும் வாட்போக்கி மலைவாழ்

தண்ணுதலோன் பணிசெய்யாக் கையென்ன கையே
கடவுள்பணி செய்யாத கையென்ன கையே உ௪௫

செப்பரிய நான்மறையின் சிரத்தொளிரு முதல்வ
னொப்பரிய நற்சரும்பார் குழலம்மை பொருபாற்
றப்பரிய வாசையிலாத் தனியோகி யெங்க
ளப்பன்மலை சூழாத வடியென்ன வடியே
யையன்மலை சூழாத வடியென்ன வடியே உ௪௬

வாங்குகங்கை முடியிருந்து மற்றதனை விரும்பா
தோங்குபொன்னி யாடுவதிற் பேராசை யுடையான்
றேங்குபுகழ் மாணிக்க மலைப்பெருமான் சிறப்பு
வீங்குறுகண் மணிபூணு மெய்யென்ன மெய்யே
விமலன்கண் மணிபூணு மெய்யென்ன மெய்யே உ௫0

மராமரமே மெய்தவனும் மலரவனுங் காணுப்
பராபரன்மெய் யடியார்கள் பரவவரு மருளான்
புராதனமாஞ் சிவாயவரைப் பொற்கோயில் வாழும்
பிரானடிக்கா ளாகாத பிறப்பென்ன பிறப்பே
பிறங்குசைவ சமையமுறாப் பிறப்பென்ன பிறப்பே உ௫௧

எழுசீரடியாசிரியவிருத்தம்,

எனத்துதி செய்து வேந்தனெம் பெருமா
னெதிர்விழுந் திருகையாற் சிலம்பின்
வனைப்புறு மலர்த்தா ளிரண்டையும் பற்றி
மகிழ்ந்துபே ரன்பினு லிசைப்பான்
சினத்தொளிர் வாளாற் றிருமுடி வெட்டுந்
தீமையை மறந்தெனை யாண்ட
நினக்குநான் கைமா றென்செய்வே னையா
நிகரிலாக் கருணையங் கடலே. உ௫உ

எண்ணிலாப் பிறவி யெடுத்தெடுத் தந்தோ
வின்னமும் பிறந்திறந் தளவி

னண்ணிய துயரக் கடலழுந் தாதிந்
நாயைநின் றிருவடி சேர்ப்பாய்
தண்ணிய மலரோன் பதவியும் வேண்டேன்
றக்கமால் பதவியும் வேண்டே
னெண்ணிழற் றருவோன் பதவியும் வேண்டே
னுன்னடி வாழ்த்தலே வேண்டும் உருக

செய்ய வாசவனும் பிரமனு மாலுந்
தேவரு மறைகளுங் காணா
வையநின் னருமைத் திருவடி மலரை
யடியனேன் றரிசித்த பின்னர்
வையமாள் சிறப்பை யொருபொரு ளாக
மதிப்பனோ சீயென வெறுத்தேன்
வெய்யனேற் கினிநின் னடிக்கலப் பல்லால்
வேறொன்றும் வேண்டுவ திலையே உருச

என்னலும் பெருமான் றிருவுள மிரங்கி
யேந்தலை யிருகையாற் றாக்கி
மன்னநின் கருத்தின் படிமுடிப் பேனீ
மனத்துய ரொழிகெனத் தேற்றி
யன்னவ னிடத்தி லிருந்தபொன் முடியை
யருட்கடல் வாங்கியம் முடிமேற்
றன்னரு கிருந்த மணிச்சிக ரத்தைத்
தயங்குறப் பொருத்தி யம்முடியை உருரு

பேரிகை முதற்பல் லியங்களு முழங்கப்
பெருகுபூ மாரிவான் பொழியச்
சீரிய வடியார் சிவபிரான் கருணைச்
சிறப்பினை யெடுத்தெடுத் தேத்தப்
பாரினி லெவரும் புகழும்வாட் போக்கிப்
பதியமர் தெய்வ நாயகன் சீ
ராரிய ராசன் சென்னிமேற் சூட்டி
யளவிலா மகிழ்ச்சியோ டிரைப்பான் உருசு

அரசனே யின்னுஞ் சிலதின முலகை
யாள்குதி பின்னர்நின் புயஞ்சேர்
தாமுறு மவனிச் சுமையைநின் புதல்வன்
றனிப்புயத் திறக்கிவைத் துனைநாம்
பரவுநம் மடியிற் பிரிவறச் சேர்ப்பேம்
பயப்படேலென்றருள் செய்ய
வரமிகு நிருபன் பன்முறை வணங்கி
மலர்க்கரஞ் சென்னிமேற் குவித்து ௨௫௭

நின்னருள் வழியா நடப்பதே யல்லா
னீசனேற் கொருசெய லுளதோ
பன்னரு நின்பா லடியனேன் பெற்ற
பாக்கிய மியாவர்தாம் பெறுவா
ரின்னல்சா லிந்த நாயினேச் சிவிகை
யேற்றிய நினதுபே ரருளை
யென்னநான் சொல்லிப் புகழ்ந்திட வல்லே
னீசனே யருட்சிந்தா மணியே ௨௫௮

என்ற காவலனை யெம்பிரா னோக்கி
யெமக்குநீ செய்வழி பாட்டை
மன்றநா மகிழ்ந்தோ நினக்குவேண் டியசீர்
வரமெலாங் கேளென வேந்த
னின்றுமென் குலத்தோர் பொன்னிநீர் கொணர்ந்து
நினக்கென்று மாட்டிடல் வேண்டு
நன்றமை யவர்கள் செல்வராயீற்றி
னற்கதி யடைந்திடல் வேண்டும் ௨௫௯

ஆய்ந்தசீ ரிராச லிங்கமென் றுருபே
ரையநீ பூணுதல் வேண்டு
யேந்தவப் பெயரை யிடப்பெற் றோர்நின்று
னிணைமலர் சேர்ந்திடல் வேண்டும்
வாய்ந்தவிவ் வரைக்கு மணிவரை யெனும்பேர்

பாநிலம் வழங்குதல் வேண்டும்
வேய்ந்தசீர் நின்னைத் திருப்பூசித் தழைப்ப
னெனப்பலர் துதித்திட வேண்டும் உகூ0

ஐயநீ யாடப் பொன்னிநீ ரெடுத்தற்
கணிகொள்பொற் குடமளிப் போருஞ்
செய்யநீர் நிறைப்பச் செம்பொற் கொப்பரைகள்
செய்து வைத்திடு நன்மையோருந்
துய்யநீர் கொணர்வோர் பலர்க்கும் வேண்டுவன
சோர்விலா தீயுமே லோரும்
வையமே லுயர்ந்த செல்வராய் நினது
மலரடி வாழ்த்திடல் வேண்டும். உகூக

அண்ணனீ மொழிந்த படியினிச் சிலநா
ளானபின் னடியனேன் றன்னை
எண்ணரு நின்றாள் சேர்த்திடல் வேண்டி
யான்பெறும் புதல்வனை யிந்தத்
திண்ணமார் புவியிற் றனியர சளிப்பத்
திருவருள் செய்திடல் வேண்டும்
நண்ணரு மவனு மவன்வழி யோரு
நற்கதி யடைந்திடல் வேண்டும், உகூஉ

என்றன னவ்வா றெம்பிரான் வரங்க
ளின்முக மலர்ந்து தந்தருளி
நன்றமை யிலிங்கத் திடைக்கரந் தருள
நவில்புக ழாரிய ராசன்
வென்றவாட் போக்கி முளைத்தமா மணியை
விட்டுநீங் குதற்குளங் கலங்கி
மன்றருட் பெருமான் பால்விடை பெற்று
வணங்கிமுன் னோக்கியே சென்று உகூங

எதிர்விழுந் திறைஞ்சிக் கோயிலின் புறமே
யெய்திமூ வுலகையும் பெற்ற

மதிநுதற் சுரும்பார் குழலுமை யமரு
மாமணிக் கோயின்முன் வணங்கி
முதிருமன் பாலுட் போய்வலஞ் செய்து
முன்புபன் முறைபணிந் தெழுந்தே
யதிகவா னந்த வருவிகண் பொழிய
வஞ்சலி சென்னிமேற் குவித்து ௨௯௪

எனையு மாண்டருளுங் கருணைநா யகியை
யிதயநெக் குருகிடத் துதிப்பான்
வனையும் வாட்போக்கி வரையமர் கருணை
வள்ளலுக் கினியதெள் ளமுதே
நினையு மெய்யடியார்க் கெய்ப்பினில் வைப்பே
நிகரிலா வருட் சிந்தா மணியே
யுனையலா லெனக்குத் துணையெவர் புகல்வா
யுலகெலாம் பெற்றநற் றாயே ௨௯௫

அடியவர்க் கமுதே யிமயவெற் பீன்ற
வன்னமே யெனதுகண் மணியே
நெடியனும் வணங்குஞ் செல்வியே முக்க
ணிமலையே யுயர்பரா பரையே
பொடியணி பெருமா னாவியே செய்ய
பொற்கொம்பே யெங்கள்பாக் கியமே
யொடிவில்சீ ருன்னை யன்றிமெய்த் துணையா
ருலகெலாம் பெற்றநற் றாயே ௨௯௬

முன்னுபே ரருளா லைந்தொழி னடத்து
முதல்வியே நின்றிரு வுருவை
மின்னுதம் முளத்திற் றியானிக்கு மடியார்
•வேண்டுவ தருந்தயா நிதியே
மன்னும்வாட் போக்கி யமருமம் பிகையே
மலைமன்னன் செய்தவப் பேறே
யுன்னுநின் னடியிற் சேர்த்தெனை யாள்வா
யுலகெலாம் பெற்றநற் றாயே ௨௯௭

கலித்துறை

என்ன வாரிய மன்னவ னேத்திமுன் வணங்கித
தன்ன மில்சுரும் பார்குழற் றுபின்பால் விடைகொண்
டின்னன் மாற்றும்வாட் போக்கிமே னின்றுங்கீ ழிறங்கி
யன்ன மார்வய லாரிய நாட்டினை யடைந்தான் ௨௯௫

அங்கு மேவிநாற் சேனையு மார்ப்பொடு சூழத்
தங்கு சீரின்மங் கலநகர் சார்ந்துவீற் றிருந்தே
யெங்கு நேமிசென் றிடவுபி ரெவற்றையு மன்பு
பொங்கு தாயெனக் கருணைபாற் புரந்துவாழ்ந் தனனே ௨௯௬

புகழி னாரிய மன்னவன் பொன்னிநீர் கொணர்ந்து
துகளி லெம்பிரா னருள் பெற்ற கதையினைச் சொற்று
மகழும் வல்வினை யாயர்செய் தவத்தினு லுதித்த
பகரோ னுதசீ ரொருவர்தங் கதையினைப் பகர்வாம் ௨௯௭

ஆரியராசச்சருக்கம்

முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௯௮௯

# சிற்றுயரருள்பெறு
# சருக்கம்.

### கலிவிருத்தம்

துன்னு பல்வளச் சோழநன் னாட்டிடை
மின்னு செல்வ மிகுகுழித் தண்டலை
யென்னு மூரி லிடையர்தஞ் செல்வமென்
றுன்னும் வண்ண மொருவ ருதித்தனர் ௧

சிவபி ரான்மலர்த் தாளன்றிச் சிந்தியா
ரவனடித் தொண்டர்க் கேவல்செய் யன்பினா
ரிவருங் கண்மணி யஞ்செழுத் தெண்ணுநீ
றுவமை யில்பொரு ளாக்கொண்ட வுத்தமர் ௨

தெரியு மாண்டிற் சிறியர்மெய் யன்பினாற்
பெரியர் நீரும் பசும்புல்லும் பெட்பொடு
புரிய சுக்களை யுண்பித்துப் போற்றலா
லுரிய கண்ணனை மூலனை யொத்தவர் ௩

இனைய நற்றவ ரெண்ணில்ப சுக்களை
வனையு மாணிக்க மாமலைச் சாரலி
னனைம லர்ப்பொழி னூடொறு மேய்த்தபி
னினைய வோம்புநி யமங்கைக் கொண்டுளார் ௪

இருந்த வத்தின ரின்சுவைப் பாலினைப்
பெருங்கு டத்தினிற் பெய்து சுமந்துபோய்
விரும்ப மாணிக்க வெற்புறை நாதற்கு
நெருங்கு மன்பொடு நித்தமு மாட்டுவார் ௫

ஒருதி னத்திலவ் வோங்கும் வரையடி
மருவு பாற்குடம் வைத்தோர் தொழில்செயப்
பொருவி லன்பி னருகுசெல் போதினிற்
கருகு காகங் கவிழ்த்ததப் பாலினை ௬

அந்த வாறுசிற் றுயர்சண் டஞ்சினார்
நொந்த னாமுழு தார்தலை நாறிட
முந்த வெற்பின்மேன் மோதின னையகோ
இந்த வாறுநன் றென்று கலங்கினார் ௭

ஐய னேயுனக் காட்டி மகிழ்விக்க
பையவேனென் கொண்டு வந்தவிப் பாலினை
வெய்ய காகங் கவிழ்த்த விதத்தினாற்
பொய்ய னேனுயிர் போக்கு தலுண்மையே ௮

என்ற காலையெ னம்மையோ டெப்பிரான்
மன்ற மால்விடை மேற்கொண்டு வந்துநேர்
நின்ற வன்பரை நோக்கி நிகழ்த்துவான்
வென்ற வில்வரை யெங்குநம் மேனியே ௯

ஆத லால்வெற் படியினிற் சிந்துபா
லேத மேவலி னாயதென் றெண்ணலை
கோதி னம்மெய் குளிர்ந்திடச் செய்ததா
லோதி தற்குளத் தெண்ணி னுவப்புற்றேம். ௰

என்ன வன்பர் பணிந்தெழுந் தெந்தையே
முன்னம் வேலை யெரித்த முறைமைபோற்
பன்ன ரும்பிழை பண்ணிய காக்கையை
யின்னன் மேவ வெரித்தருள் செய்யென ௧௧

அடிய ரெண்ண முடித்தரு ளங்கணன்
படிய வானிற் பறக்குங் கொடியினை
கடிது செங்கனற் கண்ணினி னோக்கினன்
கொடியெ ரிந்து குவலயம் வீழ்ந்ததே ௧௨

அன்ன பான்மைசிற் றுயர்கண் டப்பனே
யென்ன யோருள் வைத்தனை யேழைமேற்
கன்ன லேயருட் கற்பக மேயெனப்
பன்ன ருந்துதி பாடின ராடினார் ௧௩

இந்த வன்பரை யெம்பிரா னோக்கிநிற்
கெந்த நல்வரம் வேண்டி மிம்பெனக்
கந்த வில்வரைக் காகம் வராவகைச்
சிந்த வில்லருள் செய்திடல் வேண்டுமால் ௬௪

வெய்ய பல்பிற விக்கொடு நோயினை
ஐயனே யினி யான்சகி யேனெனைச்
செய்ய நின்னடி சேர்த்திடல் வேண்டுமான்
மெய்யனே யென்று வீழ்ந்து வணங்கினார் ௬௫

வணங்கு மன்பரை வள்ளனீ கேட்டவா
றிணங்கு நல்வர மீந்தன னென்றுதன்
மணங்கொள் சேவடி சேர்த்தனன் வானவர்
கணங்கள் பெய்தனர் கற்பகப் பூமழை ௬௬

விரியும் வண்புகழ் மேவுசிற் றாயர்தஞ்
சரித மீதினித் தண்டலைக் காவலைத்
தெரியு மெய்யன்பு சேர்தந்து வாயராம்
பெரியர் பெற்ற கதையினைப் பேசுவாம் ௬௭

சிற்றாயரருள்பெறுசருக்கம்

முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்- ௭௱௯

# வயிரப்பெருமாள் மலைகாவல் பெறுசருக்கம்.

---

### கலிவிருத்தம்

தூய சான்றவர் மேவிய தொண்டைநன் னாட்டிற்
பாய சீர்மிகு காஞ்சிவண் பதியினிற் றந்தை
வாயர் முன்செய்த மாதவப் பயனென வனையார்
மேய நற்குலத் தவதரித் தனனொரு மேலோர் ௧

மாசு நீக்கிமா முத்தியை வழங்குமஞ் செழுத்தும்
பூசு நீறுங்கண் மணியுமே பொருளெனக் கொண்டோ
ராசு றுமெய்ப் பரசிவ னடியவர்க் கெல்லாந்
தூசு கோவணம் பற்பல வளித்திடுந் தூயோர் ௨

இடலெ லாம்பசு பதிபெற லெனநினைந் திருள்சே
ருடலெ லாய்விடுந் திறனுடைப் பெருமையை யுடையா
ரடலெ லாம்பிறப் பகன்றவர்க் கெனவறிந் தியாவும்
விடலெ லாம்பொருந் தியருடன் பிறந்தவோர் மின்னாள் ௩

பாச வேரறுத் திடுபழம் பொருடனைப் பதித்த
தேசு லாவுறு மனத்தினண் மகளிரிற் சிறந்தாண்
மாசி லாதகற் புடையவ ளுயிர்கண்மீ மாறு
நேச மார்தரு கருணையிற் றாயினை நிகர்வாள் ௪

இன்ன பான்மைய ளிளையவ ளொருதின மிகலாள்
சொன்ன மாற்றநெஞ் சகங்கிடந் தறுப்பவத் துயரைப்
பன்ன வேண்டிமுன் னோன்மனை புகுபசு பதிபே
என்னபேறுறச் செனித்தனன் புவியிலென் றிசைத்தாள். ௫

தங்கை யாருரை கேட்டலு மருங்கினிற் றாவிக்
கங்கை சூடியை வெறுப்பொடு துதிப்பது கடனன்

றெங்கையே நினை யெவரேது புரிந்தன ரிரைந்தாய்
சங்கை நீத்துள படிவிளம் புதியெனச் சாற்றும் ௬

கூதலை மாற்றமு மிலதொரு குழவியைக் குமைத்தான்
பதலை தாக்குநற் பாலக னெனதுளம் பதைத்தே
விதலை தாக்கவச் சிறுவனைத் துரிதமாய் விலக்கி
முதலை வாழ்த்திநித் தியக்கட னியற்றுமம் முடிவில் ௭

சென்றுதா யிடைச் சிறுவன்வே றுரைத்ததோ தெரியேன்
துன்று போரினிற் பிணமுணுங் கூளிபோற் றுடித்தே
என்றனைப்பல வசைசொலி மலடியென் றிகழ்ந்தாள்
பொன்ற லன்றிமற் றுள்ளதோ கதியெனப் புகன்றே ௮

முன்னைநாட் செய்த கொடுவினையோ வன்றி முனிவர்
தன்னை யாய்ந்தவர் சாபமோ குருமொழி தணந்த
சின்ன மோகுல தெய்வத்தா னுற்றதோ தெரியே
னின்ன நாட்பழி மொழிகளைச் சுமப்பதற் கிருந்தேன் ௯

பிண்ட மாய்க்கரு வினின்முனம் பிணித்திடும் பொழுதே
தண்ட மாய்ப்பிறர் வசைபல சொலித்தயை சிறிதும்
அண்டு றாதவல் வினையன மலடியென் றழைக்க
முண்ட கத்தனென் றலைமிசை விதித்தனன் முடிவே ௰

என்று நொந்துநைந் தேக்கமுற் றிவள்படுந் துயர
நின்று நோக்கினர் பொறுத்திலா நெடியதன் கையாற்
சென்று தூக்கினர் மலர்முகந் துடைத்தனர் சிவமே
கன்று றுமனங் குலைந்தலைந் தழிவது கடனே ௧௧

வச்சி ரத்தின்முன் னாகிய தேவரும் வணங்க
அச்சு றுத்துமிப் பிரளயந் தவிரென வகற்றி
வைச்சி றைப்பதி யெனநிலத் தொளிமிகு வளஞ்சேர்
கச்சி யப்பதி யுறைபவர்க் கொருகுறை காணேன் ௧௨

தங்கை யேயவருந் தாதிரு தேய்வினைத் தவிர்ப்பா
னங்க ளுபக னிணிமைப்பி லெனவுரை நவின்று

அங்கை யேந்துமைந் தனைப்பெறு மளவிதி னகன்று
திங்கள் சூடியம் பலற்றொழ வெணியிது செப்பும் கங
அம்மை யேயெனக் கொருசிப முளதது புரிவா
னிம்மை யேசெல வேண்டுமீ யிருவென வெழுந்தே
செம்மை மாமுனி தமருகந் திருக்கையிற் றரித்தோ
னம்மை யாள்பொருட் டினிதரு ளிபகல னயந்தார் கச

அறுசீரடியாசிரியவிருத்தம்

உலகளக்குந் திருமாலை யூர்ந்துசெலு மழவிடையா
னுமைவி னுவக்
கலகில்பல தளிகளினுண் ணவைதீர்த்த வெனமகிழ்வுற்
றருளக் கேட்டுப்
பலதினமுந் தவமுஞற்றக் கங்கையினைச் சந்துசெலப்
பணித்துப் பற்ப
றலம்விடுத்திப் பதியடைந்தோர் நசைபுணர்ந்து குறிபணிந்த
சடிலற் போற்றி கரு
வருமவர்க்கு முதற்பொருளாய் ஞானவமு தாய்த்தூய
மணியி னீங்காப்
பெருமைபெறு காந்தியதாய்ச் சலமழலிற் றண்டகியாய்ப்
பிறியா தோங்கிப்
பருவமுறு காமாட்சி யம்மை திருச்சரணமதைப்
பரவி நின்றே
பொருமைபெறு திரிகரணத் தொடுமுறையே வாழ்த்தியிசை
துரைப்ப தானார் கசு
வயிரமணிக் குன்றேமா கனகபுரி சூழுலகு
மன்னச் செவ்வேள்
வயிரமணிக் கைவேலாய் நின்றுசுர ரிடர்களைந்தாய்
மஞ்சு துஞ்சும்
வயிரமணிக் கிரியுடையீர் தகையுடையீ ரருளுடையீர்
மனமா சில்லீர்
வயிரமணித் தனுமுறையோ புகலிடமுண் டோவிதனை
வழுத்தாய் கொல்லோ கஎ

என்னவுரைத் தோலமிடக் கண்டுதிரு வருளிரங்கி
யினிதி னோக்கிப்
பன்னரிய பலதலமுந் தொழுதுவரு மளவினெதும்
பாலிப் பானென்
றன்னவிடத் துனதுமனப் படியுதவும் பரமனென
வருளிச் செய்தா
டன்னையடைந் தவராகந் தன்னின்மனு மன்னனைய
சரீரி தன்னால் ௧௮

அழகுலவுஞ் செவிமாந்திப் பற்பலவாந் துதிபுகன்று
விடைபெற் றன்னே
பழியகலும் பலதலமுங் காணவெனக் காதன்மிகு
பத்தியோடுங்
கழுமலத்த ராசர்திரு நாவலூ ரடிகளடிக்
கமலஞ் சூடிப்
பிழியுநவ ரசநிறையுங் கனகசபை நடனமிடும்
பெருமாற் கண்டே ௧௯

எண்ணில்பல புவனமொரு சிறுகூற்றுட் பொருந்துமதை
யெண்ணிப் போற்றி
மண்ணின்மனுப் பைங்கூழ்க டழைக்கவருண் மழைகவிழ்க்கும்
வளனைப் போற்றித்
திண்ணியநெஞ் சச்சிலையைத் தண்ணியெனக் காணுமொரு
திறனைப் போற்றிக்
கண்ணகலாப் பொருளிதெனக் கண்ணினறி வுறுத்துமம்மை
கழல்கள் போற்றி ௨௦

கண்ணப்ப ரருளடையப் பாலித்த நாதரடிக்
கமலம் போற்றி
வண்ணப்பி ரசமலரான் விண்டிருவர் தேடிநின்ற
மலையற் போற்றி
நண்ணப்ப ரகிலாண்ட நாயகியி னடிபோற்றி
நம்பிக் கீகப்
மண்ணொப்பி நடுவிருளிற் பாவைமனை போந்தபதம்
பாவிப் போற்றி ௨௧

ஞானப்பா றந்ததிருத் தோணிபுரத் தம்மையப்ப
ரடியெஞ் ஞான்று
மீனப்பா லாகாமற் காத்தருளென் றறவுமுறை
யிட்டே போற்றிக்
கூனப்பான் மதிவேணிப் பானுறையும் பலதலமுங்
குறுகிப்போற்றித்
தேனப்பா மொழிவணிகப் பெண்டாயாய்ப் போந்ததிருத்
தேவைப் போற்றி உஉ

நீறுபடி மேனியெனச் சம்பந்த வடிகளுரை
நிகழ்த்திக் கொண்சே
ராறுசடை யண்ணலென வந்துறப் போற்றுபராய்த்
துறையம் மானைச்
சேறுபடி மிருகமதக் களபமுலைத் தேவியரைத்
திறம்பா தேத்தி
மாறுபடி வினைகெடமுன் வேதநெறி யோப்புதழிக்
காவந் தானல் உங

அடைந்தவர்க ளுற்கரணம் பொறிபுலன்கண் முதலாய
வனைத்துந் தூய்தா
யடைந்துமுதுக்குறைவுமுட னெய்திநலம் பெறவிடுக்கு
மணிசேர் பொன்னி
புடைந்துமுறை நெறிபிறழாதெண்டிசையுஞ் சிறமேற்கை
குவித்து நெஞ்ச
முடைந்துருகி யுடல்குழையப் பரவசமாய்த் தினந்தொழுத
லரித்தா மன்றே உச

ஆதலினித் தகையுடையான் கயிலைமலைத் திசைநோக்கி
யரனம் பாலை
ஏதமிலா தடிவணங்கிக் கரையுமரா ஹறாழுழக்க
மெங்கு மேறக்
காதலொடு மதுமுதலா கியதிசைக டொறும் வாழ்த்திக்
கண்டா ரிங்கே
ஆதரவாய் மாமணியாம் விரிசுடராய் கண்மணியா
யகண்ட மாகி உரு

சிவஞானமாய்ச் சிவலிங்க வுருவாகிப் பொலிமலையைத்
தென்பா லின்னே
பவமகன்றே மிடியகன்றே நமது திருத் திருவேயோர்
பற்றும் வேண்டேந்
தவமுளவோ வீதன்றிப் பெருகவெனப் பலமுறையுந்
தாழ்ந்தே மிக்க
அவசமொடுந் தென்கடம்பந் துறையமரும் பெருமானை
யடிதாழ்ந் தன்றே ௨௬

பொன்னிநதித் துறைதெரிந்த மாணிக்க வுருவகத்தைப்
போற்று தார்க
ளென்னபலன் பெறுவரந்தோ விதுகாறுங் கண்டிலனென்
றேங்கி யேங்கி
மின்னவிருஞ் சடைமுடியா னருங்கருணைப் பெருந்தகைமை
விபுதன் போந்த
தின்னதுணைப் பரிவொடுநாந் துன்னிநடந் தானென்றெவ
ரிசைக்கற் பாற்றே ௨௭

கலித்துறை

இருக ரங்களுஞ் சிரமிசை யேறியே குவிய
வுருவ மெங்கணும் புறமயிர் பொடிப்பவுற் றுருகிப்
பெருகு கண்களி னீர்வரக் கபிலையைப் பிரியாப்
பருவக் கன்றென விரைவினிற் றகைவொடும் படர்ந்தார் ௨௮

கும்ப யோனிய ரேனைய முனிவரர் குழாமுஞ்
சம்ப ராரிமுன் னாகிய தேவர்க டவத்தோர்
நம்ப னேயெது மருள்பவ னெனுமுரை நயந்தே
யிம்ப ரேதரும் பரமனென் றுவந்தன னிப்பால் ௨௯

மூசு வண்டறை பூந்துண ரடர்ந்ததார் முருகு
வீசு தண்டலை நோக்கின ரதன்வழி மேவப்
பாச நீத்துநற் பதவியை யளித்திடும் பாத்து
வாச தீர்த்தமுங் குணதிசை வயங்கிடக் கண்டான் ௩௦

மாட்சி மேவிய சுரநதி யேயென மனத்துட்
காட்சி யாதரஞ் சரிதைவி நயமொடு கலந்தே
ஆட்சி பிள்ளையை யடைந்தன ரதிற்குடைந் ததிக
மீட்சி பாலிப்ப திதுதரு குவதொரு வியப்போ ௩௧

உய்ய வாருயிர்த் தொகைதனக் கருளிய வுரிமைத்
துய்ய நீறணிந் தனுபவ முடித்தெலாந் துமித்தே
வெய்ய காலனைக் கடிந்தடி யவர்துயர் விலக்குஞ்
செய்ய மாமணிச் சிலம்பினைத் தொழுதனன் றெளிஞன் ௩௨

நெஞ்ச மாரன்முன் மெழுகென வுருகிட நெகிழப்
புஞ்ச மேனியுண் ணடுக்குற முகநகை பூப்பக்
கஞ்ச நேர்விழி யூற்றென வெதும்பிமிக் கலுழப்
பிஞ்ச காமறை புடிநட மிடுமொரு பெருக்கே ௩௩

கிரண மேனிய நிருமல வெனத்துதி கிளத்தி
முரண தாமயிற் றளையடி பிணித்துயர் முடியிற்
றிரண நூவுநற் றயிலபூ ரணக்குடந் திளைத்தே
அரண மாதுகூ லொடுநடந் தெனவடி பெயர்த்தான் ௩௪

ஐங்க ரத்தனைப் பிரணவ வடிவமே யதனுட்
பொங்கு பேரொளி யேயெழு வுலகரும் போற்றுந்
திங்க ளஞ்சடை யாயிட ரகற்றிடத் திகழுங்
கங்க ணம்புனைந் திருப்பவோ காவெனக் கரைந்தே ௩௫

பொன் னிடுந்திருப் பாறைகண் டனன்முனம் புலவர்க்
கின்ன ரும்பொரு ளுதவிய திறமுணர்ந் திறைஞ்சி
மின்ன லுற்றிட விலகுமா மணிக்கிரி மேய
பன்ன கத்தனஞ் செழுத்தொடு மனங்கழல் பதியா ௩௬

வஞ்ச னேன்றகை சிறிதிலேன் புலமிலேன் மறத்த
கொஞ்ச னேன்பெரி யவருரை தெரிகிலாக் கொடிய
பஞ்ச னேன்றுய ருய்யுமா றுணர்ந்திடாப் பதக
நெஞ்ச னேனையு மாட்கொள நினைவையோ நித்யே ௩௭

இந்த வாறுபற் பலபுகன் றவணெழுந் தருள்சம்
பந்த ராதியர் பதமல ரடிமுடி பணிந்தே
முந்த நோக்கிநற் றெருவடைந் திருகையு முடிசேர்த்
தந்தமில் லதோர் முதறனை வளம்பட வடுத்தான் ௩௮

அறுசீரடியாசிரிய விருத்தம்

பரமதத் துவமே போற்றி பரம கற்பகமே போற்றி
பரம சத்துவமே போற்றி பரமதற் பரமே போற்றி
பரமவே தாந்த போற்றி பரமவே காந்த போற்றி
பரம சித்தாந்த போற்றி பரசுகோ தயமே போற்றி ௩௯

அண்டபிர் மாண்ட போற்றி யகிலகா ரணனே போற்றி
கொண்டலஞ் சடையாய் போற்றி சூலமறை முடிவே போற்றி
தண்டவம் புலிப்பற் பூதந் தொகுதிசூழ்ந் தாட வாடும்
புண்டரீ கத்தாள் போற்றி புரையிலாய் போற்றி போற்றி ௪0

அனுபவ சித்தே போற்றி யைவகைத் தொழில்க ளாற்றிப்
பனுவல்செய் தருள்சன் மார்க்கப் பரமதந் திரமே போற்றி
தனுவுமைம் பொறிகண் ணாதி யாகியுந் தணந்து நின்று
மெனுமறை கதற வுள்ளா யில்லதாய் நிற்பாய் போற்றி ௪௧

சிந்தைநொந் தயர்ந்தேன் போற்றி செய்வதொன் றறியேன் போற்றி
வந்துநின் னடியை நேரே வணங்கிடப் பெற்றே னிந்நாட்
சந்ததி நாயேன் றங்கை யகட்டில்வந் துதித்துத் தன்னஞ்
சிந்திடச் செய்ய வேண்டுஞ் சிவசிவ சிவமே போற்றி ௪௨

உன்னைநெக் குருகி யேத்த வுளம்வச மில்லையேனு
நின்னது நாமத் தொன்றிற் சிறுகூறு நிகழ்த்தி னோரேன்
முன்னைவல் வினைநின் றுரு முடிவிலாக் களிப்பி னிற்ற
னின்னருட் கடனென் றன்றோ யாவரு நிகழ்த்து கின்றார் ௪௩

பிட்டுக்கு முடிமண் ணேற்றும் பித்தனை யெனுமா றூரார்
திட்டுக்குமகிழ்ந்தொண் றென்றுந்தேவியையளித்துங்காட்டக்

கட்டுக்கு முவந் தாட்பட்ட கருணைமா கடலே யென்றன்
மட்டுக்கும் வஞ்ச மேமேயோ வுரையென வழுத்தா நிற்பான் ௪௪

அற்புதங் கொல்லோ நிற்கு மரியதோ வமல ருத்ர
தற்பர வுனையன் றியாதுஞ் சார்கில னெனமே லோங்கி
நிற்பதோர் வயிரம் பூண்டு கிரிவல நியதி யாற்றிப்
பற்பமே பொருளாய்க் கொண்டோ னிருந்தவோர் பகலின்
மன்னோ ௪௫

வேறு

நம்பனிரு சரணமலர் முடிபணிய பனமுற
முரல நாசித்
தம்பமிசை யிடுசுடரி னறிவுமன மொடுகரங்கள்
தழுவிக் கூப்ப
வம்பமருங் குரவருரை பண்ணொடுநா வழுத்தவதை
வாய்ந்தகர்ன்னம்
நம்பலொடு கவரவளித் தருள்கருணைக் கெதுபுரித
னலமென் றோர்ந்தார் ௪௬

பொன்னிரசி தமுமலையே மணிமலையே யிவர்க்குளதெப்
பொருளும் வேண்டார்,
இன்னபொரு ளின்னபணி யின்னதரி தெனவுரைப்பா
ரெவருங் காணேன்
மன்னனெனப் பெபர்புனைந்து கருணைமொழி வழியுமொரு
தசைவா கீசர்
சொன்னதழிப் தனைநினைந்தத் திருவங்க மாலையினைத்
தொழுது தேறி ௪௭

நன்றெனக்கை மலர்குவித்துக் குதித்தாடிப் பாடிமிக
நகைத்தெண் டோளன்
குன்றெனவண் ணிதியிருக்கத் தலைத்தலையும் புயமணிந்து
தலைகொண் டான்சை
யென்றினிது விளங்கிவயத் திருவடியைப் பல்முறைதாழ்ந்
தேத்தி நின்ற
நன்றிபுனை தலையுடைய தலைமையணி மலையாற்கு
நல்குவேனால் ௪௮

என்னமுடித் துறுதியுட னெழுந்துகடன் முடித்துவலி
மிசைந்தே முன்சென்
றுன்னதியல் பறிந்தன்னோர் தலைமுடிக்கங் காத்தினிது
வுவந்தா யன்றிப்
பின்னைவெகு நவிரமிசைத் தலங்கலணிந் தனைகழற்குப்
பிறிதொன் றின்றாற்
சொர்னமுடி யமர்ந்தி பதமணியச் சிரந்தருவன்
றணிந்தேற் பாயே ௪௯

தந்தியுரி யோயிமத் தாடிபுலித் தோலுடையாய்
சரண மெங்கை
வந்தியெனும் பெயர்மாளத் தந்துமகன் றனையவளின்
மயக்கந் தீர்ப்பாய்
முந்தியென வேண்டியொரு மண்டலமுற் றனனொருநாட்
கனவின் மூத்த
வந்தணராய்ப் போந்தனது குறைதவிர்த்தோ நகமேகி
யறிவாயென்றே ௫௰

ஓதிமறைந் தனரனந்த றெளிந்திருகை முடிகுவித்தே
யுகுகண் ணீர்தே
காதிமுழு வதுநனைப்ப மொழிகுழறப் புளகாங்கம்
போர்ப்பக் கங்கை
பாதிமதி புனைபவள வார்சடையி ருமதுதயைப்
பயன்பெற் றோர்க்கிங்
கேதுதுறை யெனச்சயிலம் வலஞ்சூழ்ந்து பூதிசல
மிருங்கைக் கொண்டான் ௫௧

எஞ்சறவிர்த் தருள்சுருதிக் கழல்வாழி கருணைமுகி
லெழுந்தே சிந்துங்
கஞ்சமலர் விழிவாழி யபயகரம் வாழிநிசிக்
கனவிற் றோன்றித்
தஞ்சமெனு மெளியவருக் குரைக்குமொரு வரம்வாழி
தகைநா வாழி
டஞ்சமுறு கிரிவாழி வண்டினங்க ணிறைகுழலைப்
போதும் வாழி ௫௨

நின்னைபடி பரவவரு வோர்க்குதவி சோபானம்
நீடு வாழி
மன்னர்வலந் தருதெருவும் வாழியெனத் தாழ்தலொடும்
வாழ்த்திக் கொன்சேர்
நன்னிலைபுங் கலம்வாய்த்த முனிவரடிக் கமலமலர்
நாடிப் போற்றிக்
கன்னல்புடை சூழ்கழக் காஞ்சிபுரி நோக்கிவழி
கடப்ப தானான் [illegible]

ஈசனுளா னெனவருவ னுறுதிபறிந் தடைவமென
வேகு வார்பின்
னாசையுடன் றுணைவைபின் றொநகாற்கண் டகல்வமென
வணுகுங் காலை
வாசநக ரேகியுண ரெனவுரைத்த மறைமொழியை
மறுத்தோ மாயின்
மோசமுறு மெனவெருவிக் காஞ்சிபுநர் தாங்கெவர்க்கு
முறையிற் கூறி [illegible]

சோதரிதன் னகநோக்கி வருவதுகண் டெதிரோடித்
தொழுதற் குள்ளா
யாதரநற் கருணைபணைக் திருகையமைத் தோதிபவ
னகமே புக்கு
மேதகுநற் றிருநீறு நீருதவிப் பயணமென
மிகவல் லொர்நீ
ரோதுமொழி கேதுபுரி வோமகளீ ரெனவயலா
ருரைக்க லுற்றார் [illegible]

மெய்யவுரை செவிகொளுமுன் வந்தியெனு நிந்தைபது
வேறு மாற்றம்
பையநெருங் கினபோலுஞ் சிவனருளாற் காணுமெனப்
பகர்ந்து போனார்
ஐபனுரை யுன்னிமனத் துப்யருள மின்னிநனி
யறிவார் வைகக்
கையைவபின் கலைபின னேர் பையெழுமை கண்டுமனக்
கவலை தீர்ந்தான் [illegible]

வேறு

பாலனுதித்தபி னப்பகமுற்ற விருங்கதி பற்றுதுமென்
றாலமடக்கிய கண்டனையுள்கி யிருந்துழி யற்றவர்தாஞ்
சாலவளைக்குல நித்தில மாபணி போற்குவை தக்கினபோற்
பாலகனைப்பெற மேலகமுற்றவர் போனசை பற்றினனே ௫௭

மைந்தன் வளர்ந்தறு திங்களி லாடக வாளி செவிப்புகுதி
சந்தமுறும்பணி கந்தர முச்சிகை தாளரை மற்றுமுள
வெந்த விடந்தொறு மந்தமதாக விசைத்திறை கோயில்புகா
வந்தனை சிந்தனை தந்தமரோடு மகிழ்ந்து புரிந்தனனே ௫௮

இத்தகை மற்று மியற்றிமுடித்துழி யெண்ணிருகண்ணணவே
புத்தமுதத்தை நிகர்த்ததுதுய்த்து மதத்திடு போதரிய
வித்தை படிக்க விடுத்துமிகுத்த களிப்பொடு மேவுறுநாண்
மத்த முடித்தவர் சித்தி விளைத்த வகுப்பை யிசைத்திடுவாம்

கண்டுசொன் மங்கைய ரண்டலி லாது தணந்துழி காதலர்கண்
மண்டல மெங்கு மலைந்துதொடர்ந்து வழுத்தியழைத்தலினேர்
கண்ட விடத்தர்க ளுவிணடைந்துநீ தொண்டனெனக் கழறீஇ
மண்டை யளிப்பமினன் விண்டளிகொண்டு மறந்தனை போலு
மென ௬0

பூசுரர்போலி துரைத்துல கத்தவர் பொய்யுரை மெய்யெனவே
யீசுரருன்றுயர்பொன்றிட மைந்த னளித்தனரின்றுதொடர்ந்
தேசுரை பெற்றனை சத்திய மற்றனை யென்றது சென்றிடவே
தேசுரை பார்க்கனு தித்தென வொல்லைவிழித்துமனந்திகையா

வஞ்சனை கொண்டிடு நெஞ்சனுழன்றிடு வம்ப னிடும்பனிடங்
கஞ்சனை வென்றவர் கெஞ்சிடு மங்கிரி வந்தது கண்டுமினுஞ்
சஞ்சித மிஞ்சுதல் கொண்டிடவிஞ்சை தணந்துபிணங்கிடுதல்
பஞ்சைக னெஞ்சென வஞ்சுதல்கொண்டு பணிந்துகனிந்து
மரோ ௬௨

ஓர்ப்புடனென்றலைகாப்பது நின்கழல் சேர்ப்பதுமுன்கடன்மா
போர்ப்புகை மாயையி ஞர்ப்பி லழுந்திடு புல்லிய சல்லியென

வேர்ப்பது மிச்சட மேற்ப தெனக்குவி ளைத்தது நீமையெனு
வார்ப்பது நானென னார்ப்பதும்வைகறைபார்ப்பது மாயினரே

காலையி னித்பக டன்முறை யாற்றி கபாலி பதத்தின் மிசை
மாலை யுடைத்தவர் சோதரி பக்கலில் வந்தன ரந்தரமாய்
மேலை யிடத்தமர் மாமணி வெற்பிடை வேலை யிருக்குதெனு
மூல மொழித்துள யாவும் வழுத்தி முதற்கபி டேகியெனு ௬௪

சேட்ட னுரைத்தவ னாற்ற முணர்ந்த சீக்ரம்வேணதெலா
மீட்டி யினம்பதி கூட்டி யியம்ப வெழுந்து தொழும்பருடுக்
கூட்ட நடிக்கலை யம்புலி யென்ன விபூதி குளித்துடைவா
ஞெட்டம தாய்க்கொடி ரத்தின வெற்பினை நாடி நடந்தனரால்

வேறு

கொண்ட றந்த விறைசெப் மகக்குழித்
தண்ட லைப்பதி சார்ந்தனர் தென்முனிக்
குண்டி கைப்புன லாடிக் குறிக்கொடுங்
கண்டநீலரைக் கைகுவித் தேத்துவான் ௬௬

முனத்தி னத்து மொழிந்த மொழியினை
மனத்தி னத்த மதிக்குமறை யேனனச்
சினத்தி னித்தலைச் சேவடி தன்னுரு
தினத்தி னத்தரு ளேற்குக வெந்தையே ௬௭

உலக ராதிய வொன்றுறுந் தெய்வமும்
பலவிசேட விசேஷண மும்பழ
மலைம டந்தை சிப வுனையன்றி
யிலையி லைகதி மற்றெனக் கில்லையே ௬௮

என்றி சைத்துவி றைஞ்சிடு மெல்லையி
னின்ற சோதரி மைந்தனு நேயமாய்க்
குன்று றுமணிக் கோடத னைத்திருக்
கொன்று றுவகை தாழ்ந்துவப் புற்றரோ ௬௯

ஒக்க லவ்வகை தாழ்ந்தெழுந் துத்தமன்
பக்கல் வந்து பணியென வென்னவே

நக்கன் வாழு நவமணிச் சையனே
ரிக்க ணத்தினி லேகுமி னென்றனரா ௭0

சென்னி மீமிசைச் செங்கை குவிந்திட
மின்னு நாத்துதி வாழ்த்திடக் கேண்மையோர்
துன்னி நாற்புறஞ் சூழ்ந்து சிவசிவ
வென்ன வேகினன் முன்றவ மெய்தினான் ௭௧

காசிபன் சத்த கூன்முனி கௌதம
ஞசி லாத வகத்திய னத்திரி
தேச நாரத னஞ்சுகன் றென்றுரு
வாசனை ரண்ட மாமுனி மார்க்கண்டன் ௭௨

பிருகு ரோமர் பஞுகி புலத்தியர்
இரணி யவன மாமுனி வியாசனை
பரம வாசிட்டன் வான்மிகி யும்பரா
சரன்வி வேகச் சனகன் முதலியோர் ௭௩

மற்று முள்ள முனிவர் மகாதவத்
துற்ற யோகிய ரும்பர்க ளியாவரும்
பெற்ற மேறும் பிரானைத் துதிசெயுந்
துற்ற கற்கஞ் செவிப்புலன் றுய்த்தனே ௭௪

அந்த வேலை யகங்குளிர்ந் தானந்தஞ்
சிந்த மேனி சிறந்து புளகிப்ப
நந்தி பாதம் புகுந்தனை நான்மறை
எந்தை யன்றிமற் றியாரறி வார்களே ௭௫

அல்ல தீர்ந்த வறிஞருரைபுக
வெல்லை யில்லதோ ரெல்லை யிருந்திடு
வல்ல ரென்ன மறந்த மனத்தினை
மெல்ல வாங்கி வியன்மடி மேவியே ௭௬

தங்கை யேமுத லாந்தமர் தங்களைக்
கங்கை யாட்டிக் கடன்முறை மூட்டிநந்

திங்கள் சூடியர் சேவடி காணுதற்
கிங்கு மூழ்கி வருவன்மு னேகென ௭௭

அருளு மையநீ னன்பி லொருசிறி
தருளு மென்றவ ரஞ்சி யிறைஞ்சிநற்
பொருளுங் கொண்டு பொலன்குவ டேகிட
மருளுந் தோடமு நீத்தவன் வைகினன் ௭௮

அத்த டங்குடைந் தாசமனத் தினுற்
சுத்தி செய்து சொலுங்கர ணத்தினைப்
பத்தி யாபைந் தெழுத்தைப் பதித்துளே
நித்த னீறு நிலவக் குளித்தரோ ௭௯

கந்த ரஞ்சிரங் கையக்க மாமணி
யெந்தை முந்தி யிசைத்த படியணிந்
தந்த மாக வரிந்தரைக் கச்சினைக்
கந்தமிஞ்சு களபந் திமிர்ந்துமே ௮0

காக நீத்த கழலுறப் போந்திடும்
பாக மேத்த முடியெனப் பன்மலர்
சேக ரித்துச் செறித்ததி னுப்பனை
யேக மான கடுக்கையை யேந்தியே ௮௧

காணுங் கண்ணி லணிந்துமை காதினிற்
பூணுங் குண்டல மென்னப் புனைந்துநேர்
தோணும் வண்ண மலரைத் தொகுத்துநற்
சேணு தற்சந்த னத்தில தம்மரோ ௮௨

இந்த வாறு மிலங்க வலங்கரித்
தந்த வாளைச் செருகி யரைதனின்
முந்த வாறு நடந்து முதன்மையிற்
சிந்து ரவத் திரதனைச் சேவியா ௮௩

எழுசீரடியாசிரிய விருத்தம்,

எத்திறச் சொலும்பின் வரமுன மியங்கு
மெய்பரற் குரியவக் கரமுஞ்

சத்தியக் கரமூ லமலவக் கரநா
தவிர்ந்துமெய்ப் பொருட்னை தாக்கும்
இத்தகைப் பரமா யிலங்குபஞ் சகமென்
னிடத்தது காணென விரக்கம்
வைத்துவத் திரமா விநாயகப் பெயர்பூண்
வள்ளலை யிடர்தொலைத் தருள்வாய் ௮௪

அறங்கிளர் பொருளா ரின்பமோட் சமதை
யருளிய யிறைமுன மறைசொன்
மறங்கிளர் மனத்தான் மறந்தவென் புரைபோய்
மலர்ப்பதந் தலையுற வழங்காய்
கறங்குப ரவைசூ ழுலகராற் கடையாய்க்
கழிந்திடா தெனப்பல கழறிப்
பிறங்கு பொன் னிடும்பி டமதனைப் பணிந்தேர்
பெறுஞ்சிக ரியைவலஞ் சூழ்வார் ௮௫

ஐயமுற் பொருட்கோர் முதல்வவெப் பிறப்பி
னுவியும் பரிப்பதோ ரபயக்
கையமற் றதனுள் ளிருந்திரு வினைப்போ
களங்கம தருத்திடுங் கருணைத்
சையவெம் பவவா ரணங்கடந் துறைகே
வலக்கணா தனிலுறத் தடிபிற்
செய்யதாட் சிரமேற் பொறித்தல ரவன்றீட்
டியதழித் தளித்தரு டேவே ௮௬

குருப்பணி மறக்கின் கொலைப்பணி பொறுக்கின்
கொடிக்கிணை யிடைச்சியற் குருகி
அரைப்பணி புரியா மயலுழந் துலையி
னரும்பவ மதுவருந் தியிடின்
கரப்பது புரியின் மேற்பெரும் பவங்கள்
கருத்துற வியற்றினுங் களிக்குங்
கருப்பனை விலக்குஞ் சிவக்கனை மறுத்த
கதிக்குமோர் தீர்வுகாண் கிலனே

பெருமகம் புரிந்தும் பிறப்புமா சிலியாப்
பிறங்குமிப் பிஞ்ஞகற் பிரித்தே
யுரைதரு மெழுதாக் கிளவியை மறந்தா
னுடனவ னகமகங் குலைப்பான்
வருமொரு வழற்கண் வந்தவக் கிரனல்
வானவர் முனிவர்மற் றுள்ளோர்
இருநிதி யினத்தா ரொடுவடு வடைந்தா
னிணையறு தக்கனென் றிசைப்பார் அஅ

நறுமணங் கமழுங் கடுக்கையங் கணியா
னவின்றசொன் மதத்தினன் மறந்த
குறுமதி யுடையோர்க் கெந்தவா றேனுங்
குறுகிடாக் கதியெனக் குழறி
யறைதரு வேதா கமமெனப் பெரியோ
ரறைந்தது மறிந்திருந் தென்னே
விறையள வெனினுங் கருத்தினி னினையா
திருந்தன னெளியனே னென்றே அகூ

நல்லடி யார்க ணலத்தையுநகரா
நற்றிடத் தையும்பலர் நகையாய்ச்
சொல்லொடு துதித்தேத் திப்பயன் பெறுமோர்
சுடரினற் றுலக்குவித் ததனு
லெல்லையில் பெரும்பே றடைந்திடும் பொருளே
யெந்தையே யெளியவர்க் கெளியாய்
அல்லையின் மனத்தோ னெனவெறுத் திடிலோ
யாதுசெய் வேனடி யேனே கூ0

உணவது வெறுத்தே னுயிர்வச மறுத்தே
னுனக்கெனக் கெனப்படித் துரைக்கும்
பணமது வெறுத்தே னுறவது விடுத்தேன்
பகைவிடுத் தேனெனப் பழிக்குங்
குணமதாஞ் சிறுமை பெருமையு நிறுத்தேன்

கோள்கொலை யாதியாங் கொடுமைத்
தணல்பெரீறுத் திடுகே ணேழையேன் பயந்தேன்
றாணியி லிருந்திடே னைந்தோ ௬௧

வாலனை யபயம் மதுரையிற் பிறந்த
மறைக்குலக் கௌரிகை வதிந்த
பாலனை யபயங் கருணைபாந் தூலப்
பண்ணவா வபய மெப்பதிக்கு
மூலனை யபய மூர்த்தியே யபய
முழுமறை நூலனை யபயஞ்
சாலவே தவித்தே னுய்யுமா றருள்வாய்
தற்பரா வபயமே வபயம் ௬௨

காலனைக் காய்ந்த லீலனை யபயங்
களக்கரை யினிற்சுரற் காத்த
சீலனை யபயந் தில்லையம் பலத்தே
திருநடந் திளைக்குமோர் தேவா
ஓலமிட் டழுத ஞுதிபோ னுழன்றே
யொருபய னும்பெறு தவமே
காலனுக் கிரையாய் விடுகவோ பணித்தாய்
கற்பகக் கருணைமா கடலே ௬௩

எனப்பல விதமாந் துதிபுகன் றிரந்தே
யிருவிழிக் கலுழிபார் நனைப்பக்
கனப்புப நெகிழ்ந்தே மனத்திடங் கரைய
கரங்களோ பல பல நயங்கள்
இனத்துடன் பிறப்பப் பிறவுறுப் பெவையு
மிணையிலா நடுக்கமெய் திடவே
தனத்தினி லுயர்வாந் தனிமலைக் குடபாற்
சந்நிதி நின்றுநேர் சாற்றும் ௬௪

வஞ்சக நினைப்பாண் மாறுபட் டிருந்தே
னல்லைமா மாயைதன் வசத்தே
மிஞ்சிடர் தெனையாட் கொண்டதுன் னுளத்தே

விளங்கிடு மூனக்கரி துண்டோ
பஞ்சைசமீ வயிரம் வைத்திடே லெனவே
பலமுறை பணிந்திடு மேல்வை
யஞ்சலஞ் சலுன்றன் றலைக்கடி யணிவோ
மெனமொழி யெழுந்ததா காயம் ௬௫

கொச்சகம்

கேட்டொளிரக் கண்குளிர மெய்குளிரக் கேவலத்தை
நாட்டமுறும் பேரறிவு நன்குகுளி ரப்புலன்கள்
கோட்டமின்றி யேகுளிர வீரசிங்கக் கோலமுடன்
ஆட்டமொடும் பொற்பாறை யண்டைவந்து நின்றனரால் ௬௬

சொன்னதொரு சூதமுனித் துய்யவரை நோக்கி யன்பாய்க்
கொன்னுடைய நற்றவத்தார் குன்றேறயொரு மனுக்கேள்
வன்னமுடி கொண்டிதவ வாண்மலையி லேறுது
பின்னையிவ ணின்றதிறம் பேசுமெனத் தாழ்ந்தனரே ௬௭

மாற்றமகிழ்ந் தேற்றவன்றன் மாதவத்தின் பேருமை
தோற்றியதி லிங்கமெனத் தூயமணிக் குன்று மற்றும்
பேற்றலுடைத் தொக்க சுத்தம் பேணியங்கு செல்லவொண்ணு
தேற்றவப ராதமென வெண்ணி யிங்கு நின்றதென ௬௮

மெய்சிலிர்த்துக் கண்டுளித்து மிக்கவன்புக் கொக்கவுரு
வுய்வகைக்குக் கண்டனரென் றேரொருவற் பார்த்தவன்றன்
செய்வகையு மற்றுமருள் தேசிக வெனத்துதித்தா
ரையமிகுத் தன்புடையீர் கேண்மின்ன ரைகுவனால் ௬௯

தன்னுடைய வாணுட்டித் தன்னைமறந் தெம்பானை
யுன்னியர்த வானேண ருறக்களத்தை நேர்நிறுத்திக்
கன்னிசுரும் பார்குழலிக் காமர்பதம் போற்றிமறு
மன்னர்பயத் தாலிடைந்து வந்துவிழுந் தொண்டரைப்போல்

பின்னடந்து முன்னேடிப் பேரபய மிட்டதன்மேன்
மன்னுபல மாய்வணங்க வாய்ந்தமுடி வேறுகத்

துன்னிநின்ற விண்ணவர் சொரிந்தார் மலர்மாரி
என்னசொல்லு வேனிதழிச் சித்துமுடி யேகினமேல் ௱க

மன்னலிங்கச் சந்நிதிமுன் வந்தனைசெய் தந்தமுடி
புன்னகையொ டிப்புலன்கள் போதமழி யாமையினாற்
சொன்னபல தோத்திரமுஞ் சூக்கமு மளக்கரிதா
மின்னபடி பேறுபெற்றா ரெவ்வுலகிற் கண்டதுண்டே ௱உ

சென்றகிளை சோதரி திரவியமெ லாஞ்சொரிந்து
அன்றலரும் பூவா லலங்கரித்தல் வேண்டுமென்றே
மன்றொளிரும் பெம்மானை யென்னமறை யோர்க்குரைத்து
நின்றிவரைப் பார்த்தெதிரி னின்றாளுங் கண்டனனால் ௱ங

தந்தையென வேயிருந்த தக்கோயு டன்பிறந்தேன்
வந்தியெனும் பேர்மாறில் வந்துமுடி தந்திடுவேன்
மைந்தையருள் பாலகனை யென்றிரந்தாய் போலுமுனம்
மந்தமதி யேனிது ணர்ந்தேனி லைமருமம் ௱ச

நிம்பமரங் கொண்டா னிறைகாய் கனிவிதையும்
கும்பமுனி நீர்தோயுங் கோலலிங்க மாக்கியதின்
வம்பமருங் கொன்றைமலர் மாலைபுனை யுஞ்சடிலர்
இம்பர்வரத் தானாக்கி யென்னைமறப் பித்தனன்றே ௱ரு

மூவாப் பெருங்கீர்த்தி மூதறிஞர் சொற்கீர்த்தி
தாவாச் சிவகீர்த்தித் தன்மையருள் பெற்றவிருங்
கோவே யெனத்துதிக்குங் கொள்கையுணர்ந் தந்தணர்கள்
சேவேறும் பிஞ்ஞகற்குத் தீபமிறை யாற்றினரே ௱சு

வந்ததொரு மெய்யடிய னுமவயி ரப்பெருமான்
முந்தவிந்தத் தீபமதை முப்போது மெப்போதும்
தந்திவன் றிருவவடந் தக்கபடி செய்கவென்று
அந்தணர்மற் றோர்கேட்க வறைந்த வசரீரி ௱எ

அந்தரத்தின் வந்தசொல்லி னந்தரங்க மெம்மீது
சிந்தைவைத்துச் செய்யுமது தேவரீர் சித்தமென்று

வந்தனை செய் நைமிச வனமுனிவரைப்பார்த்துப்
புந்திமகிழ் சூதமுனிப் புண்ணியனுஞ் செப்பலுற்றான் ௱அ

நுண்ணிய கருத்துடைய நோன்பரே கேளுமந்தப்
புண்ணியன் பெருவயிரம் பூண்டமையினப் பெயரும்
பண்ணிய தவத்தாற் பரஞ்சுடர்க்குத் தீபமுறை
பண்ணுகிற சேவையுற்ற பாக்கியத்திற் றீபமுமே ௱க

பத்திகுடி கொண்டது பொற் பாறையினும்வீழ்ந்தசடம்
சித்திபெற வேண்டியடிக் குன்றினிலை செய்கவென்று
உத்தரித் தாகுமபர் தோருளத்தில் வீற்றிருந்து
முத்தியளித் தன்பரைப் பெருமைசெயு முக்கணனார் ௱ௐ

தெய்வத் திருவாக்குப் போந்தபடிக் குச்சிரசைச்
சைவத் திருமேனிச் சத்துவர்க ளங்குவைத்து
மெய்வைத்த மெய்யமணிக் குன்றடியின் மேவவைத்துக்
கைவைத் தவிர்த்தாளுங் காவலனெனப்புகன்றார் ௱ௐக

அறுசீரடியாசிரியவிருத்தம்

வந்தவர் வணங்கிக் காஞ்சி யேகினார் மறையோர் தீக்கை
தொந்தயா யவராற் பூசை யடிபவர்க் காக்கித் தொன்றும்
அந்தநா ளாதி யின்னாள் காறுமம் முறையே யாக
வெந்தைபாற் சண்டிபோல விரும்பத மெய்தி வாழ்ந்தார் ௱ௐஉ

வயிரப் பெருமாள் மலைகாவல்
பெறு சருக்கம்.
முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்- அகரு

பொன்னிடும் பாறைச்

சருக்கம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

கயிலியல் கடகச் செங்கைக் கருங்குழ லுமைய ணாளன்
வயிரனோர்க் கருள்பு ரிந்த வண்ணமுற் றுரைத்தாம் வானப்
புயறவழ் மணிக்குன் றத்திற் பொன்னிடும் பாறை போந்த
வியலெடுத் துரைப்பா மென்று விருந்தவச் சூதன் சொல்வான்

கொச்சகக்கலிப்பா.

துங்கவகத் தியமுனிவன் றுகளறுக மண்லடஞ்சேர்
கங்கைநறும் புனலினையங் கான்கவிழப்ப வதுபெருகித்
தங்குபல கால்கொண்டு தவழ்ந்துவளம் பயத்தலினாற்
பொங்கியபைம் புனலூடு புகழ்படைத்துச் சிறந்ததுவால் உ

கன்றொன் றுக் கிரங்குமொரு கபிலைதுயர்க் ககமுருகித்
தொன்றொன்று குலமிறந்து துரிசுறுவ தெண்ணாமே
சென்றொன்று திருமகனைத் தேருருளிற் படுத்தரைத்த
வென்றொன்று குலத்தரச ரிருந்தரசு புரிநகரம் ௩

உத்தமநாற் குலத்தவரு மோதுமனு லோபர்முதன்
மத்திமராய் முக்குலத்தில் வந்தவரும் பந்தமறு
முத்திநெறி கண்டவரு முழுதுணர்ந்த முனிவரரும்
பத்திநெறி நின்றவரும் பரவிவளர் திருநகரம்

டாரூரு முயிரெவைக்கும் பழையவினைப் பயனிரப்பச்
சீரூரும் வளமுதவுந் திருமகளுந் தவமிருந்து
காரூருங் களத்திறைபொற் கமலசர ணம்பரவும்
ஆரூரென் றுலகுரைக்கு மரியபுகழ்த் திருநகரில் ௫

குன்றொன்றுஞ் சிலைக்கரத்துக் குளிர்மதிச்செஞ்சடைமுடியார்
தன்றொண்டு புரிகவெனத் தடுத்தடிமை கொண்டருளும்

வன்றொண்டர் பரவையெனு மதிவதனத் தாளநகை
யின்றொண்டை வாய்மயிலோ டில்லறங்கொண் டினிதமர்வார்

இத்தகைய ராயுலக வியனடத்தி யுறுநாளின்
மத்தகய முரித்தணிந்த மழுவாளர் திருவடிக்கே
பத்திசெல வுத்தமராய்ப் பார்புரக்குஞ் சேரமான்
வைத்தவுயிர்த் தோழராய் மருவமன மகிழ்ந்துறுவார் ௭

ஒருபகலிற் சேரமா னுவந்தமருங் கொடுங்கோளூர்த்
திருநகர முறக்கருதிச் சிவம்விளக்கு மறைச்செல்வர்
பரவுதிருத் தொண்டர்சூழாம் பரிசனத்த ருடனாக
விரவவழிக் கொண்டெழுந்து மேற்றிசைநோக் கிப்படர்வார் ௮

அறுசீரடியாசிரிய விருத்தம்.

பொன்னிமா நதித்தென் பாங்கர்ப் பொலிசிவத் தலங்க ளோடும்
மின்னவிர் சடிலத்தண்ணல் விரைகமழ் மலர்த்தா ளேத்திக்
கன்னலு மமுதுமொப்பக் கனிந்தசொற் பதிகஞ் சூட்டி
யென்னையா ளுடையநம்பி யாரூர ரேகி னரால் ௯

சிராப்பள்ளி மருவித் தாயாம் செல்வனைப்பணிந்துபோற்றிக்
குராப்புனை குழல்வெற் பீன்ற குமரியோர் பாக மேவ
வராப்பணி யணிந்த வேணி யருட்பெருங் கடனி லாவும்
பராய்த்துறை பரவியேத்திப் பகர்கடம் பாடவிக்கண் ௧0

நிராமய வருளானந்த நின்மலச் சிவக்கொழுந்தைக்
கராசல முரித்துப் போர்த்த கண்ணுதற் பரனை யண்ட
சராசர மீன்று காக்குஞ் சங்கரி யுமையா ளோடுந்
தராதல முய்யப் போற்றித் தமிழ்த்தொடை புனைந்து சாத்தி

ஆணிப்பொன் மேருக் குன்ற வணிசிலை யெடுத்த கங்கை
வேணிப்பிஞ் ஞகனார் நீங்கா விருப்புட னமருஞ் சோதி
மாணிக்க வரைநேர் தோன்ற மகிழ்வுளந் தளும்ப நெஞ்சக்
காணிக்கை நல்கி நம்பி யாரூரர் கடிது சென்றார் ௧௨

அத்திசை யவிருங் கானத் தரியொடு கயமு ா ஞ்மனு
சித்திர வுடற்ற ரக்குந் திகழ்மயி லரவுங் கூடி

யொத்திக லனறு வாழு முறவுகண் டுவகை பூப்பச்
சித்தமா சலன்ற நம்பி திருவுளங் களித்துச்சென்றார் கங

தேவர்கண் முனிவர் யோக சித்தர்சார ணர்க ளாகர்
மேவுகந் தருவர் யக்கர் விஞ்சைய ரரம்பை மாத
ராவன கருதிப் போற்றி யருந்தவம் புரிந்திருப்ப
நாவலர் கண்டு கண்டு நகைமுக மிலங்கச் சென்றார் கச

மந்திர வேள்வித் தீயின் மலிபுகை சேணளாவ
இந்திர ராதி யோரை யவிகொளென் றிசைக்கு மோதை
சந்தைசொன் மறையி னோதை சாத்திர வாத வோதை
வந்தெதிர் கலந்தோ ரெட்டு மாதிரம் பரவக் கேட்டார் கரு

இன்னண மிலங்குங் கானத் தெழில்வள மனைத்து நோக்கி
மின்னுமுப் புரிநூன் மார்பர் விரைந்துமாமணிப் பொற்
குன்றைத்
துன்னினர் மீது செல்லத் துணிந்திடு மளவி லீசன்
றன்னருள் விளக்கத் தாலச் சயிலத்தினுருவ மெல்லாம் கசு

சிற்சிவ லிங்க மாகத் திகழ்ந்தெதிர் தோன்றக் கண்டார்
அற்புத முளத்தி னெய்தி யாகெட்டே னெவ்வா றேகித்
தற்பரன் றனைச்சே விப்ப தென்றதன் றாழ்வ ரைக்கண்
ணிற்பவ ரமுத மொப்ப நிகழ்த்தினர் தமிழ்ப்பாமாலை கஎ

களிக்குளங் கசிந்து நீல கண்டரம் மலைப்பா திக்கட்
புவிக்கருள் புரியத் தோன்றிப் பொலிந்தொரு மண்ட பத்திற்
செவிக்கமு தாகப் பாடுஞ் செல்வர்க்கு வேண்டுஞ் செம்பொற்
குவைக்கருள் புரிந்து பூத கணத்தொடு கூறி னாரால் கஅ

அப்பணி சிரமேற் கொண்ட பூதங்க ளடியார்க்கிற்கு
மொப்பறு பாறை மீதி லொளிவிரி பசும்பொன் றாவச்
செப்பிய நாவலூரர் திருவுள மகிழ்ந்து கொண்டார்
முப்பரம் பொருட்கு முன்னா முதல்வனைப் பரவி நின்றார் ககூ

**கலிவிருத்தம்**

கடவாரண வுரியாய்மதி கதிராரழல் விழியாய்
படநாகமொ டறுகாறணி பழமாமறை முதல்வா

இடானவை களைவாயெமை யினிதாளுடை யொருவா
மடமாதுமை யுடனுயமர் மணிமாமலை யிறைவா உ௦

பொதியாசல முனிபாடிய புகழாய்வினை யகழாய்
மதிசூடிய சடையாயிசை மறைபாடிய விடையாய்
முதிராவய துடையாய்சக முழுதாளுடை முதல்வா
கதியாய்மணி மலைமேவிய கருணாகர வருளாய் உ௧

மலரம்புய வயனெண்சிர மறுகும்படி திருகிச்
சிலையங்கச னுடலம்படு திறம்வெந்தழல் சொரிவாய்
கலகம்புரி தருமந்தக கயவன்பட முனிவாய்
மலைமங்கையொ டியிருய்ந்திட மணிமென்சிலம் புறைவாய் உ௨

### எழுசீரடியாசிரிய விருத்தம்

அன்றி ஞர்புர மொன்றி நீறெழ வாரழற் பொறி தூவிய
மன்ற லார்தரு கொன்றை மாமலர் மாலை சூடிய வேணியாய்
தென்ற லார்தரு பொங்கர் நீடியர் சேண ளாவொளி மாமணிக்
குன்றி லாருயிர் வாழமேவிய கோதி லாவரு ளாழியே உ௩

அம்ப ரத்தெழு மால கால மருந்தி மாலய னுதிய
வும்ப ருக்கருள் சங்க ராமணி யுரக மங்கள கங்கண
பம்ப ரத்துறு சித்த மொத்தருள் பாட நல்கு புராதன
நம்பி னர்க்கருண் மல்க மாமணி வெற்பின் மேவிய நாயகா உ௪

### அறுசீரடியாசிரிய விருத்தம்

என்றுளங் கசிந்து பாடி யிருகணீ ரருவி பாய
நின்றிடு மடியார் தம்மை நிருமல னருளி னோக்கி
நன்றுநின் றுதிகேட் டுள்ள நயந்தன நினைந்த வெல்லா
மின்றுனக் கருள்வங் கேணீ யெனவரங் கேட்க லுற்றார் உ௫

தீர்த்தங்கட் கரசாய் நின்ற திருநீல கண்டத் தாடிப்
பார்த்துனைப் போற்றி னோர்கள் பரகதி பெறுதல் வேண்டும்
சீர்த்தநின் லீலைதானும் செகத்திற்பேர் பெறுதல் வேண்டும்
கோத்திரம் வலப்போந் தோர்கள் குறையிலா மொழிதல் வே
ண்டும்

மாகமுற் றளக்குஞ் சோதி மாணிக்க மலையே யுன்னைப்
பாகொத்த வினிய தீஞ்சொற் பருவதக் கொடியொ டேத்து
மாகத்தர் வினைக ணீங்கி யலைபுரள் சிவாநந் தச்சீர்ச்
சாகரத் தமிழ்ந்து மீளாச் சற்கதி புகுதல் வேண்டும் உஎ

என்னவா ரூரர் வேண்ட விசைந்தருள் புரிந்து நாதன்
பொன்னவிர் கருணை மேனி கரந்துடன் மறைந்து போனான்
அன்னவ னகன்ற பின்ன ரடியவர் குழாங்கள் சூழச்
சென்னெறி படர்ந்தா ரூரர் சேரநா டேகி னாரால் உஅ

மின்னிடும் பவள மேனி விகிர்தனை யேவப் பெற்றுத்
துன்னிடுங் கணங்கண் மேவிச் சுடர்பரந் தொளிருஞ் செம்பொன்
மன்னிடும் படிய மைத்த வரிசையி னந்தப் பாறை
பொன்னிடும் பாறை யென்று புவிசொலப் பட்டதன்றே உக

சந்திர மவுலிக் காற்றுந் தலப்பிர மோற்ச வத்தில்
ஐந்தெனுந் தினத்தி லம்மா வமலனா ரூரர்க் கீந்த
விந்தநற் கருணை தோன்ற வியற்றுமுற் சவத்தின் மேன்மை
யந்தரம் புவன மெல்லா மறிதரப் பட்ட தன்றே ௩0

பொன்னிடும்பாறைச் சருக்கம்

முற்றிற்று.

வாட்போக்கிப்புராணம்

முற்றிற்று.

# திருவாட்போக்கிப் புராணம் செய்யுள்

## பிழை திருத்தம்.

| பக்கம் | பாட்டு | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 3 | 7 | 4 | கருணைதழை | கருணைமழை |
| 3 | 9 | 1 | தவநீழல் | தருநீழல் |
| 4 | 16 | 1 | காஞ்சியிற் பிறந்து | பிளழுத்தை நீக்கிவிடவும் (தந்தை ஆயர் குலம் கைக்கோளர் ஜாதி) |
| 26 | 33 | 1 | முணர்விலா | முணர்விலா |
| 27 | 40 | 1 | குவவுதோரணங்கள் | குலவுதோரணங்கள் |
| 28 | 47 | | அறுசீரடியா | அறுசீரடியாசிரிய |
| 31 | 11 | 5 | வில்லார | வில்லார் |
| 34 | 8 | 3 | யொல்லைவேதாசலத் தோடோங்கு | யொல்லை ஸ்வேதா சலத் தோடோங்கு |
| 35 | 14 | 3 | யாசையா யினையாமீது | யாசையாயின மியாமீதும் |
| 42 | 37 | 1 | கொண்டிவன் கிடத்தி | கொண்டிவண்கிடத்தி |
| 45 | 62 | 1 | கடைந்தவஞ்ஞா | கடைந்த வஞ்ஞான் |
| 48 | 79 | 4 | செஞ்சலில் | மெஞ்சலில் |
| 55 | 11 | 4 | தெய்பதி | தெப்பதி |
| 60 | 16 | 4 | பசிக்கிங்கென் | பசிக்கிலக்கென் |
| 61 | 27 | 3 | வெலிபுலி | யெலிபுலி |
| 62 | 31 | 1 | மூதர்ப் | மூவாப் |
| 62 | 32 | 2 | கொல்லாம் | கெல்லாம் |
| 63 | 35 | 1 | ஞகில் | ஞகிப் |
| 64 | 2 | 3 | மாக | மாத |
| 64 | 5 | 2 | வெண்கொடை | வெண்குடை |
| 74 | 13 | 1 | லழகார் | லழகாற் |
| 80 | 35 | 1 | முரசொலியமுழவொலிய | முரசொலியுமுழவொலியு |

| | | | | |
|---|---|---|---|---|
| 80 | 35 | 1 | பாவொலிய | பவொலியு |
| 89 | 37 | 5 | லின்மை | லின்மைம் |
| 81 | 38 | 5 | பவற்றை | மவற்றை |
| 81 | 39 | 5 | யலர்களு | பலர்களு |
| 84 | 56 | 2 | பொலங் | புலங் |
| 85 | 64 | 2 | மிகழ | மிகம |
| 87 | 75 | 4 | வொடுவீர் | வோடுவீர் |
| 87 | 76 | 3 | வியம்பினை | வியப்பினை |
| 88 | 85 | 1 | மண்ணவர்த் | மண்ணவர்த |
| 89 | 86 | 3 | வியாழி | வியாழி |
| 90 | 94 | 3 | தடமெலாஞ் | தடமெல்லாஞ் |
| 92 | 105 | 4 | காலங் | காலங்க |
| 98 | 129 | 3 | வணங்கி | வழங்கி |
| 98 | 130 | 2 | பணிதீருங் | பணிசீருங் |
| 103 | 151 | 1 | விழுந்துங் | விருந்துங் |
| 105 | 158 | 3 | டுவகை | டுல்கை |
| 105 | 160 | 2 | நகையாவோ | கையாவோ |
| 107 | 167 | 1 | நின்றவர்யான் | நின்றவர் பான் |
| 108 | 169 | 3 | தாங்கிவிழத் | தாங்கிவிழித் |
| 112 | 194 | 1 | சேவிக் | சேவித் |
| 112 | 195 | 4 | சீர்த்திப்ப | சீர்த்திருப்ப |
| 112 | 196 | I | சாப்ந்து | சார்ந்து |
| 112 | 198 | 2 | னடியேனென் | னடியனேன் |
| 115 | 214 | 1 | னருளோயன் | னருளேயென் |
| 115 | 215 | 1 | னினிதமர்செய் | னினிதமர்செம் |
| 117 | 226 | 4 | தென்றலு | தெனலு |
| 118 | 229 | 5 | சோழுகி | சொழுகி |
| 124 | 253 | 8 | வாழ்த்தலே | வாழ்தலே |
| 126 | 261 | 8 | வாழ்த்திடல் | வாழ்ந்திடல் |
| 59 | 7 | 3 | செறிதருவங்கிதீர்திக முமற்பொன்னில்ஞன்கு | செறிதருமங்கொனீர்திகரு மண்மெனன்றிர்சான்கே |

# வாட்போக்கிப்புராண வசனச்சுருக்கம்

| | | | |
|---|---|---|---|
| 2 | 9 | மழலமொழி | மழலைமொழி |
| 2 | 20 | மூவலத்தையும் | மூவுலகத்தையும் |
| 4 | 18 | இரத்தினகரி | இரத்தினகிரி |
| 6 | 13 | கங்கதரனை | கங்காதரனை |
| 6 | 25 | சரீரங்கட்டு | சரீரங்கட்கு |
| 7 | 11 | சுசூந்திரம் | சுசீந்திரம் |
| 19 | 21 | பிர்மஹத்தி உருவங்கொண்டு | பிர்மஹத்தி வீரஹத் என இரண்டு |
| | 22 | பிர்மஹத்தியை | அந்தஹத்திகளை |
| 20 | 2 | பிர்மஹத்தியும் | இருஹத்திகளு |
| 22 | 1 | முடையன் | முடையவன் |
| 23 | 18 | கூறங்கெட்டதும் | கூறக்கேட்டதும் |
| 24 | 10 | யாரகத்தா | யாராகத்தா |